# என் செல்வ மகளே

(நாவல்)



மைதிலி தயாபரன்

# என் செல்வ மகளே

**(நாவல்)**

(2015 இல் கலாசாரத் திணைக்களம் நடத்திய
நாவலுக்கான கையெழுத்துப் பிரதிப்போட்டியில்
பரிசு பெற்ற கதை)

# என் செல்வ மகளே

(நாவல்)

## மைதிலி தயாபரன்

வெளியீடு:
வெளியீட்டு இல.06
**கிருஷ்ணிகா வெளியீட்டகம்**
வேப்பங்குளம், வவுனியா

# என் செல்வ மகளே

(நாவல்)


எழுதியவர் : மைதிலி தயாபரன்

தொலைபேசி : 0770178014

மின்னஞ்சல் : maithilieet@yahoo.com

பதிப்புரிமை : எழுத்தாளருக்கே

வெளியீடு : கிருஷ்ணிகா வெளியீட்டகம், வவுனியா

முதற் பதிப்பு : 30-11-2016

அட்டை வடிவமைப்பு : கந்தையா கோபிலராஜ்

அச்சுப் பதிப்பு : வாணி கணனிப் பதிப்பகம்

விலை : ரூபா 400


# *EN SELVA MAHALE*

**(Novel)**


Author : Maithiliee Thayaparan

Telephone : 0770178014

E- mail : maithilieet@yahoo.com

Copy Rights : For Author

Publication : Kirushniga Publications, Vavuniya

First Edition : 30-11-2016

Cover Design : Kandaiah Kobilaraj

Printers : Vaani Computer Printing Centre

Price : Rs. 400

ISBN 978- 955- 41614- 8- 1

# வெளியீட்டுரை

எமது வெளியீட்டகத்தால் வெளியிடப்படும் ஆறாவது புத்தகமும் இரண்டாவது நாவலும் இதுவாகும். "என் செல்வ மகளே" என்ற நாவலை இந்த வருடத்தின் எமது வெளியீட்டகத்தின் முதலாவது நாவலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த வருடத்தில் திருமதி மைதிலி தயாபரனின் நான்கு புத்தகங்களை வெளியிட்டிருந்தோம். "சீதைக்கோர் இராமன் (மரபுக் கவிதை)", "அநாதை எனப்படுவோன் (நாவல்)", "தவறுகள் தொடர்கின்றன (கவிதை)" என்பவற்றுடன் "வீடுகளில் மின்சக்தி விரயமாதலைக் குறைப்போம்" என்ற சக்திப் பயன்பாட்டுக்கு உறுதுணையாகும் கட்டுரைத் தொகுப்பையும் கடந்த வருடத்தில் வெளியிட்டிருந்தோம். தொடர்ந்தும் இந்த வருடமும் அவருடைய புத்தகங்களை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட அவரின் நான்கு நூல்களில் இரு நூல்களுக்கு விருது கிடைத்திருந்தது. "சீதைக்கோர் இராமன்" என்ற அவரின் கவிதைத் தொகுப்பிற்கு வட மாகாண சிறந்த மரபுக் கவிதைக்கான விருதும் "அநாதை எனப்படுவோன்" என்ற அவரது நாவலுக்கு வவுனியூர் இரா உதயணன் அவர்களின் சிறந்த இளம் படைப்பாளிக்குரிய விருதும் கிடைத்திருந்தது. நாம் சேவையைத் தொடங்கிய முதலாவது வருடத்திலேயே இரு நூல்களுக்கான விருதைப் பெற்றிருந்தது பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

அவரின் இவ்வருடத்திற்குரிய நூல்களையும் எம்முடைய வெளியீட்டகத்தால் வெளியிடுவதற்கு அவர் முன் வருவது எம்மைப் பெருமிதமடையச் செய்கின்றது. நாவல் என்னும் படைப்புக்கள் தமிழ் மொழியில் மட்டுமல்ல ஏனைய மொழிகளிலும் குறைந்து வரும் வேளையில் எமது வெளியீட்டகம் நாவல்களை வெளியிடுவதை முக்கியமான நோக்கமாகக் கொண்டு செல்கின்றது. கடந்த 2015 ஆம் ஆண்டில் கலாசார திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கையெழுத்துப் பிரதிப்போட்டியில் பரிசு பெற்ற "என் செல்வ மகளே" என்ற நாவல் இப்போது எங்களுடைய வெளியீட்டகத்தால் வெளிவருவது எமக்குப் பெருமை தருகின்றது.

மைதிலி தயாபரன் அவர்கள் தொடர்ந்தும் பல நூல்களைத் தரவேண்டும். அதிலும் நீண்ட வாசிப்பிற்குரிய நாவல்கள் அவற்றுள் முக்கியமாக இடம்பெற வேண்டும். நாவல்களுக்குள்ளாக சூட்சுமமாக நல்ல விடயங்கள் பலவும் அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டு அவரை வாழ்த்தி நிற்கின்றோம்.

**உரிமையாளர், கிருஷ்ணிகா வெளியீட்டகம்**

# என்னுரை

எனது இலக்கிப் பயணத்தில் ஒன்பதாவது புத்தகமும், நான்காவது நாவலும் இதுவாகும். 2015 ஆம் ஆண்டில் கலாசார திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கையெழுத்துப் பிரதிப்போட்டியில் பரிசு பெற்ற "என் செல்வ மகளே" என்ற நாவல் இப்போது வெளியிடப்படுகின்றது. வெளியிடுவதற்கு முன்பாகவே தக்கோரால் அங்கீகாரம் பெறப்பட்ட இந்த நாவலை இலக்கிய உலகிற்கு வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல சவால்களைச் சந்தித்த போதும் எழுத்துலகிற்கு என்னை ஆற்றுப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு விடயம் இந்த அங்கீகாரமாகும். கடந்த வருடத்தில் வெளியிடப்பட்ட "சீதைக்கோர் இராமன்" என்ற எனது கவிதைத் தொகுப்பிற்கு வட மாகாண சிறந்த மரபுக் கவிதைக்கான விருதும் "அநாதை எனப்படுவோன்" என்ற நாவலுக்கு வவுனியூர் இரா உதயணன் அவர்களின் சிறந்த இளம் படைப்பாளிக்குரிய விருதும் கிடைத்திருந்தது. விழுந்து சோர்ந்து மயங்கும் போதிலெல்லாமல் விதவிதமாய்க் கைகொடுக்கும் தமிழ் வாசகர்களை இந்த இடத்தில் நீள நினைக்கின்றேன்.

அறிவித்தால் அறியவல்லது ஆத்மா. அதுவும் பட்டதற்குப் பின்னால் பலதையும் உணர்ந்து கொள்ளும் அதற்கு பலர் சொல்லிக் கேட்கும் போதிலோ தானாகவோ புத்தி வருவது என்பது கிடையாது. "காலிலே குத்திய பிறகு அது முள் என்று நெஞ்சு சோல்கின்றதே, குத்துவதற்கு முன்பே கண் சொல்லி இருக்கக்கூடாதா" என்று ஆதங்கப்பட வைக்கும் கண்ணதாசனின் வரிகள் எனக்கு அவ்வேளைகளில் ஞாபகத்திற்கு வருவதுண்டு. "பட்டால் தெரியும் முட்டாளுக்கு" என்ற பழமொழி முன் வந்து நிற்கின்றது.

'அப்படியானால் புத்திசாலி தானாக அறிந்து கொள்கின்றானா?' என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. அவ்வாறு அல்ல. ஆனால் அவன் மற்றையவர்களின் அனுபவத்தில் இருந்து படித்துக் கொள்கின்றான். இதனால் அனுபவங்களைப் பதிவுகளாக்க வேண்டிய அவசியம் எழுகின்றது. அதிலும் சிறுகதைகள் கணநிலை உணர்வுகளைச் சொல்லும்போது, ஒரு யன்னலின் வழியாகத் தெருவைப் பார்ப்பதைப் போன்று காட்டும்போது அதில் வியாக்கியானங்கள் எடுப்பதற்கு முனைவதில்லை. அனைவரும் திருப்தி அடையும் படியாக முடிவுகளை அமைப்பதற்கு அவசியமில்லை. அது பிரமிப்பை மட்டும் ஊட்டினால் போதுமானது. ஆனால் நாவல்களின் போக்கு அவ்வாறாக அமைவதில்லை. அவை நீண்ட வாசிப்புக்கு உரியவை. அவற்றை வாசிக்கத் தொடங்கும்போது அந்தச் சுற்றாடலுக்கு வாசகன் அழைத்துச் செல்லப்படுவான். அந்த சுற்றாடலை அனுபவிப்பான். அதை நுகர்ந்து கொள்வான். இதனால் நாவல்களில் மறைமுகமாகவேனும் ஒரு முடிவை முன்வைக்க வேண்டி இருக்கின்றது.

அதுவும் பட்டி மண்டபத்தின் முடிவினைப் போன்று அது சமுதாயத்தைப் பாதிக்காத வகையிலும், காலங்காலமாகக் கைக்கொண்டு வந்த கலாசாரத்தை மீறாத வகையிலும் அமைய வேண்டியது அவசியமாகின்றது. ஒட்டு மொத்தத்தில் நாவல்கள் புதினங்களாகத் தோன்றி புதுமையான முறையில் இன்னொருவரின் வாழ்க்கையைக் காட்டி எமது பாதையைப் பற்றிச் சிந்திக்க வைக்கின்றது.

"வாழ்க்கை முழுவதும் சந்தோசம் மட்டுமே இருக்கக் கூடாதா" என்று எம்முடைய மனது சிந்தித்துக் கொண்டிருக்கும். ஆனால் சந்தோசத்தை மட்டுமே நாவல்களில் கொண்டு வரும்போது அது யதார்த்தத்தை மீறியதாக அமைந்துவிடும். கதை சோபிக்காது. சுவையில் அறுசுவைகளும் கலப்பதைப் போன்று கதையில் பல ரசமும் கலந்து வரவேண்டும். உதாரணமாக இனிப்பு எனப்படும் தித்திப்புச் சுவை அனைவருக்கும் பிடிக்கும். ஆனால் விருந்து ஒன்றில் தித்திப்பான பலகாரங்களை வைத்திருந்தால் எத்தனை திருப்தியாக எம்மால் சாப்பிட முடியும்?. ஒன்றிரண்டு சாப்பிட்டதுமே தியக்க ஆரம்பிக்கும்.

ஆனால் உறைப்பு என்பது விஞ்ஞான ரீதியில் ஒரு சுவையே கிடையாது. அதீத தாக்கத்தால் சுவையுணர்ச்சிக் கலங்கள் மயங்கிவிட்ட நிலையையே உறைப்புச் சுவை என்று சொல்லப்படுகின்றது. ஆனால் உறைப்பைச் சேர்க்காதவிடத்து குழந்தையும் சாப்பாட்டைச் சாப்பிடத் தயங்கும். அதனால் அதுவும் சேர்க்கப்பட வேண்டும்.

அப்படியானால் துன்பத்தை மட்டும் கொண்ட கதையை அல்லது நாவலை எழுதிவிட முடியுமா என்று யோசிக்கலாம். அதுவும் சாத்தியமற்றதே. ஒரு புத்தகம் ஒருவனுக்குத் தெளிவைக் கொடுக்க வேண்டும். அவனின் தன்னம்பிக்கையை உடைத்துவிடக் கூடாது. இதனால் துன்பத்தைக் கொண்டு வரலாம். ஆனால் முடிவு சுபமாக அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும் என்பது பல வாசகர்களுடைய எதிர்பார்ப்பாகும்.

இன்ப துன்பத்தை அறியாத, இள வயது, ஒருவனின் வாழ்க்கையில் முக்கியமான கட்டமாகும். ஆங்கிலத்தில் ரீன் ஏஜ் என்று சொல்லும் பதின் மூன்று வயதைத் தாண்டிய பருவத்தில் ஆணுக்காகட்டும் பெண்ணுக்காகட்டும் ஓமோன்களின் தாக்கம் காரணமாக உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். இந்த வயதில் தவறாதவர்கள் யாருமில்லை என்று சொல்வார்கள். அப்படித் தவறு செய்யாதவர் பிற்காலத்தில் உலகுக்கே உதாரணமாக வாழ்ந்து முடித்திருக்கிறார்கள். எனவே பருவ வயது என்பதும் தடக்கி விழுவது என்பதும் பலருக்கும் அனுபவமாக இருந்திருக்கின்றது.

அவ்வாறு ஒருவனை என்னுடைய கதைக்கு நாயகனாகத் தேர்ந்து எடுத்தேன். அவர் சறுக்கிய சந்தர்ப்பத்தை அங்கே எடுத்துக் காட்ட முனைந்தேன். வாழ்க்கையில் ஸ்திர நிலையை அடையாத அந்த வயதில் எந்த ஒரு அற்ப சந்தோசமும் பெரிய துன்பத்தைப் பிற்காலத்தில் கொண்டுவரும் என்பதை எழுதினேன். என்னுடன் பழகிய மற்றும் நான் தெரிந்து கொண்ட பலரின் அனுபவங்களின் தொகுப்பாக இந்தக் கதை வடிவம் பெற்றது.

பெற்றோரில் தங்கியிருக்கும் போது அவர்களின் செழிப்பால் எல்லாம் கிடைப்பதைப் போன்று இருந்தாலும் உலகம் நம்மைக் காணும் முகமும் நாம் பார்க்கும் முகங்களும் ஒன்றாக இருப்பதில்லை. தன்னுடைய சொந்தக் கால்களால் பாதையைத் தொடங்கும்போது எவ்வாறு பழைய விடயங்கள் வந்து ஒருவரைத் தாக்கும் என்பதையும் ஓரளவிற்குக் கொண்டு வந்தேன்.

எப்படியாகத் தொடங்கி இருந்தாலும் ஒருவருடைய வாழ்க்கையை ஒரு சந்தர்ப்பத்தில் அர்த்தமுள்ளதாக்கி விடலாம். முடிவுகளை சுபமாக்கிக் கொள்ளலாம். அது எப்படி என்பதைக் கதைக்குள் ஓட வைத்திருக்கிறேன். கதையை முழுமையாகப் படிக்கும் யாரும் இதன் நிறைகுறைகளைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

கதைக்குள் கதை வரும் சந்தர்ப்பங்கள் இந்தப் புத்தகத்தில் நான் பயன்படுத்திய இன்னொரு உத்தியாகும். அந்த இடங்களில் குழப்பங்களைத் தவிர்ப்பதற்கு முடியுமானவரை முயன்றிருக்கின்றேன். கதா நாயகனை ஒரு எழுத்தாளராகவே வடிவமைத்ததன் மூலம் பலவிதமான கேள்விகளுக்கும் விடையளிக்க முனைந்திருக்கின்றேன். இது ஒரு எழுத்தின் கதை. எழுத்தாளனின் கதை. எழுந்து கொண்ட கதை. எழுச்சியை எதிர்பார்க்கும் கதை. ஆனாலும் இவற்றினூடாக நான் பெற்றுக் கொண்ட அடைவினை வாசகர்களே உறுதிப்படுத்த வேண்டும்.

என்னுடைய புத்தகங்களில் நானே ரசிக்கும் ஒரு வித்தியாசமான புத்தகம் இது. இன்று உங்களுடைய பார்வைக்கு இதை சமர்ப்பிக்கின்றேன். தொடர்ந்தும் தேடலுடன் .....

**மைதிலி தயாபரன்**

**30-11-2016**

தந்நிலையை உணராது
தாமேயென நினைத்து
தரணியதில் மிதமாகித்
தறிகெட்டுத் திரியும்
தமிழ்மரபில் வந்துதித்த
தளிர்களுக்கு
சமர்ப்பணம்

# 01

பேருந்தில் அமர்ந்தவாறு தலையை வெளியில் நீட்டியபடி பார்த்துக் கொண்டிருந்த சுகந்தத்தாருக்கு வானத்தின் பகல் நேர அழகு தெரியவில்லை. வியப்புடனே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு வந்தார்.

மன்னாரில் இருந்து வந்துகொண்டிருந்த அவருக்கு மேல் வானில் வழமையாகத் தென்படும் அழகுகளை அவதானிக்க முடியவில்லை. முகில்கள் குறைவான பொழுதில் சூரியக்கதிர்கள் கடந்து செல்லும்போது மேற்கு வானில் தோன்றும், கடும் மேக வர்ணத்துக்குக்கு வெண்ணிறத்தைக் கலந்ததுபோல காணப்படும் இந்த அழகைப் பார்க்க முடியவில்லை.

முன்னைய நாட்களில் மன்னாரில் வேலை செய்த காலங்களில் பிற்பகலில் வீடு திரும்புகையில் வாகனத்துக்குள் அமர்ந்தவாறே மேற்கு வானத்தை ரசித்தபடி பயணிப்பது வழக்கம். நாட்டு நிலவரம் சரியில்லாத அந்தப் பொழுதுகளில் சாரதியும் அவரும் மட்டும் தனியாகப் பயணம் செய்யும் வேளைகளில் அவ்வாறு பார்த்தவாறே வருவதுண்டு.

ஆனால் இன்றைய நாட்களில் கருமையாகப் படர்ந்திருக்கும் மேகம் வானுக்கும் வாகனத்திற்கும் இடையிலான தூரத்தைக் குறைத்து விடுவதைப் போன்று இருந்தது. ‘அந்தகாரம்’ என்ற சொல்லை மனது அசைபோட்டுக் கொண்டது.

பார்த்த மாத்திரத்திலேயே மனதினில் இருட்டையும் அமைதி இன்மையையும் ஏற்படுத்துவதாலேயே அந்தகாரம் என்ற சொல்லு பாவிக்கப்படுகின்றதோ என்று யோசித்தார். கருமை நிறத்தில் அழகும் நன்மையும் இருக்கும்போதும் இந்த காரணத்தினாலேதானோ அதை விரும்பா வண்ணம் மக்கள் பழக்கப்படுத்தப் படுகிறார்கள் என்றும் எண்ணத் தோன்றியது.

தனிமையில் விட்டுவிட்டால் காரணமே இல்லாமல் உலகத்தை அசைபோடும் இந்த மனதை அடிக்கடி கட்டுக்குள் கொண்டு வரவேண்டியது அவசியமாகின்றது என்பது நினைவுக்கு வரவும், சிந்தனையில் இருந்து விடுபட்டு தூரத்தில் சென்ற கண்களையும் மனதையும் தரைக்குக் கொண்டு வந்தார்.

யுத்தத்துக்குப் பின்னதான எழுச்சியை அந்த நெடுஞ்சாலை காட்டிக் கொண்டது. மக்கள் இருந்திராத படியால் காடுகளால் மூடப்பட்ட அந்த நிலங்கள் இப்போது மாற்றமடைந்து காணப்படுவது தெரிந்தது. மீள் குடியேற்றங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு மக்கள் மீள வருகை தந்த பிற்பாடு அந்த இடத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு இருப்பதை அவதானிக்க முடிந்தது.

அதிலும் காடு மூடப்பட்டுக் கிடந்த வயல் நிலங்கள் காடழிக்கப்பட்டு, முறையாக உழப்பட்டு, நெல், மரவள்ளி, எள்ளு என்பன பயிரிடப்பட்டு இருப்பதைக் காண முடிந்தது. வழியெங்கிலும் காணப்பட்ட பசுமை மனதை ஆறுதல்படுத்துவதாக அமைந்தது.

மனதிற்கு அமைதியையும் ஆறுதலையும் கொடுக்கும் திறன் இந்தப் பச்சை நிறத்திற்கு எப்பொழுதும் உண்டு என்று அவருடைய மனது சொல்லிக் கொண்டது. இதனாலேயே நாட்டின் வளம் என்பதைப் பசுமையைக் கொண்டு மதிப்பிடுகின்றார்கள். எமது நாட்டில் எங்கு சென்ற போதும் காணக் கிடைக்கும் இந்தப் பசுமையே எமக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதம் என்று எண்ணிக் கொண்டார்.

ஏதோ நினைவில் கையைத் திருப்பிக் கைக்கடிகாரத்தைப் பார்த்ததும் திடீரென்று அவருக்கு நினைவுக்கு வந்தது. இன்றைய விழாவுக்கு தாமதமாகவே செல்லப் போகிறேன் என்று நினைத்தபோது இந்தப் பேருந்து சற்று வேகமாகப் போகக் கூடாதா என்று அவருடைய மனது நினைத்தது.

'முடியவே முடியாது' என்று அவருக்குச் சொல்லுவதைப் போன்று முன்னாலே வந்து நின்றது மாடுகளின் நிரை. ஓ... நெளுக்குளத்திற்கு வந்துவிட்டோமா என்று அவர் தனக்குள் நினைத்தார். இனி சீக்கிரமாகப் போய்விடலாம். இந்த கோமாதாக்கள் இடம் கொடுத்தால் .....

ஆனால் அவை சாதுவாக மெதுவாக தமது நடை பவனியை மேற்கொண்டு சென்றன. அவர்களுக்குப் பின்புறமாக ஓரளவு பாதுகாப்பான தூரத்தில் வண்டியைச் செலுத்தியவாறே வண்டியின் கோன் சத்தத்தை காது கிழிக்குமாறு அடித்துக் கொண்டே சென்றார் சாரதி. ம் ... ஹூம் ... அவை அந்தச் சத்தத்தைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

'ம்மா... ம்மா...' என்று சாதுவான குரலில் அவை கதைப்பது வண்டியின் கோன் சத்தத்தின் இடைவேளையின் போது பயணிகளின் காதில் விழுந்தது. 'பாதை ஒழுங்கு விதிகள் எல்லாம் உமக்குத் தானே. அவை எம்மை என்ன செய்துவிடும்? உங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமானால் எங்களுக்கு அருகே வராதீர்கள்' என்று அவை சொல்வதைப் போன்று இருந்தது.

மறுபடியும் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்த சுகந்தத்திற்கு கவலை வந்தது. அவரை இறக்கிவிட்டால் மாடுகளில் சென்று சமரசம் பேசித் தன்னுடைய பயணத்தைத் தொடரலாமோ என்று அவர் சிந்தித்தார். ஆனால் பேருந்து நிற்பதைக் காணோம். மாட்டுக்குப் போட்டியாக அதே வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது.

"அப்பா, கோமாதா. எங்கள் குலமாதா.. எங்கட பாதையில குறுக்க வராதப்பா. நான் ஒரு நேரத்துக்குள்ள வவுனியாவுக்குள்ள போயாக வேணும். கொஞ்சம் பாதையில இருந்து விலகி நில்லும் பிள்ளாய்." என்று அவருடைய மனதிற்குள் நினைத்துக் கொண்டது மாட்டுக்குக் கேட்டிருக்க வேண்டும் போல. திரும்பிப் பார்த்துவிட்டு மெதுவாக விலகி வழிவிடுவதைப் போன்று தோன்றியது.

மெதுவாகச் சென்ற வாகனத்தின் வேகமும் சற்று அதிகரிப்பதைப் போன்று இருந்தது. வவுனியா நகரத்துள் வண்டி பிரவேசித்ததும் பழையபடி அவருடைய கண்கள் வெளியில் எட்டிப் பார்த்தது. மழைத் துளிகள் மெதுவாக விழத் தொடங்கின.

மன்னார் நெடுஞ்சாலையைப் போன்றே வவுனியா நகரமும் சில அபிவிருத்தி நடவடிக்கைகளைக் காட்டி நின்றது. அங்கும் இங்குமாக முளைத்திருந்த தொடர் கடைகள் புதிய வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்திருந்ததைக் காட்டியது. கடைத் தொகுதியைக் கடந்து சென்றதும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இருந்த வீதியின் மேம்பாலம் அவரின் கண்களில் பட்டது.

பாடசாலை மாணவருக்குப் பயனளிக்கும் இவ்வாறான மேம்பாலங்கள் நகருக்குள் பல இடங்களிலும் அமைக்கப்பட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். அதை அண்ணாந்து பார்த்ததில் மழைத்துளி அவர் தலையிற் தெறித்தது.

வவுனியா நகருக்கள் நுழையும்போது மழை தன்னை வரவேற்கின்றது என்று நினைத்தார். மழைக்காலம் கடந்து இரண்டு மாதங்கள் கழிந்த பிற்பாடும், வானில் திரண்டிருக்கும் கருமேகங்கள் காலத்தை மாற்றியே காட்டி நின்றன. மறைந்துவிடலாமா தொடர்ந்து சேவையில் இருக்கலாமா என்ற எண்ணத்துடனேயே சூரியன் சஞ்சலத்தில் இருக்க, நேரத்தை ஊகித்துக் கொள்ளவே முடியாததாகி, கட்டாயமாக கைக்கடிகாரத்தைப் பார்த்திட வேண்டிய ஒரு பொழுதை அந்நேரம் காட்டிக் கொண்டு இருந்தது.

ஏற்கெனவே பெய்து ஓய்ந்துவிட்ட பருவம் தப்பிய பருவ மழையின் படைப்புக்களெனவே வீதியின் கிண்ணக்குழிகளில் திரண்டிருந்த நீரில் கால் பட்டுவிடா வண்ணம் வெகு அவதானமாகவும் விரைவாகவும் ஓடிக் கொண்டிருந்தனர் பெண்கள்.

பாதுகாப்பாகவே உள்ளே அமர்ந்துவிட்ட நிம்மதியில் வேகமாக வந்து, வெளியில் நின்றவர்களிடம் அழுக்குத் தண்ணீரை வாரி இறைத்து விட்டுச் சென்றன பெரிய ஊர்திகள். அவர்களை வெறித்தபடி தாராளமாகவே தமிழில் திட்டிவிட்டு அருவருப்புப் பட்டவர்களாகவே பயணத்தைத் தொடர்ந்தார்கள் அவர்கள்.

பாதையின் மறுபுறத்தில் நிற்பாட்டுவதற்கான சைகையைக் காட்டிக் கொண்டு மெதுவாக வந்து கொண்டிருந்த பேருந்து நின்றுவிடவும், சகதிக்குப் பயந்து ஒதுங்கியவர்களைத் தாண்டி வெகு வேகமாகவே பாதையைக் கடந்து இப்பாலே வந்து நின்றார் சுகந்தன். விழா தொடங்கியிருக்குமோ என்ற பதைபதைப்பு அவரிடம் இயல்பாகவே காணப்பட்டது.

அவசர அவசரமாக நாலு கட்டடங்களைத் தாண்டி வந்தவர், அண்ணாந்து பார்க்காமலேயே அந்தக் கட்டடத்தின் முன்னால் வந்து சேர்ந்தார். அது தான் இடம் என்பதை அவருக்கு யாரும் சொல்லிவிடத் தேவையில்லை என்பது போலே அமைந்திருந்தது அதன் வெளிப்புற அலங்காரம்.

வாசலிலே தோரணங்கள் விழா நடக்கும் அழகைக் காட்டி நிற்க, ஒலிபெருக்கியினூடாக வந்த இனிய நாதம் மங்களத்தைக் காட்டி நிற்க பாடசாலையின் இடைவேளையின் போது மாணவர்கள் போடும் சத்தத்தைப் போல மக்களின் குரலானது விழா இன்னும் ஆரம்பமாகவில்லை என்பதைக் காட்டி நிற்கவும் ஓரளவு நிம்மதியுடனே உள்ளே நுழைந்தார் அவர்.

விழா ஆரம்பிப்பதற்கு முற்றுமுழுதாகவே தயார் என்பதை உணர்த்தும் முகமாக, தன்னை வரவேற்க வேண்டியவர்கள் மேடையில் நிற்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டபோது சற்று வருத்தமாகத் தான் இருந்தது அவருக்கு.

'கால தாமதமாக வந்தது என் பிழை தானே! இல்லாவிட்டால் கண்ணனும் அவரின் மனைவி சாந்தியும் தன்னை எத்தனை ஆவலுடன் வரவேற்று இருப்பார்கள் என்று கவலைப் பட்டார். ஏன் அவர்களின் செல்வ மகள் பிரியந்தியாவது முகமலர அவரை வரவேற்றிருப்பாள்' என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு தூரத்தில் நின்றவாறே முன்னாலே தெரியும் கதிரைகளின் வரிசையை நோட்டம் விடுகிறார்.

தூரப்பார்வை அவ்வளவு துப்புரவாக இல்லாத காரணத்தினால் முன்னே உள்ள வரிசையை அவதானிக்க முடியாது போகவே, தன்னை சமாதானப்படுத்திக் கொண்டு கடைசி வரிசையில் இருந்து நாலாம் இடத்தில் இருக்கும் ஒரு ஆசனத்தில் ஆண்களின் அருகினிலே அமர்கின்றார்.

"தமிழறிஞர் எழுத்தாளர், கவிஞர் கண்ணபிரான் அவர்களின் ஐம்பதாவது நூலாகிய 'ஜனனிக்கும் புது உலகம்' என்ற கவிதைத்தொகுப்பின் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் வெளியீட்டுக்குக் குழுவினரின் சார்பில் வருக வருக என்று வரவேற்று நிற்கின்றோம்" என்ற அறிவிப்பாளரின் குரலை அடுத்து வானளவாக எழுந்த கரகோசம் சுகந்தன் அவர்களை ஆனந்தக் கண்ணீர் சொரிய வைத்து அந்த நாள் நினைவுகளுக்குக் கொண்டு சென்றது.

இன்று ஐம்பதாவது பிரசவத்தை அத்தனை பேருக்கு மத்தியில் வழங்கி நிற்கும் கண்ணன் இருபது வருடங்களுக்கு முன்பாக அவரின் எழுத்துக்களுக்கு அங்கீகாரம் கேட்டு, எழுத்துக்களைப் பதிப்பதற்கு பத்திரிகைகளில் சந்தர்ப்பம் கேட்டு அலைந்த அந்த நாட்களை சுகந்தன் எண்ணிப் பார்த்தார்.

அன்றைய நாட்களைப் போல் அல்லாது மின்னஞ்சலும் மின் வலைப் பின்னலும் இல்லாத காலங்களில் கையெழுத்துப் பிரதிகளாகக் கையாலே எழுதி ஒவ்வொரு பத்திரிகைக்கும் அனுப்பிவிட்டு அவர் காத்திருந்து ஏமாற்றம் அடைந்ததை அவரின் மனம் அசை போட்டது.

புத்தகம் எழுதுவதும் வெளியிடுவதும் மிகவும் கடினமான சிக்கலான, செலவும் அலைச்சலும் கொண்ட ஒரு கருமமாக இருந்த அந்த நாட்களில் தனது ஒரு புத்தகத்தையாவது அச்சிற்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் கண்ணன் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார். ஒரு தடவை அவரிடம் சொல்லிக் கவலைப்பட்ட போது அதை வாசிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.

அவருடைய எழுத்தில் இருந்த வரிகள் தனக்குள் மறைக்கப்பட்டு இருந்த பல விடயங்களை நினைவு படுத்துவதாக இருந்தது. நொந்து போய் மீட்டப்படாது இருந்த தன்னுடைய பழைய நினைவுகளை மீட்டியது போன்று இருந்தது. அவரின் ஒவ்வொரு எழுத்தையும் ஆவலுடன் படிக்கலானார்.

அவரின் எழுத்துக்களை சுகந்தன் கேட்டு லயித்தபோது, தன் நண்பர்களுக்காக மட்டுமே எழுதித் திருப்தியடைவேன் என்ற எண்ணத்துடனே, சற்று வருத்தத்துடனேயும் தன் படைப்புக்களிலே ஒரு படைப்பாளி எழுவதற்கு உள்ள தடைகளைக் கவிவரியாகவே வடித்தெடுத்தார். கவியரங்கம், பட்டி மண்டபம் என்று பலர் கூடும் சபைகளுக்குச் சென்று தன்னுடைய படைப்புகளை வெளிக் கொணர்ந்தார்.

எழுத்தாளர்கள் மத்தியில் அங்கீகாரத்தை அனுகியபோது, வாழ்க்கையில் வெல்ல முனைந்தபோது, ஒவ்வொரு கட்டத்திலும் எழுத்தாளர்கள் அனுபவிக்கும் இடர்பாடுகளைப் பார்த்த போது, நண்பனுக்கு ஆதாரவாகக் கரம் நீட்டியபோது .... என்று அவரைக் கேட்காமலேயே அவரின் மனம் அலைந்து கொண்டிருந்தது.

ஒருவன் வெற்றி அடையும்போது அவனுடன் சேர்ந்து இருப்பவர்கள் அனைவரும் அவனுடைய வெற்றியில் பங்கெடுத்துக் கொள்ளுவார்கள் என்பது எத்தனை உண்மையானது என்று அவர் யோசித்தார். தான் தனக்காகவும் தன்னுடைய குடும்பத்திற்காகவும் செலவழித்த நேரத்தைத் தவிரவும் நண்பனுக்காக செவழித்த பொழுதுகள் ஆனந்தமாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைந்திருந்தது அவருக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

முள்ளில் ரோஜா அமர்ந்திருந்ததாலோ சேற்றிலே செந்தாமரை மலர்ந்ததாலோ அவற்றை கழித்துவிடுவதில்லை. மாறாக அவர்கள் வளர்க்கப்பட்ட அவ்விடத்தை பெருமைப் படுத்தி விடுகின்றனர். இதே போன்று ஒரு எழுத்தாளனின் மூலம் எதுவென்று யாரும் பார்க்கத் தேவையில்லை. அவனுடைய செயல்கள் எழுத்துக்களின் மூலமாக சமுதாயத்தை ஊடுருவிப் பயன் கொடுக்கின்றது.

'எப்பவும் நினைவுகளோடயே போறதா... என்ன நடக்குது எண்டே தெரியேல்லயே' என்றவாறு நிகழ்வில் ஒன்றிக்க முனைந்தார். தொலைவில் அமர்ந்திருந்ததனாலோ என்னவோ, தொடர்ந்து இடம்பெற்ற ஆசியுரை, பாராட்டுரை, அறிமுகவுரை, ஆய்வுரையென அப்பிரதேச இலக்கிய வாதிகள் அனைவரையும் மேடையில் ஏற்றி இறக்குவதைப் போன்றதான நிகழ்வுகளில் அவர் மனம் ஈர்க்கப்படாமலேயே அந்நாளை விட்டு அவர்களுடைய பழைய வாழ்க்கையை நினைவு மீட்டுவதற்காக ஓடிச் சென்றது.

ஒரு ஆசிரியராக அவருக்கு அறிமுகமான கண்ணன் தொடக்கத்தில், குழப்படிகாரனாக இருந்த சுகந்தனின் மகனுக்கு பிரத்தியேக வகுப்பு எடுப்பதற்காகவே அவர்களின் நெருக்கம் உருவானது. கண்ணனின் அன்பான அணுகுமுறையும் அருமையான சொற் பிரயோகமும் அம் மாணவனை மாற்றியெடுத்து அவனுக்கு முறையான கல்வியை வழங்கியபோது, ஆசிரியத் தொழிலிலும் கண்ணன் சேரிலும் அதீத பக்தியே சுகந்தனுக்கு ஏற்பட்டது.

மேலும் நெருக்கமானபோது இலக்கியத்திலே கண்ணனுக்கு இருந்த ஆர்வத்தையும், நயத்தையும் கண்டு அவர் வியந்தார். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக் கண்ணனுடன் பலவகையிலான விடயங்கள் பற்றியும் கதைத்துச் செல்வார்.

அதன்பிறகு, கண்ணனின் பாடசாலையில் நெடுநாட்களாகக் கடமையாற்றிய அதிபர் ஓய்வுபெற்றுச் செல்லும்போது, அவருக்குக் கண்ணன் எழுதிய வாழ்த்துப்பாவை அவர் விழாவில் வாசித்தபோது, கண்ணனின் கவித்திறத்தையும் குரல்வளத்தையும் கண்டு அனைவருமே பாராட்டினர்.

தொடர்ந்து வானொலியில் கண்ணன் கவிதை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன்போது அவரின் முதலாவது நண்பராக, வாசகராக சுகந்தன் இருந்து நடப்புகளை விமர்சிப்பது கண்ணனை மிகவும் கவர்ந்தது.

அவரைப்போலவே ஆர்வமுள்ளவர்களின் வட்டத்தை, தான் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார். பணவசதி கிடைக்கும்போது ஒரு தொகுப்பையாவது வெளியிட்டாக வேண்டும் என்ற எண்ணம் அவரின் இதயத்தின் ஒரு மூலையில் யாரும் அறியாதவாறு வந்து புகுந்து கொண்டது.

"இப்போது இவ்விழாவின் நாயகன், கவிஞர் கண்ணபிரான் தனது ஏற்புரையை வழங்குவார்" என்ற அறிவிப்புக் கேட்டபோது, மனம் ஏனைய சிந்தனைகளை மறந்துவிட்டு அவ்விடத்திற்கு வந்து நின்றது.

பெரும் தீரனென எழுந்து சிங்கம் போல நடை நடந்து, ஒலிபெருக்கியின் முன்னால் மாலையோடு வந்து நின்ற அவரைப் பார்த்தபோது அனைவரின் கண்களுமே நிறைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தனக்கு முன்னாலே வந்து கதைப்பதைப் போல நினைத்துத் தன் இருக்கையில் சற்று அசைந்து நின்று, தன் நிலையைச் சரிப்படுத்திக் கொண்டார் சுகந்தன்.

"அனைத்து மதகுருமார்களே, பெரியவர்களே, அன்பான சகோதர சகோதரிகளே, அருமையான பிள்ளைகளே, ...."

கணீரென ஒலித்த சிம்மக் குரலோனின் ஓசை, நான்கு திசைகளிலும் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளின் மூலமாக மண்டபமெங்கும் ஒலிக்கவும் அவரின் உரையைக் கேட்பதற்கு ஆவலாகக் காதுகளைத் தீட்டிக் கொண்டிருந்தனர் சபையினர்.

"எழுத்தாளன் ஒருவன் உருவாக்கப்படுகின்றான். கவிஞன் ஒருவன் பிறக்கின்றான் என்று இலக்கியவாதிகள் சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். பிரசவத்தின் போது ஒரு பெண் மறுபடி பிறக்கின்றாள் என்றும் சொல்வதை அறிந்திருக்கின்றேன். படைப்பையும் பிரசவித்து தன் எண்ணங்களால் ஒரு தோற்றத்தைப் பெற்றுக் கொள்ளும் எந்தவொரு படைப்பாளியும், ஒவ்வொரு படைப்பின் போதும் ஜனனிக்கிறான் என்பதை இந்தவிடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்...."

என்றவாறு பேச்சைத் தொடரவும் சுகந்தனின் மனம் ஓடிச் சென்று அவரிடம் சரணடைந்து விடுகின்றது.

நல்ல கருத்துக்களை நமது மன ஓட்டங்களைத் தாமறிந்து சொல்வதாற் தானோ படைப்பாளிகள் தம்முடைய சமூகத்தினரிடம் ஒரு அங்கீகாரத்தைப் பெற்று விடுகின்றனர் என்ற எண்ணம் அவருள் உடனடியாகவே புகுந்து கொண்டுவிட அவரின் பேச்சின் பின்னாலேயே முற்று முழுதாகச் சென்று விடுகின்றார்.

# 02

விழா நிறைவினை நெருங்கி விட்டிருந்தது. ஆர்வத்தோடு செவிமடுத்துக் கொண்டிருந்த அவையினர் தமது திருவாய்களைத் திறந்து மலர ஆரம்பித்ததால் ஏற்பட்ட சிறு சலசலப்பு பெரிய குரலாக ஒன்று சேர்ந்து சற்று முன்னால் அந்த மண்டபத்திற் காணப்பட்ட அமைதியை முற்று முழுதாக மாற்றி விட்டது.

தத்தமது இருக்கைகளை விட்டெழுந்து முன்னோக்கிச் சென்றவர்கள் தமது சந்தர்ப்பத்தைப் பாவித்து அறிந்தவர் தெரிந்தவர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தனர். அழகான ஆடைகளுடன் வருகை தந்திருந்த பெண்கள் ஓரளவு பழகியவர்களையும் கையிற் பிடித்து, தங்களுடைய கண்களையும் காதணிகளையும் ஆட்டியாட்டிக் கதைத்துக் கொண்டனர்.

வேலைக்குப் போகாமல் வீட்டிலே இருக்கும் பெண்கள் போல தோன்றியது. தங்களது கணவன்மார் அன்பாகக் கொண்டு சென்று கொடுக்கும் சேலைகளையும் அணிகளையும் வேறு எங்கேதான் போட்டுக் கொண்டு போக முடியும். அதனாலே இங்கே இப்படி வந்திருக்கிறார்களா என்று சுகந்தன் நினைத்தார்.

புத்தகத்தின் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசை ஒழுங்கில் பலர் சென்று கொண்டிருந்தனர். அவர்களின் வரிசையிற் தானும் சென்று நின்று கொண்டு முன்னாலும் பின்னாலும் திரும்பி சபையை அவதானித்தார்.

வவுனியாவில் இலக்கியத்தில் ஆர்வம் உள்ளவர்கள் இத்தனை பேர் இருக்கிறார்களா என்று அவருடைய மனம் கேட்டுக் கொண்டது. அல்லது கண்ணபிரானுக்காக மட்டும் இப்படிப் படையெடுத்து வருகிறார்களா?

இப்படியான ஒன்று கூடல்களை இன்றும் மக்கள் ஆதரிக்கிறார்களா என்றும் மறுபடியும் அவருக்குக் கேள்வி குடைந்தது. அந்தக் காலத்தைப் போன்று அல்லாது இன்று மக்களுக்குப் பொழுதுபோக்கு சாதனங்கள் நிறைந்து விட்டன. வீட்டுக்குள் அமர்ந்தபடியே சதுரப் பெட்டியின் ஊடாக உலகத்தையே வலம் வரும் நிலைமை வந்து விட்டபோது இப்படியான நிகழ்வுகளுக்கு மக்கள் வருவது முற்றுமுழுவதுமாக இல்லாது போய்விட்டது.

தொழில் நுட்பம் விருத்தி அடையும்போது எழுத்தாளர்களுக்கும் இலக்கியவாதிகளுக்கும் கடுமையாகப் போராட வேண்டிய கட்டாயம் எழுகின்றது. அவர்களின் படைப்புக்களுக்கான பெறுமதியையும் கனதியையும் இவை குறைத்து விடுகின்றன. வாசிக்கும் பழக்கத்தை மழுங்கடிக்கச் செய்கின்றன.

இருப்பினும் தங்களது சுமைகளையும் செலவினத்தையும் மன உளைச்சலையும் பாராது எழுதுபவர்கள் எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். தங்களுடைய சொந்தப் பணத்தைக் கரைத்து செலவழித்துத் தங்களுடைய படைப்பை இலக்கிய உலகுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும் அத்தகைய சவால்களை கண்ணபிரான் கடந்து விட்டார் என்பதற்கு அத்தாட்சியாகவே அங்கு வந்திருந்த சனத்திரள் இருக்கிறது என்று யோசித்தார். அங்கிங்கு நோக்கியபடி அசைந்து கொண்டிருந்த அவரது கால்கள் மேடைக்கு மிக அருகாமையை நெருங்கிவிட்டன. அதனால் முன்னால் நடக்கும் நிகழ்வுகளைத் தெளிவாக அவதானிக்க முடிந்தது.

விழா இனிதாகவே நிறைவுற்ற படியால், நாயகனுடன் அவரது வாசகர் வட்டத்தைச் சேர்ந்தவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தனர். அவரையும் துணைவியாரையும் ஒன்றாக நிறுத்தி ஆசீர்வாதம் பெற்றுச் சென்று கொண்டிருந்தனர் இன்னொரு சாரார்.

தன்னுடைய நண்பரைக் கண்டு, கட்டித் தழுவி பாராட்டுக்களைச் சொன்னார் சுகந்தன். அவரைக் கண்டதும் கண்ணனின் கண்களும் மலர்ந்தன. கடவுளைக் கண்டுவிட்ட சந்தோசத்தை அவரின் கண்களிற் காண முடிந்தது. நண்பனின் கைகளைப் பற்றியவாறே அளவளாவினார்.

நண்பருடன் நேயமாகக் கதைத்துக் கொண்டிருந்தாலும் அவரின் கண்கள் வேறு யாரையோ அவசரமாகத் தேடிக் கொண்டு இருந்தன. மேடையிலே அவரின் மனைவிக்கு அருகாகப் பார்த்த பின் முன் வரிசையிற் தேடி நின்றது.

நண்பரிடம் விடைபெற்று மெதுவாக ஒவ்வொரு படியாக இறங்கி வந்து கொண்டிருந்தார். அப்பொழுதும் அவரது கண்கள் தேடிக் கொண்டிருப்பதை நிறுத்தவில்லை.

தொடர்ந்த அவரின் தேடல், அடுத்த வரிசையில் ஒவ்வொரு கதிரையாகப் பார்த்துக் கொண்டு வந்தது. கண்டுபிடித்து விட்ட மகிழ்ச்சியில் அவ்விடத்தைத் தொடர்ந்த அவரது அசைவினைப் பாராமலேயே சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள் அவள்.

அங்கு வந்த நேரத்தில் இருந்தே அவளின் சிந்தனை அங்கு இருக்கவில்லை என்பது அவளுக்கும் அவளின் பெற்றோருக்கும் தெரிந்ததுதான். தெளிவில்லாத அவளின் விழிகள் அந்த இடத்துக்குப் பொருத்தம் இல்லாதவளாக அவளைக் கலவரப்படுத்தியது. ஏதோ வேண்டாத சம்பந்தத்திற்கு கட்டாயப் படுத்துவதான ஒரு முகபாவத்தைக் காட்டி நின்றாள்.

தன்னுடைய தந்தையின் விழாக்களிற்கு சந்தோசமாக வருகை தருபவள் அவள். வழமையாக தந்தையின் பேச்சில் லயிப்பவள். என் அப்பாதான் தலை சிறந்த பேச்சாளர் என்று மனமுருகிச் சொல்பவள், அன்று பேச்சையே கவனிக்காமல் இருந்தது தந்தையாருக்கும் வருத்தமாக இருந்தது.

மேடைப்பேச்சின் போதே இரு தடவைகள் அவர் கதையை நிறுத்திவிட்டு மௌனமாக சபையினரைப் பார்ப்பது போலவே தன் மகளை அவதானித்தை அவள் உணர்ந்துதான் இருந்தாள். இருப்பினும் தகப்பனின் மேலுள்ள கோபம் குறைவதாக இல்லை.

எல்லோரின் மனங்களையும் சமப்படுத்துவதாகச் சொல்லும் ஒரு எழுத்தாளன், மக்களின் மனதை நீவி விடவல்ல ஒரு கவிஞர், தன்னுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் ஒரு சராசரி அப்பாவாக, ஒரு சராசரி மனிதனாக அல்லவா நடக்கிறார் என்ற விடயம் அவளைக் கலவரப்படுத்துவதாக இருந்தது.

புரிந்துணர்வு என்பதுதான் எழுத்தாளர்களின் முதற் சொத்து. தாங்கள் புரிந்து கொண்ட விடயங்களை சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் தெளிவாக நயமாக மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகச் செய்வது அவர்களின் முதன்மையான கடமை என்று அவள் தெரிந்து வைத்திருந்தாள்.

அந்த விடயத்தைத் தனக்குப் பரியும்படியாகச் சொல்லித் தந்த தந்தையார் இன்று எதையுமே புரிந்து கொள்ளாமல் நடக்கிறாரே என்று வருந்தினாள். ஒரு பிள்ளை தன்னுடைய வாழ்க்கையைத் தானாகத் தெரிவு செய்கையில் அவளை எதிரியாக்கி விடுவார்களா என்று அங்கலாய்த்தது அவளின் மனம்.

காதல் என்ற விடயத்தில் மட்டும் ஏன் எல்லா பெற்றோருமே மாதிரியான மனநிலையிலேயே இருக்கிறார்கள் என்று யோசித்துப் பார்த்தாள். தான் நாடறிந்த எழுத்தாளராக இருப்பதால் புகழ், செல்வாக்கு எனத் தன்னைப் போலவே எதிர்பார்க்கிறாரோ என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது.

எழுத்தாளர் என்ற அங்கீகாரத்தையும் தன்னுடைய பேச்சாற்றலையும் கொண்டு தனது தாயாரை வாய் திறந்து விடாமற் செய்வது போலவே தன்னையும் பேசா மடந்தையாக்கி விடுவாரோ என்ற தப்பான எண்ணமும் அவளுக்கு எழுந்தது.

அந்தக் குடும்பக் கூட்டுக்குள் அதுவரை இருந்த அன்பினாலான பிணைப்பு, இந்தக் காதலினால் உடைந்துவிடுமோ என்று வருந்தினாள். வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்தல் என்ற விடயத்தில் ஏன் இந்தப் பெற்றோர் இப்படியெல்லாம் முட்டாள்தனமாக முடிவு எடுக்கிறார்கள் என்று யோசித்தாள்.

யார் என்ன என்பதை யோசித்துக் கொள்ளாமல் காதல் என்றதும் எதிர்த்தே ஆகவேண்டும் என்று அல்லவா நினைக்கிறார்கள். தாங்கள் பெற்றுத் தங்களால் வளர்த்து எடுக்கப்பட்ட தங்களது பிள்ளை, தங்களுக்குப் பிடித்தமானதாகவே வாழ்க்கையைத் தெரிவு செய்திருக்கும் என்று அவர்களிடம் யாரை அனுப்பி சொல்விக்க முடியும்?

அதையெல்லாம் விட்டுத் தள்ளலாம். ஆண் பிள்ளை ஒன்றைப் போல பொறியியற் பீடத்திற்குச் சென்று கல்வி கற்கும் திறமை தனக்குள் இருக்கும்போது தனது வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்யும் திறமை மட்டும் எவ்வாறு இல்லாமற் போகும்? பெற்றவர்கள் எதற்காக அப்படி நினைக்கவில்லை என்பது குழப்பமாகவே இருந்தது.

காதலை எதிரியாகப் பார்ப்பது எம் சமுதாயம். அவர்கள் எல்லோரும் பழைய பஞ்சாங்கம். காதல் என்ற உணர்ச்சியே இல்லாமல் காவியம் படைக்கிறார்களே என்று நக்கலாகவே நினைத்தபோது, தன் முன்னே வந்து நின்ற உருவத்தைப் பார்த்து அவளாகவே எழுந்து நின்றாள்.

“என்ன பிள்ள உன்ன எங்க எல்லாம் தேடிப் பாத்தன். அப்பா அம்மாவோட போய் மேடையில நிக்கிறதுதானே. இங்க தனிய இருந்து என்ன செய்யிறாய்” என்று அவர் கேட்டதற்கு மௌனமாகப் புன்னகைத்தாலும் அவரின் வருகை அவளுக்கு சந்தோசத்தை வழங்கி இருக்கவில்லை என்பது அவளது முகத்திலேயே தெரிந்தது.

அவள் மௌனமாகவே இருந்தபோதும் சுகந்தன் மாமாவின் வாய் மூடுவதைக் காணோம். அவள் எதிர்பார்த்த படியே தன்னுடைய தந்தையின் புராணத்தை ஓதிக் கொண்டிருந்தார். அவருடன் நட்புக் கொண்ட காலத்தில் இருந்து அவருக்கும் அவளுடைய குடும்பத்துக்கும் இருந்த உறவை பெருமையாகச் சொல்லிக் கொண்டார்.

அவரைக் கண்ட முதல் நாளில் இருந்ததான புராணத்தைச் சொல்லத் தொடங்கினார். எத்தனையோ தடவைகள் கேட்டுப் பாராயணம் செய்த அந்தப் புராணம். இருப்பினும் தந்தையின் மீதுள்ள பாசத்தினால் அதைத் திரும்பத் திரும்பக் கேட்பது அவளது வழக்கம். அந்த ஞாபகத்தில் தன்னுடைய திருவாயைத் திறந்து அனைத்தையும் அவிழ்க்கலானார்.


‘ஐயோ மாமா கேட்டுக் கேட்டுப் புளிச்சுப் போச்சு. கொஞ்சம் வாயை சாத்துறீங்களா’ என்று கத்தவேண்டும் போல இருந்தது அவளுக்கு. இருப்பினும் ஏற்கெனவே பழகிக் கொண்ட அவளின் சுபாவம் அவளை வாயைத் திறந்துவிட விடாமற் தடுத்தது.

‘இந்த இடத்தில இருந்ததுக்கு பேசாம மேடையிலயே நிண்டிருக்கலாம். அங்க யாரும் கன நேரம் கதைச்சிருக்க மாட்டினம். இப்பிடி ஒரு பக்கமா ஒளிஞ்சு இருக்கவும் தேடிப் பிடிச்சு வந்து தொல்லை கொடுக்கிறாங்களே’ என்று அவளுக்கு சோர்வாக இருந்தது. ஏதோ ஒரு திட்டத்துடன் நேரத்தைப் பார்த்துவிட்டு,

“மாமா யாழ்ப்பாணத்தில இருந்தா வாறீங்க. பஸ்ஸுக்கு நேரம் வந்திற்றுதே” என்று நினைவூட்டினாள். அவரோ தனது மணிக்கூட்டைத் திருப்பிப் பார்த்து விட்டு,

“நான் மன்னாரில ஒரு கூட்டத்துக்குப் போயிட்டு இங்க நேரா வந்தனான். நாளைக்கு அனுராதபுரத்துக்கு மருந்து ஒண்டு வாங்கப் போகோணும். ஆறுதலா நாளைக்குப் பின்னேரம் போல யாழ்ப்பாணத்துக்கு வெளிக்கிடுவன்” என்று சொன்னார்.

‘ஆக நேரம் என்றது பிரச்சினையே இல்ல. இண்டைக்கு உப்பிடித்தான் கதை அளந்து கொண்டு இருக்கப் போகிறேன் என்கிறாரா? ஐயோ இவரிட்ட இருந்து தப்புவது எப்படி?



மனம் எதை எதையோ நினைத்துக் கொண்டாலும் அவளுடைய காது கவனமாக அவரின் கதைகளை உள்வாங்கி மூளைக்குக் கடத்தாமலே வெளியேற்றிக் கொண்டது. சுகந்தன் மாமாவின் கதை எதுவுமே அவளின் காதுக்குள் நுழைந்ததாகத் தெரியவில்லை. பழக்க தோஷத்தினால் வலிந்து புன்னகைத்தபடி பேசா மடந்தையாக இருந்தாள்.

அவளுடன் கதைத்துக் கொண்டிருந்த சுகந்தன் திடீரென எழுந்து நின்று யாரையோ கையைக் காட்டிக் கூப்பிட்டார். அவர்கள் இருவரும் ஏதோ சுகநலம் விசாரித்தார்கள். பின்பு அவர்கள் இருவரும் சேர்ந்தே விடைபெற்ற போது அவர்களை வழியனுப்பிவிட்டு உட்கார்ந்தாள் அவள்.

'ஐயாவின்ர ஒரே மகள். பெரிய கெட்டிக்காரி. பேராதனையில பொறியியல் படிச்சுக் கொண்டிருக்கிறா. நல்ல பிள்ள. ஐயாவப் போலவே ஆக்கள மதிச்சு நடக்கிறவள்.' என்றவாறு அவளைப் பற்றிய அறிமுகமும் அந்தப் புதியவருக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. 'சரி.. இனி சுகந்தம் மாமாவுக்கு இண்டைக்கு முழுதும் வாய் மூடப்படப் போவதில்லை என்பதை உணர்ந்த படியால் மனதுக்குள் சிரிப்பு வந்தது.

இருப்பினும் அவளின் கடுமையான முகபாவம் அவற்றை மறைத்துவிட அவளின் கண்கள் மறுபடியும் மேடையில் போய் நின்றது. இளம் தலை முறையினரான எழுத்தாளர்கள் தந்தையின் கால்களில் விழுந்து ஆசி பெற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களைத் தடவி அப்பா அன்பொழுகக்கதைப்பதையும் பார்த்தபோது நடிப்பு என்று அவளுடைய உதடு முணுமுணுத்தது.

அவளின் கூரிய பார்வை தந்தையாருக்குப் புரிந்ததா தெரியவில்லை. அந்த நேரத்தில் அவளின் பக்கமாகப் பார்வையைத் திருப்பிய அப்பாவும் மகளின் மௌனத்தைப் பார்த்துக் கவலைப்படுவதாகத் தெரிந்தது.

தான் பேசி முடிந்ததும் ஓடி வந்து கழுத்தைக் கட்டிக் கொள்ளும் தன்னுடைய செல்வ மகள் யாரோ எதிரியைப் போலே இருந்து, தான் சிரிப்பதைக் கண்டு பொருமுவதாகத் தெரிந்தது அவருக்கு. அருகில் வந்து ஆறுதல் சொல்லித் தீர்த்துக் கொள்ளக் கூடிய பிரச்சினை அல்லவே அவர்கள் இருவருக்கும் இடையில் நடப்பது.

'எத்தனையோ விடயங்களைக் காலத்தின் கையிற் போட்டு விடுவதைப் போன்று இதையும் காலமே தீர்த்து வைக்க வேண்டும். இருப்பினும் கடவுளே இதற்காக நிறைய காலத்தை எடுத்து விடாதே'

'வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்களையும் பகைமையையும் சந்திக்க வைத்த நீ என்னுடைய மகளையும் எதிரியாக்கி விடாதே' என்று மௌனமாக அவரின் மனச்சாட்சி வேண்டிக் கொண்டது. அந்த விழாவை வெகு சீக்கிரத்தில் முடித்துவிட எண்ணம் கொண்டார்.

இருப்பினும் வந்தவர்களை உபசரித்து வழியனுப்ப வேண்டும் என்ற கடமைப்பாட்டோடு அவர் இயங்கிக் கொண்டிருக்க அவருக்கு அருகில் இருந்தபடியே அப்பாவித்தனமாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தாள் அம்மா.

அவர்களின் மனதை விளங்கிக் கொள்ளாத அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக இருந்தது. விழாவுக்கு வருவதற்கு விருப்பம் இல்லாதவளை இழுத்துக் கொண்டு வந்ததும் இல்லாமல் தன்னைப் பார்த்துக் கொண்டே நேரத்தை வீணைக் கெடுத்துக் கொள்கிறார்களே.

அப்பாவுக்கு எப்பொழுதும் கடமைதான் முக்கியம். இந்த ஒரு சமயத்திலாவது தங்கள் களியாட்டங்களைக் குறைத்துக் கொண்டு வீட்டுக்குப் போக மாட்டார்களா என்று அவள் எரிச்சல்பட்டாள். அவர் தான் தெய்வம் என்று போய்க் காலில் விழும் மற்றவர்களைப் பார்க்கும்போதும் கோபம் கோபமாக வந்தது.

தான் இங்கு வந்திருக்கவே கூடாது. எவ்வளவோ மறுத்தும் வலுக்கட்டாயமாகத் தன்னை இழுத்து வந்ததை நினைத்துப் பார்த்தாள். தனியே வீட்டில் விட்டால் எங்கே ஓடிப் போவாளோ என்ற பயத்திலே அம்மாவும் அப்பாவும் வலுக்கட்டாயப் படுத்தி அழைத்து வந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டாள்.

மனம் நிறைந்த சலிப்புடன் எண்ணிக் கொண்டாள். 'எப்பத்தான் இங்கயிருந்து போவமோ'

# 03

ஓரளவு வேகமாகவே ஓடிக்கொண்டிருந்த காரின் பின்புறமாக இருந்த இருக்கையில் அமர்ந்தவாறே, கண்ணாடி வழியாக வெளியே பார்த்துக் கொண்டு வந்தாள் அவள். எத்தனை பெரிய பெண்ணாக ஆன பின்பும் இவ்வாறு சிறு பிள்ளையைப் போல வேடிக்கை பார்ப்பதைப் பெண்கள் நிறுத்துவதில்லை.

நாம் அசைவதைக் காட்டிக் கொடுத்துவிடாமல், காரின் வேகத்தில் அதற்கு எதிர்த்திசையில் ஓடிக் கொண்டிருந்த மரங்களை நோக்கி அவளின் பார்வை சென்றது. தலையைச் சரித்தவாறு கண்ணாடி வழியாகப் பார்த்தாள். கண்ணுக்கெட்டும் உயரத்தில், ஓங்கி வளர்ந்து காணப்பட்ட அவற்றைப் பார்க்கும்போது, மனம் உவகையால் நிறைந்து கொண்டது.

தன்னுடைய மன அழுத்தத்தில் இருந்து சிறு இடைவெளியைக் கொடுப்பது போல இருந்தது. அது மட்டுமல்ல, முன்புறமாகக் கதைத்துக் கொண்டு வந்து கொண்டிருக்கும் அப்பாவின் குரலைக் கேட்காது தப்புவதற்குரிய உத்தியாகவும் தென்பட்டது.

வவுனியாவின் நகர்ப்பகுதியிற் காணப்பட்ட ஒரு மண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்குச் சென்று விட்டு, ஓமந்தையில் நாம்பன்குளத்திலுள்ள அவர்களின் வீட்டுக்குத் திரும்பும் வரை வழிவழியாகவே இயற்கையினை ரசித்துச் செல்ல நேர்ந்தது அவளுக்குச் சந்தோசமாக இருந்தது.

யுத்தத்தின் போது யாரும் வருவதை நினைத்துப் பார்க்கவே முடியாது இருந்த அந்தப் பகுதிகள் இன்று அழகிய விளை நிலங்களையும் குடி மனைகளையும் கொண்டதாக அமைந்திருந்தது. வவுனியாவின் வடக்குப் பகுதியில் கடும் யுத்தம் நடைபெற்ற இடங்கள் அனைத்தும் இந்நாட்களில் குடியேற்றங்களாலும் அபிவிருத்தித் திட்டங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

வடக்கின் வசந்தம் என்ற பெயரில், வட மாகாண மக்களுக்கு வழங்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் மிக முக்கியமானது இந்த பாதைகளே என்பது பலரதும் அபிப்பிராயமாகும். குலுக்கல் இல்லாமற் பயணித்து வரும் சொகுசுக் காரிலுள்ள பயணத்தின் சௌகரியம், பாதைகளின் செப்பமான கட்டமைப்பைக் காட்டியது போலும்.

போக்குவரத்து என்பது அபிவிருத்தியின் ஆரம்பப் படிதானே. அதன் மூலம் பிரதேசங்களுக்கு இடையிலான, ஏன் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளே அதிகரித்து, உலகம் சுருக்கப்பட்டு விட்டதாக அல்லவா சொல்லியிருக்கிறார்கள்.

பாதையின் செம்மையுடன் ஒரு புறமாகச் செல்லும் இலங்கை மின்சார சபையின், முப்பத்து மூவாயிரம் வோல்ற்று அழுத்த மின் கம்பிகளும் அவர்களது பயணத்தின் போது அவர்களைத் தொடர்ந்து வருவதைப் போல இருந்தது. வழி தெரியாது பயணம் செய்வோருக்கும் தொலைவில் கிராமம் ஒன்று இருக்கின்றது என்பதை அடையாளம் காட்டுவதைப் போன்று இந்த மின்மார்க்க கம்பிகள் உதவுகின்றன.

'யாவர்க்கும் மின்சாரம்' என்ற தொனிப்பொருளுடன் வறிய மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக இலவச அடிப்படையிலும் கடன் அடிப்படையிலும் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த மின்சாரத்தின் பிரவேசம் அங்கே வீடுகளில் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. சாதாரணமாக அமைக்கப்பட்ட சிறு வீட்டிலும் மின்சார விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டன.

இந்தத் திட்டத்தின் மூலம் தெற்கு ஆசிய நாடுகளிலே சகல பிரசைகளும் மின்வசதியை அனுபவிக்கும் நாடு எங்களுடையது என்பதை அரசு திடமாகச் சொல்லிக் கொள்கின்றது. எந்த அரசு மாற்றம் அடைந்தபோதும் மின்சாரத்தைப் பற்றிய கொள்கைகள் ஒரே மாதிரியாகவே அமைந்திருக்கின்றன.

'ஆசிய நாடுகளிலேயே எம் நாட்டில் தான் இருபத்தி நான்கு மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படுகின்றது' என்பதை யாரோ ஒரு அரசியல் பிரமுகர் தனது உரையில் பெருமையாகச் சொல்லியதைக் கேட்டதாக ஞாபகம் வந்தது அவளுக்கு.

மின்சாரத்தை அனுபவிக்கும் குடிசை வாழ் மக்களையும் அவர்களுடைய குதூகலத்தையும் பார்க்கும் போது, நாட்டின் அபிவிருத்தியில் ஒரு சிலவற்றையாவது இவை கோடிட்டுக் காட்டுகின்றன என்ற எண்ணம் அவளுக்கு எழுந்தது. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அவற்றின் பங்களிப்பு நேரடியாகவே கவனம் செலுத்துகின்றது.

எந்த ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் விவசாயம், சேவைகள் என்பவற்றுடன் கைத்தொழில் முன்னோக்கி நிற்பது அவசியமாகின்றது என்று பல்கலைக் கழகத்திற் புகுந்த முதல் நாளில் பீடாதிபதி சொல்லியது நினைவுக்கு வந்தது. சேவைகளைப் பொறுத்தவரையில் இலங்கையின் இடம் ஓரளவு முன்னணியாகவே இருக்கிறது என்றும் சொன்னார்.

'இவ்வாறான சேவைகள் குறுகிய காலத்திற்குள் நாட்டின் விருத்தியைக் கட்டியெழுப்பின என்பதில் ஐயம் கொள்ளத் தேவையில்லை என்பதைப் பலவாறு புலப்படுத்திவிட்டன. இருப்பினும் மக்களின் வாழ்க்கை முறையில் கருதிடத் தக்க மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் எம்மவரின் மனநிலை மாற்றம் அடையவில்லை' என்று அவர் மேலும் சொல்லியது நினைவுக்கு வந்தது.

வெளியே ஓடிக்கொண்டிருந்த சிந்தனை திடீரென நின்றது. முன்னாலே இருந்த அப்பாவையும் அருகில் இருந்த அம்மாவையும் தலையைத் திருப்பாமலே நோக்கிக் கொண்டது.

'எப்படி அபிவிருத்தி அடைந்திருந்தும் என்ன? ஒரு காதலைப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, காதலுக்கு மரியாதை வழங்க முடியாத அளவிற்கு எனது சமுதாயம் பின்தங்கி நிற்கிறதே' என்ற எண்ணம் மறுபடி ஏற்பட்டது.

நினைவுகளோ கதைகளோ எங்கே எப்படிச் சென்று கொண்டிருந்தாலும், அது இறுதியாகத் தங்களிடமே வந்துவிடும் என்பதைப் பலரும் அறிந்துதான் இருக்கிறார்கள். மனித மனத்தின் இயல்பான ஓட்டம் அது. அவற்றை உணர்ந்து கொண்டும் மனிதனால் அவற்றில் இருந்து விலகி ஓட முடிவதில்லை. மனிதத்தைப் புனிதமாக்க ஆண்டவன் கொடுத்த கொடைதான் அது என்றும் சொல்லலாம்.

எவ்வாறு என்று யோசிக்கலாமா!

எதையும் தன்னுடன் ஒப்பிட்டுப் பார்ப்பவன், சுய பரிசோதனை செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வான். இது அவனுடைய பலவீனங்களை அவனுக்குக் காட்டிக் கொடுத்துவிடும். அதனால் யாரும் சொல்லிக் காட்டாமலேயே அவன் திருந்திவிடுவான் என்று நினைத்த போது திடீரென நெஞ்சுக்குள் நெருடுவது போல இருந்தது.

எதையுமே நல்லதுக்கு என்று எண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தித் தந்தவர் அப்பா. ஆனால் இன்று. தந்தைக்கும் மகளுக்கும் முரண்பாடு எழுந்துவிடும் அளவிற்கு அந்த விடயத்தில் தன் பக்கமாக அதிகளவு பிடிவாதத்துடனேயே இருக்கிறாரே என்று யோசித்தபோது கவலை வந்தது.

வெளியில் இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்த கண்கள், திசையை மாற்றி முன்புறமாக நோக்கவும் காதுகளில் அந்தக் குரல் விழுந்தது.

அவளுக்கு அருகாகவே அமர்ந்திருந்த அவளின் அன்னையும் முன்புறமாக இருந்த ஆசனங்களில் அமர்ந்திருந்த அப்பாவும் சாரதியும் பேசிக் கொள்ளும் பேச்சுக்குக் காது கொடுத்துக் கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

அப்பா அதிகளவு பேச்சுக் கொடுக்காமல் மௌனமாகவே வரவும், சாரதிதான் ஓயாமற் பேசிக் கொண்டு வந்தான்.

“இண்டைக்கு உண்மையாகவே நிறைய சனம் வந்திருந்திச்சு ஐயா. உங்கட புத்தக வெளியீடு எண்டு கேள்விப்பட்டாலே போதும், எங்கெங்கோ இருந்தெல்லாம் ஆக்கள் வருகீனம். எல்லாருமே விழாவப் பத்தி சந்தோசமாகச் சொல்லிக் கொண்டு போகீனம்.” என்றான்.

“சாதாரணமா, ஒருத்தனுடைய முதலாவது ரெண்டாவது புத்தக வெளியீட்டுக்கு சனம் போகும். வெளியீடுகள் அதிகமாகப் போகும் போது ஆக்கள் குறைஞ்சு கொண்டுதான் போகும். எப்பவுமே இதே மாதிரி சனத்த வரச் செய்ய வேண்டுமெண்டா ஒண்டு காத்திரமான படைப்புக்களக் குடுத்துக் கொண்டு இருக்கோணும். அதுவும் சமுதாயத்தோட சிந்தனைகளக் குறைக்காமப் போகோணும்”

“ஐயா, இலக்கியத்தப் பத்தி எதுவுமே தெரியாமத்தான் ஐயா உங்களிட்ட வேலைக்கு வந்தன். உங்களோட எல்லா இடத்துக்கும் போறதினாலயும், உங்கட பேச்சக் கேக்கிறதினாலயும் எனக்கு ஆர்வம் மட்டுமில்லயா கொஞ்ச அறிவும் வந்திருக்கு. நான் நிச்சயமாச் சொல்லுறன். இப்பிடிப்பட்ட இலக்கியங்கள் இளம் பிள்ளைகளுக்குப் பிடிக்கும்.”

"இண்டைக்கு விழாவுக்கு வந்திருந்த இளைஞர்களப் பாத்திட்டு அப்பிடிச் சொல்றியா. இளைய சமுதாயத்த என்ர பக்கம் திருப்ப வேண்டும் என்கிறது என்ர விருப்பம். அவர்கள் தொழில்நுட்பத்தின்ர மாயவலையில சிக்காம, பழமைகளைப் பாதுகாக்கிறவங்களா வளர வேண்டும் என்கிறதுதான் என்ர நோக்கம். ஆனா அது எப்பிடிச் சாத்தியமாகப் போகுது என்று எனக்கெண்டாத் தெரியேல்ல. பெற்றார் ஏதும் சொன்னாலே கோபிக்கிற அளவுக்குப் பிள்ளைகள் இப்ப இருக்கினம். அதில நான் சொல்லிக் கேட்டுக் கொள்ளுவாங்களா" என்று சொல்லவும் சாரதி மௌனத்தைப் பேணவும் அவளை ஏதோ ஒரு விடயம் குத்துவது போல இருந்தது.

அப்பா மறைமுகமாகத் தன்னைச் சுட்டுகிறார் என்பதைப் புரிந்து கொண்ட அவளுக்கு, திடீரென முற்கோபம் முகத்தில் எழுந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு இறுக்கமாக அமர்ந்திருந்தாள்.

"குளத்தடியில் இறங்கிப் பாத்திட்டுப் போவமா" என்று கேட்டவாறே முகத்தைப் பின்புறமாகத் திருப்பிய தந்தையார், மகளின் பார்வை வலுக்கட்டாயமாக வெளியிற் பாய்ந்ததைக் கண்டதும் பேச்சை நிறுத்திவிட்டு சாரதிக்கு மௌனமாக எதையோ சொன்னார். தொடர்ந்து காரை ஒரு புறமாக நிறுத்திவிட்டு அவனும் அப்பாவும் இறங்கினார்கள்.

அவளைத் திரும்பிப் பார்த்து இருக்கச் சொல்லிவிட்டு அம்மாவும் இறங்குவது தெரிந்து. குளக்கரையில் வீசிய இதமான காற்று அவளை அணைத்துக் கொண்டது. யாரும் கேளாமலே தானாக இறங்கி அப்பா சென்ற திசைக்கு எதிர்த்திசையில் ஆறுதலாக நடந்து சென்றாள்.

மாலை மயங்கி இருள் கவிந்து கொண்டிருந்த நேரமாதலால் குளக்கரையின் அழகை முழுமையாக ரசிக்க முடியவில்லை. அமைதியான சுற்றாடலின் தென்றல் காற்றும் அவளின் ஆடையைத் தாண்டிச் சென்று உடலைச் சிலிர்க்க வைத்தது. த்னது இரு கைகளையும் வயிற்றுக்குக் குறுக்காகக் கொண்டு சென்று இறுக்கமாக்கிக் கொண்டு குளிருக்கு நடுங்காத வண்ணம் தாக்குப் பிடித்தபடி நடை தொடர்ந்தது.

'சல சல' என்று வாய்க்காலில் ஓடிக் கொண்ருந்த நீரின் சத்தம் அவளை அழைப்பதைப் போன்று இருந்தது. குறைந்த அளவில் படிக்கற்கள் தென்பட்ட அந்த இடத்திற்கு வந்தாள். ஒரு காலினால் ஊன்றிக் கொண்டு மற்றைய காலைத் தண்ணீரில் நனைப்பதற்காக நீரை நோக்கி நீட்டினாள்.

ம் ஹூம்... நீர் எட்டுவதாகத் தெரியவில்லை. மேலும் இரண்டு படிகளில் கால்வைத்து இறங்கி வந்து மறுபடியும் அதேபோல கால் ஒன்றை ஊன்றியபடியே மற்றைய காலை நீருக்குள் கொண்டு செல்ல முனைந்தாள். அவள் நினைத்ததைப் போன்று அல்லாமல் அவளின் சமநிலை குலைந்ததை உணர முடிந்தது.

பின்புறமாக யாரோ தோளைப் பற்றியபடி இழுப்பது தெரிந்தது. திரும்பியபோது ... அம்மா... அம்மா எவ்வாறு இங்கு வந்தார்? அப்பாவுக்குப் பின்னாலே அல்லவா போய்க் கொண்டிருந்தாள்.

அப்பாவுடன் சென்று கொண்டிருந்தபோது காரின் கதவு திறந்து அவள் வெளியே வந்ததைக் கவனித்ததாகவும் அவளையும் அறியாமல் பின் தொடர்ந்து வந்ததாகவும் அவள் சொன்னாள்.

“பழக்கம் இல்லாத இடத்தில் இருட்டில இப்பிடி இறங்குறதா. இங்க தாமரக் கொடி கூடவா இருக்கு. அதுக்குள்ள சிக்குப்பட்டா ஆபத்து. அதுதான் உன்னப் பிடிச்சு இழுத்தனான்” என்று விளக்கம் அளித்தார் அம்மா.

அன்னையரின் குணம் இதுதானே. பிள்ளைகளைப் பின் தொடர்ந்து சென்று அவர்களுக்கு எதுவும் வராமல் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தன்னைக் கவனிக்கவில்லை என்று நினைத்தபோதும் அவர்களின் கவனிப்பு எப்போதும் தன் மீதே இருக்கின்றது என்பது புரிந்தது.

அவர்கள் நின்ற இடத்தை நோக்கி சாரதி வந்தான். அவனுடைய கரங்களில் இளம் சிவப்பு நிறத்திலான தாமரை மலர்கள் இருந்தன. அவற்றைப் பவ்வியமாக அவளை நோக்கி நீட்டினான்.

அவளுக்குப் பூக்கள் என்றாலே மிகவும் பிடிக்கும். அதிலும் முழுமையாக மலர்ந்திராத தாமரை மலரில் விருப்பம் மிகவும் அதிகம். அவற்றைச் சந்தோசத்துடன் வாங்கிக் கொண்டாள். அவற்றை மேலும் கீழுமாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது தந்தையாரும் அவ்விடத்திற்கு வந்துவிட்டார்.

“வெளிச்சம் இல்லாத இடத்துக்கு எதுக்குப் பிள்ளயக் கூட்டி வந்தாய்?” என்று அம்மாவை நோக்கிக் கடிந்து கொண்டார். ‘அவ கூட்டிக் கொண்டு வரேல்ல நானாத்தான் வந்தன்’ என்று சொல்வதற்கு அவளுடைய நா எழுந்தாலும் அடக்கிக் கொண்டாள்.

'பெரிய கவனிப்புத்தான். அம்மாக்கள அதட்டுற வரையிலும் அப்பாமார் ரொம்ப வில்லத்தனமாவே இருக்கினம்' என்று மனது நினைத்துக் கொண்டது.

"சரி சரி நல்லாவே இருட்டத் தொடங்கிட்டுது. வாங்கோ வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லிவிட்டுத் தந்தையார் முன்னே போகவும் அவளும் அம்மாவும் பின்னாலே சென்றார்கள். ஒரே ஓட்டமாக ஓடிய அவர்களின் சாரதி வாகனத்தை ஸ்ரார்ட் எடுத்து பின்னோக்கி எடுத்து அவர்கள் ஏறுவதற்கு வசதியாக அருகில் கொண்டு வந்து நிறுத்தினான்.

கை நிறைய மலர்களுடன் ஏறிக் கொண்ட அவள் அவற்றையே பார்வையிட்டவாறு அமர்ந்திருந்தாள். அவர்கள் நால்வரும் ஏறி அமர்ந்ததும் மறுபடியும் வாகனம் பயணிக்கத் தொடங்கியது.

அனைவரினதும் மௌனத்துடன் தொடர்ந்த அப்பயணம் முடிவடைந்து, அவர்களின் வாசலின் கீழ் கார் நிறுத்தப்பட்டது. கைகளில் மலர்களுடனும் அவசரமாகக் கார் கதவைத் திறந்து கொண்டு விடுவிடுவென உள்ளே சென்றுவிட்டாள் மகள்.

அவள் பின்னால் அம்மாவும் சென்றுவிட மாலைகளை எடுத்துக் கொண்டு அப்பா அந்த வராண்டாவில் காலடி எடுத்து வைத்தார்.

# 04

'வவுனியாவில் இயற்கை அழகு நிறைந்த கிராமப்புறங்களில் ஒன்றாகிய நாம்பன்குளம் பகுதிக்கு, யாழ்- கண்டி பிரதான பாதையாகிய ஏ ஒன்பது பாதையிலே ஓமந்தை கழிந்ததும் வலது பக்கமாகத் திரும்பி, ஏறத்தாழ ஐந்து கிலோ மீற்றர் செல்ல வேண்டியது அவசியமாகும்.

வவுனியா பிரதான வைத்தியசாலையில் இருந்து ஏறத்தாழ நான்கு, ஐந்து கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகள் நகரப்புறத்தைப் போலவே ஆரவாரத்தைக் காட்டுவதால், அமைதியான கிராம அழகு எனும் போது ஓமந்தை, செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணி பகுதிகளை அநேகமானவர் குறிப்பிடுவது வழக்கமாகும்.

வவுனியாவிலே எந்த இடத்திலும் காணப்படும் மண்ணின் செழுமையும், குளங்களும் தோட்டங்களின் அழகுகளும் வவுனியாவில் வேலைக்கென வருவோர் இந்த இடத்தைவிட்டுப் போய்விட மனமில்லாத ஒரு சுற்றாடலை உருவாக்கிவிடும். அதுவும் நாம்பன் குளத்தின் அமைப்பும் அதைச்சுற்றி இருக்கும் வயல்களின் செழுமையும் அழகும், மிக அமைதியான சுற்றாடலும் எந்தவொரு மனிதனையும் கலா ரசிகனாக்கி விடும்.

வெளியிடத்தில் இருந்து இங்கு வாழ வருபவர்களை அச்சுறுத்தும் ஒரேயொரு விடயம் வவுனியாவிலுள்ள தண்ணீரின் கடினத் தன்மை. நிலக்கீழ் படுக்கையிற் காணப்படும் கல்சியத்தை, சூடாக்கி வடிகட்டிய பிறகும், அதன் கடினத்தன்மை முற்றாக அகற்றப்படுவதில்லை என்று தெரிவிக்கின்றார்கள். அந்த இரசாயனமானது அலுமினியம் போன்ற உலோகங்களுடன் தாக்கம் அடையும்போது பாரதூரமான பலன்களை ஏற்படுத்துகின்றது.

வவுனியா மண்ணைப் பொறுத்தவரையில் குடிக்கமற்றும் சமையலுக்குப் பாவிக்கும் நீருக்கு நிலையான நிரந்தரத் தீர்வு முக்கியமானது என்பதை அரச அதிகாரிகளும் பொறியியலாளர்களும் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால் பறங்கி ஆற்றைக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் வவுனியா மாவட்டத்தில் இப்பொழுது கட்டமைப்பில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நீர் வழங்கல் திட்டமானது, மக்களின் பாவனைக்குக் கையளிக்கபட்ட பின் இவ்வாறான பிரச்சினைகளைக் கணிசமாகவே குறைத்துக் கொள்ளலாம் என்பது அரச அதிகாரிகளின் கருத்தாகும்.

தற்பொழுது அநேகமானவர்கள் வவுனியாவில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரைப் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்கிறார்கள். மலை நாட்டில் இருந்தும் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட நீர் மக்களால் நுகரப்படுகின்றது. அது ஆரோக்கியத்தை முற்றுமுழுதாகக் கொடுத்துவிடுகின்றதா என்பதும் சர்ச்சைக்குரிய விடயம்.

இயற்கை எவ்வாறாக அமைந்தபோதும், எமது நாட்டின் நெஞ்சுப் பகுதியில் இருக்கும் வவுனியா மாவட்டம் சமீப காலமாகவே, பல்வேறு விடயங்களுக்காகவும் பிரபலமாக்கப்பட்டு வந்ததை யாரும் மறந்துவிட மாட்டார்கள். போர்க் காலங்களில் வடபகுதியையும் தென்பகுதியையும் இணைக்கும் பாலமாக இருந்த இப்பிரதேசம், ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறில் இருந்து, பல்லாயிரக்கணக்கான மக்களை ஏற்று வாழவைத்துப் போஷித்திருக்கின்றது.

இயற்கையாகவே அமைந்திருக்கும் குளங்களும் காடுகளும் நாட்டின் மொத்த மழைவீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செலுத்துகின்றது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இம்மாவட்டத்தில் ஊர்களின் பெயர்கள் கூட குளங்களின் அல்லது காடுகளின் பெயர்களிலே இடம்பெற்றிருப்பது அனைவருமே சுட்டிக் காட்டும் ஒன்று.

இந்த செழுமையையும் அமைதியையும் அனுபவிப்பதற்காகவே இப்பகுதியில் காணியை வாங்கி வீடு கட்டிக் கொண்டேன்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார் கண்ணன்.

இயற்கை அழகு பொருந்திய நாம்பன்குளம் பகுதியில், நாம்பன் குளம் குளத்திலிருந்து சுமார் அரை மீற்றர் தொலைவில், இரண்டு ஏக்கர் காணியின் நடுவிலே இரண்டு தட்டுக்களைக் கொண்ட பெரிய வீடாகக் காட்சியளித்தது அந்த வீடு. புது நாளின் உதயத்தைக் காட்டும் நிலையிலே, உயிரோட்டம் கொண்டு சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியதாக இருந்தது அவர்களின் நடமாட்டம்.

அதிகாலையில் நேரத்தோடு விழித்துக் கொண்ட கண்ணபிரான் வீட்டுக்கு முன்னாலே காணப்பட்ட அந்தப் பெரிய வளவை விளக்குமாறு பிடித்துக் கூட்டிக் கொண்டிருந்தார். அவருக்கு அருகில் நின்றவாறு பக்கத்தில் இருந்த பொருட்களை ஒதுக்கிக் கொடுத்தார் அவரின் மனைவி.

அதிகாலையில் நடந்து திரிவதும் கடினமான வேலை செய்வதும் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று அவருக்கு வைத்தியர் சொல்லியிருந்தார்கள். அதைவிடவும் எதும் எழுத வேண்டி இருந்தால் அதற்குரிய சட்டகத்தை இரவே வரைந்து விட்டு இவ்வாறு வேலை செய்யும்போது சிந்தித்தபடியே விடயங்களை ஒழுங்குபடுத்துவது கண்ணனின் வழக்கம்.

அந்த வீட்டில் தோட்ட வேலைக்கு வரும் கிழவன் மரவள்ளிப் பாத்திக்கு அருகாமையில் நின்றவாறு மண்வெட்டியால் கொத்திக் கொண்டு இருந்தான். முதல் நாள் குண்டசாலையில் இருந்து கொண்டு வரப்பட்ட குறுகிய கால பயறு விதைகளை அவன் நடுவதற்கு ஆயத்தமாக இருந்தான்.

காரை ஒரு புறமாகக் கொண்டு சென்று கோசைப் பிடித்துத் தண்ணீர் பெற்று அதைக் கழுவிக் கொண்டான் சாரதி. ஒவ்வொரு நாளும் காலைக்கடன் கழிப்பதைப் போன்றே அவன் காரைக் கழுவி எடுப்பது வழக்கமாக இருந்தது. அனைவரும் மௌனமாகவே வேலை செய்து கொண்டாலும் அந்த இடத்தில் இருந்த ஊசலாட்டம் அவளை நித்திரையில் இருந்து எழுப்பிவிட்டது.

இரவு நீண்ட நேர விழிப்பின் பின்னால், தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட பிரியந்திக்கு, அந்த அழகுச் சுற்றாடலுடன் ஒட்டாதவாறு, எரிச்சலுடனேயே அந்த நாள் விடிந்தது.

உறக்கத்தைத் தொலைத்த கண்கள் செவ்வரியோடி சிவந்து காணப்பட்டதுடன், தலையும் விண் விண் என்று வலிப்பது போல இருந்தது. உண்மைதானே என்னதான் ரம்மியமான சூழலில் இருந்தாலும், மனதில் வலி இருக்கும்போது, எதையும் அநுபவிக்கவோ ரசிக்கவோ எமது ஐம்பொறிகளும் இடம் கொடுப்பதில்லை.

இந்த இருபத்திரெண்டு வருட வாழ்க்கையில் எந்நாளும் அனுபவிக்காத வேதனையை அவள் இந்நாட்களில் அனுபவிப்பதாக உணர்கின்றாள்.

பெற்றோருடன் முரண்பாடு என்பது, பிள்ளைகளாற் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றே. அதுவும் காதல் என்ற விடயத்தில் பெற்றோர்கள் முரண்படும்போது பலவிதமான பாரதூரமான முடிவுகளை எடுப்பதற்கும் பிள்ளைகள் உந்தப்பட்டு விடுகின்றனர்.

காதலில் ஈடுபடும் யாருமே, தமது காதல் உலகத்திலேயே விநோதமான விடயம் என்றும், உற்றார், சுற்றம் மட்டுமல்ல. இயற்கையே தங்கள் காதலை வாழ்த்துவதாகக் கனவு கண்டு கொண்டிருப்பர்.

அவர்களுக்கு இடையூறு யாரால் எவ்வாறு ஏற்படுத்தப்படினும் அவற்றைத் தகர்த்தெறிந்து கொண்டு தாங்கள் இணைந்துவிட வேண்டும் என்பதிலேயே தீவரமாக இருப்பார்.

ஆனால் இங்கு பிரியந்தியின் போராட்டமோ அதுவல்ல. தன்னுடைய காதல் தோல்வியைத் தழுவுமா அல்லது வெற்றியை அடையுமா என்பதை அவள் நினைக்கவில்லை. தோல்வி என்பதையே அவள் வாழ்க்கையில் அனுபவித்ததில்லை. அதை யாரும் சொல்லிக் கொடுத்துத்தான் அறிய வேண்டும் அவளுக்கு.

ஆனால் தான் நினைப்பதை, எதிர்பார்ப்பதை, தனக்கு முன்பாகவே நிறைவேற்றித் தரும் அவரது தகப்பன் எதற்காக அந்த விடயத்தில் தன்னை எதிர்க்கின்றார் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் ஏற்பட்ட குழப்பமே அவளைத் தொடர்ந்து கலவரப்படுத்தியது.

ஏனையவர்களுக்கு இருப்பதைப் போல வெறும் ஈகோ சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. வேறு ஏதாவது பலமான காரணங்கள் இருக்கும் என்பதை அவளது மனது சொல்லிக் கொண்டு இருந்தது. ஆனால் இவ்வாறாக மௌனம் சாதிப்பதன் மூலம் அவற்றை அறிந்து கொள்ள முடியாது.

எதுவாயிருப்பினும் காதலை விட்டுக் கொடுப்பது என்பது அவளால் நினைத்துமே பார்க்க முடியாத ஒன்று. அதே நேரம் அப்பாவுடன் முரண்பட்ட பின்னால் அவளால் சாந்தமாக இருந்திடவும் முடியாது. மண்டையிலிருந்து மனது வரை கனத்தது.

எழுந்து பல் துலக்கச் செல்லவும் விருப்பமின்றி படுத்துக் கிடந்தவள், கதவைத் திறக்கும் சத்தம் கேட்டவுடன் தன்னை சுதாகரித்துக் கொண்டு கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

அம்மா ..... அம்மாவை நேரே பார்க்கும்போது அவளை நோக்கிடாமல் பார்வையைத் தாழ்த்தியவள், அருகில் வந்து அம்மா தலையைத் தடவியபோது, அடக்க முடியாதவளாக விசும்பத் தொடங்கினாள். அம்மா அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

அன்னையின் மடியிலே தலைவைத்துக் கிடந்த போது பிரியந்திக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது. அம்மாவால் எதுவும் செய்ய முடியாது என்பதை அவளும் உணர்ந்துதான் இருந்தாள். இருப்பினும் அன்னையின் மடியில் முகம் புதைத்தபோது சிறிது ஆறுதலை அவள் உணர்ந்தாள்.

மெதுவாக அவளைத் தடவிக் கொடுத்த அவளின் அன்னை சாப்பிட வருமாறு அழைத்தார்.

“எனக்குப் பசிக்கேல்ல” என்ற பதில்தான் அவளிடமிருந்து வந்தது.

“எத்தின நாளைக்கத் தான் அப்படிச் சொல்லுவாயம்மா. அப்பா சாப்பிடாம அங்க பாத்துக் கொண்டு இருக்கிறார். எழும்பி வாம்மா” என்று சொன்னபோது அவளுக்குப் புரிந்தது.

அந்த வீட்டில், காய்ச்சல் என்று மகள் சாப்பிடாது விட்டாலும் அப்பாவும் அம்மாவும் சாப்பிட மாட்டார்கள். மகளைக் கொண்டு வந்து, இருத்தி ஒரு வாய் வைத்த பிறகுதான் அவரின் தட்டிலே சாப்பாட்டைப் போடுவார் அம்மா. அப்படி ஒரு வழக்கம் அந்த இடத்தில் இருந்தது.

ஆக அவள் போய்ச் சாப்பிட வேண்டும்... பசித்தாலும் பசிக்காது விட்டாலும் அவள் போக வேண்டும். என்னடா இது சிறை வாழ்க்கையை விடவும் மோசமாக இருக்கின்றதே...

“சாந்தி.. சாந்தி.. “ என்று கீழே இருந்து வந்த அப்பாவின் குரலைக் கேட்டதும் அவளை வரச் சொல்லிவிட்டு அம்மா போய்விட்டார். இரண்டு முறை கட்டிலில் இங்கும் இங்கும் சுழன்று கண்களை மூடிக் கொள்ள எத்தனித்தாள். இருப்பினும் அவளால் நித்திரை கொள்ள முடியவில்லை.

சோம்பலை முறித்துவிட்டு எழுந்து அமர்ந்த படி முதல் நாள் கொண்டு வந்த தாமரை மலர்களை நோக்கினாள். முதல் நாளில் காணப்பட்ட மலர்ச்சி அவற்றில் காணப்படவில்லை. அவை வாட ஆரம்பித்து இருந்தன.

'சே அவசர அவசரமாக அதைப் பறித்து எடுத்திருக்கிறானே அந்தச் சாரதி. எனக்குத் தேவை என்றால் ஒன்றிரண்டு பூக்களைக் கொண்டு வந்திருக்கலாம். அநியாயமாக எல்லாவற்றையும் பிடுங்கி எடுத்து வாட வைத்து விட்டானே' என்று கவலைப்பட்டாள்.

'ஒவ்வொன்றையும் வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும். அதை தண்ணீருக்குள்ளேயே வைத்திருக்கலாம்' என்று யோசித்தபோதுதான் தனது இடம் பற்றி அவளுக்கு சிந்தனை எழுந்தது.

தன்னையும் பிடிக்காத விடயத்திற்கு வற்புறுத்தி இந்த மலர்களைப் போன்று வாட வைக்கிறார்களே என்று யோசித்தாள். ஒவ்வொருவரும் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தேவையானவற்றை அவர்களாகவே திட்டமிட வேண்டும். தெரிவு செய்ய வேண்டும் என்பதை இவர்கள் மறந்தே போய்விட்டார்கள் என்று ஆதங்கப்பட்டாள்.

வாட ஆரம்பித்த அந்த மலர்களைக் கையில் எடுத்துக் கோதிப் பார்த்தாள். முன்பு இருந்ததை விடவும் அது மேலும் மென்மையாக இருந்தது. கைகளாற் தீண்டும்போதே கூசுவதைப் போன்று இருந்தது.

தனது அறைக்கு வெளியே இருக்கும் பல்கணியிலுள்ள பூச்சாடியுள் வைத்து நீரை ஊற்றிவிட்டால் சிறிது நேரத்திற்காகவாவது அது வாடுவதைத் தடுக்க முடியும் என்று யோசனை வந்தது. மெதுவாக எழுந்து அவற்றை எடுத்துக் கொண்டு பூச்சாடிக்கு அருகில் சென்றாள்.

தண்டுகளை பூச்சாடிக்குள் அமிழுமாறு வைத்துவிட்டு அதற்குத் தண்ணீர் சேர்த்தாள். இனி சிறிது நேரத்திற்காவது அந்த மலர்கள் மலர்ச்சியாக இருக்கும் என்ற நினைத்தபடி எதிர்த்திசையில் கீழே பார்த்தபோது சாப்பாட்டு அறையில் எதிரும் புதிருமாக இருந்தவாறு அம்மாவும் அப்பாவும் கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவர்கள் தனக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஞாபகத்துக்கு வந்தது. அப்பா பசி தாங்க மாட்டார். நேரத்திற்கு அவருக்குச் சாப்பாடு வேண்டும். அதை விடவும் அவருக்கு வெளியில் எங்காவது செல்ல வேண்டிய வேலைகளும் இருக்கும். அநியாயமாக அவருடைய வேலையைக் கெடுக்கக்கூடாது என்று யோசித்தாள்.

அதுவரையும் இருந்த எண்ணம் படிப்படியாக மாறுதல் அடையத் தொடங்கியது. விடிந்து சில மணி நேரம் ஆன பின்பும் முதல் நாளைய நிலையில் இருக்கிறேனா என்று யோசனை வந்தது. வேகமாகக் குளித்து விட்டு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் குளியலறைக்குள் நுழைந்தாள்.

விரைவாக வேண்டா வெறுப்பாகக் குளித்து முடித்துவிட்டுக் படிக்கட்டுகளால் இறங்கிக் கீழே சென்றாள் அவள். சாப்பாட்டு மேசைக்கு அருகில் அமர்ந்தவாறே அன்றைய தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார் அப்பா. பேசாமல் சென்று ஒரு புறமாக அமர்ந்தாள் அவள். தந்தைக்குக் காலை வணக்கம் சொல்லவில்லை.

அவள் வந்ததைத் தெரிந்து கொண்ட தந்தை பத்திரிகையை மடித்து ஒரு புறமாக வைத்துவிட்டு தன்னுடைய ஆகாரத்தை உண்ண ஆரம்பித்தார். அவருக்கு ஒரு புறத்தில் அமர்ந்தவாறு வெறித்துப் பார்த்தவாறு இருந்தாள் அவள். அம்மா அவளுடைய தட்டில் சாப்பாட்டை எடுத்து வைத்தாள்.

தந்தை ஆறுதலாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தந்தையின் முன் இருந்தவளுக்கு கைகளும் அசையாத நிலையில் இருந்தது. தோசையில் ஒரு துண்டை எடுத்து அம்மா அவளின் வாய்க்குள் வைத்துவிட்டாள்.

தொண்டையைத் தாண்டி உணவு கீழே செல்ல மறுத்தது. கனத்த அவளது இதயம் முகுந்தனை நினைத்துப் பார்த்தது.

முகுந்தன் சாப்பிட்டிருப்பானோ?

# 05

இலங்கையின் வடக்குப் பகுதியில் அமைந்திருக்கும் யாழ் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடம் முதலாவது, இரண்டாவது வருடங்களுக்குரிய பரீட்சைகள் காரணமாக அமைதியாகவே காணப்பட்டது.

மதிய நேரத்தை நெருங்கிய போதிலும், இன்னும் பரீட்சைகள் முடிந்திருக்கவில்லை என்பதை அந்தச் சுற்றாடலிலே காணப்பட்ட அசாதாரணமான அமைதி நிலை காட்டிக் கொடுத்தது. ஒரு சிலரின் சப்பாத்துக் காலடிகளை மட்டும் அந்த இடத்தில் கேட்கக் கூடியதாக இருந்தது.

ஒன்றின் பின் ஒன்றாக மேசைகள் அடுக்கப்பட்டிருந்த அந்தப் பரீட்சை நிலையத்திலே குனிந்து பார்த்த படியே மாணவர்கள் அமர்ந்திருக்க பரீட்சையை எழுதி முடித்துவிட்ட களைப்பைக் காட்டுவது போல ஒருவன், இரு கைகளையும் நீட்டி சோம்பல் முறிக்க முனைந்தவன் முன்னாலே வந்த பேராசிரியரைப் பார்த்ததும் கைகளை எடுத்துவிட்டு, வலு கவனமாகத் தன்னுடைய விடைத்தாளைப் பார்க்கிறான்.

நடையின் போதே ஒவ்வொருவரையும் அவர்களுடைய எழுத்தின் திருப்தியையும் கண்களால் அளந்து கடந்து கொண்டிருக்கும் பேராசிரியர், தன்னுடைய பகுதியைத் தாண்டி சென்றதும் கால்கள் இரண்டையும் சற்று நீட்டிப் பின்புறமாகச் சாய்ந்து கொள்கின்றான் அவன்.

அவர்களைத் தாண்டி முன்பகுதிக்குச் சென்ற அவர், 'வேலைகளை நிறுத்தவும்' என்று கண்டிப்பான குரலிற் சொல்லியதும் கைகளில் இருந்த பேனாக்களை மேசையில் வைத்துவிட்டு, மாணவர்களில் அநேகமானவர்கள் நிமிர்ந்து கொள்கின்றனர்.

முதலில் விடைத்தாள்களை ஒரு விரிவுரையாளர் பெற்றுக் கொண்டு சென்றபின், பாவித்த பிரயோகத்தாள்களை ஒரு போதனாசிரியர் சேர்த்துக் கொண்டு வருகின்றார். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒழுங்காக தமது பங்களிப்பை ஆற்றிக் கொண்டிருந்தனர்.

விடைத்தாள்களை மேற்பார்வையாளரின் மேசைக்கு அருகிற் கொண்டு சென்றபின்பு ஒழுங்கின்படி எண்ணித் தொடங்கினார்கள். 'வெளியேறலாம்' என்று கட்டளையைத் தொடர்ந்து, கட்டவிழ்த்து விடப்பட்ட ஐந்தறிவு ஜீவன்கள் போலவே வெளியிலே செல்ல முனைந்து கொண்டிருந்த மாணவர்களின் குரல்கள் அவ்வளாகத்தில் அதுவரை காட்டிக் கொண்டிருந்த போலியான அமைதி நிலையை உடைத்து எறிந்தது.

"மச்சான் எந்தக் கேள்வி சொய்ஸ் பண்ணினாய்." "மச்சான் அடர்களின் சமநிலைக் கேள்வி செய்தியா? " என்று பலவிதமான குரல்கள் கலந்து ஒலித்துக் கொண்டிருக்க முதுகில் பைகளைக் கொழுவியபடி அந்தக் கூட்டம் சென்று கொண்டிருந்தது.

மெதுவாக தன் நண்பனின் அருகாகவே சென்று சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்தான் முகுந்தன். எதுவும் பேசத் துணியாதவனாக முன்னாலே இருக்கும் நண்பனின் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தான். நண்பனோ தீவிரமாக உணவு ஓடர் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"மச்சான் நீ இண்டைக்கு மச்சம் சாப்பிடுவாய் தானே. இல்லையா. சரி ரெண்டு மரக்கறிச் சாப்பாடு தாங்கோ" என்று சொல்லிவிட்டு நண்பனை நோக்கினான் அவன்.

"என்ன மச்சான். ஏதோ கடுமையா யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்? பேப்பர் செய்தது தானே. நம்பிக்கை தானே. " என்றான். ஆம் என்பது போல தலையை ஆட்டினான் அவன்.

"பிறகென்ன யோசின. முதல் சாப்பிடு. நாளைய பாடத்தப் படிக்கவேணும் இல்லையா. இண்டைக்கு மத்தியானம் லைப்ரரிக்கும் போய்வரவேணும் எண்டு சொன்னனி. ஞாபகம் இருக்கா?" என்று கேட்டான்.

அவனுக்குப் பதில் சொல்லாமலேயே வெளியில் திரும்பிப் பார்த்தான் அவன். தூரத்தில் செல்பவர்கள் அவனுடைய கருத்தினில் நுழையாது போனாலும் நண்பனுக்குத் தப்புவதற்காக அவ்வாறு வெளியில் பார்வையைச் செலுத்த வேண்டி இருந்தது.

மனம் என்னவோ போல இருந்தது அவனுக்கு.

கடந்த மூன்று நாட்களாகவே பிரியந்தியிடம் இருந்து எந்தவொரு தகவலும் வராதது அவனைச் சங்கடப்படுத்தியது. தந்தையாரின் புத்தக வெளியீட்டிற்காக அவசரமாக வவுனியாவுக்குப் போவதாகப் பேராதனையில் இருந்து வெளிக்கிடும் முன்பாக அவனுக்கு அறிவித்திருந்தாள்.

வவுனியா போனதுக்குப் பிறகு ஒரு தகவலும் இல்லை.

வீட்டில் சொந்தக்காரர்கள் யாரும் வந்திருப்பார்கள். அதனால் எடுத்திருக்கவில்லை என்று தான் முதல் நாளில் நினைத்தான். ஆனால் நாட்கள் கடந்தபோது ஏக்கம் மட்டுமல்ல சந்தேகமும் அவனிடம் எழுந்து கொண்டது.

ஒரு வேளை எம் விடயத்தைத் தெரிந்து கொண்டு அவளை அப்பா எச்சரித்திருப்பாரோ?


அப்படி உடனடியாக எண்ணவும் முடியவில்லை. அவளின் தந்தையார் ஒரு தலைசிறந்த எழுத்தாளர். இந்த விடயம் அவருக்குப் பிடிக்காமற் போனாலும் கூட இப்படி சாதாரணமானவர்களைப் போல நடந்திருக்க மாட்டார் என்று நினைத்தான்.

அவளுக்கு என் மீது வெறுப்பு வந்திருக்குமோ என்று யோசித்தான். அவ்வாறு நினைக்கும்போது நெஞ்சு ஒரு முறை கனத்தது.

இல்லை... அவள் அப்படி நினைக்க மாட்டாள்.

அவளுக்குப் பிடிக்காதது எதையும் தான் செய்திருக்கவில்லை என்பதை பலமுறை அவன் தனக்குள்ளே கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டான். அந்த எண்ணம் வராதவாறு தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டான்.

'வேறு என்ன காரணமாக இருக்கலாம்?' என்று மறுபடியும் மனது சிந்திக்கத் தொடங்கியது.



“பிளேட்டைப் பாத்துக் கொண்டு என்ன யோசனையடா? சாப்பிடு. குழம்புக்கறி கொண்டு வரச் சொல்லட்டா. தம்பி குழம்புக்கறி தனியாக் கொண்டு வா “ என்று உத்தரவிட்டான் அவனின் நண்பன்.

...

மெதுவாகக் கைகளை வைத்துப் பிசைந்தபடி குனிந்து நின்றான் அவன். ‘என்ன தர்ம சங்கடமான நிலை என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். உயிர் நண்பனிடமே மறைத்து கொள்ள வேண்டியதாக ஒரு நிலை இது’ என்று எண்ணினான்.

காதலின் தொடர்பு அறுக்கப்படுவதை அத்தனை சீக்கிரமாக ஏற்றுக் கொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் எந்த ஆணுமே விரும்புவதில்லை. அது அவர்களைக் குறைவுபடுத்தும் ஒரு செயல் என்றே எண்ணிக் கொள்கிறார்கள்.

அதனாலேயே நண்பனுடனும் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், எவரதும் பலமான பார்வை பட்டுவிடாது என்ற நம்பிக்கையும் இருந்தது.

நண்பனின் வற்புறுத்தலின் காரணமாக ஆறுதலாக சாப்பிட்டுக் கொண்டிருந்தவனுக்கு உணவு உள்ளே போக மறுத்தது. இருப்பினும் தன்னுடைய நண்பன் அதை அவதானித்து எதுவும் யோசித்துவிடக் கூடாது என்ற எண்ணத்தினால் ஓரளவு சாப்பிட்டு முடித்துவிட்டு கையைக் கழுவுவதற்கு எழுந்து சென்றான்.

சாப்பிட்டு முடிந்ததும் அவனும் நண்பனுமாக யாழ் பொது நூலகத் திற்குப் போவதற்கு ஆயத்தமானார்கள். கெல்மட்டை மாட்டியவாறு நண்பனின் பின்புறமாக ஏறி அமர்ந்து கொள்ளவும் அவனுடைய உந்துருளி ஓடத் தொடங்கியது.

பலாலி வீதியினூடாக யாழ்ப்பாணத்தை நோக்கி அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். பரீட்சை காரணமாக வெகு நாட்கள் உள்ளுக்கு இருந்துவிட்டு அன்று வெளியில் வந்ததைப் போன்று இருந்தது. தலையை இரு புறமும் திருப்பி அந்த நகரைப் பார்வையிட்டவாறு வந்தான்.

யாழ்ப்பாணம் போரின் வடுக்களில் இருந்து முற்று முழுதாகவே விடுபட்டு விட்டதாக அவனுக்குத் தோன்றியது. வவுனியாவில் இருந்தபோது தந்தையாரின் வியாபார நிமித்தம் பல தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்ற அனுபவம் அவனுக்கு இருக்கிறது. தன்னுடைய நீண்ட கால நோக்குதலில் யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தியினைக் கண்கூடாக அவதானிக்க முடிந்தது.

நகர்ப்புறத்தின் அழகுகளைக் கடந்து வந்த அவர்களின் பயணம் பிரதான அஞ்சல் அலுவலகத்தையும் தாண்டி வந்து பொது நூலகத்தின் நுழைவாயிலின் ஊடாக உள்ளே சென்று முடிந்தது. வாகனத்தைத் தரித்துவிட்டு அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

அரை மணி நேர தேடுகையின் பின்னாலும் அவர்களால் அந்தப் புத்தகத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பல்கலைக்கழகத்தின் நூலகத்தைப் போன்றே இந்த இடமும் தன்னிடம் இருந்த புத்தகங்களை இரவல் கொடுத்து விட்டது என்பது தெரிய வந்தது.

"வேற வழியில்ல மச்சான். பூபாலசிங்கம் புத்தகக் கடையில தேடிப் பாப்பம். நாளைக்குள்ள அந்த அசைன்மெண்ட முடிக்க வேணும்" என்று நண்பன் நினைவூட்டவும் மறுபடியும் வாகனத்தை எடுத்துக் கொண்டு பூபாலசிங்கம் புத்தகக் கடையை நோக்கி வந்தார்கள்.

அந்தப் புத்தகத்தின் பெயரைக் கேட்டதும் முதலில் இல்லை என்று சொல்லிய அந்தக் கடைக்காரர் பின்னால் தேடி எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். அதைப் பத்திரப்படுத்திக் கொண்டு மறுபடியும் அவர்களின் பயணம் தொடர்ந்தது.

"இண்ட நெற்றில தேவையானதை எல்லாம் எடுக்க முடிஞ்ச பிறகும் இப்பிடிப் புத்தகத்தத் தேடி அலைய வேண்டியிருக்கே" என்று நண்பன் சலித்துக் கொண்டான்.

"உண்மதான் மச்சான். வெளிநாட்டுக் காரனின்ர புத்தகங்கள அவங்க உடனுக்குடன நெட்டில ஏத்தி விடுறாங்க. ஆனா இந்தப் புத்தகம் எங்கட புரொபெசருடையது. அதை நெட்டில தேட முடியாமத் தானே இப்பிடி ஒவ்வொரு லைப்ரரியாத் தேடிப் போனம். லைப்ரரிகளிலயும் தேவையான அளவுக்குப் பிரதிகள் எடுக்கிறதில்லை. இதினால புத்தகம் பற்றாக்குறையாகவே இருக்கு" என்று முகுந்தன் சொன்னான்.

"எங்கட எழுத்தாளர்களுக்குப் போதிய ஊக்குவிப்போ உந்துதலோ கிடைக்கிறதில்லை. அதினால குறைஞ்ச பிரதிகள மட்டுமே அடிச்சு அத லைப்ரரியில போடுறாங்க. லைப்ரரியும் அதிகமான பிரதிகள வாங்குறதில்லை. சாதாரணமா எல்லாற்ர வாசிப்புப் பழக்கமும் குறைஞ்சு போச்சு. இதினால அசைன்மன்டுக்கு மட்டும் என்னையும் உன்னையும் போல புத்தகங்களத் தேடுற நிலம வந்திட்டுது" என்று நண்பன் சொன்னான்.

அவர்களின் பயணம் காங்கேசன்துறைப் பாதையின் ஊடாக சுன்னாகத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. சுன்னாகத்தில் இருக்கும் தன்னுடைய உறவினர் வீட்டில் தங்கியிருந்து பரீட்சைக்குப் போய் வந்ததால் அந்த இடத்தில் அவனை இறக்கிவிட்டு பருத்தித்துறை போவதற்கு நண்பன் வந்துகொண்டிருந்தான்.

காங்கேசன்துறைப் பாதையின் இரு புறமும் அமைக்கப்பட்டிருந்த வீடுகளின் அமைப்பு தமிழனின் பழைமையைச் சொல்வதாக இருந்தது. நாற்சார் வீட்டுப் பாணியில் அமைக்கப்பட்ட பழைய அமைப்பு வீடுகள் ஏதோ விநோதத்தைப் போன்று அவனைப் பார்க்கச் செய்தது. தமிழனுக்கே சிறப்பான பிரதேசம் இந்த யாழ்ப்பாணம் என்பதை சொல்லாமற் சொல்லிச் சென்றது.

அடுத்து மருதனார்மடத்தின் நுண்கலைப் பீடம் அழகான கட்டடங்களுடன் காட்சியளித்தது. இலங்கையிலே தமிழ் மொழி மூலமான அழகியற் கற்கை நெறிகளுக்கு இந்த இடமும் மட்டக்களப்புப் பல்கலைக்கழகமும் வழங்கும் பங்களிப்பு விலை மதிப்பில்லாதது. இந்த இடங்களைப் பார்க்கும்போதே எமது பண்பாட்டின் மூலங்கள் என்ற உவகை எழுந்து விடுகின்றது என்பதை நினைத்துக் கொண்டான் முகுந்தன்.

அடுத்து மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலை அண்மித்ததும் வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே சென்றனர். கோயிலைக் கடந்து போகும்போது இந்த இடத்தில் இறங்கிக் கடவுளிடம் புறப்படும் காரியத்தைச் சொல்லி இது நன்றாக முடியவேண்டும் என்று கன்னத்திற் போட்டுக் கொள்ளும் வழக்கம் பலரிடமும் காணப்படுகின்றது. அவ்வாறே அவனும் நன்பனும் சப்பாத்துக்களைக் கழற்றிவிட்டு உள்ளே சென்றார்கள்.

பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அந்தப் பிரார்த்தனை இயல்பாகவே புகுந்து கொண்டது. மூலஸ்தானத்தை நோக்கி வணங்கிய பின்பு சுற்றி வந்து பெரிய ஆஞ்சநேயர் சிலைக்கருகில் வந்தனர்.

வெற்றிலையாலும் மரக்கறிகளாலும் கட்டப்பட்ட பெரிய மாலைகள் அவரின் கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அந்தப் பாதையிற் செல்பவர்கள் அநேகர் அவருடைய சிலையை வலம் வந்து வணங்கிக் கொண்டனர்.

அவரைச் சுற்றிலும் சிறு காகிதங்களால் எழுதப்பட்ட கோரிக்கைகள் கட்டப்பட்டு இருந்தன. தனக்கென எதுவும் கருதாமல் இராமரையே நினைத்து அவருடைய துணைவியைத் தேடிக் கொடுத்ததால் அவரிடத்திற் சென்று தங்களுடைய இயலாத கோரிக்கையை கட்டிவிட்டு வருவது அவர்களுக்கு வழக்கமாகி விட்டது.

அந்த இடத்திற்கு வந்ததும் முகுந்தனுக்கு மறுபடியும் பிரியந்தியின் நினைவு வந்தது. யாரிடமும் சொல்ல முடியாது இருந்த இந்த விடயத்தைக் கடவுளிடம் இறக்கி வைத்தான். அவருக்கு முன்னாலே நின்று மனமுருக வேண்டிக் கொண்டான்.

மறுபடியும் சுன்னாகத்தை நோக்கி அவர்களின் பயணம் தொடர்ந்தது. அதுவரை இரசித்துக் கொண்டு வந்த யாழ் நகரின் அழகுகள் அனைத்தையும் மறந்து அவனுடைய மனம் மறுபடியும் பிரியந்தியை நோக்கிச் சென்றது.

தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் இறங்கிவிட்டு நண்பனை நோக்கிக் கைகளை அசைத்த போதும் மனம் அவளையே நினைத்துக் கொண்டது. நண்பனின் தலை மறையும் வரை உயிரற்று அசைந்த அவனுடைய கைகள் வாசற்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தன.

புத்தகத்தை மேசையில் வைத்துவிட்டு கதிரையில் அமர்ந்தபடியே சப்பாத்துக்களைக் கழற்றினான். கைகளைக் கழுவிவிட்டு வந்து உடையை மாற்றியவாறு யோசித்தான்.

அவளுக்கு என்ன நடந்திருக்கும் எதற்காகக் கதைக்கவில்லை? என்ற எண்ணம் எழுந்த போதே அவளுடன் பழகிய நாட்கள் அடுத்தடுத்து அவனுக்கு நினைவுக்கு வந்தது.

# 06

மரக்கறிச் சந்தையைத் தோற்கடிக்கும் அளவிற்கு அரவத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது அந்த இடம். வாயிலில் வழியாக உள்ளே நுழைவதும் வெளியே போவதுமாக இளவட்டங்கள் அந்த இடத்தை அவ்வாறு ஆக்கி இருந்தார்கள்.

தமது துவிச்சக்கர வண்டிகளை அந்தத் தனியார் கல்வி நிறுவனத்தின் வாசலுக்கு மிக அருகாக நிறுத்திவிட்டு உள்ளே நுழையும் பெண் பிள்ளைகளை ஓரக் கண்களால் கவனித்துவிட்டு, ஒவ்வொரு பையனுடைய பெயராகச் சொல்லிக் கூப்பிட்டுச் சிரித்துக் கொண்டிருந்தனர் அங்கே குழுமியிருந்த மாணவர்கள்.

ஏதோ சொல்லக்கூடாததைச் சொல்லி விட்டு, செய்யக்கூடாததைச் செய்தவர்களைப் பார்ப்பது போல முறைப்புடன் பார்த்துவிட்டு மனதிற்குள் பெரு மகிழ்ச்சியுடனேயே சென்று கொண்டிருந்தனர் பெண் பிள்ளைகள்.

பார்வையாலே பேசிக்கொள்ளும் அண்ணல்களையும் அவள்களையும் நோக்கவென அங்கு ஓரமாக நிறுத்திவிட்டுப் பார்வையிட்டுக் கொண்டிருந்த முச்சக்கர வண்டிச் சாரதிகள், நிகழ்வுகளைப் பதிவுசெய்து கொண்டிருந்தனர்.

பாடத்தின் நடுவே சிறிய இடைவேளையைப் பெற்றுக் கொண்டு, கையில் இருந்த தொலைபேசியைக் காதில் வைத்தபடி, கம்பியில்லாத் தொழில்நுட்பத்தைத் தூது விட்டுக் கொண்டிருந்தனர், அங்கு படிப்பிக்கும் ஆசிரியர்கள்.

வாயிற் காப்பாளர்களைப் போல கையில் இடாப்பை வைத்துக் கொண்டு சற்றுக் கடினமான குரலில், வகுப்பிற்கு வருவோரின் கொடுக்கல் கணக்குகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள், சுடிதார் அணிந்த இளம் பெண்கள்.

அனைவரினதும் உயிரோட்டமான இயக்கத்திலே, ஆரவாரமாக இயங்கிக் கொண்டிருந்தது அந்தத் தனியார் கல்வி நிலையம்.

பாடசாலைக்கு ஒழுங்காகப் போகாத மாணவனும் சரி, அந்தத் தனியார் கல்வி நிலையத்திற்கு தவறாமற் சென்று வருவான் என்பது பலருக்குத் தெரியும். பெற்றோர் அனுமதிக்கா விட்டாலும் தாமாகவே புறப்பட்டு வந்துவிடக் கூடிய இடம் அது.

'தங்கள் பிள்ளைகள் ஆர்வமாகப் படிக்கிறார்கள் என்ற எண்ணத்துடன், அவர்களுக்கு ஒழுங்காகப் பணத்தைக் கொடுத்துவிட்டு பலனைப் பெறுபேறுகளில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எங்களுடைய பெற்றோருக்கு மட்டும் இந்த விடயங்கள் எதுவும் தெரிவதில்லை. பள்ளியை விடவும் தனியார் வகுப்புகளால் மிகுந்த பலன் பெறப்படுவதாகப் பறை சாற்றுவார்கள்.

அவர்களாகவே தேடிப் பிடித்து நல்ல ரியூஷன் சென்ரறுக்குக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். அல்லது விளம்பரங்களும் மற்றவர்களின் புகழ்ச்சிகளும் அவர்களை அந்த இடத்திற்குத் தானாக அழைத்து வந்துவிடும்.

அவர்களால் வழிகாட்டப்பட்ட அவர்களின் வாரிசுகள் இந்த இடத்தில் வந்து எல்லாப் பழக்கத்தையும் பழகிக் கொள்ளுவார்கள். நண்பர்களுடன் சேர்ந்து திரிதல், கண்டபடி செலவு செய்தல், மறுபாலரை கிண்டல் செய்தல், அவர்களைப் பின்தொடருதல் என்று அவர்களால் தொடக்கப்படும் விடயங்கள் காலங்காலமாக அனைவரையும் அச்சுறுத்தக்கூடிய பல செயல்களுக்கும் வழிவகுத்து விடும்.

இருப்பினும் இந்த இடத்தில் வந்து கல்வியைப் பெறாவிட்டால் எமது பிள்ளை படிக்கவே படிக்காது என்று நினைக்கும் பெற்றோரை என்ன செய்ய முடியும்? இலங்கை அரசாங்கம் கல்விக்காக எத்தனையோ பெரிய தொகையை அதாவது அதனுடைய மொத்த செலவில் பெருமளவு தொகையைச் செலவழிக்கும் போது, கல்வியை இலவசமாக வழங்கும்போது, பாடப்புத்தகங்களை இலவசமாக விநியோகிக்கும்போது, சீருடைகளை இலவசமாக வழங்கும்போது இந்தத் தனியார் கல்வி நிலையங்களை ஏன் மாணவர்கள் நாடிச் செல்ல வேண்டும்'

என்று ஒரு அரசியற் தலைவரின் குரல் காற்றில் மிதந்து வந்ததையும் கவனிக்காமல் பெண் பிள்ளைகளைக் கவனிப்பதிலேயே அந்த மாணவர்கள் தீவிரமாக இருந்தார்கள்.

'பள்ளிக் காலம் என்பது ஒருவனுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பருவமாகும். கற்றலிலும் ஆடலிலும் விளையாட்டிலும் கிடைக்கும் அபூர்வமான சந்தர்ப்பங்கள், ஒவ்வொருவரினதும் உடலிலும், மனதிலும், குரலிலும் ஏற்படும் மாறுதல்கள், மறு பாலரை பிரமிப்புடன் பார்க்க வைக்கும் நிகழ்வுகள் என்று எந்த விதத்திலும் மறந்துவிடவே முடியாத ஒரு பருவம் பள்ளிப் பருவமாகும்.

அதிலும் பாடசாலையில் இருந்து போகும் போதும் வரும்போதும், வெள்ளைச் சட்டையில் பார்த்த அந்தச் சிட்டுக்களை, மாலை நேர ரியூஷன் வகுப்புக்களின் போது விதவிதமான நவீன ஆடைகளில் பார்ப்பது ஒரு சுவையான காட்சியாகவே அந்த மாணவர்களுக்கு இருந்தது. மனதுக்குள்ளாக ஒவ்வொருவருக்கும் புள்ளியிட்டு வைத்திருந்தார்கள்.' என்று தன்னுடைய நண்பன் சொல்லியது முகுந்தனுக்கு அந்த சமயத்தில் நினைவுக்கு வந்தது.

அவ்வாறான எண்ணங்கள் தனக்குள் எழுந்தனவா என்று அவன் சிந்தித்துப் பார்த்தான். சிறு வயதில் இருந்தே ஆண் பெண் என்ற இருவருக்கிடையில் தோற்றம், குணம், மற்றும் தேவைகள் சம்பந்தமான விடயங்களில் வித்தியாசம் இருக்கின்றது என்பதையும் ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் வாழ்க்கை என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

அதனால் அவர்களைப் பிரமிப்புடன் பார்ப்பதற்கோ அவர்களுக்குப் பின்னாலே திரிவதற்கோ அவனின் மனம் ஆசைப்படவில்லை. தன்னுடைய ஆண் நண்பர்களுடன் எத்தகைய நட்பைப் பேணி வைத்திருந்தானோ, அதே போன்று ஒரு நட்புத்தான் பெண்களிடம் ஏற்படும் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வந்தான்.

ஆனால் பிரியந்தியைப் பாரத்தபோது அவளுடன் பழகியபோது, அவளுடன் தன்னுடைய உறவு நிலைக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது. அவள் தனக்கு உறவுப் பெண்ணாக இருந்திருக்கக் கூடாதா என்று அவனுடைய எண்ணம் முதலில் எழுந்தது. அதற்குக் காரணம் அவனுடைய மாமனின் மகளாகிய சுகந்தி. அவனைவிட பத்து வயது குறைந்தவள். இருப்பினும் ஏனைய பெண்களை விடவும் அவளுடன் பழகுவதற்கு அவனுக்கு சந்தர்ப்பம் நிறையவே கிடைத்தது.

அதனால் சொந்தம் என்பது பழக்கத்திற்குப் பெரிய இடைவெளிகளைக் கொடுத்துவிடாது என்று அவனை நினைக்க வைத்தது. அதனாலே பிரியந்தி ஏற்கெனவே சொந்தமாக இருந்தால் எத்தனை சிறப்பாக இருக்கும் என்று நினைப்பதுண்டு.

ஆனால் அனைத்து மனிதர்களும் சொந்தத்தால் மட்டும் பழகியவர்கள் ஆவதில்லை என்பதை வளர்ந்து வரும்போது அவன் புரிந்து கொண்டான். அவனுக்குக் கிடைத்த ஆண் நண்பர்களினாலும் தந்தையின் நண்பர்களினாலும் அவ்வாறான தெளிவு அவனுக்கு ஏற்பட்டது.

ஆனால் அப்பொழுதும் தானும் ஒரு பெண்ணாகவோ அல்லது பிரியந்தியும் ஒரு ஆணாகவோ பிறந்திருந்தால் தங்களுக்குள் நட்பு முன்னாலே ஏற்பட்டிருக்குமே என்றும் எண்ணியதுண்டு. எவ்வாறு ஆயினும் அவளுடன் அசைக்க முடியாத பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவனிடம் இருந்தது.

ஆனால் பருவ நிலையை அடைந்ததும் காதல் என்ற பிணைப்புத் தங்களை இணைத்ததை எண்ணி மகிழ்வுற்றான். காதல் திருமணத்தில் முடிவடையும். திருமண பந்தம் வாழ்க்கை முழுதும் தொடரும். அதனால் பிரியந்தி எப்பொழுதும் தனக்கு நண்பியாகவே இருப்பாள் என்ற எண்ணம் மட்டும் அவனிடம் இருந்தது.

அவளிடம் தன்னையும் மீறிய ஈர்ப்பு எழுந்த போதும் மற்றயவர்கள் செய்வதைப் போன்று அவனால் நடந்து கொள்ள முடியவில்லை. தங்களுடைய உறவு புனிதமானது என்ற எண்ணம் அவனிடம் தொடர்ந்து இருந்தது.

சாதாரணமாக அந்த வயது மாணவ மாணவியரின் மத்தியிலே முகுந்தன் ஏன் பிரியந்தியும் சற்று வேறுபட்டவர்களாகத் தெரிந்தார்கள். சாதாரணமான மாணவர்களிடையே காணப்படும், இந்தப் பெயர் சொல்லிக் கூப்பிடுதல் என்ற வகைக்குள் அடக்கப்படாதவர்களாக மௌனமாக ஒருவரை ஒருவர் இரசிப்பவர்களாக இருந்தார்கள்.

தமக்கிடையில் காதல் என்ற மலர் சுகமாகவே மலர்ந்து வாழ்நாள் முழுவதும் மணம் வீச வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்கள். சந்தர்ப்பங்கள் அமையும் வேளைகளில் சாதாரணமாகவே ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

எதேச்சையாக வகுப்பிலோ வேறு இடங்களிலோ, நேருக்கு நேராகப் பார்த்துவிடும் சந்தர்ப்பங்களில், வெகு சாதாரணமாக கதைத்துவிட்டுச் சென்று விடுவார்கள். வாயைத் திறந்து ஜொள்ளுக் கொட்டுவதோ நெளிவதோ கிடையாது. ஆனால் ஒருவரைப்பற்றி மற்றொருவர் மிக உயர்வாகவும் நெருக்கமாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் அவர்களின் நண்பர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஓரளவுக்குப் புரிந்ததுதான்.

முகுந்தனின் எதிர்பார்ப்புகள் மட்டுமல்ல பிரியந்தியின் தந்தையாரின் பெயரும் நல்ல குணங்களும் அவளுக்குக் கேடயமாக நின்றதை யாரும் அறிவார்கள். அதனாலேயே பள்ளிக்காலத்தில் அவர்களின் மனதில் ஏற்பட்ட எண்ணங்கள் யாருக்கும் தெரியாமலும் யாராலும் பேசப்படாமலும் இருந்தன.

அதே ஊரிலே பிரபல வணிகர் ஒருவரின் ஒரே செல்ல மகனாகப் பிறந்த அவன் படிப்பில் பிரியந்திக்கு நெருக்கமாகவே வந்து கொண்டிருந்தான். அவனின் தந்தையாரும் ஓரளவு பிரசித்தமானவர் என்பதனால் அவனைப் பற்றி யாரும் அதிகப்படியாகக் குறை சொல்லி விடாதவர்களாக இருந்தனர்.

படிப்பில் இருந்த நெருக்கம் அவர்கள் இருவருக்கும் ஆரோக்கியமானதாகவே அமைந்திருந்தது அவர்களுக்குத் தெரியும் ஏதாவது ஒரு அவசரத்தினால் அவர்களில் யாராவது ஒருவர் படிக்கப் போகாதவர்களாக இருப்பார்களேயானால், மற்றவரிடம் தான் கொப்பி வாங்கி எழுதிக் கொள்வர். படிப்பு விடயத்தில் ஏதாவது தெளிவின்மை இருந்தால் அவர்கள் ரியூஷன் வகுப்பு முடிவடைந்ததும் நின்று அவற்றைத் தெளிவித்துக் கொள்வார்கள். அவர்களுடன் நண்பர்களும் நண்பிகளும் நிற்பதனால் அந்த விடயத்தை யாரும் குறை சொல்லுவதில்லை.

பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னால் கெம்பைன் ஸ்ரடி செய்வதற்கு பிரியந்தியின் ஆசிரியையின் வீட்டுக்கு முகுந்தனும் நண்பனும் பிரியந்தியும் சென்று கற்று வந்தார்கள். அவர்களுடைய பழக்கத்தை யாரும் வித்தியாசமாக நோக்கவோ குறை சொல்லவோ இல்லை. ஆனால் பிரியந்தியை எப்பொழுதும் தனக்குத் துணையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் முகுந்தனிடம் தீவிரமானது.

பரீட்சை முடிவடைந்து பெறுபேற்றுக்காகக் காத்திருந்த ஒரு நாளில் தன்னுடைய எண்ணத்தை அவன் அவளுக்குத் தெரிவித்தான். அவனின் நட்பில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த அவள் பிகு பண்ணாமலே சம்மதித்து விட்டாள்.

இருவரும் பொறியியற் பீடத்திற்குத் தெரிவாகுவார்கள் என்ற நம்பிக்கை திடமாக இருந்ததால் பல்கலைக்கழக வாழ்க்கை எவ்வாறு சேர்ந்து அனுபவிப்பது என்று தமக்குட் கதைத்துக் கொண்டார்கள். தொழிற் கற்கை நெறியினை இணைந்து கற்பதன் மூலம் எதிர்காலத்தை தீர்க்கமாகத் திட்டமிட்டுக் கொள்ளலாம் என்று அவர்கள் நினைத்ததும் நியாயமானதே.

ஆனால் கடவுளின் சித்தம் அவ்வாறாக இருக்கவில்லை. அவர்களின் எதிர்பார்ப்பு முற்றுமுழுதாக நிறைவேறவில்லை. இவர்களின் பள்ளிக்காலம் முடிவடைவதைப் பறைசாற்றும் முகமாக உயர்தரப் பரீட்சை முடிவுற்று வெளிவந்த பெறுபேறுகள் அவர்களின் நினைப்புக்கு உரம் ஊட்டவில்லை.

முடிவுகளின்படி பிரியந்தியின் பெறுபேறு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்குப் போதுமானதாக இருந்தது. ஆனால், அவன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்கு செல்லக் கூடியதாக இருந்தது. இதனால் முகுந்தன் வெகுவாகவே உடைந்து போயிருந்தாள்.

இருவரும் பொறியியற் பீட அனுமதியைப் பெற்றிருக்கவில்லை என்பது இருவருக்குமே வருத்தமாக இருந்தது. ஆனாலும் எந்த முரண்பாடும் எழுந்துவிடாமல் வாழ்க்கையை வாழ வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு கொண்டனர். அடுத்து வந்த காலத்தில், அவர்களிடையேயான நெருக்கம் அதிகரித்தபோது, இருவரும் மனம் திறந்து தம்முள் இருந்தவற்றைப் பரிமாறிக் கொண்டனர்.

பல்கலைக்கழகத்தில் காலடி எடுத்து வைக்கும் முன்பாகவே அவர்களின் இணைந்ததான வாழ்க்கையைப் பற்றிய கனவுகளை வளர்த்துக் கொண்டுவிட்டனர். காலம் வரும்போது, அதை வீட்டாரிடம் சொல்லிவிடலாம் என்ற எண்ணத்துடனேயே ஆளாளுக்கு வெவ்வேறு திசைகளில் படிப்பை நோக்கிப் பறந்து சென்று விட்டார்கள்.

முந்நூற்று இருபது கிலோ மீற்றர் தொலைவில் வாழ்ந்து வந்தாலும் அவர்கள் இருவரும் அருகருகே இருப்பதைப் போலவே எண்ணிக் கொண்டனர். இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை தனது விடுதியிலுள்ள தொலைபேசி மூலமாக, அவனின் கையடக்கத் தொலைபேசிக்கு எடுத்துக் கதைத்து வந்தாள் பிரியந்தி.

அவ்வாறு இல்லாத வேளைகளில் அவளின் தங்குமிட விடுதிக்கு தொலைபேசியின் மூலம் அழைப்பை ஏற்படுத்திக் கதைக்கக் கூடியதாக இருந்தது. தொழில் நுட்பம் இத்தனை வளர்ச்சி அடைந்ததாக இருந்தும் கைத் தொலைபேசியைப் பாவிப்பதை அவளோ தகப்பனோ விரும்பவில்லை என்பதால் எழுந்த சிரமம் அது.

வழமையான அழைப்புக்கள் வரும் நேரங்களில் தன்னை அறியாமலேயே தன்னுடைய கால்கள் அவளை தொலைபேசிக்கு அருகிற் கொண்டு வந்து விடுகின்றன என்பதை பிரியந்தியும், நேரத்தை எதிர்பார்த்தே தானாகவே கண்கள் செல்போனை நோக்குகின்றன என்பதை அவனும் சொல்லிச் சிரித்துக் கொள்வர்.

பேராதனையில் நடக்கும் பகிடிவதைகளையும் பரிகாசங்களையும் அவள் அவனுக்கும், யாழ்ப்பாணத்தில் நடக்கும் விடயங்களை அவன் அவளுக்குமாகத் தொலைபேசியிற் பரிமாறிக் கொள்வார்கள். அவர்கள் இருவரும் உரையாடிக் கொள்ளும் நேரம் அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும்.

இவ்வாறாக வில்லன் இல்லாத காதல் கதையாகப் போய்க் கொண்டிருந்த அவர்களின் காதல் நாடகம் இடையிலே சோகமாக்கப்படுவது எதனாலோ என்று எண்ணிக் கலக்கம் கொண்டான் முகுந்தன். அவனின் நினைவாகவே தன்னுடைய அறையில் அமர்ந்திருந்த பிரியந்திக்குள்ளும் அந்த நினைவுகள் வந்து கொண்டிருந்தன

# 07

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில வகுப்புகள் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்னாகவே ஆரம்பிக்க இருந்தன. பொது ஆங்கிலப் பயிற்சி வகுப்பு முடிவடைந்ததும் முகுந்தனைக் கண்டு சொல்லிவிட்டு மறுநாள் பேராதனைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமானாள்.

முதல் நாள் ஆங்கில வகுப்பிற்கு அப்பாவும் அம்மாவும் வாகனம் ஒன்றை ஒழுங்குபடுத்தி அவளை அழைத்து வந்தனர். கண்டியில் அவருக்கு மிகவும் நெருக்கமான ஒரு நண்பரின் வீட்டுக்கு வந்து முதல் நாளில் தங்கி அடுத்த நாள் பேராதனை நோக்கிச் சென்றார்கள்.

வவுனியாவில் இருந்து தொடங்கிய பயணத்தில் மிகிந்தலையை அண்மித்தபோது குன்றுகளின் அழகு தென்படத் தொடங்கியது. மிகிந்தலை நகரத்தைத் தாண்டிச் சென்றபோது பழைய இராசதானிகளையும் விகாரையையும் இறங்கித் தரிசித்துவிட்டுச் சென்றனர்.

கெக்கிராவையைக் கடந்து தம்புள்ளயை அண்மித்தபோது அதுவரை இருந்த வெப்பநிலை குறைவடைந்து மலைப்பாங்கான இடத்திற்குச் செல்வதை உணரக் கூடியதாக இருந்தது. தூரத்தே கடும் பச்சை வர்ணத்தில் தெரிந்த மலைத் தொடர்களின் அழகை வாகனத்திற்குள் இருந்து நோக்கியவாறு அவள் சென்று கொண்டிருந்தாள்.

அந்த இடத்தில் இருந்து கண்டியை அண்மிக்கும் வரையிலும் தூரத்தே தெரிந்த மலைத்தொடல்களில் அழகையும் மலைச் சரிவில் அமைக்கப்பட்டிருந்த தேயிலை, இறப்பர், மற்றும் தென்னை மரங்களையும் இரசித்தவாறு சென்றாள். பயணிக்கும் பாதையின் தரைத்தோற்றத்தினால் கடல் மட்டத்தில் இருந்து உயரமான பகுதிக்கு அவள் செல்லுவதை உணர முடிந்தது.

இறுதியாக அவர்களின் பயணம் நண்பரின் வீட்டுக்கு முன்னால் சென்று முடிந்தது. பள்ளமான பகுதியில் இருந்த வாகனத் தரிப்பிடத்தில் இறங்கி மலைப் பகுதியில் ஏறிவந்து அவர்களின் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அவ்வாறான வீட்டு அமைப்பு அவளுக்கு வித்தியாசமாகத் தெரிந்தது. உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படும் தரைத் தோற்றத்திற்குப் பொருத்தமாக வீடுகளை அமைத்திருக்கிறார்கள் என்று ஆச்சரியத்துடன் நோக்கினாள்.

மறுநாட் காலையில் வேளையுடன் தயாராகி பேராதனைக்குச் செல்லுவதற்கு ஆயத்தமாயினர். கண்டி வாவிக்கு அருகில் வந்து அதைப் பார்வையிட்ட பின்னர், கட்டுக்கலை செல்வ விநாயகர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து கொண்ட பின்னர், கம்பளைப் பாதையின் ஊடாகப் பொறியியற் பீடத்தை நோக்கி வந்தார்கள்.

மாணவர்களின் ஆங்கில தரத்திற்கு ஏற்றவாறு அவர்களை வகுப்பிற் பிரிப்பதற்கான பரீட்சைகள் அன்றைய தினத்தில் காலையில் இடம்பெற்றது. அவளை அழைத்து ஈ.ஓ.ஈ.பெரேரா தியேட்டருக்குள் விட்டுவிட்டு அம்மாவும் அப்பாவும் வெளியிற் சென்று விட்டார்கள்.

பரீட்சை முடிவுற்றதும் பெற்றோர் சொல்லியபடி அவள் முன் வாசலுக்கு வந்து நின்றதும் அவர்கள் வந்து அவளை அழைத்துச் சென்றனர். வவுனியாவில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு சுற்றாடலுக்குச் சென்று வந்ததைப் போல அவளுக்கு இருந்தது. அந்த இடத்தின் அழகு முதல் நாளே அவளைக் கவர்ந்துவிட்டது.

இவ்வாறான ஆங்கில வகுப்புகளுக்கு ஐந்து தடவைகள் சென்று வந்ததன் பின்பாக தொடர் ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாயின. பேராதனையில் தங்கியிருந்து அவற்றுச் செல்ல வேண்டியது அவசியமானது. பெற்றோருடன் சென்று தங்கியிருந்து ஒரு நாளில் வகுப்பை முடித்து வருவதைப் போன்று இருக்கவில்லை. பேராதனையில் மார்ஸ் ஹில் என்ற பெண்கள் விடுதியில் அனுமதியைப் பெற்று அங்கு தங்கச் செய்தார்கள்.

முதன் முதலாக அன்னை தந்தையரை விட்டுத் தூரத்தில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தொடக்கத்தில் அவள் சிரமப்பட்டாள். இருப்பினும் பல பகுதிகளிலும் இருந்து வந்து அந்த இடத்தில் தங்கிப் படித்த ஏனைய பெண்பிள்ளைகள் அவளுக்கு நண்பர்கள் ஆனார்கள். அவர்களின் நட்பு அவளுக்குத் தனிமை என்பதை உணரவிடாமற் செய்தது.

தினமும் தனது இருப்பிடத்தில் இருந்து பொறியியற் பீடத்திற்குத் தனது நண்பிகளுடன் நடந்து சென்றாள். அந்தப் பல்கலைக்கழக வளாகத்தின் ஊடாக பேருந்து வருவது அரிது. இதனால் கிட்டதட்ட இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பொறியியற் பீடத்திற்கு நடந்து சென்று வருவது அவர்களுக்கு வழக்கமாகி விட்டது.

நடந்து செல்லும்போது அந்த இடத்தின் அழகுகளை முகர்ந்து கொண்டு சென்றார்கள். அந்தப் பாதையின் இரு புறத்திலும் அமைந்திருக்கும் பீடங்களும் விடுதிகளும் அந்த இடத்தின் அழகைப் பன்மடங்கு அழகாக்கிக் காட்டின. எமது நாட்டில் இவ்வளவு அழகான இடமும் இருக்கிறதா என்று பிரமித்தவாறே செல்வார்கள்.

வலது புறமாக இருக்கும் விஜயவர்த்தன பெண்கள் விடுதியும் இடது புறத்தில் இருக்கும் அருணாசலம் ஆண்கள் விடுதியும் பெரிய கட்டட அமைப்பைக் காட்டின. அதைத் தாண்டிச் செல்லும்போது விஞ்ஞான பீடக் கற்கை நெறியினை மேற்கொள்ளும் பீடங்கள் அழகாக் காட்சி தந்தன.

பெரிய மைதானத்தையும் கலைப் பீடத்தில் இருக்கும் ஆர்ட்ஸ் தியேட்டரையும் தாண்டி செனற் கட்டடத்துக்குள் காலடி எடுத்து வைத்தபோது சுவர்க்கத்துக்கே வந்ததைப் போன்று ஒரு பிரமிப்பை ஏற்படுத்தியது. காரணம் நடந்து செல்லும் தரையிற் தூவப்பட்ட இருந்த மஞ்சள் மலர்கள் அவர்களை வா என்று அழைப்பதைப் போன்று இருந்தது.

யார் இவ்வாறு தூவியிருப்பார்கள் என்று அண்ணாந்து பார்த்தபோது மிகுதியாக இருந்த மலர்களைத் தாங்கிக் கொண்டிருந்த அதன் மரங்கள் அவர்களைப் பாரத்துச் சிரித்தன. இயற்கை அன்னையின் வரவேற்பே என்பதை கணப் பொழுதில் புரிந்து கொண்டார்கள்.

நேரே வந்த தங்களுடைய பாதையை மாற்றி காலை அங்கும் இங்குமாக வைத்து மலர்களை நசுக்கி விடாமல் நடந்து வந்தார்கள் அந்தப் பெண்கள். அந்த வழுக்கற் தரையில் அவ்வாறு நடந்து வருவது கடினமாக இருந்த போதும் மலர்களை நேசித்ததால் அவ்வாறு நடந்தாள் அவள்.

அவ்வாறு போய்ச் சேர்ந்தபின் திரும்பிப் பார்த்தபோது அந்த மலர்க் கூட்டத்திற்குள்ளாகவே காலை வைத்து வந்து ஏனைய மாணவர்கள் அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனார்கள். அவர்களின் கால்களில் மிதிபட்ட மலருக்காக் அவள் வருந்துவதைப் போன்று இருந்தது. அவர்கள் ஏன் அவ்வாறு நடக்கவில்லை என்று யோசித்தாள்.

'இந்த மரமும் மலர்களும் இந்த காலநிலையில் இயற்கையாகவே வளருபவை. இவற்றை யாரும் வருந்தி வளர்த்தெடுத்துக் கொள்ளுவதில்லை. அதனால் மலர்களைப் பற்றியும் யாரும் அலட்டிக் கொள்வதில்லை' என்று அவளுடைய நண்பி ஒருத்தி சொன்னாள்.

'எங்கள் பகுதியில் பூமரங்களை நாம் உருவாக்குவோம். கடும் வறட்சி நிலவும் காலங்களில் அவற்றுக்கு நீர் விட்டுப் பராமரிப்போம். பூக்களை அளவாகப் பிடுங்கி சாமிக்கு வைப்போம். மலர்களைக் காலால் மிதிக்க மாட்டோம்' என்று பிரியந்தி சொன்னாள். அவர்களுக்குச் சிரிப்பு வந்தது.

'மார்ச்சு ஏப்பிறல் மாதம் அளவில் இங்கே மலர்கள் நிறைந்து பூப்பதும் பெருமளவு நிலத்தில் சொரிவதும் வழக்கம். அவற்றைத் தாண்டி நடக்க வேண்டுமானால் எமக்கு நடக்கத் தரை கிடைக்காதே' என்று சிரித்தார்கள்.

'இது என்ன மரம் எங்கள் பகுதிகளில் இல்லையே. இவற்றை வைத்து வளர்க்க முடியுமா' எனறு பிரியந்தி கேட்டதற்கு 'முடியாது' என்பது போல நண்பி தலையாட்டினாள்.

கதைத்துக் கொண்டே செனற் கட்டடத்தைத் தாண்டி வந்துபோது அக்பர் பாலத்தருகில் வந்தார்கள். மகாவலி ஆற்றுக்கு மேலாக பல்கலைக்கழக வளாகத்தை பொறியியற் பீடத்துடன் இணைக்கும் அக்பர் பாலம் அந்த இடத்தின் வசீகரத்துக்கு இன்னொரு எடுத்துக் காட்டாக இருந்தது. பாலத்தின் அருகாக நின்று தலையை சரித்துப் பார்க்கும்போது மூங்கில் மரங்களுக்கு மத்தியில் பூங்கா ஒன்று தெரிந்தது.



அக்பர் பாலத்தைக் கடந்து கம்பளை வீதியைக் கடந்தும் 'பொறியியற் பீடம்' என்ற பெயர்ப்பலகை கண்களிற் பட்டது. அதைத் தாண்டிச் செல்லும்போது சினிமாப் படத்திற்குள் உள்ளிட்டதைப் போன்று ஒரு பிரமை ஏற்பட்டது. பாதையின் இரு மருங்கிலும் நாட்டப்பட்டிருந்த உயர் மரங்களை எப்பொழுதோ சினிமாவில் மட்டுமே பார்த்த ஞாபகம் பிரியந்திக்கு.

'எத்தனை அழகான இடம் இது. இங்கு தங்கியிருந்து படிக்கக் கிடைத்தது என்னுடைய வரப்பிரசாமே' என்று மனதுக்குள் எண்ணியபடி உள்ளே நுழைந்து நேராக ஆங்கில வகுப்பறையை நோக்கி நடந்தாள் நண்பியுடன்.

ஆங்கில வகுப்பு முடிந்து மதிய இடைவேளை வந்தபோது மதிய போசனத்திற்காக சிற்றுண்டிச்சாலையை நோக்கி வந்தார்கள் அவர்கள். அவர்களின் கண்கள் ஒவ்வொன்றையும் புதினமாகப் பார்த்துக் கொண்டு வந்தபோது அந்த இடத்திற்குப் புதியவர்கள் என்பதைப் பலரும் கண்டுபிடித்ததைப் போன்று இருந்தது. விரைவாக மதிய போசனத்தை முடித்துவிட்டுத் தமது அறைக்குச் சென்றனர்.

தொடக்கத்தில் அந்த இடத்தைப் பழகிக் கொள்ளுவது அத்தனை எளிதானதாக இருக்கவில்லை. ஆனாலும் அந்த இடத்தின் அழகு மனதைக் கவர்ந்தாலும் பட்டம் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணமும் அவளைத் தொடர்ந்து பல விடயங்களையும் பழக்கி எடுத்தது.

ஆங்கில வகுப்பு முடிவடைந்ததும் அவர்களுக்குப் பாடங்கள் ஆரம்பமாக இருந்தன. ஏற்கெனவே தங்கியிருந்த விடுதியைக் காலி செய்து விட்டு பல்கலைக்கழக விடுதியாகிய சங்கமித்தா விடுதிக்கு அவள் வரவேண்டியிருந்தது. அழகின் ஒரு கரையில் இருந்து மறு கரைக்கு வந்ததைப் போன்று அவளுக்கு இருந்தது.

சங்கமித்தா விடுதியும் அழகிற் குறைந்ததாக இருக்கவில்லை. ஏனைய விடுதிகளைப் போல் அன்றி இந்த விடுதி சற்று உயரத்தில் இருந்ததால் அங்கே இருந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்ப்பது நன்றாக இருந்தது. தினமும் காலையில் எழுந்து வந்து சுற்றும் முற்றும் பார்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டாள்.

அன்று காலையில் எழுந்து வந்து வெளியே நின்று பார்த்தாள். பனிப்புகாரினால் முதல் நாள் தெரிந்தது போன்று மலையின் அழகு தெரியவில்லை.

"இந்த நேரத்தில ஏன் சுவெற்றரும் போடாம வந்து நிக்கிறீர். சளி பிடிக்கப்போகுது" என்று அந்த வழியால் வந்த நண்பி சொல்லிவிட்டுப் போகவும் சிரித்துவிட்டு அறைக்குட் சென்றாள்.

பீடத்திற்குச் செல்வதற்குத் தயாராகிவிட்டு வெளியில் வந்து நின்று அதே இடத்தை நோக்கினாள். அப்போது சூரியனுடைய பிரசன்னத்தால் பனி விலகிவிடவும் மலையின் அழகு முழுமையாகத் தெரிந்தது. கடும் பச்சை வர்ணத்துடன் சூரியக் கிரகணங்களின் வெளிர் ஒளி கலந்து அழகான ஒரு நிறத்தைக் காட்டியது.

அதை ரசித்தவாறு நின்றபோது நண்பிகள் தயாராகி வந்துவிட்டனர். அவர்களுடன் கதைத்தவாறு இறங்கி வந்தாள். கீழே பொது மண்டபத்திற்கு முன்பாக இருந்த சிற்றுண்டிச் சாலையில் வடை இரண்டு வாங்கிக் கொண்டதும் அவர்களுடைய பயணம் ஓட்டமும் நடையுமாகத் தொடங்கியது.

படிக்கட்டு வழியாக வேகமாகக் கீழே இறங்கி வந்து மஹகந்த பாதையில் கால் வைத்தனர். அடுத்த இரண்டாவது நிமிடத்தில் கொஞ்சம் வளைவினைக் கடந்து அடுத்த இரு நிமிடங்களில் சென்றறை அடைந்தனர். அவர்களின் வாய் வடையை அசை போட்டபடி வந்து கொண்டிருந்தது.

வெகுவேகமாக ஓடிச் சென்று பாலத்தைக் கடந்து கண்டி-கம்பளை பாதையைக் கடந்து பொறியிற் பீடத்துக்குள் உள்ளிட்டு 'வரைதல் அலுவலகத்திற்குள்' நுழைந்தார்கள். அன்று காலையில் மூன்று மணித்தியாலத்திற்கு வரைதற் பயிற்சி செய்ய வேண்டியிருந்தது. நின்ற நிலையிலேயே வரைந்து முடித்துவிட்டு, பதினொரு மணிக்கு வெளியே வந்ததும் லைப்ரரிக்குப் போக எண்ணி நண்பியுடன் சென்றாள்.

மதிய இடைவேளைக்குப் பிறகு வேலைத்தளப் பயிற்சி ஆரம்பமாக இருந்தது. வேலைத்தளத்திற் காணப்படும் பாரிய இயந்திரங்களுக்குள் உடையின் பாகங்களோ தலைமுடியோ போகாத வண்ணம் உடைகளைத் திருத்திக் கொண்டு உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இரும்பைக் கொண்டு கை உபகரணங்களைப் பாவித்து அவர்கள் காட்டிய உபகரணத்தைச் செய்ய வேண்டியிருந்தது.

பாரமான வேலை செய்து பழக்கப்படாத அவளுக்கு உளியைப் பாவித்து இரும்பை வெட்டுவது மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் அவற்றைச் செய்து முடிக்காமல் பயிற்சி முழுமையாகாது என்று போதனாசிரியர் வற்புறுத்தியதால் சிரமப்பட்டு செய்து முடித்தாள். கைகளில் வலி எழும்பியது.

நான்கு மணியானதும் தங்களுடைய வேலைகளை முடித்துவிட்டு சங்கமித்தா விடுதியை நோக்கித் தமது பயணத்தை ஆரம்பித்தனர். விடுதிக்கு வந்து சேரும்போது முழுமையாகவே களைத்து விட்டாள் அவள். இரும்பை வெட்டிய கைகள் வலித்தன. காலையில் அவசர அவசரமாக ஓடியதாலும் படிகளைக் கடந்து வந்ததாலும் கால்கள் வலித்தன.

அந்த நேரத்தில் இயற்கையின் அழகில் மனம் லயிக்கவில்லை. களைப்புடன் விடுதிக்குள் நுழைந்ததும் சிற்றுண்டிச்சாலைக்குள் நுழைந்து சாப்பாட்டுக்கு ஓடர் கொடுத்துவிட்டு தேநீரைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்த கதிரையில் அமர்ந்தனர் நண்பிகள். யாரும் மற்றவர்களுடன் கதைக்கவில்லை. மௌனமான சிந்தனையுடன் தேநீர் பருகிக் கொண்டிருந்தனர்.

'பொறியியற் படிப்பு இத்தனை கடினமாக இருக்கிறதே' என்ற கவலை அனைவரின் முகத்திலும் தெரிந்தது. ஆனால் யாரும் பேசிக் கொள்ளவில்லை. அன்றைய நாளில் தரப்பட்ட ரியூட்டோறியலை எவ்வாறு செய்து முடிப்பது என்ற கவலை அவளிடமும் எழுந்தது.

அன்றைய அலுப்பிற்குக் குளித்துவிட்டு விழுந்து படுக்க வேண்டும் போல இருந்தது. ஆனால் அதுவும் சாத்தியமாகாது. வேலைகளை எல்லாம் முடித்து எடுப்பதற்குள் பதினொரு மணியாகிவிடும் என்று மனதிற்குள் நினைத்தாள்.

அவர்கள் ஓடர் செய்த சாப்பாடு வந்ததும் நண்பியிடம் கொடுத்து அனுப்பிவிட்டு அவள் தொலைபேசிக்கு அருகில் வந்தாள். முதல் நாளும் வேலையாக இருந்ததால் அம்மாவுக்கும் முகுந்தனுக்கும் எடுத்திருக்கவில்லை. இன்று கதைத்துவிட்டுப் போகலாம் என்று நினைத்தாள்.

தொலைபேசிக்கு அருகில் வந்து நம்பரை அழுத்தத் தொடங்கினாள்.

# 08

சாப்பாட்டு மேசையில் இருந்தபோது எழுந்த பேராதனையின் நினைவுகள் கலைந்து மறுபடியும் இங்கு வந்தன. அப்பா சாப்பிட்டு முடித்துக் கைகளைக் கழுவினார். அதன் பின் தந்தையார் வெளியிலே சென்று விட்டதால், தாயும் மகளும் வரவேற்பறையிலே அமர்ந்தபடி, தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தனர்.

தொலைக்காட்சியிலே அவளின் மனம் இலயித்திருக்கவில்லை. இவள் என்றுமே தொலைக்காட்சியுடன் அதிக நேரத்தைச் செலவிட்டது கிடையாது. அதனால் அவளது மனது மறுபடியும் அவனை நோக்கி ஓடியது.

அப்பா இல்லாத நேரம் தானே. அம்மாவிடம் சொல்லிவிட்டு அவனுடன் கதைக்கலாமா என்று யோசித்தாள். ….. வேண்டாம் அம்மாவுக்கு எதையும் மறைக்கத் தெரியாது. அப்பா அதட்டிக் கேட்டால் அவர் சொல்லிவிடுவார். பிறகு வீடே நிம்மதி இல்லாமல் போய்விடும் என்று அவளின் மனது சொன்னது.

மீண்டும் வெறுப்புடன் மாடிப்படியில் ஏறி வந்தாள். தன்னுடைய அறையை நோக்கி நடக்க முற்பட்டபோது ஏதோ எண்ணம் அவளைத் தடுத்தது. அவளின் கவனத்தை ஈர்த்தது வலது புறத்திலிருந்த புத்தகங்கள் அடுக்கப்பட்டு இருந்த அந்த இடம். அப்பாவின் நூலகம்.

அது அவருடைய நூலகம் மட்டுமல்ல அவர் தனியாக இருந்து சிந்திக்கும், படைப்புக்கள் படைக்கும் இடம். அவரின் அனுமதியில்லாமல் அந்த இடத்துக்குள் யாரும் நுழைய முடியாது. அவளுக்கு நன்றாகத் தெரியும். அப்பா நிற்கும் போதுதான் அந்தவிடத்தில் யாரையும் போக விடுவார்.

அவளின் பாடசாலை காலங்களில், வவுனியா நகரத்திற்குள்ளே இருந்த அவர்களின் வாடகை வீட்டில் தங்கியிருக்கும்போது அப்பா இந்த வீட்டைக் கட்டினார். அந்த நேரத்தில் அவள் இந்த இடத்திற்கு வந்தது கிடையாது.

தன்னுடைய அரும்பெரும் சொத்தாக அந்த வீட்டைக் கருதிய அவர், ஒரு பெரிய அறையை நூலகம் போலே ஒழுங்கு செய்து அவரின் படைப்புக்களை இங்கே கொண்டு வந்து சேர்த்தார்.

அவர் ஏதாவது கவிதைத் தொகுப்போ, நாவலோ எழுதுவதாக இருந்தாலும், நாம்பன்குளத்திற்கு வந்து இந்த வீட்டிற் தங்கியிருந்துதான் எழுதுவார். நகரின் ஆரவாரத்திற் சிக்காமல் தனிமையாக இங்கே வந்து இருந்து அவர் எழுதுவது வழக்கம்.

பிரியந்தி பல்கலைக்கழகம் சென்றபின் அப்பாவும் அம்மாவும் நாம்பன் குளத்திலேயே நிரந்தரமாகக் குடியேறி விட்டனர். அவர்கள் நகரத்திற்குச் செல்வது ஏதாவது நிகழ்வுகளுக்காக மட்டுமே. பல்கலைக்கழகத்தில் விடுமுறை கிடைப்பது மிகவும் அரிதாக இருந்ததால் பிரியந்தி வீட்டுக்கு வருவது குறைவு. அப்படியே வந்தாலும், அப்பாவின் அறைக்குள்ளே சென்று புத்தகங்களைப் பார்ப்பது கிடையாது.

தனது வயதான காலத்தில் இப்படியான இடத்தில் இருந்து கொண்டு இயற்கைக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதே அவரின் விருப்பமாக இருந்தது. அதனாலே இந்த இடத்தைத் தெரிவு செய்து இங்கே காணி வாங்கி வீட்டைக் கட்டினார்.

அந்த இடத்தை அப்பா கண்ணுங் கருத்துமாகப் பேணுகிறார் என்பது பிரியந்திக்கு நன்றாகத் தெரியும். அவரின் கலைக் கோயிலுக்குள் நுழையலாமா என்று ஒரு கணம் யோசித்தாள். புத்தகங்களைப் பார்க்கும் போதாவது தனக்கு ஆறுதல் கிடைக்குமே என்ற எண்ணம் அவளுக்கு வந்தது.

மெதுவாகவே உள்ளே நுழைந்து சுற்றும் முற்றும் நோட்டம் இட்டாள். அழகாக அடுக்கப்பட்ட புத்தகங்கள் ஒரு புறம். நேர்த்தியாகக் கட்டியடுக்கப்பட்ட பத்திரிகைகள் ஒரு புறம். இறுவெட்டுக்கள், ஒலிநாடாக்கள் அவை மற்றொரு புறம்.

'கண்ண பிரான் ஐயா அவர்கள் ஒரு கலைக்களஞ்சியம் எந்தவொரு விபரத்தையோ, புத்தகத்தையோ ஐயாவிடம் சென்று பெற்றுக் கொள்ளமுடியும்' என்று நேற்று நடந்த தந்தையாரின் வெளியீட்டில் அவரின் மாணவன் கவிஞன் சேரன் இட்ட முழக்கம் ஏனோ அவளின் நினைவில் வந்து போனது.

மெதுவாக புத்தகங்கள் உள்ள பக்கமாக நடந்து சென்று பார்வையிட்டவள், கண்களால் தேடினாள்.

'நெருப்புடன் (கவித்தொகுப்பு) கண்ணபிரான், 'சீதையைக் காத்திடத்தவறிய .... (கவித் தொகுப்பு)', 'மானத்தோடு வாழு, மறத் தமிழா (உரை நடை)' ஒவ்வொரு நூலும் பிறந்து ஓரளவு வளர்ந்துவிட்ட குழந்தைகள் போலே அவளைப்பார்த்துக் கண்சிமிட்டின.

எழுத்துக்களுக்குக் கிடைக்கும் பெரியதொரு அங்கீகாரம் இதுதான். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களைக் கோபித்துக் கொள்ளவிடாது நெருங்கி வரச் செய்துவிடும் அவர்களின் எழுத்து. புத்தகங்களைப் பார்த்ததும் உண்டான களிப்பில் கைகளை நீட்டி ஒரு புத்தகத்தை எடுக்கிறாள். அதன் பெயரைப் படிக்கிறாள்.

'சதுரங்கத்தில் வாழ்க்கை' கண்ணபிரான் - மகாபாரதப் போரில் அருச்சுனர்க்குச் சாரதியாக கிருஷ்ணர் இருக்கும் படத்தையும் போட்டு அருகில் சதுரங்கக் காய்களும் வைக்கப் பட்டதான ஒரு அட்டைப் படம் அவளின் கருத்தைக் கவர்ந்தது. உள்ளே திருப்பினாள்.

"ஒருவனுடைய தனித்துவமான ஆளுமையுள் ஆசை கலந்து வரும்போது, மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை எனப் பற்பல வடிவெடுத்து அவனைத் தூண்டியெழுப்புகின்றது. அவ்வேளை, தன்னைச் சார்ந்திருக்கும் அனைத்தையும் தன்பக்கம் சேர்த்து கொண்டு, தன் நிலையைத் தக்கவைத்துக் கொள்ளவென மற்றையவர்களைத் தாக்குவதற்கு முனைந்தெழுவான்.

அவ்வாறானதொரு ஆசையின் விளைவு, அன்றொரு நாள் குருஷேத்திரத்தில் மையம் கொண்டது. ஒருவனது அல்லது பலரினது முறைதகாத ஆசை இரண்டு அணியினரை தமக்குள் மோதவிடுவதற்குத் தயாரானது. ஒரு தாயின் வயிற்றில் உதித்திராத இரு சகோதரர்கள் எதிரெதிரே வந்து நின்றனர்.

தம்பியுடையவன் சண்டைக்கு அஞ்சான் என்ற பழமொழியை நன்கு தெரிந்து வைத்ததனாலோ என்னவோ, இருபகுதியினரும் தம்பிகளுடனே களத்திற்கு வந்தனர். ஒருவனுக்கு முத்தாக நான்கு தம்பியர். மற்றவனுக்கு சொத்தாக நூறு தம்பியர். அனைவரும் தத்தமது அண்ணர்களுக்காகக் களத்தில்.

ஒத்தாசை புரிவதற்கெனத் தாய்வழி மாமன்மாரும் அவர்களின் புதல்வர்களாகிய உறவுமுறை மைத்துனர்களும் வந்து நின்றனர். பெண் கொடுத்தவர், பெண்வழிச் சகோதரர்கள், பொருள் கொடுத்தவர் (கப்பம் செலுத்தியவர்கள்) என அவரவர் பக்கத்திற்கு அரசனைக் காக்கவென அணிவகுத்த அநேகர். அனைவரின் ஆதங்கத்தில் ஒரு முடிவினைத் தேடும் அவா.

முடிவு என்பது இருபகுதிக்கும் சுபமாக அமைந்து விடுவதில்லையே! முடிவினைச் சேர்ந்துவிட்டால் பாபத்தைச் சுமப்பது யார்? பார்த்த(வ)னுக்கு வந்தது அதில் மயக்கம். காண்டீபத்தை நழுவ விட்டுத் தேர்க் கட்டில் சாயவிழைந்தான்.

மயக்கத்தினைத் தெளிவாக்குவதற்கு அவசியம் எழுந்துவிடவும் பரமாத்மா தன்னுடைய உருவை எடுத்தது. வாழ்வியலை உணர்த்தவென யதார்த்தத்தை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று.

யதார்த்தத்தைச் சுட்டிடினும் தொடர்ந்து வந்த கலகத்தை நிறுத்திவிட முடியவில்லை. கலகத்தினையும் கடமை என்ற பெயரில் கட்டாயமாகத் திணித்துவிடும் மானுடனின் நோக்கமே அங்கு வெற்றி பெற்றது.

காட்சியில் லயிக்கும்போதும் கண்ணுக்குத் தெரியாதையெல்லாம் ஒழுங்குபடுத்தும்போதும், நாம் வடிவமைத்துக் கொள்ளும் உருப்படி கடவுள். நம்முடைய செயல்களுக்கு எல்லாம் நம்மை மீறிய சக்தியை (அமானுஷ்ய சக்தியை) வடிவமைத்துக் கொள்கின்றோம். அனைத்தும் அவன் செயலே என்று எம்மை ஆறுதல்படுத்திக் கொள்கின்றோம்.

நிகழ்வின் சுவடுகள் பல ஆண்டுகளைக் கடந்து வந்த பின்னும் அவ்வாறானதொரு நிலையைப் படம் பிடித்துக் காட்டியது கூடத்தில் வைக்கப்பட்டிருந்த கட்டங்கள். எட்டுக்கு எட்டாக அறுபத்து நான்கு எண்ணிக்கையில் அமைந்த சதுரங்கத்தின் இருபுறமும் நிரைநிரையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த காய்கள்.

பதினாறு படையணிகளைக் கொண்ட இரண்டு படைகள் எதிரெதிர் அணியாக. ஒவ்வொருவருடைய நோக்கமும் தமது அரசரைக் காப்பதும் அடுத்த அணியிலுள்ள அரசரை சிறைப்பிடிப்பதும்.

இந்தக் காட்சி போருக்கு மட்டுமே பொருத்தமானதாக அமைவதா என்ற சிந்தனையைத் தூண்டுகின்றது பகுத்தறிவு. களத்தில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் பல இடங்களில் மோதிக் கொள்ள வேண்டியவர்களாக மனிதர் படைக்கப்பட்டு இருக்கின்றார்களா? போட்டி என்பதும் போர் என்பதும் அவர்களுடனேயே பிணைக்கப்பட்டு இருக்கின்றதா?

கேள்வி எழும்போதே தேடலும் ஆரம்பமாகிவிடுகின்றது. போருக்கு முன்னதான நிலைமைகளைக் கருதிற் கொண்டு சதுரங்கத்துடன் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்கலாமா?

ஒப்பிடுவதற்கு ஏதுவான பொதுத்தன்மைகளை ஆயும் ஆவல் மனிதனின் தோற்றம் உலகில் எழுந்த நாள் முதலாகவே எழுந்ததுதானே. நன்மைக்கும் தீமைக்கும் தன்(நிலை)மையை ஒப்பிடுவது அவனிடம் இருந்து பிறந்ததுதானே.

உலகிலுள்ள பொருட்கள் அனைத்தினதும் உருவாக்கம் என்பது பிரபஞ்சத்தின் ஆக்கக்கூறுகளான நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ எனும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதும், அவை சேர்க்கப்படும் விகிதாரசாரத்திற்கேற்ப உயிரினத்தின் பிறப்பு என்பது அமைகின்றது என்பதையும் சொல்லிச் சென்றது மெய்ஞ்ஞானம்.

உயிரினங்கள் பூமியில் வந்து சேர்ந்த நாள் முதலாக வாழ்க்கைக்கான கடுமையான போராட்டத்தில் ஈடுபடுகின்றன. அவற்றின் போராட்டம் அவற்றினுடைய அடிப்படைத் தேவைகளை முக்கியமாக உணவு, வாழிடம் போன்றவற்றை முதன்மைப்படுத்துவதாக அமைகின்றன.

ஆனால் மனிதப் பிறவியின் போராட்டமோ அவ்வாறு வகையிட்டுக் கொள்ளும் அளவிற்கு சிறியதாக அமைந்துவிடுவதில்லை. உணவு, உடை, வாழிடம், போக்குவரத்து, தொடர்பாடல், அபிவிருத்தி எனப் பலவாறாகவும் விரிந்துகொண்டே செல்கின்றது."

ம்.... ஹூம் ... இதெல்லாம் நான் வாசித்து விளங்கிக் கொள்ள முடியாது என்ற யோசனையுடன் அதைத் திரும்பவும் வைத்தாள். அடுத்து இருந்த சிறு புத்தகத்தை எடுத்தாள்.

'நொறுங்குண்ட நினைவுகள்' –கவிதைத்தொகுப்பு, கண்ண பிரான் என்று போடப்பட்டிருந்தது. கவிதைகளை ஆறுதலாகப் படிக்கும் மனநிலையில் அவள் இல்லை. ஒவ்வொரு பக்கமாகத் தட்டிக் கொண்டு போகிறாள்.

ஒரு இளைஞனின் பள்ளிக் காதல் பற்றிய தொடர் கவிதைகளின் தொகுதி அது. படிக்கும்போதே இதயம் கனக்கிறது. தனது நிலையை ஒப்பிட்டுப் பார்க்கிறது. மிகவும் எளிமையான நடையில் கட்டிளம் பருவத்தினரின் கட்டவிழ்ந்த மனதை வெளிப்படுத்தியிருந்தது.

கவிதை வரிகளைப் படிக்கும் போது, காட்சி முன்னே வருகிறது. மனமதில் சென்றுவிட்ட அந்த வரிகளோடு அவளும் சென்றுவிடுகின்றாள்.

அவனுக்கு நாலு வயது குறைவான வகுப்பில் அவள் படிக்கிறாள். இருபாலரும் கல்வி கற்கும் அந்தப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியொன்றின் போதே அவனின் கவனத்தை அவள் ஈர்த்துக் கொள்கின்றாள்.

பிரியந்தியும் முகுந்தனும் சிறு வயதிலிருந்தே ஒன்றாகப் படிப்பவர்கள் இதனால் இந்தக் கதையுடன் தன்னை ஒப்பிட முடியாது என்பதை உணர்ந்து கொண்டாள். யாருடையதோ கதையைப் படிக்கும் ஒரு உணர்வுடன் வாசிக்கத் தொடங்கினாள்.

விளையாட்டுப் போட்டியில் சந்தித்துக் கொண்ட அவளின் பின்னால் மனமும் கருத்தும் சென்று விடுகின்றன. பாடசாலையின் மாணவர் தலைவனாக இருந்ததனால் மாணவர்களை அடக்கும் சாக்கில் அடிக்கடி அவளின் வகுப்பிற்குச் சென்று அவளைப் பார்த்து வருவான்.

கதை சற்று சுவாரசியமாகப் போவதைப் போன்று இருந்தது. ஆறுதலாகவே வாசிப்போம் என்ற எண்ணம் தோன்றவும் அங்கிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டு, வசதியாக இருந்தவாறே படிக்கத் தொடங்கினாள்.

கண்களின் சக்தியது கருச்சக்தியோ

ஞாலத்தைத் தாண்டிவிடும் சக்தியதோ

காதலை அனுபவித்து எழுதியிருக்கிறார் என்பது புரிந்தது. தொடர்ந்து கதையிலே அவளின் கருத்துச் சென்றது.

பள்ளியில் ஆரம்பித்த காதல் கடிதப் போக்குவரத்திற்கு வந்தது. அவர்களின் தொடர்பை கடிதம் வளர்த்து வருகின்றது. வகுப்புத் தோழர்கள், நண்பர்கள் எனப் பலரும் இதில் தூதுவர்களாக வருகின்றார்கள். எல்லாக் காதலர்களும் நினைப்பதைப் போன்று அவர்களுடைய காதலையும் உலகமே வாழ்த்துவதாக எண்ணிக் கொள்கின்றார்கள்.

புத்தகத்தில் இருந்த கண்கள் வெளியிற் பாய்கின்றன. காதலில் விழுந்த அனைவருமே இப்படியான எண்ணத்தையே கொண்டிருக்கிறார்கள். தங்களின் விருப்பத்தை உலகமே ஏற்றுக் கொள்ளுவதாக நினைக்கிறார்கள். ஆனால் இன்னொருவர் பார்க்கும்போது அவ்வாறான எண்ணம் வருவதில்லை என்று யோசித்தாள்.

காதலைப் பற்றி அவளுக்கு இருந்த எண்ணம் சற்று ஆட்டம் கண்டதைப் போன்று இருந்தது. தொடர்ந்து கவிதைகளில் கண்கள் சென்றன.

அவர்களின் தொடர்பு ஒருவரையொருவர் தனியாக சந்தித்துக் கொள்ளுமளவிற்கு வளர்கிறது. நண்பிகள் வீட்டிலே அவர்கள் சந்திப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இளமையின் துடிப்பில் தனிமை கிடைக்கும்போது இருவரும் ........

சே.... மேலே வாசிக்க முடியாதிருக்கின்றது. அப்படி உண்மையில் நடந்திருக்குமா அல்லது சுவைக்காக எழுதியிருப்பாரா என்ற எண்ணம் வந்தது. கவிஞர்களுக்குக் கற்பனைத்திறன் அதிகம் தானே. அதனால் கற்பனையாகத்தான் இருந்திருக்கும் என்று நினைப்புடனே மேலும் தொடர்கின்றாள்.

சேர்ந்திருக்கும் நேரங்களில்
யுகங்களைக் கணங்களாக்கி

வாசிக்கும் போதே அவள் மனம் விம்மியது. காதலின் உச்சக்கட்டம் வந்துவிட்டது. பிரிவு என்ற அத்தியாயம் எழுதப்பட்டு விடுகின்றது. பணமும் பொருளும் சாதியும் சந்தர்ப்பமும் அவ்விருவரையும் பிரிக்கின்றன. பத்து வருடமாகத் தொடர்ந்த நெருக்கத்தைப் பிரித்து நிற்கின்றன.

அநார்கலியைப் பறிகொடுத்த
சலீமைப் போல் நின்றேன்

மறுபடி துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. மேற்கொண்டு வாசிப்பதற்கு அவளுக்கு விருப்பம் இருக்கவில்லை. புத்தகத்தை மூடிக் கொள்ளும் முன்பாக சமர்ப்பணத்தைப் பார்த்தாள்.

தந்நிலையை உணராது
தாமேயென நினைத்து
தரணியதில் மிதமாகித்
தறிகெட்டுத் திரியும்
இளைஞர்களுக்குச் சமர்ப்பணம்
என்று எழுதப்பட்டிருந்தது.

அந்தக் கவிதைத் தொகுப்பை வாசிக்கும்போது ஏதோ ஒரு பொருத்தமின்மை அவளுக்குப் புலனானது. பள்ளிப் பருவத்தில் வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கு அவர்களுக்கு எவ்வாறு தைரியம் வந்தது என்று யோசித்தாள்.

அதுவும் காதல் என்ற பெயரினால் அசிங்கமாக நடக்கும் அளவிற்கு அவர்கள் நல்லவர்களாக இருப்பார்களா என்று யோசிக்கத் தொடங்கினாள். ஆனால் கட்டிளம் பருவத்தில் ஏற்படும் உள்ளக மாற்றங்கள் இப்படிப் பலருடைய வாழ்க்கையைக் கேள்விக்குறி ஆக்கியிருக்கிறது என்பதை அவள் கண்ணாற் பார்த்திருக்கிறாள்.

ஆசிரியாராகக் கடமையாற்றிய அவளுடைய தந்தை மாணவர்களுடன் அதிகமாகப் பழகுபவர். அறியாமையுடன் இருந்த மாணவர் யாரேனும் அப்படித் தவறைச் செய்திருக்கலாம். அவனின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருக்கலாம். மாணவர்களுக்குப் புத்தி புகட்டும் வகையில் அந்தப் புத்தகத்தை அவர் எழுதியிருக்கலாம் என்று புரிந்தது.

பள்ளிக் காலத்தில், பருவக் கோளாற்றினால் பாதைமாறிச் சென்று படுபாதாளத்தில் விழலாகாது என்ற எண்ணம் அவரிடம் தீவிரமாக இருந்தது தெரிந்தது. அதனால் அவர்களை இழுக்கும் முகமாக இப்படி எழுதியிருப்பதைப் புரிந்து கொண்டாள். இருப்பினும், அவ்வளவு சரளமான ஓட்டமும் தத்ரூபமான காட்சியமைப்பும் எப்படிச் சாத்தியப்பட்டது என்று யோசனை வந்தது.

கூடவே காதலைப் பற்றியே அறியாத கழுதையல்ல அவர் என்ற எண்ணமும் வந்தது. அவரைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள வேண்டும் என எணணம் உந்தவும் எடுத்த புத்தகத்தைக் கவனமாக அதே இடத்தில் வைத்துவிட்டு எதையெதையோ தேடத் தொடங்கினாள்.

# 09

ஏதோ சிந்தனையில் தந்தையின் நூலகத்தை முற்றுமுழுதாகத் திரும்பிப் பார்த்தவள், அவரின் பெயருடன் காணப்பட்ட ஒவ்வொரு புத்தகமாக எடுத்து பெயர்களையும் பொருளடக்கத்தையும் வாசித்துக் கொண்டு போனாள்.

சமுதாயத்துக்கு அத்தியாவசிய தேவையான நடப்புகள், உணர்ச்சிகள், வலிகள் என்பவற்றைக் கொண்டதாகவே அவரின் ஒவ்வொரு புத்தகமும் இருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள். மிகச் சிறிய கால இடைவெளியில் இத்தனை பல்சுவை அம்சங்களைத் தெரிவு செய்து, இப்படியான காத்திரமான படைப்புக்களைச் செய்திருக்கிறார் என்று எண்ணியபோதே அவளுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது.

அப்போது வாசிக்கவென் ஒவ்வொரு பெயராகவே நோக்கிக் கொண்டு சென்ற வேளையில், அவளின் கருத்தைக் கவர்ந்திழுக்கும் வகையில் எதுவும் தென்படவில்லை.

ஏதோ தோன்றவும் புத்தகத்தினுள் தேடுவதை நிறுத்திவிட்டு, அங்கிருந்த மேசையிற் காணப்பட்ட, எழுதிக் கொண்டிருக்கும் தாள்களைக் கொண்ட கோப்புக்களுக்குள் அலசத் தொடங்கினாள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த சிறுகதைத் தொகுப்பிற்கான விமர்சனம் பன்னிரண்டு தாள்களில் எழுதப்பட்டிருந்தது. அடுத்த மரபுக் கவிதைத் தொடருக்கான சட்டகம், துப்பறியும் நாவல் எனப் பலவும் தென்பட்டன.

மரபுக்கவிதையைப் பார்க்கும் ஆவலில் அந்தப் பக்கங்களைத் தட்டிப் பார்த்தாள். 'பிரம்மனின் ஏக்கமும் தாக்கமும்' என்ற பெயரில் இருந்த மரபுக் கவிதை அவளின் கண்களில் பட்டது.

பந்தமும் பாசமும் தளைத்திருக்கும் கட்டு என
பலருமே சொல்லிடக் கேட்டினும் பாவிநான்
எந்தையின் உறவு என்றும் என் தாயின் சொந்தமென்றும்
எண்ணில் அடங்காத உறவதனில் மூழ்கிட்டே
கந்தையாய்க் கொண்ட ஒரு உடைதானும் இல்லாமல்
காண்போர் சிரித்திடவே கண்முன் நகைத்திடவே
மந்தையாய் மதியிழந்தேன் மந்தியாய்த் தாவிட்டேன்
முன்னதாய் அறிவு கொண்டே முன்னின்று படைத்திட்டேன்

காதலிலே நான்விழுந்தேன் கட்டுண்டு தான்கிடந்தேன்
பாதையில் போவோர்தாம் பார்த்திடவே தான் நின்றேன்
வாழ்தலும் உண்டாயின் நான் வளர்தலும் ஆகுமாயின்
வந்திடவும் வேண்டுமென்று அவள் வாசலை நோக்கிநின்றேன்
சாதலேயன்றி வேறோர் சங்கமமும் இல்லையென்று
சாட்டெல்லாம் சொல்லிநின்றேன் சாவைத் தேடிநின்றேன்
மோதலே வந்திடவும் ஒரு மூச்சுவிட முடியாதென இங்கு
மொத்துண்டு கிடந்த நான் மோகனக்கவி செய்தேன்

கற்றிடவேண்டும் என்று காட்டிநின்ற கருத்தையறிந்து
காசையும் சொத்தையும் விற்று கல்வியைக் கற்கவைத்து
பெற்றிடவும் வேண்டும் ஒரு பதவியதே என்று சொல்ல
பின்னும் போயங்கு பிரியமானது அதைக் கொண்டு
வற்றாத செல்வமதுவும் வற்றிவிட்ட நிலையதாகி
வாழ்வும் அவன் தன்னிடம் இருக்கவும் வேண்டுமென்றே
உற்றார் உறவினரும் உற்று நோக்கியிருக்கவென
உணர்த்திட்ட உடன்பிறந்தோன் உறவதுவும் பொய்யாகி

பாதியாய் வாழ்வில் வந்து பதியெனவே சொன்ன பெண்ணும்
பாவையாய்ப் பதுமையாய் நின்று பாங்குடன் குடும்ப நெறியில்
வாதியாய் வந்துநின்று வழக்கதனைப் போடவைத்து
வந்திடவே நானுமங்கு வருந்தியே துவண்டுநிற்க
மீதியாய் நின்றே நானும் மகிழ்ந்திடவும் முடியாதாய்
மாண்புதனைக் குறைத்திங்கு மாளாத துயர்கொண்டு
போதியே என்று சொல்லிப் போன அப்பொழுதினிலே
போதித்திட வேண்டுமென்றே புனைந்திட்ட இலக்கியங்கள்

வாழ்ந்துநின்றே நானும் வாழ்க்கையதைப் பார்த்திட்டே
வாராத இன்பமெல்லாம் படைப்பதனிற் சேர்த்துநிற்க
வாழ்ந்திடும் பூமியதில் வந்தநின்ற மாந்தரெல்லாம்
வலிமையும் சிறுமையும் கொண்டு வாழ்ந்திடும் முறை பார்த்தே
எழுந்திடும் ஏக்கமெல்லாம் என்வரியிற் கொண்டுநின்றேன்
எனக்குள்ளே நானுமே இப்படித்தான் கேட்கின்றேன்
ஏக்கமதும் தாக்கங்களும் எனக்குப் போலவேதான்
உனக்குள்ளும் இருக்கிறதா என்று சொல்வாய் பிரம்மதேவா

தத்துவம் போன்று அமைந்திருந்தாலும் அவற்றுக்குள் சோகம் மறைந்திருப்பது தெரிந்தது. 'இவ்வளவு ஆழமாக கண்ணபிரான் ஐயா வாழ்வியலை எழுதுகின்றார் என்றால் அவ்வளவு மோசமாக விதிப்பயனை அனுபவித்திருக்கிறார்' என்று தந்தையில் ஏதோவொரு புத்தக வெளியீட்டில் அவருடைய நண்பர் சொன்னது அவளுக்கு அப்போது ஞாபகத்திற்கு வந்தது.

உண்மைதான். 'தான் பார்க்காததை, செய்யாததை, உணராததை எப்படி ஒருவர் கற்பனை செய்து எழுத முடியும். அதனால் எழுதுபவரிடம் நிறைய அனுபவங்கள் இருக்கக்கூடும். அவை சொந்த அனுபவம் ஆகவோ தங்களுடன் நெருங்கியவர்களின் அனுபவங்களாகவோ இருக்கும்.

ஆனால் மனித மனங்கள் எப்பொழுதும் நேராக சிந்திப்பதில்லை. அதனால் முடிவுப் பகுதியில் கற்பனையைக் கட்டாயமாக இழுத்தெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இதனாற் கற்பனை கலந்திருக்கும் என்பதை மறந்துவிடல் ஆகாது. நிகழ்வை அப்படியே சொன்னால் அது சோபிக்காது. கற்பனை கலக்கும் பொழுதில் அவை ரசனைக்கு உரியதாகும்.'

'ம்... அவருக்கு மட்டும் எப்படித்தான் இதுவெல்லாம் எழுத வருகுதோ' என்று மனம் தன்னுள்ளே கேட்டுக் கொண்டது. பொறியியற் பீடத்தில், பயிற்சிகள் முடிந்தபிறகு எழுதச் சொல்லும் கோஸ்வேர்க்கை எழுதுவதற்கு, பெரிய சிரமப்பட்டு எழுதி முடிப்பதை ஞாபகப்படுத்திப் பார்த்தாள்.

எழுத்தென்பதே ஒரு அருங்கலைதான். அதை முழுமையாகச் செய்வதற்கு நயமான நோக்குடன் பொறுமையும் வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

கோப்புக்களுக்களை அவதானித்து முடித்தபிறகு, அவளுடைய கண்களைக் கவர்ந்தது, கறுப்புக் கவர் போட்ட இன்னொரு கோப்பு. 'சுயசரிதைக் குறிப்புகள்' என்று அப்பாவின் கையினால் தலைப்பிடப்பட்டு இருந்த அதை, ஏதோ யோசனையுடன் கையிலெடுத்து வலது கையினாலே பக்கங்களைப் பரட்ட ஆரம்பித்தாள்.

**'மனித வாழ்க்கை என்பதே முள்ளில் அமைக்கப்பட்டது தான். இங்கே சுகங்களைவிட துயரங்களே அதிகமாகும்"** என்று பொன்மொழி போலே போடப்பட்டிருந்த அந்த வாசகம் அவள் கவனத்தை வெகுவாகவே ஈர்க்கவும் கண்கள் வேகமாகவும், நுணுக்கமாகவும் எழுத்துக்களிலே இறங்கிச் சென்றன.

*"துன்பத்தை அனுபவிப்பதற்கென்றே பிறவியெடுக்கும் ஒரு மனிதன், மிகக் குறுகிய காலத்தில் பேரின்பத்தில் மூழ்கிக் கிடப்பது போல காட்டப்படுவான். அப்பேர்பட்டவன் வாழ்க்கை முழுவதுமாக துன்பத்தில் உழலப் போகிறான் என்பதற்கான அவனது சிறுகதைக்குரிய குறியீடே அதுவாகும்.*

*அதைப் புரிந்து கொள்ளாமல் வேகமாகவே உலகியலில் இறங்கி அற்ப சுகத்தை அனுபவித்து விட்டு வாழ்க்கை முழுதுமாக ஏக்கத்துடனேயே வாழ்ந்து முடிக்கின்றான்.*

*பத்தொன்பது வயதிலே அப்படியானதொரு அற்ப சுகத்தை நாடிச் சென்ற நான் பள்ளிக் காதலி தந்த இரகசியமான இன்பத்தை உண்மையென எண்ணிக் கல்வியைப் புறக்கணித்தேன். உயர்தரப் பரீட்சை நாள் ஒன்றிலே பரீட்சை மண்டபத்துக்குப் போகாமல் அவளை நாடிச் சென்றேன். கல்வியை விடவும் அவளுடன் இணைவதே வாழ்க்கையிற் சந்தோசம் அளிக்கக்கூடியது என்று என்னுடைய அறிவில்லாத பகுத்தறிவு சொல்லிவிடவும் கல்வியைப் புறக்கணித்தேன். அதன் விளைவு, இன்று அவளும் பிரிந்துவிட கல்வியையும் இழந்து நின்று கலங்குகின்றேன்.*

*நொறுங்குண்ட நினைவுகள் என்ற கவித்தொகுப்பு மற்றவர்களுக்குப் புத்தி சொல்வதற்காக எழுதப்பட்டதல்ல, என்னையே நான் கேட்டுக் கொண்டது"*

திடீரென நெருப்புச் சுட்டதும் கையை விரைவாக எடுப்பது போல கைகள் தாமாகவே உதறின. கையிலிருந்து தவறிக் கீழே விழுந்த அந்தப் புத்தகத்தைக் குனிந்து எடுத்துக் கொண்டாள்.

அவளுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. பெற்றோர்கள் எப்பொழுதும் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாகவே காட்டப்படுவதால், அவர்களுக்கும் இளமைக்காலம், சறுக்கல்கள், சரிவுகள் என்பன வந்திருக்கும் என்பதை அறியாமல் அல்லவா இருந்திருக்கின்றோம் என்று நினைத்தாள்.

நாம் உலகை அறியும்போதே உலகம் தோன்றியது என்றும் அன்னையும் தந்தையும் மற்றவர்களும் அவ்வாறே படைக்கப்பட்டவர்கள் என்றும் அல்லவா நாம் நினைத்துக் கொள்கின்றோம். அவர்களின் பக்கங்களை ஏன் தெரிந்து கொள்வதில்லை. அப்பாவுக்கும் கதை இருக்கும் என்று ஏன் படித்த எனக்குப் படவில்லை என்று யோசித்தாள்.

'அப்பாவினுடைய கதையா. அப்படியானால் அதிலே காட்டப்பட்டிருப்பவர் அப்பா தானா? அவருக்குள்ளே நாம் அறிந்திடாத ஒரு இருண்ட பக்கம் இருக்கிறதா? அப்படியானால் அவரின் பள்ளிக் காதலி எங்கே இருக்கிறார்? என்று கணநேரத்தில் அடுக்கடுக்காக கேள்விகள் எழுந்தன.

அந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கலாம் என்ற எண்ணத்தில் வாசிப்பைத் தொடருகிறாள்.

*"பத்து வருடங்களாக உடலுக்கும் மனதுக்கும் சுகங்களை அள்ளித் தந்த என் காதலி, பெற்றோரின் வற்புறுத்தலின் காரணமாக வெளிநாட்டு வரனை மணந்து கொண்டு வெளிநாட்டுக்குச் சென்று விட்டாள் என்ற செய்தி என் நெஞ்சைப் பிளப்பதாக இருந்தது. தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற தீவிரம் எழுந்தது. அருமையாக எம்மைப் பிறக்க வைத்து, பாராட்டி சீராட்டி வளர்த்த அன்னையின் பாசம் மனதில் நிறைந்துவிடவும் தோல்வியைச் சுமந்து கொண்டு வாழும் ஒரு வாழ்க்கைக்கு என்னைப் பழக்கிக் கொண்டேன்.*

*அந்தக் கவலையில் இருந்து விடுபடுவதற்கு என்னால் அவ்வளவு சீக்கிரத்தில் முடியவில்லை. எந்தெந்தக் கோயிலுக்கோ எல்லாம் சென்று வந்தேன். ஆனால் எனக்கு ஆறுதல் கிடைக்கவில்லை. என் வாழ்க்கை என்னைப் பார்த்து சிரித்ததைப் போன்று இருந்தது.*

*எத்தனையோ தேடல்களுக்குப் பின்னதாக ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டேன். அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதன் மூலம் என்னுடைய கவலைகளை மறக்க முடியும் என்று நான் நினைத்தது சரியாகவே இருந்தது. பலவிடயங்களையும் எடுத்து உரைப்பதற்கு இத்தொழில் எனக்கு உதவியது.*

என்னைச் சுற்றிலும் நான் சொல்லுவதை செவிமடுப்பதற்கு ஒரு மாணவர் குழாம் இருந்து வந்தது. மாணவ சமுதாயம் என்னைப் போன்ற வயதில் சறுக்கிவிடக் கூடாது என்பதை வாழ்க்கையில் வலியுறுத்தியே வந்தேன். என் காயம், பல இளைஞர்களுக்குப் பாடமானதைக் கண்டு மகிழ்வுற்றேன்.

என் நண்பர்களின் வேண்டுதலுக்காகவும் அன்புக்காகவும் சிறிது சிறிதாக எழுத்துத் துறையில் கால் பதிக்க முனைந்தேன். கவிதை, கட்டுரை, சிறுகதை என்றவாறு தொடங்கிய என்னுடைய இலக்கியப் பயணம் நாவல், ஆன்மீகம் என மேலும் வளர்ந்தது. எனக்கென்று ஒரு ரசிகர் குழாத்தையும் உருவாக்கியது. எழுத்தின் போர்வையில் என்னை நான் வென்றுவிடப் பிரயத்தனப்பட்டேன்.

இருப்பினும் மனதை மட்டுமே திருப்திப் படுத்தி வாழ்க்கையை முடித்துக் கொள்ள முடியாது என்பதை அனுபவத்தில் தெரிந்து கொண்டேன். என்னுடைய வயதும், தனிமையும் என்னைப் பார்ப்பவர்களுக்கிடையே ஒரு வித கேள்வியை எழுப்பியதை நான் உணராமல் இருக்கவில்லை. அதையும் விட என்னையே நான் வென்றுவிட முடியும் என்று நான் கொண்டிருந்த எண்ணம் அன்று வெற்றிபெறவில்லை.

படிக்கும் வயதிலேயே பலதையும் தேடிய என் நினைவுகள் என்னை வாட்டியெடுத்தன. பெண்ணொருத்தியுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேன். மறுபடியும் அலையும் எண்கண்களில் அடிக்கடி பெண்கள் வளைய வந்து கொண்டிருந்தார்கள்.

நான் மகான் அல்ல என்பதை அன்று புரிந்து கொண்டு விட்டேன். மகானாக வாழ்வதில் உள்ள இடர்பாடுகளையும் தெரிந்து கொண்டேன். என்னிடம் படித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் எனக்கு மறுபடி ஈர்ப்பு வந்தது. வந்தபோதே அந்த எண்ணம் முறையானதல்ல என்பதையும் என்னுடைய மனச்சாட்சி எனக்குச் சொல்லியது.

ஆசிரியர்கள் ஆண்டவனைப் போன்றவர்கள் என்பதும் எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்பதும் எனக்குத் தெரியாதது அல்ல. இருப்பினும் அப்போது இருந்த தனிமையும் ஏக்கமும் எந்தன் செயல்களைக் கட்டுப்படுத்துவதாக இருந்தது. நான் கற்றுக் கொடுக்கும் மாணவியிடம் காதல் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் எனக்குத் தீவிரமாகவே இருந்ததும் என் நிலையை மாற்றிவிட்டது அவளுடைய அன்பு.

சாந்தியின் உண்மையான அன்பும் பிடிவாதமும் என்னை அவளுக்குக் கணவனாக்கி, ஆனந்த வெள்ளத்திலே மூழ்கடிக்கச் செய்தது.

அதிஷ்ட மனைவி சாந்தியை அடைந்த பலன் எனக்கு அரசாங்க நியமனத்தைப் பெற்றுக் கொடுத்தது. திருமணமாகி ஒரு வருடமும் நான்கு மாதங்களும், கழிந்த பிற்பாடு முதல் நியமனத்தில் நான் கிளிநொச்சியிலுள்ள ஒரு பின்தங்கிய பாடசாலைக்கு நியமனம் பெற்றுப் போனேன்.

என் வாழ்வுக்கு ஒளியேற்றிய அருமை மனைவி சாந்தியின் அன்பையும், அரவணைப்பையும் வெளிப்படுத்தும் முகமாக "வாழ்வுக்கு விளக்காய் சாந்தி" எனப்படும் தொடர் ஒன்றை யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகையொன்றிற் பிரசுரித்துப் பாராட்டும் பெற்றேன்."

தொடர்ந்து ஏதேதோ விடயங்கள் போடப்பட்டிருக்கவும் அவற்றை வேகவேகமாகத் தட்டிவிட்டு தேடிக்கொண்டே வந்தாள்.

"நான் கிளிநொச்சிக்கு வேலைக்குச் செல்வதற்கு ஆயத்தமானேன். வேலைக்காக வன்னிக்குச் செல்லுமுன், சாந்தியைக் கொண்டு சென்று அவளின் தாயாரின் வீட்டில் விட்டுவிட்டுச் சென்றேன்."

# 10

கதை படிப்பது என்பது எல்லாருக்கும் எக்காலத்திலேயும் பிடித்தமான ஒன்று தான். அதுவும் எம்மைச் சேர்ந்தவர்களின், எமக்குத் தெரியாத பக்கங்களை அறிந்து கொள்வது என்பது யாருக்குமே பிரியமான விடயம் தான்.

ஏற்கெனவே தகப்பனுடன் கோபத்தில் இருந்ததால் அவரின் தெரியாத பக்கத்தைப் புரட்டுவதும், அவரைப் பற்றித் துப்பறிந்து கொள்வதும், அவளுக்கு என்னவோ பிழையாகப் படவில்லை. பெரிய துப்புத் துலக்கச் சென்றிருக்கும் ஒரு அதிகாரியின் வேகமே அவளுக்குள் இருந்தது.

அடுத்த பக்கத்தைப் புரட்டினாள்.

*"நான் சிறுவனாக இருந்தபோது சென்றிருந்த கிளிநொச்சிக்கு எவ்வளவோ காலத்தின் பின்னால் வேலைக்காகப் போக நேர்ந்தது. கிளாலிப் பாதை மட்டுமே பாவிக்கப்படும் நிலையில், படகுக்காகக் காவலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தோம்.*

*நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைக்கு சென்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டோம். அந்த இடத்தின் அமைதியான சூழல் என்னைக் கவர்ந்தது. என்னுடன் வந்த வேறு இரு ஆசிரியர்களுக்கும் சேர்த்து, தங்குவதற்கு ஒரு இடத்தை ஒழுங்கு செய்து தந்திருந்தார் பாடசாலையின் அதிபர்.*

போர்ச் சூழ்நிலை காரணமாக மக்களின் தேவைகளும் பொழுதுபோக்கும் மிகவும் சுருக்கமாகவே இங்கு காணப்பட்டன. தனியாக இருந்த காரணத்தினால் காலையில் வேளையுடனே பாடசாலைக்குச் சென்றுவிடுவோம். எங்கள் சொந்த வீட்டைப் போல பாடசாலையைப் பராமரித்து வந்தோம்.

அமைதியான அந்த சுற்றாடல் எங்களுக்கு குதூகலத்தைத் தூண்டியது. கிளிநொச்சியின் இயற்கை அழகு நிறைந்த சூழல் அந்த இடத்தில் பலவற்றையும் முன்னெடுத்துச் செய்வதற்கு உறு துணையாக இருந்தது.

மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவாகவே இருந்த அந்தப் பாடசாலையில் அனைத்து மாணவர்களும் எனக்குப் பரிச்சயமானவர்கள் ஆனார்கள். பாட வேளை தவிர்ந்த ஏனைய பொழுதுகளில் அவர்களுக்கு இலக்கியத்தைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் சொல்லிக் கொடுக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

தினமும் காலையில் எழுந்து தந்தையுடன் விவசாயத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்துவிட்டு, தாயாருக்கு வீட்டு வேலைகளுக்கு உதவி செய்துவிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டு வரும் அவர்களுடைய அணுகு முறை சற்று வித்தியாசமானதாகவே இருந்தது.

எந்த ஒரு விடயத்தையும் ஆழமாக சிந்திப்பவர்களாக இருந்தார்கள். பொதுவான விடயங்களை மக்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்படுத்திக் கதைத்தார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு சதத்திற்கும் கடும் கணக்கைப் பேணுபவர்களாக இருந்தார்கள்.

அவர்களுடன் கதைக்கும்போது கிராமத்து வாழ்க்கை பற்றியும் பழக்க வழக்கங்கள் பற்றியும் விவசாயத்தைப் பற்றியும் பல விடயங்களைத் தெரிந்து கொள்ள முடியுமானதாக இருந்தது.

அவர்கள் தங்கள் வாழ்க்கையில் விவசாயத்தையும் மர நடுகையையும் கால் நடைகளையும் மட்டுமே பெரிய சொத்தாகக் கருதி வந்தனர். அந்த இடத்திற்கு வந்த பின்னால் மரங்களின் அவசியம் பற்றியும் மர நடுகையின் முக்கியத்துவம் பற்றியும் விழிப்புணர்வு கொண்ட ஒருவனாக நானும் மாறியிருந்தேன்.

வேலைக்குச் சேர்ந்து, சில காலங்களின் பின்பு மரம் ஒன்றை ஆரம்பப்பிரிவு மாணவர்களைக் கொண்டு நட முனைந்து கொண்டிருந்த நேரத்தில், ஒரு பெண்ணின் குரல் கேட்டுத் திரும்பினேன்.

என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. நான் காண்பது கனவா நனவா என்று பல முறை என்னைக் கேட்டுக் கொண்டேன். என்னை நானே கிள்ளிப் பாரத்துக் கொண்டேன். அங்கே நான் கண்டது .....

என்னை விட்டுத் தூரப் போய்விட்ட எனது காதலி. எனது பள்ளிக் காலக் காதலி. அங்கு என் கண் முன்னாலே வந்து என்னிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் எங்கு வந்தாள்? அல்லது நான் எங்கு வந்தேன்? காலச் சக்கரத்தினால் கடந்த காலத்துக்கே போய்விட்டோமா? அப்படியானால் ஏன் இருவரும் பள்ளிச் சீருடையில் இல்லை.?

திடீரென என்னை நான் சுதாகரித்துக் கொள்ளவே, என் பகுத்தறிவு ஒன்றைப் புலப்படுத்தியது. அவள் காதலியல்ல.... அவளைப் போலவே இருக்கின்ற வேறொருத்தி...

அவளைப் பார்த்தவுடனேயே மனம் அவளிடம் ஓடிச் சென்று ஒட்டிக் கொண்டது. அவளுடன் பழக வேண்டும். கதைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக எழுந்தது.

தானாகச் சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். அந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியர் நான் என்று சொன்னேன். புதிதாக வந்திருப்பதைத் தெரிவிக்கவில்லை. அவளுக்கு சிரேஷ்டர் என்ற நினைப்பு எழவேண்டும் என்று யோசித்தேன். நேயமான புன்முறுவலுடன் எனது கேள்விகளுக்குப் பதில் சொன்னாள்

முல்லைத்தீவைச் சேர்ந்த அவள், முதல் நியமனத்தினால் அந்தப் பாடசாலைக்கு வந்திருந்ததாக குறிப்பிட்டாள். அவளுடைய பெற்றோரும் தங்கையும் அங்கே வசிக்கிறார்கள் என்று சொன்னாள். கள்ளங் கபடம் இன்றி அவள் சிரித்தபடி கதைத்ததை ரசித்தேன்.

பெண்களுக்கு எப்பொழுதுமே கள்ளங் கபடம் தெரியாது. சுலபமாக எளிமையாகப் பழகிவிடுவார்கள். அதனால் அவளின் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அன்றைய நாளை நினைத்து என் மனம் மகிழ்ச்சியைத் தனதாக்கிக் கொண்டது.

என் இறைவனுக்கு மானசீகமாக நன்றியைச் சொல்லிக்கொண்டேன். என் காதலியுடன் மறுபடி இணைந்துவிட்டதாக என் மனம் சந்தோசப்பட்டது.

ஆனாலும் என்னை ஆற்றுப்படுத்தாத என் விதி நளினியைப் பிரித்தபோது துடித்தெழுந்தேன்.

நளினியின் கதையை 'மனதைக் கிள்ளிய புதிய பறவை' என்னும் பெயரில் குறு நாவலாக வெளியிட்டிருந்தேன்."

கதையைப் படித்த போது பிரியந்திக்குக் கோபம் கோபமாக வந்தது. இங்கே அம்மா காவல் இருக்க அங்கே வேறு ஒரு பெண்ணைப் பார்த்து பல்லைக் காட்டியதாக எழுதியிருக்கிறாரே என்ற கோபம் வந்தது.

அதுவும் போதாதென்று முதல் பார்வையிலேயே அவளை ஏமாற்றும் எண்ணம் அல்லவா தெரிகின்றது. பெண்கள் கள்ளம் கபடம் அல்லாதவர்கள். அவர்களை ஆண்கள் வலையிற் சிக்க வைத்துத் தவிக்க விடுகிறார்கள் என்பது போலே எழுதியிருக்கிறாரே.

ஒரு சுவாரசியத்திற்காக அப்படி எழுதியிருப்பாரோ என்ற எண்ணமும் எழுந்தது. என்ன சுவாரசியம் வேண்டிக் கிடக்கு. இது என்ன கதையா? செய்தியா? சுவாரசியத்தைப் பார்க்க. சுயசரிதத்தை யாரும் இப்படி எழுதுவார்களா என்ற வந்த எரிச்சலில் அதை மேசையில் எறிந்தாள்.

அவளுக்கு அப்பாவின் மீது ஆத்திரமாக இருந்தது. எப்பேர்பட்ட புனிதவதியான அம்மா, அவரின் கடந்த கால வாழ்க்கையையும் சிந்தித்துப் பாராமல், அவருடன் வாழ்க்கையில் இணைந்திருக்கிறார். அதற்குப் பிறகும் ஒரு பெண்ணைப் பார்த்து ஆசை வைத்திருக்கிறாரே என்று நினைத்த போது, அவளுக்கு எல்லாவற்றிலும் வெறுப்பு ஏற்பட்டது.

அதனாலே தான் அப்பா தன்னுடைய காதலையும் ஆகாததாகப் பார்க்கிறாரோ என்ற எண்ணமும் எழுந்தது. உத்தம புருஷர் என்று தானும் அன்னையும் வணங்கிக் கொண்டிருந்த அப்பாவின் பின்னால் இப்படிப்பட்ட விடயங்களும் இருக்கிறது என்பதை அறிந்தவுடனேயே மனம் சஞ்சலமுற்றது.

அதன் போதே முகுந்தனைப் பற்றிய சிந்தனையும் எழுந்தது. அவனாவது நல்லவனாக இருப்பானோ அல்லது தனக்கு ஒளித்துப் பொய் சொல்லுவானோ என்ற எண்ணமும் வந்தது. திடீரென்று தான் மற்றவர்களுடன் பழகும் விதத்தையும் யோசித்துப் பார்த்தாள். தன்னையும் அப்பாவி என்று நினைத்து ஏதாவது யோசித்திருப்பானோ .....?

இல்லை. அவளை அத்தனை சுலபமாக யாராலும் ஏமாற்றிவிட முடியாது. அவள் படித்தவள், கண்டிப்பானவள் என்பது அனைவருக்கும் தெரியும் அது தவிரவும் அப்பாவிடத்து அனைவருக்கும் பயமும் இருக்கும்.

அப்பா எப்படி இருந்தாலும் என்ன? மகள் பெண்தானே அவளை விரும்பியபடி எல்லாம் ஆட்டி வைக்கலாம் என்று நினைத்துவிட்டால்? எத்தனையோ சினிமாப் படங்களிற் காட்டுவதைப் போன்று தந்தைக்குப் பதிலாக மகளைப் பழிவாங்க நினைத்தால் .....?

அவருக்கு உறுதுணையாக மேன்மையாக இருக்கும் அன்னையை நினைவு படுத்திப் பார்த்தது மனது. இவை எவற்றையும் தெரிந்து கொள்ளாமல் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று எத்தனை மரியாதையாக நடந்து கொள்கிறார். அல்லது அப்பாவைத் தாங்கிக் கொள்கிறார்.

எங்கள் சமுதாயத்தில் பெண்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவே முடியாமல் இருக்கிறது. ஆண்களுக்கு உதவி செய்ய வேண்டும். வீட்டைப் பார்க்க வேண்டும். பிள்ளைகளைப் பார்க்க வேண்டும்

ஆனால் அவை எல்லாவற்றையும் பெண் செய்து தருவதனால் சமுதாயத்தில் பெரிய ஆட்களைப் போன்று ஆண்கள் நடந்து கொள்ளுகிறார்கள். போதாக் குறைக்கு வீட்டுக்குள் நுழைந்தும் பெரிய நடப்புக் காட்டிக் கொள்ளுகிறார்கள்.

இதற்கு ஒரளவாவது ஒத்தாசை செய்யும் முகமாகப் பெண்களை வேலைக்குப் போகவிடாது தடுத்து வைக்கின்றனர். பெண்கள் வாயைத் திறந்துவிடாது அவர்களுடைய சிந்தனைச் சுதந்திரத்தை முற்றாகத் தடைசெய்து விடுகின்றார்கள்.

பலவிதமான அழுத்தங்களையும் வீட்டுக்குள் இருந்து சுமப்பதாலும், தங்களுடைய காலில் நிற்க முடியாததாலும் பிள்ளைகளைப் பற்றிப் புரிந்திருந்தும் அவர்களுக்காகக் கதைக்க முடியாதவர்களாக இந்த அம்மாக்கள் இருக்கிறார்கள். இதனால் பிள்ளைகளின் மனநிலையும் பாதிக்கப்படுகின்றது.

குடும்பத்தையும் சமுதாயத்தையும் சமப்படுத்தி அனைவருடனும் அணைவாக நடக்கும் பழக்கம் ஆண்களுக்குக் கிடையாது என்பதை அவள் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறார்கள். குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஒரளவு வசதியைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் ஏனையவர்களை விடவும் சாதித்ததைப் பல இடத்தில் நோக்கியிருக்கிறாள்.

குல விளக்குகளாக வீட்டுக்குள் பெண்கள் திகழ்வதனால் வெளியில் நீங்கள் பெரிய மனிதர்கள். அவர்களும் உங்களைப் போல நடந்து கொள்ள முனைவார்களானால் உங்களுடைய நிலை என்னாகும்?

ஆனால் எங்கள் பெண்கள் மாறிவிடப் போவதில்லை. எத்தனை படித்து நல்ல உத்தியோகத்தில் இருந்தாலும் அவர்கள் ஆண்களைத் தாண்டிப் போகப் போவதில்லை. இதை அப்பாக்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அப்பாவை நினைத்ததும் மறுபடியும் எரிச்சலே வந்தது. சே... அப்பாவே இப்படி இருக்கும்போது அவரிடம் பயம் என்ன யாருக்கு வேண்டியிருக்கிறது என்று யோசனை வந்தது. இந்தக் கதை தெரியும்போது தன்னையும் குறைவாக நினைக்க மாட்டார்களா என்று யோசித்தாள்.

இப்படியான ஒருவரை உதாரண புருஷர். உலகிற்கு நல்லதைச் சொல்லக் கூடியவர் என்று எமது சமுதாயம் பிழையாக நம்பிக் கொண்டிருப்பது அதைவிட மோசமான நிலையே என்றும் யோசித்தாள்.

ஒரு சிறிய இடைவெளியிலேயே, ஆண்குலத்திலேயே சடுதியாக எழுந்த தவறான எண்ணம் அவளை நிலை குலையச் செய்தது. திரும்பத் திரும்ப அந்த வரிகளின் மீது அவளின் பார்வை செல்வதை உணர முடிந்தது.

எத்தனை தடவைகள் வாசித்தபோதும் அந்த விடயம் தொடர்பான நல்ல விதமான சிந்தனை அவளுக்கு வரவில்லை. வாழ்க்கையின் பல கசப்பான விடயங்களை அண்மைக் காலமாகத் தான் அறிந்து வருவதைப் போன்று இருந்தது அவளுக்கு அப்போது பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

அன்று அவளும் அவளுடைய நண்பியும் வெகு நேரமாகி இருட்டத் தொடங்கும்போது வளாகத்தில் இருந்து வெளியேறினர். அந்த நேரம் அங்கு வந்த இரு சிரேஷ்டர்கள் அவர்கள் காலதாமதம் ஆகியமைக்கான காரணத்தைக் கேட்டனர்.

சீமெந்துப் பரிசோதனைக்காக செய்யப்பட்ட அந்தக் கற்களை தண்ணீரில் போடுவதற்குப் பார்த்துக் கொண்டு நின்றதனாற் காலதாமதம் ஆகியது என்பதை சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதை நம்பாது விடயங்களைத் திரிவு படுத்தி அவர்களை வாய்க்கு வந்தவாறு ஏசத் தொடங்கினார்கள். அவர்களுக்கு அழுகை வந்துவிட்டது.

அந்த வேளையில் அங்கு வந்த போதனாசிரியர் அவர்களை வினாவியபோது, அவர்கள் வேறு ஏதோ சொல்லிவிட்டுப் பறந்துவிட்டார்கள். அவர்களும் தாமதம் ஆகிவிடாமல் விடுதிக்குப் போய்விட்டார்கள். இருந்தாலும் அவர்கள் நடந்து கொண்ட விதமும் கதைத்த அவதூறும் அவர்களுக்குத் திரும்பத் திரும்ப ஞாபகம் வந்தது.

தங்களிடம் எதற்காக அவர்கள் அவ்வாறு கதைத்தார்கள் என்பதை அவர்களுக்கு சிந்திக்க முடியாமல் இருந்தது. படிக்க வந்த பெண்களை எவ்வாறு கேவலமாகப் பார்க்கின்றார்கள் எமது ஆண்கள் என்று கவலைப்பட்டார்கள். அவ்வாறான கதைகளைக் கேட்ட அனுபவம் அவர்களுக்கு மட்டுமல்ல அங்கு பல பெண்பிள்ளைகளுக்கும் இருந்தது.

போட்டியாக நினைத்து இப்படிப் பேசினார்களா என்றும் நினைக்கத் தோன்றியது. எது எவ்வாறு இருப்பினும் கலாசாரத்தை வகுத்தது நாம். அவற்றைக் கொச்சைப் படுத்தி நாம் நடக்கக்கூடாது என்ற எண்ணம் எமக்கே வராவிட்டால் யாருக்கு வரும்?

நினைவுகள் மௌனமாக விடைபெறத் தொடங்கியதும் கீழே ஆரவாரத்தை அவளின் காதுகள் கேட்டன.

அப்பாவின் கார் கீழே வந்த சத்தம் கேட்டதும் தன் கையிலிருந்த புத்தகத்தை பக்குவமாகவே மேசைமீது வைத்து விட்டு, அதிற் குறிப்பிடப்பட்டிருந்த அந்தப் பத்தகத்தை தேடி எடுத்துவிட்டு வேக வேகமாக அந்த இடத்திலிருந்து வெளியேறியவள், அவசரமாக தன்னுடைய அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு புத்தகத்தை விரிக்கத் தொடங்கினாள்.

அப்பா தன்னுடைய பெயரைக் காட்டிக் கொடுத்துவிடாமல் இருப்பதற்காக அந்தப் பாத்திரங்களுக்குப் பெயர் வைத்திருக்கவில்லை. அவன் அவள் என்று எழுதியிருந்தார்.

# 11

எதேச்சையாக விழிப்பு வந்தபோது கையை நீட்டிக் தலைமாட்டில் வைத்திருந்த கடிகாரத்தைப் பார்த்தான் அவன். விடிவதற்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் இருக்கின்றது என்பதை அது காட்டியது.

விளக்குகள் ஒளிராத போதும் அத்தனை ஆரவாரம் எவ்வாறு வருகின்றது என்று யோசித்தான். இருட்டிலே வாழ்ந்து பழக்கப்பட்ட அந்த இடத்து விவசாயிகளின் ஆரவாரம் அது என்பதைப் புரிந்து கொண்டான். படுக்கையை விட்டு எழுந்து சென்று யன்னலில் ஓரமாக நின்று பார்த்துக் கொண்டான்.

விடியலுக்கு முன்பாக்வே தோட்டங்களுக்குச் சென்று ஏற்றம் இறைத்தும் வாய்க்காலில் வரும் நீரை திசை திருப்பியும் நீர்ப்பாசனத்தைச் செய்வதற்கு எழுந்து கொண்ட அவர்கள் சைக்கிளிலும் மாட்டு வண்டியிலும் செல்வது தெரிந்தது. டைனமோவால் இயங்கும் ரோர்ச் லைட்டை சைக்கிளில் பொருத்தியிருந்தார்கள். சிலரின் மாட்டு வண்டிகளின் முன்னாலே அரிக்கன் லாம்பும் தொங்கிக் கொண்டிருந்தது.

மெலிதாகப் படர்ந்திருந்த இருட்டில் ஆங்காங்கு தெரியும் மின்மினிப் பூச்சிகளைப் போன்று விளக்கு வெளிச்சம் தென்பட்டது. ஓரளவு வயது வந்த ஆண்கள் இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து போய்க் கொண்டிருந்தனர்.

ஜன்னலை விட்டுத் தாண்டி வாசலை நோக்கிப் போகாவண்ணம் அவனுடைய கைகளும் கால்களும் அவளைத் தடுத்திருக்க அந்த இருட்டில் சேர்ட்டுக்கு மேலாகத் துவாயை மட்டும் போட்டுக் கொண்டு சென்று கொண்டிருந்த அவர்களைப் பார்த்தபோது அவனுக்குக் குளிர்ந்தது. அந்த நேரத்தில் கட்டாயம் போயாக வேண்டுமா என்று முதல் நாள் ஒருசில ஆசிரியர்களிடம் நேரடியாகக் கேட்டிருந்தான்.

நீர்ப்பாசனத்துக்கு உகந்த நேரம் இந்த அதிகாலை வேளையே என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். விடிவதற்கு முன்பதாக எழுந்து வரம்புகளில் நீரைச் செலுத்தி பாய்ச்சுவதன் மூலம் வெப்பத்தினால் ஆவியாகி இழக்கப்படும் நீரின் அளவு தவிர்க்கப்படுகின்றது என்று சொன்னார்கள்.

அதைவிடவும் ஒரு நாளில் சூரியன் உதயம் ஆவதற்கு முன்பாக எழுந்து சுறுசுறுப்பாக வேலை செய்வதனால் உடலின் ஆரோக்கியம் பேணப்படும் என்பதையும் தெரிவித்தார்கள். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த நேரம் அவனுக்கு பிரயோசனமாக இருந்தது.

ஒரு முறை தன்னுடைய தோட்டத்துக்கு வந்து பயிர்களைப் பார்வையிட்டுச் செல்ல வேண்டும் என்று அவனுடைய வீட்டுச் சொந்தக்காரரின் வேண்டுகோளையும் ஏற்றுக் கொண்டான். ஆனால் இந்த அகால வேளையில் அவர்களுடன் சேர்ந்து போவது எவ்வாறு சாத்தியமாகும் என்று யோசனை வந்தது.

விடியற் காலையில் எழுந்து வீட்டுப்பாடம் செய்ய வேண்டியிருப்பின் அலாமை வைத்துவிட்டு அது அடிக்கக் கேட்டதும் பெட் சீட்டால் இறுக்கமாக மூடிக் கொண்டிருக்க அப்பா வந்து எழுப்புவதும் அவன் எழும்பாமல் இருப்பதும் அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

'தூங்குபவனை எழுப்பலாம். தூங்குகின்ற மாதிரி நடிக்கிறவனை எழுப்ப முடியாது' என்று சொல்லிவிட்டு அப்பா சென்றுவிடவும், அம்மா தேநீரைக் கலந்து எடுத்துக் கொண்டு வந்து அவனை எழுப்பிய பின்பாக படுக்கையில் இருந்தவாறே தேநீரைக் குடித்துவிட்டு போர்வையை இழுத்துப் போத்தியபடியே தேவாரம் சொல்லுவதைப் போன்று கெமிஸ்ட்ரி பாடத்தைச் சொல்லிக் கொண்டது நினைவுக்கு வந்தது.

'ஹலோ ஹீ... லைற்றி... பென்ஸ் .. கார்... எம் ஜி ஆர் ... அல்லது ... சிவாஜி .. பக்கம்... சிலுக்குக் ... குளித்ததை... ஆர் .. கண்ணாற்... கண்டது ....' உச்சஸ்தாயியில் வந்த குரலைக் கேட்டதும் அப்பா எழுந்து வந்தார்.

'என்னடா அது காலங் காத்தால சத்தம் போட்டுக் கொண்டு. மனதுக்குள்ள படி...' என்றவர் கட்டிலை விட்டு அவன் இறங்காது இருந்ததைப் பார்த்ததும், 'படிக்கிற மேசைக்குப் போய் எழுதிப் படியடா' என்று சொல்லிவிட்டுப் போனதும் அந்த மேசைக்கு அருகில் போய் இருந்துகொண்டு பேனாவை வைத்தபடி நித்திரை செய்தது நினைவுக்கு வந்தது.

'சே... எப்படிப்பட்ட ஆள் நான். அம்மா அப்பா இத்தனை வசதி செய்து தந்தபோது கவனமாகப் படிக்காமல் இப்படிப் போக்குக் காட்டிவிட்டு இன்று இந்தப் பட்டிக் காட்டில் இருந்து கஸ்டப்படுகிறேனே..?' என்று யோசித்தான்.

மகன் படிக்கிறான் என்ற எண்ணத்தில் மகனுக்கு முன்பாகக் கண்விழித்து தேநீர் கலந்து கொடுத்துவிட்டு போனாவுடன் தூங்கும்போது, 'ஐயோ.. என்ர பிள்ள படிச்சுக் களச்சுத் தூங்குது' என்ற தவிப்புடன் வந்து அவனைத் தட்டி படுக்கைக்குப் போகச் செய்யும் அம்மாவையும் நினைத்துப் பார்த்தான்.

அவமாகக் கடத்திவிட்ட கடந்த காலம் அவனைக் கவலைப்படுத்தியது. அந்த ஊரில் இப்படியான மக்களிடையே பிறந்திருந்தால் தான் எவ்வாறு சிரமப்பட்டு இருப்பேன் என்று யோசித்தான்.

வசதிகள் கூடும்போது நாம் சோம்பேறிகள் ஆகி விடுகின்றோம். அந்த சந்தர்ப்பத்தில் எம்மால் செய்யக்கூடிய சிறுசிறு விடயங்களைத் தானும் செய்வதற்கு எத்தனிப்பதில்லை. ஆனால் இந்த இடத்தில் வசதிக் குறைவுகளுடன் வாழ்ந்து வருபவர்கள் எத்தனை திடகாத்திரமாக சுறுசுறுப்பாக இயங்குகின்றார்கள் என்று யோசித்தான். எவ்வளவு நேரம் இவ்வாறு பார்த்துக் கொண்டிருந்தான் என்று தெரியவில்லை. ஆனால் படிப்படியாக வெளிச்சம் பரவத் தொடங்கியது.

கிராமப் புறத்தின் அழகு கொஞ்சும் உமையாள்புரத்தின் காலைச் சூரியன் உதித்து உலகை உசுப்பிவிட்ட பின்பாக புலர்ந்த பொழுதின் பெருமையினை உணர்ந்து கொண்டவர்களாக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது மக்கள் கூட்டம்.

மரக்கறிக் கூடைகளைத் தலையிற் சுமந்து கொண்டு சந்தையை நோக்கிச் செல்லும் ஒரு சில பெண்களைக் காண முடிந்தது. நேரம் ஆகிவிட்டது தானும் தயாராக வேண்டும் என்ற எண்ணம் வரவும் துவாயை எடுத்துக் கொண்டு கிணற்றடிப் பக்கமாகச் சென்றான்.

பல் துலக்கிக் குளித்துவிட்டு வந்தபோது அடுத்த அறைகளில் இருந்த ஏனைய ஆசிரியர்களும் தயாராக இருந்தது தெரிந்தது. அன்று தேநீர் போட வேண்டிய முறை அவனுக்கு இருந்ததால் அவசர அவசரமாக அடுப்படிக்குள் நுழைந்து தண்ணீரைச் சுட வைத்தான்.

தேநீர்ப் பாத்திரங்களைக் கழுவிக் கொள்ள வேண்டும். அதற்கு கிணற்றடியில் சென்று தண்ணீர் பிடித்து வரவேண்டும் என்பது ஞாபகம் வரவும் தண்ணீர் எடுத்து வருவதற்காக பெரிய வாளியைத் தூக்கிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றான். கிணற்று வாளியைத் தூக்கிக் கிணற்றுக்குட் போட்டான் அவன்.

வாளியைப் போட்டுவிட்டு கயிற்றின் ஒரு நுனியைப் பற்றிக் கொண்டு லாவகமாக இழுத்துத் தண்ணீர் அள்ளும் பழக்கம் அவனுக்கு இருந்தது. ஆனால் இம்முறை கயிற்று நுனியைப் பிடிப்பதற்கு முன்பாக கயிறு அவசரமாக ஓடிச் சென்று கப்பியைத் தாண்டிக் கிணற்றுக்குட் பாய்ந்துவிட்டது.

'ஐயோ வாளியை எடுத்தாக வேண்டுமே. எப்படி...? என்று புரியவில்லை' அவன் அழைத்த குரலுக்கு மற்றயவர்களும் வந்தார்கள். வளைந்த கம்பிபோன்ற ஒரு உபகரணத்தைப் பொருத்தி வாளியைக் கவனமாக வெளியில் எடுக்கும்போது நேரமாகிவிட்டது.

'இனி நிக்க முடியாது. வெளிக்கிட்டுப் போவம். கடை எதிலயும் ரீயக் குடிப்பம்' என்று சொல்லியவாறு அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அவனுக்கு ஒரு மாதிரி இருந்தது. தன்னுடைய கவனக் குறைவால் அவர்களுக்கு அசௌகரியம் நிகழ்ந்ததை எண்ணிக் கவலைப்பட்டான்.

வீட்டிலே மோட்டரில் தண்ணிரை எடுத்து தாங்கியில் சேமித்து சிங்குகளில் வைத்துக் கழுவி அம்மா, சகோதரிகள் போட்டுக் கொண்டு வந்து தரும் ரீயைக் குறை சொல்லி அவர்களைத் திட்டியது அப்போது அவனின் நினைவுக்கு வந்தது.

வாழ்க்கையில் எல்லாத் துன்பத்தையும் ஒருவன் அனுபவிக்க வேண்டும். அப்போதுதான் அவன் மற்றவர்களைப் புரிந்து கொள்வான் என்ற உண்மை அப்போது அவனுக்கு விளங்கியது. அவசரமாகப் பாடசாலைக்குச் செல்லும் நோக்கில் வாயிற் கதவைச் சாத்திவிட்டுத் தெருவுக்கு வந்தான்.

கையில் பைகளுடன் பாடசாலைக்கு விரையும் மாணவருடன் போட்டி போட்டுக் கொண்டு நேரத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓடிக் கொண்டிருந்தனர் பெரியவர்கள். அவர்களின் ஓட்டமும் நடையும் ஒரு ஆட்டத்தைப் போன்று தோன்றியது அவனுக்கு

'ஒவ்வொரு நாளிலும் பொழுதின் விடியல் என்பது, எல்லோருக்குமே ஒரு அசாதாரணமான நம்பிக்கையை ஊட்டும் ஒரு விடயமாகவே இருக்கும்.

இரவு முழுவதுமாக நீண்ட நேரமாக உறக்கத்தில் இருக்கும் எமது உடல் உறுப்புக்கள் (இதயத்தைத் தவிர) நீண்ட நேர ஓய்வின் பின்னாலே சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குகின்றது. அதனாலே காலை நேரங்களிலே எல்லோரிடமுமே வேகம் அதிகமாகத்தான் இருக்கும்.

வெகு நேர இடைவெளியின் பின்பாக, எமது மனதிலுள்ள கவலைகள் ஒன்றன்மீது ஒன்றாக தாள்கள் போட்டு மூடப்படும்போது தெளிவில்லாமற் தெரிவதுபோல, நினைவுகளுடன் மீட்டப்படும் விடயங்கள் தெளிவில்லாமலும் நினைவில் நில்லாமலும் போய்விடுகின்றது.

கடவுள் மனிதனுக்கு மனத்தைக் கொடுத்தது, தான் விரும்பியபடியெல்லாம் அவனை அலைக்கழித்து, சுவாரசியமான நாடகத்தை இந்த மேடைமீது ஆடுவதற்குத்தான் என்பது எமக்குத் தெரியும். அதிலும் அவன் கொடுத்த விமோசனம், அந்த பகுத்தறிவுக்குக் கிட்டாத அறியாமையும் மறதியும் தான்.

இது இரண்டும் இல்லாது போகுமானால், மனிதர்களில் பல பேர் மன நோயாளியாகத் தான் திரிந்து கொண்டிருப்பர்.

நேற்று வரை நின்ற கவலைகளை மறந்து, இன்றைய பொழுது தங்களுக்காகட்டும் என்ற ஏக்கத்துடன் ஓடிக் கொண்டிருக்கும் மனித சமுதாயம் வாழத்துடிக்கும் எண்ணம் இருக்கும் வரை, மீதமிருக்கும் ஒருவனுடனாவது, சுற்றும் இந்த பூமி தொடர்ந்து சுழன்று கொண்டிருக்கும் என்பது யாராலுமே மறுக்கமுடியாததாகும்.'

என்ற எண்ணத்துடனும் விடியலில் எழுந்த எதிர்பார்ப்புடனும் வேலையின் நல்ல பெயரைப் பெற்றிட வேண்டுமென்ற அங்கலாய்ப்புடனும், வேக வேகமாகவே பாடசாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவன் முன்னாலே ஓரளவு ஆறுதலாகச் சென்று கொண்டிருந்த அவளைத் தாண்டியபோது, அவளின் கைகளில் இருந்த கோப்பு, தவறுதலாகக் கீழே விழுந்து விட்டது.

விரைவாகவே சுதாகரித்துக் கொண்டவன், திரும்பி நின்று குனிந்து, அதை எடுத்தவாறு நிமிர்ந்தபோது தான் அவளைக் கண்டான்.

அவனுக்கு அவனுடைய கண்களையே நம்பமுடியாது இருந்தது.

அவள் .... அவள்.... அவள் எப்படி அங்கே வந்தாள்.

அதே போல கயல் விழிக் கண்கள். நீண்டு கொண்டிருக்கும் மூக்கு, கருகருவெனக் கூந்தல். மனதைச் சுண்டியிழுக்கும் வெள்ளை வெளீரென்ற நிறம்......

தன் மனதில் இளம் வயதிலே காதல் எண்ணத்தை உருவாக்கி விட்டு, பருவ சுகத்தை அள்ளியள்ளித் தந்துவிட்டு பெற்றோருக்குப் பயந்து, வெளிநாட்டு மாப்பிள்ளையை மணந்து கொண்டு, கண் காளாத தேசத்திற்குச் சென்றவள், இங்கே எப்படி வந்தாள்....

'நான் இந்நாள் வரைக்கும் உங்களுக்காகவே காத்திருந்தேன். இன்று உங்களிடம் வந்துவிட்டேன்' என்று திரைப்படப் பாணியில் வந்து சரணடைந்து விடுவாளோ !

தேவர்கள் பூமாரி பொழிந்து வாழ்த்துவதாகக் காட்டுவதற்கு ஹெலிக்கொப்ரரில் இருந்து பூக்களை அள்ளிக் கொட்டுவார்களோ...? அவர்கள் இருவரும் அருகே வரும்போது ஒரு பெரிய கூட்டம் வந்து நின்று பின்புறமாக நின்று கொண்டு குழுப்பாடலுக்கு ஆடுமோ..? என்றவாறு அவனுடைய எண்ண அலைகள் குதித்தோடத் தொடங்கின.

'அடப்பாவி.! எந்த இடத்தில நிண்டு கொண்டு என்னத்தை எல்லாம் யோசிக்கிறே... இது தெரு... அவள் யாரோ ஒருத்தி' என்ற விடயம் அவனது ஸ்தம்பித்திருந்த மூளையின் பாகங்களுக்குக் கடத்தப்பட்டது.

அது தானே.... இவள் எப்படி அவளாக முடியும்... அவளைப் போல இருக்கின்றாள்.... அவ்வளவு தான்..

"தாங்க் யூ சேர் ..." என்ற அவளது குரல் அவனை இவ்வுலகத்திற்குக் கொண்டு வந்தது.

கையிலிருந்து நீட்டிய கோப்புக்களை வாங்கிக் கொண்டு சென்றவளை அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். அவள் யாராக இருக்கும்? ஏன் அவளை எதேச்சையாகப் பார்க்க நேர்ந்தது? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு பாடசாலைக்குள் நுழைகின்றான்.

பள்ளிக்கூடம் விட்டதும் அறைக்குச் சென்றுவிட்ட பின்பும் அவளுடைய ஞாபகம் எழுந்தது. அவள் யாராக இருக்கும். அந்த நேரத்தில் புடவையுடனும் கோப்புக்கட்டுடனும் சென்றதால் எங்கோ வேலை செய்பவளாகத்தான் இருக்க வேண்டும். அவள் எங்கு வேலை செய்கின்றாள்.

எவ்வளவு சிந்தனை செய்து பார்த்தபோதும் அவனுக்கு அவள் யாராக இருக்கும் என்று தெரியவில்லை. இருந்தாலும் அவளுடைய தோற்றமும் தன்னுடைய காதலியின் தோற்றமும் ஒரே மாதிரியாக இருக்கின்றதே என்று ஆச்சரியப்பட்டான்.

ஒரே அச்சில் ஏழு பேர் இந்த உலகத்தில் படைக்கப்பட்டு இருப்பார்கள் என்று யாரோ சொன்னது அவனுக்கு நினைவுக்கு வந்தது. அந்த அச்சின் ஒரு நகலா இது! அப்படியானால்.. மிகுதி ஐந்து நகலுமே அவனுடைய கண்களில் படுமா என்றும் யோசித்தான்.

‘இருந்தாலும் உனக்கு ரொம்பவே குறும்பு அதிகம். மனுசி இருக்கத் தக்கதா ரெண்டாவது அச்சையும் பாக்கிறே. இதுக்குள் உனக்கு இன்னும் அஞ்சுபேர் தேவைப்படுதோ?’ என்று அவனுடைய நல்ல மனச்சாட்சி கேட்டது.

‘ஏ மனச்சாட்சி.. அவளப் பத்தின விபரத்த தெரியாம நான் குழம்பியிருக்கிறன். இதுக்குள்ள உனக்கு என்ன குறுக்கு விசாரணை கொஞ்சம் போசாம இரு’ என்று அதை அடக்கிவிட்டு யோசிக்கலானான்.

சிறிது நேர யோசனையின் பின் அவனுக்குத் தோன்றியது. மறு நாளும் இதே நேரத்தில் அந்த இடத்திற்குச் சென்றால் அவளைக் கண்டுபிடித்து விடலாம்.

மறுநாள் வழமையைவிடக் கூடுதலான சுறுசுறுப்புடனேயே வெளிக்கிட்டுச் செல்கிறான். அவளை முதல் நாள் சந்தித்த இடத்திற்கு அவசர அவசரமாகவே வந்து சேர்ந்தவன், அந்த இடத்திற்கு வந்துவிட்ட பிறகு, மண்ணில் விழுந்துவிட்ட ஒரு பொருளைத் தேடுவது போல மிகவும் ஆறுதலாகக் குனிந்தபடி நடந்து சென்றான்.

நேரம் தான் கடந்து போய்க் கொண்டிருந்தது. அவள் வருவதாகக் காணோம்.

எரிச்சலுடன் தனது நடையை வேகமாக்க முற்பட்டபோது, முதல் நாளைப் போலவே அவள் வருவதைக் கண்டான். அவனைப் பார்த்துவிட்ட மகிழ்ச்சியில் தன் வேலையைக் கவனித்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்று விட்டாள்.

அவன் மனம் பலவாறாக யோசித்தது.

தினமும் இதே நேரத்தில் இங்கே வருகிறாளே.. அவளும் ஒரு ஆசிரியையாக இருப்பாளோ....

அருகில் இருக்கும் பாடசாலை ஒன்றில் தான் அவள் படிப்பிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அவளிடம் பேசிப் பார்ப்போமா என்ற எண்ணம் எழுந்தது.

அன்று அவளின் வருகைக்காகக் காத்திருந்தான்.

குறிப்பிட்ட நேரம் வந்ததும் தொலைவில் அவளின் தலை தெரிந்தபோதே, அவன் இங்கு உஷாராகிவிட்டான். உடையை ஒரு முறை திருத்திக் கொண்டும் தலையைக் கைகளினாலே சீவி விட்டுக் கொண்டும் தன்னைத் தயாராக்கி வைத்துக் கொண்டான். தொண்டையை இருமுறை செருமிக் கொண்டு, குரலைச் சரிபார்த்துக் கொண்டான்.

அவனைக் கண்டபோதே அவளின் முகத்தில் புன்முறுவல் எழுந்தது. அவனுக்கு சிறிது தைரியமும் கூச்சமும் எழுந்தது.

பாதையில் இருபுறமும் சென்று கொண்டிருந்த வாகனங்களைத் தலையின் இருபுறமும் திருப்பிப் பாதையைக் கடக்கும் சந்தர்ப்பத்தை அவன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றபோது, எதிர்த்திசையில் நின்ற அவள் பாதையைக் கடந்து இந்தப் பக்கம் வந்தாள்.

அவனை நோக்கி நடந்து வந்தாள்.

# 12

அன்று அலாம் அடிக்காமலே நித்திரை விட்டு எழும்பி விட்டான். குளிர் அவ்வளவாக உறைக்கவில்லை. அதனால் வழக்கமாக இழுத்திப் போர்த்திக் கொண்டிருக்கும் போர்வையும் அன்றைக்குத் தேவைப்படுவதாக இல்லை.

படுக்கையில் இருந்து குதித்து எழும்பி சம்மாணம் போட்டு அமர்ந்து கொண்டான். வழக்கமாக அலாம் அடித்தபிறகு அங்கும் இங்கும் சுழன்றடித்துப் படுப்பது, கைகளை இரு புறமும் நீட்டி சோம்பல் முறித்துக் கொள்வது எதுவும் செய்யவில்லை. அவனுடைய உடலும் மனமும் மிகவும் நிறைவாக இருந்தது.

வலது காலினால் தரையில் குத்திவிட்டு இடது காலை வெகு ஸ்டைலாக ஓர் இராணுவ வீரனைப் போல வைத்தவன், அணி நடையில் நடப்பதைப் போன்று ஒரு வீர நடையை நடந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

அவனுடைய கண்கள் மேலே உயர்ந்து ஆகாயத்தை நோக்கிப் பார்த்தன. அதுவரை கடமைக்கு வராதிருந்த சூரியனை அறை கூவி அழைப்பதைப் போன்று இருந்தது அவனுடைய பார்வை. அவனின் குரலை அறிந்த ஆதவன் தன்னுடைய கதிர்களை நேரடியாகவே காட்டினான்.

"என்ன பொஸ் கடைசி நேரத்தில கால வாரிப் போடுவீங்களோ எண்டு நினைச்சன். ஏன் இவ்வளவு லேட்" என்று தன்னுடைய கைகளை ஆட்டியவாறு கேட்கத் தொடங்கவும் தனது ஆயிரத்தொரு பற்களையும் காட்டி சூரியன் சிரித்துக் கொண்டார்.

"எப்பொழுதாவது நேரத்தோடு எழும்பி நீ என்னைக் கேள்வி கேட்கிறாய். தினமும் நேரம் தவறாது நான் வரும் வேளையில் நீ சுருட்டிப் படுத்துக் கொண்டு நித்திரை செய்தாயே. உன்னை எப்பொழுதாவது கேள்வி கேட்டிருக்கின்றேனா" என்று அவர் கேட்டார்.

"எப்பவும் வெள்ளனவா எழும்புறதுக்கு நான் என்ன உன்னப் போல கடம தவறாத கர்ம வீரனா? இல்லையே. எனக்குப் பிடிச்ச நாளில மட்டும்தான் செள்ளன எழும்புவன். அண்டைக்கு நீயும் வெள்ளன வரவேணும். சரியா" என்றான் அவன். மறுபடியும் அவர் சிரித்தார்.

"சிரிங்க சிரிங்க... இயற்கை சிரிச்சாத்தான் மனுசன் வாழலாம். அதினால சிரிச்சுக் கொண்டேயிருங்க. ஆனா ஒரு வேண்டுகோள். இண்டைக்கு வேளைக்கு இரவு வரக்கூடாது. இண்டைக்கு வெளியில நான் செய்ய வேண்டிய வேலை நிறையக் கிடக்கு. சரிதானே" என்று ஆணையிட்டான் சூரியனுக்கு.

அவர் சிரித்தபடியே விலகிச் செல்லுவது தெரிந்தது. காலையிலேயே ஆதவனைக் கலாய்த்துவிட்ட திருப்தியில் தாவரங்களிடத்தில் வந்தான்.

"தாவரங்களே நீங்கள் நான் பாடும்போது தலையசைத்து ஆடவேண்டும். முடிந்தால் எங்களுக்கு அருகில் வந்து கைகோர்த்து ஆடவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

"ஆனால் இது எப்படி சாத்தியமாகும். எம்மால் நகர முடியாதே. இருந்த இடத்தில் இருந்துதான் நாம் தலையசைக்கவும் கையசைக்கவும் முடியும். எழுந்து வந்து ஆடமாட்டோம்" என்று மறுத்து விட்டார்கள்.

அவர்கள் சொன்ன விடயத்தை ஏற்றுக் கொண்டவாறு காலையில் ஒலியெழுப்பும் பறவைகளிடம் வந்தான். அவை தம் சிறகுகளை உலர்த்திக் காயவிட்டு குரலை எழுப்புவதற்குத் தயாராகிக் கொண்டு இருந்தன.

"காலைப் பறவைகளே நீங்கள் இன்று காலையில் எதுவும் பாடக்கூடாது. நான் சொல்லும் நேரத்தில் என்னுடன் சேர்ந்து பாடவேண்டும். சரியா" என்றான்.

"கீ... கீ..." என்றும் "கூ.... கூ" என்றும் பறவைகள் கூச்சலிட ஆரம்பித்தன. அவர்களுக்கு மேலான குரலில் சத்தம் செய்துவிட்டு, தான் அவளைப் பார்க்கும்போது மட்டுமே சத்தம் இட வேண்டும் என்று சொன்னான்.

இப்பொழுது பறவைகள் அவனுடைய தலையைச் சுற்றி வட்டமிடத் தொடங்கின. 'கீ.... கீ', 'கூ..... கூ',' கா .... கா... ' என்றவாறு அவனைச் சுற்றி நின்று சத்தம் இடவும் அவனால் பொறுக்க முடியாமல் இருந்தது. கையிலுள்ள பிரம்பால் அவற்றை அடித்தான்.

அவை சொல்லுக் கேட்பதைக் காணோம். சத்தம் வர வர அதிகரித்துக் கொண்டே வந்தது. அவசரமாகக் கண்களைத் திறந்தான்.

புதிதாக வாங்கிக் கொண்டு வந்திருந்த அவனுடைய அலாம் பறவைகளின் குரலில் சத்தம் இட்டது. அவசரமாகக் கையை வைத்து எடுத்து அதை நிறுத்தினாள். சுவரிலுள்ள பூக்கல்லின் ஊடாக சூரியனுடைய ஒளி அறைக்குள் நுழைந்திருந்தது.

சரிதான் இந்த இரண்டையும் வைத்துக் கொண்டு அவர்களுடன் பேசியதாக அல்லவா நினைத்துக் கொண்டேன் என்று யோசித்தவனுக்குத் தான் கண்ட விசித்திரமான கனவு ஞாபகத்திற்கு வந்தது. என்ன காரணம் என்று யோசித்தவனுக்கு முன்னால் மேசையில் கிடந்து காகிதங்கள் தென்பட்டன.

அந்தப் பாடசாலையில் முதலாம் தவணைப் பரீட்சை முடிவுற்ற பிறகு பெற்றோர் தின விழா நடைபெற இருந்தது. அதிலே உருவக நாடகம் ஒன்றினைப் போடுவதற்கு அவர்கள் திட்டமிட்டு இருந்தார்கள். சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக மரங்கள், பறவைகள், சூரியன் ஆகியன பேசுவதைப் போன்று நாடகம் ஒன்றைத் தயாரிக்க வேண்டியிருந்தது.

எழுத்தில் அவனுக்கு இருந்த புலமையை ஓரளவு தெரிந்து கொண்ட அவனுடைய அதிபர் அந்த நாடகத்தை எழுதும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்திருந்தார். அதை எழுதிவிட்டுப் படுத்ததாலே தனக்கு அவ்வாறு கனவு வந்தது என்பதை அவன் புரிந்து கொண்டான். அதுவும் நல்ல கனவாகவே அவனுக்குத் தெரிந்தது.

எங்கள் சிந்தனையை விடவும் கனவுக்குக் காரணமான சப் கென்சியஸ் மைண்ட் அழகாகச் சிந்திக்கின்றதே என்று அவன் நினைத்தான். இந்தக் கனவில் இருந்து அவனுக்கு ஒரு துப்புக் கிடைத்ததைப் போன்று இருந்தது. இப்பொழுதே இருந்து எழுதலாமா என்று யோசித்தான்.

ஆனால் அத்தனை குதூகலத்திற்கும் காரணமாக அமைந்தது எது என்பதை அசைபோட்டதும் அவனுக்குள் மறுபடியும் உவகை நிறைந்துகொண்டது. காகிதங்களை அப்படியே வைத்துவிட்டு பாட்டுப் பாடியவாறே துவாயை எடுத்துக் கொண்டு கிணற்றடியை நோக்கி ஓடினான்.. அல்ல .. குதித்தபடி சென்றான்.

வாளியைக் கிணற்றுக்குள் போட்டு அள்ளி எடுப்பது நடனமாடுவதைப் போன்று இருந்தது அவனுக்கு. அந்தக் குளிர் நிறைந்த நீர் கூட அவனின் உடம்பில் படும்போது சுகமான அருவியின் நீரைப் போல அவனுக்கு இருந்தது. குளித்து முடிக்கும் போதும் பாட்டு நிறைவடையவில்லை.

குளித்து முடித்துத் துடைத்தபோது 'இஸ்... இஸ்' என்று தும்மத் தொடங்கியபோது தான் குளித்து முடித்த நீரின் வெப்பநிலையை அவனால் உணர முடிந்தது. ஏன் குளிக்கும்போது தெரியவில்லை என்று யோசித்தான். பெட்டிக்குள் இருந்த விக்ஸை எடுத்து மூக்கடியிற் பூசிவிட்டு ஆடைகளை அணிந்து கொண்டான்.

அன்றைக்கு தேநீர் போடும் தவணை மற்றயவருக்காக இருந்தபோதும் வேளையோடுதேநீர்கலந்துதானும்குடித்துஅவர்களுக்கும்வைத்துவிட்டுஅவசர அவசரமாகப் பாடசாலையை நோக்கிப் புறப்பட்டான். மற்றைய ஆசிரியர்கள் கேட்டதற்கு நாடகத்திற்காகப் பயிற்சியை வழங்க வேண்டியிருப்பதாகச் சொல்லிவிட்டுப் பறப்பட்டான். வெளியில் வந்து சப்பாத்தை மாட்டும்போது சக ஆசிரியர்கள் பேசிக் கொண்டிருந்தது அவனுடைய காதுகளில் விழுந்தது.

"நாடகப் பயிற்சிக்குப் பிள்ளைகளும் வரவேணுமே. இவ்வளவு வெள்ளனவாப் போய் இவன் என்ன செய்யப் போறான்" என்று ஒருவன் மற்றவனைக் கேட்டான்.

"என்னவோ தெரியேல்லடா. இண்டைக்குக் காலைல இருந்தே இவன்ர தொல்லையத் தாங்க முடியேல்ல. விடிஞ்சதும் விடியாததுமாக் கக்கூசுக்குள்ள போய் இருந்துகொண்டு பாட்டுப் படிக்கிறான். காதாலயும் கேக்க முடியல்ல. நிப்பாட்டுவானா எண்டு பாத்தா நிப்பாட்டவே இல்ல. இந்தக் குளிருக்குள்ள கிணத்துத் தண்ணிய அள்ளிக் கொட்டுறான். பாத்துக் கொண்டிருந்த எனக்கே சனி வந்த மாதிரி இருந்துது.

அதோட விட்டானா. நான் குளிச்சிட்டு வர முதல் தானா வந்து கடும் சாயத்தில சீனியும் போடாம தேத்தண்ணி போட்டு வச்சிருக்கிறான். வாயில வைக்க முடியாம இருக்கு. கசாயம் மாதிரிக் கிடக்கு. அத ரசிச்சு வேற குடிக்கிறான். என்ன சொல்லுறதெண்டு தெரியாம நான் முழிச்சுக் கொண்டு இருக்கிறன்'' என்று சலிப்புடன் சொல்லிய மற்றவனின் குரல் கேட்டது.

'எல்லாரும் பொறாமைக்காரர். மற்றவர் சந்தோசப்பட்டா அவங்களுப் பிடிக்காதே' என்று மனதுக்குள் நினைத்தவாறே தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

அன்றைய பயணம் அத்தனை இன்பமாக இருந்ததற்குக் காரணம் வேறு யாருமல்ல. அவள் .. முதல் நாளில் அவளைக் கண்ட இடத்திற்குச் செல்லவேண்டும். அதுவும் நேரத்துடன் செல்லவேண்டும் என்ற எண்ணமே அவனை விரைவுபடுத்தி அங்கு கொண்டுவந்து சேர்த்தது.

முற்றிலும்விடியாதபொழுதிலும்வேலையைநோக்கியும்பாடசாலையை நோக்கியும் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் போய்க் கொண்டிருந்த ஒரு சிலர் அவனுக்குத் துணையாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுடன் பாதையை ரசித்தவாறே போய்க் கொண்டு இருந்தான்.

அதிகாலையிலே கைகளில் பத்திரிகையுடன் சென்று கொண்டிருந்த ரங்கன் அவனுடைய கண்களிற் பட்டான். கடந்த இரண்டு வருடங்களிற்கு முன்னால் தந்தை இறந்த காலத்தில் இருந்தே காலையில் வேலைக்குப் போய்விட்டுப் பாடசாலைக்குச் செல்வதாக அவன் அன்று சொல்லியது அவனுக்கு நினைவுக்கு வந்தது. அவனுடைய நடை சற்றுத் தளர்ந்தது.

அந்த இடத்திற்கு வந்த முதல் நாளாகவே அவன் அவதானித்து வருகின்றான். அந்த இடத்தில் மக்கள் பெரும் பிரயாசைப்பட்டு வாழ்க்கையை நடத்திக் கொள்கின்றார்கள் என்பது அவர்களுக்குப் புரிந்தது. அவர்களின் வசதிகள் குறைவாக இருப்பதால் அவர்களின் தேவைகளும் மட்டுப் படுத்தப்பட்டனவாகவே இருந்தன.

பத்து வயதுக்கு வந்த உடனும் பல வகையாகவும் வேலை செய்வதற்கு அவர்கள் ஆற்றுப்படுத்தப்படுகின்றனர். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் தத்தமது மண்ணையோ அல்லது உடலை வருத்தியோ வாழ்க்கையை ஓட்ட வேண்டிவர்களாக அங்கு மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

கடும் பிரயாசையுடன் ஆகாரத்தைப் பெற்று அவற்றை உண்டுவிட்டு, அடுத்த நாளை நோக்கி நித்திரைக்குச் செல்லும் அவர்களுக்குப் பல விடயங்களிலும் குழப்பம் எழுவதில்லை. குடும்ப உறுப்பினர்கள், தங்களுடன் கூடவிருப்பவர்களை மட்டும் கவனித்துக் கொள்ளவேண்டும் என்ற சிறிய சிந்தனையுடன் அவர்களின் வாழ்க்கைப் பாதை ஓடிக் கொள்கின்றது.

இந்த இடத்தில் இத்தனை எளிமையான மக்களுடன் வாழ்ந்து கொண்டு தான் செய்வதைப் போல கேவலமாக நடந்து கொள்ளுவது சரியா என்று ஒருந் முறை அவனுடைய மனது கேட்டுக் கொண்டது. அவர்களுக்கு மத்தியில் பிறந்து அவர்களைப் போலவே தானும் வாழ்ந்திருப்பின் தனக்குள் அவ்வாறான எண்ணங்கள் எழுந்திருக்காது என்பதை நினைத்துக் கொண்டான்.

'எத்தனை வேகமாக தெளிவாக சிந்தித்தபோதும் ஒரு தவறைச் செய்வதற்கு முன்பாக ஒருவன் திருந்தி விடுவதில்லை. அவ்வாறே நானும் இருக்கிறேன். என்னால் யாரும் பாதிக்கப்படாது இருக்கும் வரையிலும் நான் செய்வது தவறில்லையே' என்றவாறு தன்னை மறுபடியும் தேற்றிக் கொண்டு அவளை முதலில் சந்தித்த இடத்தை நோக்கி நகர்ந்தான்.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு எவ்வளவோ முன்னால் தான் வந்து விட்டான் என்பது அவனுக்கு நன்றாகவே புரிந்தது. இருப்பினும், அவள் முன்னாலே வந்து தன்னைக் கடந்து சென்று விடலாகாது என்ற எண்ணம் அவனிடம் தீவிரமாக இருந்ததால் அவன் முன்னாலே வந்து நின்று கொண்டான்.

அவள் வருவதாகக் காணோம் .... அடிக்கடி கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ... காத்திருப்பதில் இல்லாத சுகம் வேறு எதில் இருக்கின்றது......? என்று சொல்லியவாறு மேலும் காத்திருந்தான்.

அவள் வருவதாகக் காணோம். பக்கத்தில் வந்து நின்ற அறுபது வயது மதிக்கத்தக்க தம்பதியர் வந்து நின்று இவனை ஒரு மாதிரியாகப் பார்த்தது புரிந்தது. பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் வந்து நின்று கொண்டு அவன் யாரை எதிர்பார்க்கிறான் என்பது போல அவர்களுடைய பார்வை இருந்தது. இருப்பினும் அவன் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை.

'ம் யார் பாத்து என்ன... என்னைய யார் என்று தெரியப் போகுதா அல்லது ... ஏன் நிக்கிறன் எண்டது விளங்கப் போகுதா' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அந்த இடத்தில் வந்த பஸ்ஸில் முண்டியடித்து ஏறிக் கொண்டு அவர்கள் இருவரும் சென்றுவிட்டார்கள். அப்பாடா.. அவர்களின் பார்வையில் இருந்து தப்பிவிட்டோம் என்று நினைத்தபோது பஸ் நடத்துநர் அவனைப் பார்த்துக் கூவத் தொடங்கினார்.

'முரசு மோட்டை... முரசு மோட்டை... ஐயா இந்த பஸ் மட்டும் தான்... அடுத்த பஸ் நாளைக்குக் காலமதான் ... முரசு மோட்டை... முரசு மோட்டை' என்று சத்தம் இட்டவாறே வலது கையை அசைத்துக் காட்டினார்.

'இதென்னடா அநியாயம்... முரசு மோட்டைக்குப் போகோணும் எண்டு நான் சொன்னனானே... ஏன் இப்பிடி மானத்த வாங்குறான்' என்று யோசித்தபடியே திரும்பி நின்றான் அவன்.

'முரசு மோட்டை.... முரசு மோட்டை... ஐயா சீட் இருக்கு ஏறுங்கோ.... முரசு மோட்டை... முரசு மோட்டை ' என்று மறுபடியும் கூவவும் சிரமப்பட்டு தலையைத் திருப்பாமல் எதிர்த்திசையில் பார்த்துக் கொண்டான். பேருந்து புறப்படும் சத்தத்தைக் கேட்ட பின்பாகவே அவன் முகத்தைத் திருப்பினான்.

'அப்பாடா .... ' என்றபடி திரும்பியவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். அது சரி இவ்வளவு நேரமாகியும் அவள் வருவதைக் காணோம் என்று மறுபடி சிந்தனை எழுந்தது. அவள் வரப் போகும் பாதையில் பார்வை பதிந்தது.

காலையில் அவசர அவசரமாகப் புறப்பட்டது அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. தன்னுடைய நண்பர் புறப்பட்டு வந்துவிடுவார்களே. தன்னை இவ்வாறு பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் வந்தது அவனுக்கு வெட்கம் வந்தது.

'ஐயோ காலையிலே அப்படிக் கதைத்தவர்கள். இப்படி நடுத் தெருவில் நான் நிற்பதைக் கண்டால் என்ன சொல்லுவார்கள்? தேவையில்லாமல் இவர்களிடம் இன்று மாட்டப் போகின்றேன்' என்று எண்ணியபோது அவள் வருவது தெரிந்தது.

'அப்பாடா வந்துவிட்டாள்...' என்ற சந்தோசத்துடன் மெதுவாக நகர்ந்தவாறு அவளை நோக்கி வந்தான். அவள் புன் முறுவல் செய்யவும், அவனும் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச்சைத் தொடங்கினான்.

ஏதேதோ சம்பந்தம் இல்லாமற் கதைகள் போய்க் கொண்டிருந்தது அவனுக்கே தெரிந்தது. அவனின் வணக்கத்தில் இருந்து அங்கு வந்த நேரம், நின்ற காரணம் என்று அனைத்திற்கும் முழுப் பொய்யைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

'எதுவாக இருந்தால் என்ன? .. நான் ஏதாவது சொல்ல வேண்டும்.. அவள் அதை ரசித்துக் கேட்க வேண்டும்.. அல்லது அவள் ரசிப்பதாக நான் நினைக்க வேண்டும்.. இதுதானே என்னுடைய நோக்கம்' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

பேச்சின் இடையில் 'நான் இந்தப் பாடசாலையிற் படிப்பிக்கின்றேன்….. தினமும் இந்த வழியாலேதான் வருகின்றேன்… வேளையோடு வேலைக்கு வருகின்றேன்… ' என்பதை அழுத்திச் சொல்லிக் கொண்டான். 'வேறு தூதுவர்களாக யாரையும் நியமிக்க வேண்டாமே' என்று மனதுக்குள் நினைத்தான்.

வேலைக்குப் போகும் அவசரத்தில் இருந்தவளை அரை குறை மனதுடன் அனுப்பிவிட்டு தான் பாடசாலைக்குள் நுழையும்போது தன்னுடைய இரு சக ஆசிரியர்களும் வருவதைக் கண்டான். ஒரிரு நிமிடங்களாற் தப்பிவிட்ட ஆனந்தம் அவனுக்குள் எழுந்தது.

# 13

அவர்கள் இருவருக்கும் இடையே தொடங்கிய எதிர்பாராத அறிமுகமும் அமைதியான சந்திப்பும் அவர்களிடையே நட்பை வளர்த்தன. அவன் தினமும் அதிகாலையில் படிப்பதற்கு எழும்புவதைப் போன்று அவள் வழியிற் சென்று தவம் கிடப்பதால் அவளுடன் சகஜமாகப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

அருகில் இருந்த ஒரு பாடசாலையில் அவனைப் போலவே புதிதாக நியமனம் பெற்று வந்தவள் என்பதை முதல் நாளிலே அவனிடம் தெரிவித்திருந்தாள். முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அவளின் பெற்றோரும் ஒரு தங்கையும் வன்னியில் வாழ்ந்து வந்தார்கள்.

சிறு வயதில் இருந்தே படிப்பில் கெட்டிக்காரியாக விளங்கிய அவளுக்கு பெற்றோரின் இறுதிக்காலத்தில் அவர்களை இருக்கவைத்துப் பராமரிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. தன்னுடைய குடும்பத்தில் ஆண் வாரிசுகள் இல்லாத காரணத்தால் தானே பொறுப்பாகப் படித்து முன்னேற வேண்டும் என்று எண்ணியிருந்தாள். அதுவும் நிலையான வருமானத்தைத் தரக்கூடிய ஒரு தொழிலே அவளின் தேடலாக இருந்தது.

அரசாங்க உத்தியோகம் ஒன்றில் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அவளுக்கு, ஆசிரியத் தொழிலுக்கான முதல் நியமனம் கிளிநொச்சியில் கிடைத்திருந்தது என்பதைச் சொன்னாள். பொதுவாக தூரப் பிரதேசத்திற்குச் சென்று வேலை செய்வதற்கு ஆசிரியர்கள் தயங்குவதால், புதிய நியமனத்தின் போது அவர்கள், வெவ்வேறு தூர இடங்களுக்கு அனுப்பப்படுவர். இது எல்லாத் திணைக்களத்து முகாமைத்துவத்திலும் காணப்படும், ஒரு பொதுவான நடைமுறை என்பதை அவர்கள் இருவருமே அறிந்து இருந்தார்கள்

அரச சேவையில் கட்டாயமாக இணைந்து கொள்ளவேண்டும் என்பதற்காக எப்பாடு பட்டும் அந்தப் பகுதிக்குச் சென்று வேலையைப் பொறுப்பேற்க ஒவ்வொருவருமே சிரத்தையுடனேயே இருப்பார்கள். அதனால் இப்படியான ஒரு நிபந்தனையைத் தெளிவாக அறிவித்தே யாவருக்கும் நியமனம் வழங்குவர்.

இதனால் வேலையே முக்கியம் என்ற எண்ணத்தில் பெரிதாக விருப்பம் இல்லாமலேயே அங்கே வந்தவர்கள்தான் அவர்கள் இருவருமே.

ஆனால் தங்கள் இருவரையும் அந்த இடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்த காலத்தை நினைத்துக் குதூகலம் அடைந்தனர். அவனின் இதமான பேச்சிலும், குழைவான அக்கறையான வாசகங்களிலும் அவள் தன்னை மறந்து அவனின் வார்த்தைகளை மிகவும் ரசிப்பவளாக இருந்தாள்.

தன்னை அவளுக்குப் பிடித்திருக்கிறது என்பதை நன்றாகவே புரிந்து கொண்டுவிட்ட அவனுக்கு, இருவரும் இதயம் திறந்து பேச வேண்டும் போல இருந்தது. ஆனாலும் அவளிடம் மனம் திறந்து பேசுவதற்கு முடிவதில்லை. அதைச் சொன்னால் அவள் தன்னுடன் கதைக்காமல் விட்டுவிடுவாளோ என்று பயந்தான்.

'ஆண்கள் எத்தனை வயதானாலும் இந்த விடயத்தில் பயந்தவர்களாகவே இருக்கிறார்களே என்று யோசித்தான். பெண்ணின் நிராகரிப்பு என்பதை அத்தனை சுலபத்தில் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. தன்னை விரும்பியே ஆகவேண்டும் என்று மறைமுகமாகக் கட்டாயப் படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

இது உண்மையில் அதீதமான காதலா அல்லது ஆண் என்ற அடக்கு முறையா? பரிசுத்தமான காதலாக இருப்பின் இவ்வாறு மலர் விட்டு மலர் தாவி, மலரைப் போலவே இருக்கும் புது மலரில் வந்து மொய்க்க ஆரம்பிக்குமா? என்று யோசித்தான்.

'என்னடா இது? ஆம்பிள எந்தக் காலத்தில இப்பிடி ஆழமாச் சிந்தித்து இருக்கிறான். அவசரப்பட்டு எடுத்துக் கவ்க்கிறதுனாலதான ஆம்பிள' என்று எப்பொழுதும் அவனைக் கலவரப் படுத்தும் மனசாட்சி சொல்லியது.

யார் எது சொன்னாலும் அவன் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில் அவனுக்கு எழுந்தது காதல். காதல் எழும்போது எந்த ஆணுமே புதியவனாகப் பிறந்து வருகின்றான். அவனுக்கு மனைவி இருக்கா இல்லையா என்று கவலைப்பட வேண்டியதில்லை என்று தன்னைத் தேற்றிக் கொண்டான்.

அவளுக்கும் தனக்குமான உறவு நெருக்கம் அடைந்து வருவதனால் தகுந்த ஒரு நேரத்தைப் பார்த்து அவளிடம் விருப்பத்தைச் சொல்லிவிடலாம் என்று நினைத்தான். இன்று அதிக நேரம் கதைத்துக் கொண்டு வந்தது நினைவுக்கு வந்தது. இவ்வாறாக ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திப் பார்ப்போமே என்று தனக்குள் யோசித்தான்.

அடுத்த வாரம் அவர்களுக்கு கருத்தரங்கு நடைபெற இருந்தது. அது முடிந்து வரும்போது கதைக்கலாமா என்று யோசித்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தவாறு கதைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கருத்தரங்கு முடிந்ததும் அவள் வேகமாகப் போய்விட்டாள்.

அவளது பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு தானும் வருவதாகச் சொல்லி இருந்ததில் அன்று விளையாட்டுப் போட்டி முடிவுற்றதும் அவளிடம் கதைப்பதற்கு எண்ணியிருந்தான். ஆனால் விளையாட்டுக்களை ஒழுங்கு படுத்துவதில் மும்முரமாக நின்ற காரணத்தினால் அன்று அவளுக்கு மூச்சு விடவும் நேரம் கிடைக்கவில்லை.

'பொழுது போகாமல் இருந்தால் அருகில் இருக்கும் கோயிலில் திருவிழா நடக்கின்றதே. அங்கே வாருங்கள் நல்ல நிகழ்ச்சிகள் போடுவார்கள். பாக்கலாம். லேட்டானால் நான் கொண்டு போய் வீட்டில் விடுகின்றேன்' என்று சொல்லிப் பார்த்தான். ஆனால் அவள் எந்த இடத்திற்கும் வருவதற்குப் பிரியப்படவில்லை.

'பின்னேரத்தில் கடைத் தெருவுக்குப் போய் வாற பழக்கம் இருக்கா? சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியில எங்கயும் போய் வாற பழக்கம் இருக்கா' என்றெல்லாம் அவன் கேட்டுப் பார்த்தான். புன்முறுவலுடன் சேர்ந்த மறுப்பே அவளிடம் இருந்து விடையாகக் கிடைத்தது.

இவ்வாறாக அவன் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பங்கள் தவறிக் கொண்டே வந்தபோதும் அவன் கலக்கம் அடையவில்லை. அவள் எங்கு போய்விடப் போகின்றாள்? இங்கேதான் இருக்கிறாள். என்றாவது ஒரு நாள் அவளிடம் சொல்லிவிடுவது என்று நினைத்தான்.

அன்று வேளையோடு நித்திரைக்குப் போனவனுக்கு நித்திரை வருவதாகத் தெரியவில்லை. அவளை நினைத்து ஏக்கத்துடன் படுத்திருந்தான். மனதில் எத்தனையோ கற்பனைகள் எழுந்தபோதும் எதுவும் நடைமுறையிற் சாத்தியமானதாக ஆகவில்லை.

அவளுடன் நெருங்கும் சந்தர்ப்பம் தட்டுப்பட்டுப் போவதால், தானும் வேறு சிந்தனைகள் இன்றி அதையே நினைத்துக் கொண்டிருப்பதும் நன்றாகவா இருக்கிறது என்று மனம் அலைக்கழிந்தது. அந்த சிந்தனையில் பாதி தூக்கமும் பாதி விழிப்புமாக அவனுக்குத் தெரிந்தது.

இரவு கட்டிலில் படுத்திருந்த படியே நிறைய நேரமாக அவளுடன் கதைத்ததை யோசித்துக் கொண்டு இருக்கும் போது, அவனின் வீட்டுச் சொந்தக்காரரின் மகன், அவனுக்கு வந்த ஒரு கடிதத்தைக் கொண்டு வ்நத அவனிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

ஆறுதலாகவே கடிதத்தைப் பிரித்தான். மனைவியிடம் இருந்து... அதைப் பார்த்ததும் அவனுக்கு ஏதோ தவறாக உறைத்தது. இந்த நாட்களில் அவளை நினைத்துப் பார்ப்பது குறைந்துவிட்டதே.... குற்ற உணர்வுடனே அதைப் பிரித்தான்.

'அன்புள்ள அத்தான்

நான் நலம் நலமறிய ஆவல். அத்தான் உங்களிடம் இருந்து கடிதம் வருவதில்லை. புதிய இடமும் பழக்கங்களும் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா? வேளா வேளைக்குச் சாப்பிடுகிறீர்களா? உங்கள் சௌகரியங்களைப் பற்றி சதா கவலையுடன் நான் இருக்கிறேன்.

அங்கே மாச் சாப்பாடுகள் பழ்க்கம் இல்லை என்று அத்தை சொன்னார். இரவில் சோறு சாப்பிட்டுப் பழகாதவர் நீங்கள். எப்படிச் சமாளிக்கிறீர்களோ என்று தெரியவில்லை. மரக்கறிகளும் கடும் விலை என்றும் மச்சச் சாப்பாட்டைக் காண்பது கஸ்டம் என்றும் சொல்லி அத்தை கவலைப்பட்டார். எனக்கும் கவலையாக இருந்தது. நீங்கள் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

நான் வெள்ளிக் கிழமைகளில் கோயிலுக்குப் போய்விட்டு அத்தையிடமும் சென்று வருகிறேன். நீங்கள் கடிதம் போடவில்லை என்று அவரும் சொன்னார். ஏன் அத்தான். நீங்கள் சிரமப்படுகிறீர்களா?

வேலையில் இருப்பது கடினமாக இருந்தால் உங்களை வந்துவிடும்படி அத்தை சொன்னார். இங்கே வந்து வியாபாரம் எதையும் செய்து கொள்ளலாம் என்று சொன்னார்.

அத்தான்... இரண்டு மாதங்களாகவே நான் சுகமில்லாமல் இருக்கிறேன்.. உடம்பு கூடிக் கொண்டு வருகிறது. எனக்குள் நிறைய மாற்றங்கள் தெரிகின்றன. வைத்தியரிடம் சென்று பார்த்ததில் குழந்தை உருவாகி இருக்கிறது என்று சொன்னார். அம்மாவும் அத்தையும் மிகவும் சந்தோசப்பட்டார்கள்.

நீங்கள் அருகில் இல்லாததுதான் எல்லோருக்கும் கவலையாக இருக்கின்றது. நீங்கள் எப்போது வருவீர்கள். ரெண்டு மாதத்திற்கு ஒரு கசுவல் லீவு எடுத்து சனி, ஞாயிறுடன் சேர்த்து வந்துவிட்டுப் போகலாம் என்று மாமா சொன்னார். ஒரு முறை வாங்களேன். உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது.

எப்போது வருவீர்கள்?
இப்படிக்கு
உங்கள் இனியவள்'

வாசித்துக் கொண்டிருக்கும் போதே, திடீரென உள்ளம் கிளர்ந்தெழுந்தது. தான் அப்பாவாகப் போகிறேன் என்ற எண்ணம் அவனை உற்சாகப்படுத்தியது. உடனே, தன் மனைவியைப் பார்க்கவேண்டும் போல இருந்தது.

ஆனால் எப்படி?...

இந்தப் பாதையைக் கடந்து யாழ்ப்பாணத்திற்கு அவ்வளவு சுலபமாகப் போக முடியாதே. ஏதாவது பிரச்சினையினால் பாதை முடுப்பட்டால், தன்னுடைய வேலையில் பிரச்சினை ஏற்பட்டுவிடுமே...

அதைவிடவும் ஒரு காரணம் அவனிடம் இருந்தது.

இங்கே இந்தப் பெண்ணுடன் அரும்பியுள்ள அவனின் காதலை அத்தனை சுலபமாக இழந்து விடவும் விரும்பவில்லை. இதுவரை நீங்கள் திருமணம் ஆனவரா? என்று அவள் கேட்டிராததனால், அவனுக்குள் எழுந்த பலமான நம்பிக்கையில் அவளைத் தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இருந்தது.

இளம் வயதில் ஏக்கத்தை உண்டாக்கிவிட்டுப் பிரிந்து போன தன் காதலியைப் போலவே ஒருத்தியைப் பார்த்த பின்பும் சுலபமாக அவளை விட்டுக் கொடுக்க அவனின் மனம் இசையவில்லை.

அதில் என்ன நியாயம் இருக்கிறது? திருமணம் செய்த பின்பும் அவளைப் போல ஒருத்தி என்பது எந்த அளவுக்கு வேண்டப்பட்ட விடயம் என்பதை அவனுடைய மனம் தெளிவாகச் சொல்லவில்லை.

எதற்காக அந்தப் பெண்ணின் கவனத்தைக் கவரவேண்டும் என்ற விடயத்திற்கு அவனால் உறுதியாகப் பதிலளிக்க முடியவில்லை. ஆனால் அதுவே வேண்டும் என்று பொல்லாத மனம் சொல்லி நின்றது. சாதாரணமான ஆண்கள் என்ற வகைப்பாட்டுக்குள் தானும் வந்துவிட்டதைப் போன்று அவனுக்கு இருந்தது.

மனைவிக்கு முடியாமல் இருக்கிறாள் என்ற எண்ணம் அவனைக் கலவரப்படுத்தவே செய்தது. இந்த நேரத்தில் தான் அருகில் இருக்கவேண்டும் என்ற அவசியமும் அவனுக்குப் புரிந்தது. இருந்தாலும் தன்னுடைய மனைவி அவளுடைய அம்மா வீட்டில் தானே இருக்கிறாள். அவளைத் தாய் கவனித்துக் கொள்ளுவார் என்ற நம்பிக்கையுடன் தாளை எடுத்துக் கடிதத்தை வரைந்தான் அவன்.

தனக்கே உரியதான கற்பனைத் திறனால், தன்னுடைய காதலை அள்ளிக் கொட்டித் தெளித்து ஒரு கடிதத்தை வரைந்தான். வேலை காரணமாகவும் பாதைப் பிரச்சினையினாலும் தற்பொழுது வர முடியாது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு உருக்கமாக எழுதினான். குழந்தை பிறக்கும் போது நிச்சயமாக அருகில் இருப்பதாகவும், ஆயிரம் முத்தங்களைக் குழந்தைக்கும் அவளுக்கும் வழங்குவதாகவும் சொல்லிக் கடிதத்தை முடித்தான்.

ஒரு விதமான நெருடல் மனதில் எழத்தான் செய்தது.

இத்தனை காலமும் அவளைப் பற்றிய சிந்தனை இல்லாது இருந்திருக்கின்றேன். இந்தப் பெண்ணை விழுத்துவது பற்றியே கனவிலும் நனவிலும் எண்ணியிருக்கிறேன். ஆனால் அவனின் மனைவியும் அம்மாவும் அவனை நினைத்தே உருகுகின்றார்கள்.

அரசாங்க வேலையும் வேண்டாம். நீ உங்கு இருந்து துன்பப்படாதே. எங்களுடன் வந்துவிடு என்று அழைத்து நிற்கும் அவர்களை நினைக்கும்போது அவனுக்குள் குற்ற உணர்வு எழுந்தது. தன்னை இத்தனை நேசிக்கும் நம்பும் நல்லவர்களிடம் உண்மையாக நடக்க முடியவில்லையே என்று கவலைப்பட்டான்.

'அன்பு மனைவியிடம், அதுவும் இத்தனை வயது வித்தியாசத்தில் தன்னை மணந்து கொண்டவளிடம், அதுவும் தன்னுடைய கடந்த காலத்தை நன்கு அறிந்திருந்தும் தன்னை முழுமையாக நேசித்தவளிடம் பெரிய பொய்யைச் சொல்லுகிறேனே. என்ற கவலை வராமல் இருக்கவில்லை.

பொய்யைக் கலந்து அவன் எழுதிவிட்ட கடிதமும் அவனைப் பார்த்து சிரித்தது.

மனைவி என்ற நிலையில் அவள் இருக்கும்போது, இன்னொரு பெண்ணை அடைய நினைக்கலாமா என்ற கவலை எழுந்தது.

இந்தப் புறம் பார்த்தால் படித்து ஒரு ஆசிரியையாக இருப்பவள் மாணவர்களை வழிநடத்துபவள் தன்னைக் கண்டுபிடித்து விட மாட்டாளா? அப்படித் தன்னுடைய இரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டால் என்னவாகுமோ? அதைவிடவும் தன்னுடன் வசிக்கும் சக ஆசிரியர்களுக்குத் தெரிந்தால் என்ன ஆகும் என்ற அச்சமும் எழுந்தது.

ஆனாலும் ஆசை அன்பையும் அறிவையும் வென்றுவிட்டது.

நான் யாரையும் கைவிடப் போவதில்லை. ஒருவரிடத்து மற்றவரைப் பற்றிச் சொல்லிக் கவலைப்படுத்தப் போவதுமில்லை. என் இரு பெண்களையும் கண்களைப் போல காத்துக் கொள்வேன் என்று மனத்தில் திடமாக நினைத்துக் கொண்டான் அவன்.

கடிதத்தை உறையொன்றில் இட்டு முத்திரையை ஒட்டி கவனமாக எடுத்து டயறிக்குள் வைத்தான்.

நாளை அவளைச் சந்திக்கும் போது என்ன கதைப்பது என்பதை மறுபடியும் ஒரு தடவை ஞாபகப்படுத்திக் கொண்டான்.



# 14

யன்னலின் ஊடாக இதமான இயற்கைக் காற்று அவளின் அனுமதியின்றியே அந்த இடத்தில் வியாபித்தது. அவளின் கையில் இருந்த புத்தகம் தானாகவே பக்கங்களைத் தட்டிக்கொண்டு சென்றபோது புத்தகத்தை வெறித்தபடி பார்த்தவாறே அவள் உணர்ச்சியற்று இருந்தாள்.

யதார்த்தம் என்று தெளிவாகத் தெரிந்தபோதும் சில விடயங்களைக் கதைகளிலேனும் ஏற்றுக் கொள்ளுவதற்கு எங்கள் மனம் ஒப்புவதில்லை. அதுவும் கடும் கட்டுப்பாட்டைக் கைக் கொண்டிருக்கும் எங்கள் சமுதாயத்தில் பல விடயங்களைப் பெண்கள் தெரிந்து கொள்ளுவதற்கு அனுமதிக்கப் படுவதில்லை.

ரகசியத்தைக் காப்பவர்கள் என்ற போர்வையில் ஆண்களும், எதையும் கிளறாமல் வருவதை எதிர்கொண்டு புன்னகைப்பவர்கள் என்ற போர்வையிற் பெண்களும் வாழ்ந்து முடித்து விடுகின்றனர்.

வாழ்க்கையின் போது ஆடும் அத்தனை ஆட்டங்களையும் அவமானங்களையும் இறப்பு மறைத்து விடுகின்றது. ஒருவனை வைத்து மூடும் குழிக்குள்ளே அவனுடைய ஆசைகள், வேஷங்கள், அழுக்குகள் அனைத்தும் போட்டு மூடப்பட்டு விடுகின்றன. அந்த உடல் பஞ்ச பூதங்களுக்கும் பங்கிடப்படும்போது பாவங்களும் மறைந்து விடுகின்றன என்று நினைக்கிறார்களா?



காதல் என்பதும் பல இடங்களில் பாவம் என்ற வரையறைக்குள் வந்துவிடுகின்றதா? அல்லது காதலின் தோல்வியை மட்டுமே காவியமாக்கி அவற்றை ஊடுருவாமல் கட்டுப்படுத்துவதற்கு நினைக்கிறார்களா?

ஆணோ பெண்ணோ வாழ்க்கையில் முதன்முதலாக காதல் வசப்பட்டதை அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட மாட்டார்கள் என்பது உண்மை. அதுவும் பள்ளிப்பருவத்தில் ஏற்படும் கவர்ச்சி, பாடத்தைப் போலவே பசுமரத்தாணி அன்ன மனதிற் பதிந்து விடுகின்றது.

காதல் என்பதும் தம்மில் ஒத்த வயதுடைய மறுபாலரைக் கண்டதும் ஏற்படும் ஈர்ப்பு என்பது தவறான ஒரு விடயம் அல்ல. ஆனால் வாழ்க்கையில் ஆழமாகக் கால்களை ஊன்றிவிடாத நிலையில் காதலித்துப் பார்ப்போம் என்று நினைப்பது ஆரோக்கியமானது அல்ல.

அறிவு தெரிந்த நாள் முதலாகவே அந்த ஈர்ப்பு எம்மிடம் எழுந்து விடுகின்றது. நான்கு ஐந்து வயதுக் குழந்தைகளிடம் கூட அவர்களுடன் படிக்கும் பிள்ளைகளைப் பற்றிச் சொல்லிப்பாருங்கள். வெட்கப்பட்டுச் சிரித்தும் போட்டியாகப் பேசியும் அவர்களின் உள்ளத்தை வெளிப்படுத்துவார்கள்.

அவ்வாறாக ஏற்படும் கவர்ச்சி வாழ்க்கையில் தொடர்ந்து வரும் ஏனைய தேடல்களின் காரணமாக மறக்கப்பட்டோ அல்லது மறைக்கப்பட்டோ இருக்குமாயின் அதனால் தீங்கு கிடையாது. ஆனால் வாழ்க்கை முழுவதுமாக அதை மனதில் வைத்திருத்தல் கூடாது.

அப்படிப்பட்டவர்கள் பழையவர்களைக் காணும்போது, அல்லது அவர்கள் துயரப்படுவதாகக் கேள்விப்படும்போது, தம் நிலைமையை மறந்து அவர்களின் கண்களைத் துடைத்துவிடவே ஓடிவருவர். அவர்களைத் தடுக்க முடியாது.

தன்னுடைய கதையை எழுதியிருக்கும் அப்பா, தான் பிடிபடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, சில சம்பவங்களை மாற்றியும் கற்பனையால் மெருகூட்டியும் எழுதியிருக்கிறார் என்பது பிரியந்திக்குப் புரிந்தது.

ஆனால் அம்மாவை மறந்துவிட்டு, அதுவும் தன்னைச் சுமந்து கொண்டிருக்கும் வேளையில், அவரைப் பார்க்கவும் வராமல் அப்பா செய்து கொண்டிருந்த காரியம் அவளுக்குக் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது.

அப்பாவின் இந்தப் பக்கம் தனக்கும் அம்மாவுக்கும் தெரியாமலேயே போய்விட்டதே என்று வருந்தினாள்.

அதனாலே தானோ தன்னுடைய காதலின் புனிதத்தைப் புரிந்து கொள்ளாமல் தங்களைப் பிரிக்க நினைக்கிறாரோ என்றும் யோசனை எழுந்தது.

தன் அப்பாவைப்பற்றிய நிழலுரு படிப்படியாகத் தேய்வடைவதைப் பார்த்தபோது அவளுக்குத் துன்பமாக இருந்தது. இந்த இக்கட்டான நிலைமையில் இருந்து யார் காப்பாற்றுவார்கள் என்று யோசித்தாள்.

மூடிக்கிடந்த புத்தகத்தை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டு நின்றவளுக்கு மாடிப்படியில் ஏறி யாரோ வருவது போல தெரியவும் கால்களை நீட்டிக் கொண்டு மறுபுறமாகத் திரும்பிப் படுத்தாள்.

அவள் எதிர்பாத்ததைப் போலவே கதவு திறபடும் சத்தம் கேட்கும்போது கண்கள் இறுக்கமாகவே மூடிக் கொள்கின்றன. அப்பாவும் அம்மாவும் தான் உள்ளே வந்தார்கள என்பது அவர்களின் கதையில் தெரிந்தது.

அவள் அன்று முழுவதும் மாடியிலேயே இருக்கிறாள் என்பதை அம்மா சொல்லியிருக்க வேண்டும். அவள் தளர்வாக இருந்ததாக சொன்னபடியால் அவளைப் பார்த்துவிட்டுப் போக வந்திருக்கிறாரா என்று நினைத்துக் கொண்டாள்.

அவர்கள் இருவரும் தனக்கு அருகாமையில் நிற்பது தெரிந்தது. அவர்களை எப்படியும் தவிர்க்க வேண்டும் என்று நினைத்தாள். தன் உடம்பில் எந்தவொரு அசைவையும் காட்டிக் கொள்ளக்கூடாது என்று முன்னெச்சரிக்கையுடன் அசையாமற் படுத்துக் கிடந்தாள்.

அம்மாவும் அப்பாவும் அவளை அமைதியாக நோக்குவது மூடிக் கொண்டிருந்த இமைகளின் மேலாகவே தெளிவாகத் தெரிந்தது. அவளின் மௌனம் அவர்களைக் கலவரப் படுத்தியிருந்ததை அவளும் உணர முடிந்தது.

“நித்திரையா” என்று அம்மாவிடம் கேட்ட அப்பா அவளின் நெற்றியில் கையை வைத்துப் பார்க்கிறார். நெற்றியில் அவரின் கை பட்டபோது நெருப்புச் சுடுவதைப் போன்று இருந்தது. அவர் தலையை ஆட்டிவிட்டுக் கையை எடுத்தார்.

“காச்சல் இல்லை. களைச்சுப் போயிருக்கிறாள் நித்திர கொண்டு எழும்பட்டும். அவளத் தொந்திரவு பண்ணாம் வெளியில வா” என்று சொல்லி அம்மாவையும் கூட்டிக் கொண்டு போய்விட்டார்.

கதவு சாத்தப்பட்ட சத்தம் கேட்டதும் சடாரென எழுந்து உட்கார்ந்தாள் பிரியந்தி.

“நித்திரயா?. நாங்க இவ்வளவு காலமும் நித்திரயாத்தான் அப்பா இருந்திட்டம். இனியும் எங்கள நித்திரயாக்க வேண்டாம். நாங்க முழிச்சிட்டம் நீங்க இனித் தப்ப முடியாது“ என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவளுக்கு உலகமே இருட்டிக் கொண்டு வருவதாகத் தெரிந்தது. சமூகத்தில் அத்தனை பெரிய மனிதர், ஒரு எழுத்தாளர். அவருடைய வாழ்க்கையின் இருள் படிந்த பக்கங்களைத் தாங்க முடியாமல் அல்லவா இருக்கின்றது.

உதாரண புருஷர் என்று சொல்லப்படுபவர் ஒரு சாதாரணமான மனிதனாகவாவது இல்லையே என்ற எண்ணம் அவளைக் குடைந்தது.

பிழை செய்தவர் யாராக இருந்தாலும் என்ன? அவர்களைத் தட்டிக் கேட்டுத்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வாழ்க்கையிலே திருந்தவே மாட்டார்கள் என்று கோபம் எழுந்தது.

இன்னும் வாசித்துக் கொண்டு போனால் என்னென்ன குப்பைகளை எல்லாம் கிளற வேண்டி வருமோ என்றும் சலிப்பு ஏற்பட்டது.

ஒரு ஏழை வீட்டில் சாதாரணமான ஒரு அப்பாவுக்குப் பிள்ளையாகப் பிறந்திருந்தாலும் இப்படிக் கறைபடாமல் வாழ்ந்திருக்கலாமே என்ற நினைப்பும் எழுந்தது.

அந்தப் புத்தகத்தை மேற்கொண்டு வாசிக்க முடியாமல் கட்டிலுக்குக் கீழே போட்டு வைத்தாள். அவரின் அறைக்குட் சென்று வேறு ஏதாவது நல்ல புத்தகமாக எடுத்துக் கொள்வோம் என்ற எண்ணத்தில் அவரின் அறையை நோக்கி நடந்தாள்.

ஏற்கெனவே வந்து போயிருந்த இடமாதலால் அங்கு தேடுவதற்கு அதிக நேரம் செல்லவில்லை. சிறு தொகுப்புகளாக இருந்த கட்டுரைத் தொகுப்புகளை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டவாறு வந்தாள்.

கண்ணதாசனின் ‘அர்த்தமுள்ள இந்து மதம்’ பாகம் 1, பாகம் 2 என்றவாறு பத்துப் பாகமும் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது. அதற்கு அப்பால் இருந்த தொகுப்பை எடுத்தாள். ‘மனிதன் என்பவன்...’ – கண்ணபிரான் என்று போடப்பட்ட புத்தகத்தை எடுத்தாள்.

"துன்பங்கள் தம்முடைய அளவைத்தாண்டிப் போய் ஒரு மனிதனைத் தாக்கும்போது, "கட்டுண்டோம். பொறுத்திருப்போம்" என்று அவர்கள் சொல்வதைக் கேட்டிருக்கின்றோம்.

கட்டா?. யார் கட்டினார்கள். எப்போது கட்டினார்கள்? என்று நாம் யோசித்திருக்கிறோம்.

"எல்லாம் அளந்த அளவுதான்." என்று அம்மா சொல்லுவார்.

அளந்ததா? யார் அளந்தார்கள்? எங்கே? எப்போது? எப்படி அளந்தார்கள்? என்றெல்லாம் மனம் ஆராய்ந்து கொண்டேயிருந்தது.

என் ஆராய்ச்சிக்கு முடிவு இப்போது கிடைத்து விட்டது. யார் சொல்லியிருப்பார்கள்? என்று நீங்கள் யோசிப்பது புரிகின்றது.

அனுபவம் தான். அது சொல்லிக் கொடுக்கும் பாடத்தை, வேறு யாரும் சொல்லிவிட முடியாது என்பது எமது மூதாதையர் எமக்குச் சொல்லிக் கொடுத்ததுதானே

மெத்தச் சரி. அறிவித்தாலன்றி அறியமாட்டாதது ஆன்மா. இந்த ஆன்மாவுக்கு ஒரு விடயம் தெரிய வேண்டும் எனின் படித்துத் தெரிய வேண்டும். அல்லது பட்டுத் தெரிய வேண்டும்.

இந்த 'பட்டுத்' தெரிதல் விடயத்திலே தான் இந்த அனுபவம் என்ற மோசமான ஆசிரியர் வந்து சேர்ந்து கொள்கிறார்.

ஆம். இது மோசமான ஆசிரியர் தான். பாடத்தைச் சொல்லிக் கொடுத்து ரியூட்டோரியல் வகுப்பு வைத்து, மாதிரிப் பரீட்சையெல்லாம் வைக்கும் ஆசிரியரையல்லவா நல்ல ஆசிரியர் என்று சொல்லுவோம்.

ஆனால் அனுபவம் என்ற ஆசிரியர், பாடத்தைச் சொல்லிக் கொடுக்கும் முன்பேயல்லவா பரீட்சையை வைத்து விடுகின்றார்!

அறிவித்தாலேயன்றி, அறியமாட்டாதனவென இந்த ஆத்மாக்களுக்கு ஒவ்வொரு கட்டத்திலும் குருவானவர் தேவைப்படுகின்றார் என்பது உண்மைதானே.

அறிவிக்காமலே அறியக்கூடிய தன்மை எமக்கில்லையா? அப்படியானால் பகுத்தறிவு என்பது அந்த அறிவு அல்லவா என்று கேட்கின்றீர்களா?

இல்லை.என்பது தான் உண்மை. முப்பொருட்கள் என்று விதிக்கப்பட்டவைகளில் பதி என்பது பரம்பொருளைக்கு குறிக்கும்.

பசு என்பது ஆன்மாக்களைக் குறிக்கும். ஆன்மாக்களை இயல்பாகவே பீடித்துக் கொண்டிருக்கும் மலங்களை பாசம் என்று சொல்வார்கள்.

அறிவிக்காமலே அறிந்து கொள்ளக்கூடிய சிறப்பியல்பினைப் பதியும், அறிவித்தாலும் அறிய மாட்டாதனவாக பாசமும் இருக்கும்.

இதிலே பசு என்பதே மனிதனுடைய மூலத் தோற்றமாகும். இவர்கள் பிறப்பிலிருந்தே பலவற்றையும் ஏனையோர் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இறைவனை தினமும் நினைத்தொழுகுபவர்கள், உலக பந்தங்களைத் துறந்தவர்கள் முக்காலமும் உணர்ந்த ஞானிகளாக இருக்கின்றார்கள் என்பதும் உண்மை. இவர்களைத் திரிஞானிகள் என்றும் சொல்லுவார்கள்.

எமக்கு, எம்முடைய இறந்த காலமும் நிகழ்காலமும் தெரியும். எம்மைச் சுற்றியிருப்பவர்களின் நிகழ்காலம் தெரியும்.

ஆனால் திரிஞானிகளுக்கோ, யாருடையதும் முக்காலமும் தெரியும். அந்த முக்காலத்தையும் உணர்த்துவது ஆன்மாவுக்கு மிஞ்சிய அறிவாகும்.

ஆனாலும் பகுத்தறிவு என்ற விடயத்தைக் கொண்டு பல்வேறு விடயங்களையும் ஊகித்துக் கொள்கிறான் மனிதன்.

இதுவும் ஏற்கெனவே வழங்கப்பட்ட பல்வேறு விடயத்திலுமான தரவுகளின் பிரயோகமே அன்றி ஞானம் கிடையாது.

இதற்கு ஒரு சிறிய உதாரணத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் நேரிலே பார்த்திராத ஒருவரை அவரின் குரலை வைத்தோ அல்லது வேறு விடயங்களை வைத்தோ அவரைச் சந்திக்கும்போது நாம் கண்டுபிடித்துவிடுகின்றோம். இது பகுத்தறிவாகும்.

ஆனால் அவரைப் பற்றிய தகவல்களை அவரோ அல்லது வேறு யாருமோ சொன்னால் மட்டுமே நாம் புரிந்து கொள்ள முடியும். இது தான் அந்த 'அறியாமை' என்பதாகும்.

இதிலே மனிதனால் உருவாக்கப்படும் கணனி என்ற எந்திரத்திற்கும் இயற்கையாக எதையும் உணர்ந்து கொள்ளும் தன்மை கிடையாது.

மனிதனைப் போல பகுத்தறிவைப் பாவிக்கும் தன்மையும் கிடையாது. அது செயற்கை அறிவாளி (artificial intelligence) என்று சொல்லப்படும்.

ஆக கணனியிலும் நாம் அறிவு கூடியவர்கள் என்று சொல்லுவதிற் பெருமையடைகின்றேம்.

ஆனால் முக்காலமும் உணர்ந்து கொள்ளும் ஆற்றலும், பதியைப் போல எமக்கு இருப்பதில்லை.

ஆனால் பதியைப்போலவே பசு, பாசம் இவைகளும் அழிவில்லாதவை என்பது இந்து மக்களின் கருத்தாகும்.

எப்படி இதை ஏற்றுக் கொள்ள முடியும். உலகிற் தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் இறந்து தானே போகிறது? என்று நீங்கள் கேட்பது எனக்குத் தெளிவாகவே கேட்கின்றது.

அது உயிரின் மரணம் அல்ல. உடலைப் பற்றி இருக்கும் காற்று உடலை விட்டு வெளியேறுவதாகும். இதுதான் ஆன்மா எனப்படுகின்றது. இதற்கு அழிவே கிடையாது.

'மானுடன் ஆன்மா மரணம் என்தாது
மறுபடி பிறந்திருக்கும்'

என்ற வரிகள் மூலம் தான் வாழ்ந்த உடலை விட்டு வெளியேறும் ஆன்மா மறுபடியும் பிறவி எடுக்கும்.

அதுவும் புதுப்பிறவிதான் அந்தப் பிறவியிலுமே, அறிவித்தாலேயன்றி அறியமாட்டாததாக இருக்கும்.

ஆனால் தொடரும் பிறவிகளின் பாவ புண்ணியக் கணக்கு வலு கவனமாகவே இறைவனால் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்.

அதன்படியே மறுபிறவி வாழ்க்கை, வசதி, நோக்கம் அனைத்தும் அமைந்திருக்கும் என்பதும் சொல்லப்படுகின்றது."

வாசிக்கும்போது விறுவிறுப்பாக இருந்தபோதும் அதன் பொருளை எளிதாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. மறுபடியும் மறுபடியும் வாசித்துப் பார்த்தாள். தெளிவு உருவாவதைப் போன்று இருந்தது. இருப்பினும் மனம் மாறிக் கொண்டே இருந்தது.

நீண்ட நேர குழப்பத்தின் பின் ஒருவாறு தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டாள். ஒருவருமே அறிந்திடாத இத்தனை பிழைகளைக் கதையில் கொண்டு வருகிறார் என்றால் இளைய தலைமுறையினரிடம் இருக்கும் அக்கறையினால் அல்லவா?. அப்படி என்னதான் நடந்திருக்கும் என்பதைத் தெரிந்து கொள்வோமே என்ற எண்ணம் எழுந்தது.

எதற்கும் புத்தகத்தை முழுமையாக வாசித்து முடிப்போம் என்ற எண்ணத்துடனேயே அறைக்குள் நுழைந்து கட்டிலுக்குக் கீழே போடப்பட்ட புத்தகத்தைப் எடுத்து விட்ட இடத்திற்கு வருகின்றாள்.

# 15

பதிவாகச் சென்று கொண்டிருந்த விமானம் ஒன்றின் இரைச்சலில் நித்திரை விட்டெழுந்தான் அவன். பக்கத்திலே வெடிச் சத்தம் கேட்டாலும் எழும்பாமல் படுக்கும் அவனுக்கு இந்நாட்களில் சிறிய சத்தத்திற்கு நித்திரை கலைந்து விடுவதுண்டு.

அன்று அந்த இடத்தில் அவன் மட்டுமே இருந்தான். மற்றைய இரு ஆசிரியர்களும் மூன்று கிழமைகளுக்கு வேறு பாடசாலைக்குத் தற்காலிக இடம்மாற்றத்திற் சென்று விட்டபடியால் அந்த இடத்தில் அவன் தனிமையில் இருந்தான்.

தன்னுடைய சுதந்திரத்திற்குத் தனிமை உறுதுணையாக இருக்கும் என்று அவன் விரும்பினான். படிப்படியாகத் தான் செய்யும் காரியங்கள், மற்றையவர்களின் கண்களிலும் கருத்திலும் பட்டுவிடுமோ என்ற பயம் இருந்தது.

இப்பொழுது அதைப் பற்றி சிந்திக்க வேண்டியதில்லை. இந்த இடத்தின் தனிமையில் தான் எவ்வாறும் நடந்து கொள்ளலாம் என்று நினைத்தான். ஆறுதலாக எழுந்து வந்து வெளியில் பார்த்தான். இப்பொழுதெல்லாம் அடிக்கடி இப்படிச் செய்கிறேனே என்று நினைத்தான்.

வழக்கமான இயற்கையை ரசிப்பதற்கு அவனுக்கு மனம் இருக்கவில்லை. வெளியில் தெருவுக்கு இறங்கிப் போய்விட்டு வரலாம் என்ற எண்ணத்துடன் சேட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு செருப்பைக் கொழுவியபடி வந்தான். அவனுக்கு முன்பாக வீட்டின் சொந்தக்காரர் வந்தார்.

"என்ன தம்பி வேளைக்கே எழும்பி விட்டீங்க போல. இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமதானே படுத்துப் பிறகு எழும்பியிருக்கலாமே" என்றவாறு அவர் சிரித்தார்.

"ஓம் ஐயா.. புழுக்கமாக இருந்துது. அதுதான் வெளியே போய் வரலாம் எண்டு வந்தன்" என்று பெரிய பொய்யைச் சொல்லியபோது நாக்கைக் கடித்துக் கொண்டான். அந்த நேரத்தில் வேறு எதையும் சொல்ல முடியவில்லை.

"அப்பிடியா.. நான் தோட்டத்துக்குப் போறன். இங்க பக்கத்திலதான் இருக்கு. நீங்களும் வேணுமிண்டா அதப் பாத்துப் போகலாம்" என்று அவர் சொல்லவும் ஏதோ நினைத்தவனாக அவருடன் சேர்ந்து புறப்பட்டான்.

கதைத்துக் கொண்டபடி வேகமாக நடந்து வந்தார்கள். புழுக்கம் என்று சொன்னவனுக்கு கால்கள் விறைத்ததுவிடும் போல இருந்தது. அவரின் நடைக்கு ஈடுகொடுத்தவாறு நடந்து வந்தவனுக்குக் கீழ் மூச்சு வாங்கியது.

அந்த வயதிலும் களைக்காமல் வேகமாக நடந்து வந்தவரை நோக்கினான். அவர்களின் பழக்க வழக்கங்களும் பயிற்சிகளும் அவ்வாறு திடகாத்திரமாக அவரை வைத்திருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டான்.

அவரின் தோட்டத்திற்குள் நுழைந்த நேரத்திலும் பொழுது நன்றாக விடிந்து விடவில்லை. இருளை முற்றாக விலக்காத பொழுதும் அந்த இடத்தின் பசுமையைக் காட்டத் தவறவில்லை. ஒவ்வொரு பயிராகப் பார்த்தபடி அவன் வந்து கொண்டிருந்தான்.

முன்புறமாகக் கத்தரிச் செடியில் காய்த்துக் கிடந்த கத்தரிக்காய்கள் அவனை வரவேற்றன. சிறிய தண்டின் தாங்கியிருந்த அத்தனை பெரிய காய்களைக் கண்டபோது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. மருந்து பாவிக்காமலே எவ்வாறு இப்படி வளத்தெடுக்கிறார்கள் என்று திகைத்தான்.

அவரிடம் கேட்க வேண்டும் என்று திரும்பியபோது அவர் தொலைவில் இருந்த மிளகாய்ச் செடிக்குள் கை வைத்து களை பிடுங்கிக் கொண்டிருந்தார். பசளை போடும்போது களைகளை விலக்கிவிடுவது சிறந்தது. ஏனெனில் சத்துக்களை ஏனையவை உறிஞ்ச ஆரம்பித்தால் பயிர்களுக்கு வேண்டிய போசணை கிடைக்காதுவிடும் என்று சொன்னார்.

அவன் தானும் கையை வைத்து அவற்றைப் பிடுங்க ஆரம்பித்தான். பத்து பதினைந்து நிமிடங்களில் இந்த இடம் களையற்றது ஆகிவிட்டது. அப்படியே தக்காளிச் செடிகள் இருக்கும் இடத்திற்கு வந்தார்கள்.

தக்காளி நன்றாகப் பழுத்து தொங்கிக் கொண்டு இருந்தது. கையில் கொண்டு வந்திருந்த கூடைக்குள் அவற்றைப் பறித்துப் போடத் தொடங்கினார் அவர். அவனும் கைகளைக் கிணற்று வாளியில் இருந்த தண்ணீரிற் கழுவிவிட்டு வந்து ஆயத் தொடங்கினான்.

நன்கு பழுத்திருந்த தக்காளிப் பழங்கள் சில கீழே சிதறி வீணாகிவிட்டன. அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. கவலையுடன் அவற்றைப் பொறுக்கத் தொடங்கினான்.

"அது பரவாயில்ல தம்பி. போகட்டும் அந்த எருக்கிடங்கில் கொண்டு போய்ப் போட்டுவிடுவோம்" என்று சொல்லி அவர் காட்டிய இடத்திற்கு அவற்றைத் தூக்கிக் கொண்டு வந்தான் அவன். உதிர்ந்த இலைகள், தண்டுகள், அழுகிய மரக்கறிகள் என்பவைற்றைக் கொண்டதாக இருந்தது அந்தக் கிடங்கு. ஒரு புறம் வேப்பம் இலைகளைக் கொண்டு வந்து போட்டிருந்தார்கள்."

"ஓ இதுதான் சேதனப் பசளை செய்யும் இடமா?" என்று அவன் தன்னைத்தான் கேட்டுக் கொண்டான். அந்தப் பெரிய வளவின் ஒரு புறத்தில் ஓரளவுக்கு வெட்டிய கிடங்குக்குள் இவ்வாறு சேதனக் கழிவுகளைக் கொண்டு வந்து சேர்த்து வெட்டிப் பதப்படுத்தி நீர் கலந்து எருவை உருவாக்கிக் கொள்கின்றார்கள் என்பது விளங்கியது. அவர்களின் வாழ்க்கையில் அனைத்தும் இயற்கையோடு ஒட்டியதாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

அடுத்து கால்நடைத் தொழுவம் நோக்கி அவர் செல்லவும் அவனும் பின்னாலே சென்றான். அங்கு கட்டியிருந்த கன்றினை அவிழ்த்து மாட்டுக்கு ஊட்டச் செய்துவிட்டுப் பாலைக் கறக்கத் தொடங்கினார். சற்றுத் தொலைவில் நின்றவாறு பூந்தோட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தான் அவன். இருட்டு முழுவதுமாக விலகி வெளிச்சம் வர ஆரம்பித்தது.

பால் கறந்து முடிவடைந்ததும் மாடுகளை அவிழ்த்து மேய்ச்சலுக்கு அனுப்பிவிட்டு தொழுவத்தை சுத்தப் படுத்தத் தொடங்கினார் அவர். அவன் செய்ய முன்வந்த உதவிகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. பூசைக்குத் தேவையான மலர்களைப் பறித்து வைக்குமாறு சொல்லிவிட்டு அவர் துப்புரவாக்கத் தொடங்கினார்.

காலையில் இருந்து வேலை செய்து கொண்டிருந்ததால் அவனுக்குப் பசியெடுக்கத் தொடங்கியது. அவர் கறந்த பாலைக் கொண்டு செல்வதற்கு வந்திருந்த அவருடைய மகன் கஞ்சி கொண்டு வந்திருந்தான். அதைக் குடிக்கும்படி அவர் சொன்னார்.

அவனுக்குப் பழக்கம் இல்லை என்பதையும் காலையில் அவன் காலைக்கடன் முடித்திருக்கவில்லை என்பதையும் தெரிவித்து வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானான். அங்கிருந்த மாமரத்தில் முற்றியிருந்த மாங்காய்கள் சிலவற்றைப் பறித்து அவனின் கைகளிற் கொடுத்து அவனை அனுப்பி வைத்தார்.

அந்த இடம் அவனுக்கு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுத்ததை அவன் உணராமல் இல்லை. அத்துடன் விடிந்ததும் உற்சாகமாக வேலை செய்ததால் அவனுக்குள் புதிய சக்தி உருவாகி இருக்கிறது என்று சொல்லிவிட்டு வீடு நோக்கிச் சென்றான்.

வரும் வழியில் சிறிய நிலப்பரப்பில் அமைந்திருந்த குடிசை ஒன்றில் ஏணைகட்டி அம்மா தாலாட்டுப் பாடும் சத்தம் கேட்டது. கிராமத்து மணம் வீசுவது காதில் விழுகின்றது என்று எண்ணிக் கொண்டே வந்த அவனுடைய சிந்தனை வேலை செய்யத் தொடங்கியது.

இந்தப் பகுதி மக்களுக்கு நிலமே மூலதனம். மண்ணை நம்பிப் பயிர்களை நட்டுப் பயனைப் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் நிலம் குறைவாக இருப்பவர்கள் எவ்வாறு தங்களுடைய வாழ்க்கையைக் கடத்த முடியும் என்று யோசித்தான்.

அவர்கள் மற்றயவர்களுடைய நிலத்தில் கூலி வேலை செய்து அடியாட்களாகவே தமது பிழைப்பை ஓட்டுகின்றார்கள். ஒவ்வொரு நாளும் பின்னேரத்தில் கிடைக்கும் நாள் வருமானத்தைக் கொண்டு அவர்களின் வீட்டில் இரவு ஒரு நேரம் மட்டுமே சாப்பிட்டு வாழ்க்கையைக் கடத்திக் கொள்கின்றார்கள் என்பது விளங்கியது. எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை வறுமையில் இருக்கிறார்கள் என்று நினைத்தபோது நெஞ்சு வலித்தது. வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை ஒடுக்கி இந்தக் காலத்திலும் எளிமையாகவும் மிகுந்த வசதிக் குறைவுடனும் வாழ்கின்றனர் என்று நினைத்தான்

அவர்களின் வாழ்க்கையின் தரத்தை உயர்த்த வேண்டுமாயின் அவர்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்க படவேண்டும். ஏக்கர் கணக்கில் காணிகளை வாங்கிவிட்டு அவற்றைப் பயன்படுத்தாது விடும் நிலச் சொந்தக்காரர்களின் காணிகளைப் பிரித்து அளிப்பதற்கு அரசாங்கமே முன்வரவேண்டும் என்று எண்ணினான்.

வீட்டுக்கு வந்து சேர்ந்தவன் நன்கு குளித்துவிட்டு தேநீர் போட்டுக் குடித்துவிட்டு சமையல் செய்வதற்கு ஆரம்பித்தான். சாப்பிட்ட பின்பு நல்ல நித்திரை வந்தது. புத்தகத்தைக் கையில் வைத்து வாசித்தவாறு அமைதியாக உறங்கிவிட்டான்.

களைப்பின் காரணமாக அதிக நேரம் உறங்கிவிட்டு எழுந்தபோது இருளடையத் தொடங்கியிருந்தது. மேசை விளக்கைக் கொழுத்தி வைத்துவிட்டு மறுநாள் பாடத்திற்கான ஒழுங்குகளைச் செய்ய ஆரம்பித்தான். அன்றைய நாள் பிரயோசனமாகவே முடிவடைந்தது.

இருட்டு விலகும் முன்பாகவே எழுந்து மின்சாரத்தைப் பாவிக்காமலேயே வாழ்க்கையை நடத்தப் பழகிக் கொண்ட மக்களின் அங்குமிங்குமான அசைவுகள், அதிகாலை வேளையிலேயே அவனுக்கு விழிப்பை ஏற்படுத்திவிட்டன.

அன்று திங்கட்கிழமை. கடந்த இரண்டு நாள்களை விடவும் அன்றைய பொழுது விடிந்த நேரம் முதலாகவே, அவனுக்குள் அளவு கடந்த ஆனந்தம் பீறிடத்தொடங்கியது என்பதற்குப் பல காரணங்கள் இருந்தன. பாதையில் வெளிச்சம் வரவேண்டும் என்று தவம் கிடந்த அவனுக்கு அடுத்தடுத்து நட்சத்திரங்களே கொண்டு வந்து அடுக்கப்பட்டது போல இருந்தது.

வாழ்க்கையில் முதன்முதலில் கண்டு மனதைப் பறிகொடுத்த ஒரு பெண்ணின் அன்பை வெகு இலகுவாகவே பெற்றுவிட்டதும் அல்லாமல், படிக்க வேண்டிய வயதில் அவளுடன் சுற்றித் திரிந்ததும் தனிமையில் அனுபவித்த சுகங்களும் ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே அவனுக்குத் தோன்றின.

எதிர்பாராதவிதமாக படிப்பிலும் தோல்வியடைந்து தன்னுயிர் காதலையும் பிரிந்த போது விரக்தியின் உச்சத்திற்கே சென்று விட்டவனாகித் தற்கொலை என்ற அளவிற்குச் சென்றிருந்தான். ஆனாலும் பெற்றோர் செய்த புண்ணியமும் அவனுடன் இயல்பாகவே அமைந்த நற்குணங்களும், கல்வித் திறமையும் அவனை மூழ்கிவிடாமல் காப்பாற்றியது மட்டுமல்ல, அமைதியே உருவான ஒரு பெண்ணை அவனுக்கு மனைவியாக்கி வாழ்க்கையை வளமாக்கியது

இன்று அவன் ஒரு தந்தையாக மாறவும் அருள் சுரந்திருந்தது. அந்தக் கடிதம் வந்திருந்த நாள் முதலாகவே அவனிடம் பெருமிதம் ஏற்பட்டது. எவருடைய வாழ்க்கையிலும் முதல் சாதனை என்பது பெற்றோர் ஆவதுதான் என்பது அவனின் அபிப்பிராயமாகும்.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போல வேலைக்கு வரும் வழியில் தன்னுடைய காதலியின் உருவத்தை ஒத்த பெண்ணைக் கண்டு கொண்டதும் அவளின் தொடர்பை இலகுவாகவே பெற்றுக் கொண்டதும் அவனை விண்வெளிக்கே கொண்டு சென்றது.

வாழ்க்கையை அனுபவிக்கவென ஆசையும் இருக்கும் போது, அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று அடுத்தடுத்து வரும்போது அவற்றைச் சுவைப்பதில் என்ன தயக்கம் என்று யோசித்தான் அவன்.

'இதெல்லாம் சரியா? ஏற்கெனவே திருமணம் செய்த நீ, மணமாகாத ஒரு பெண்ணை ஏமாற்றுவது சரியா' என்று அவனுடைய மனசாட்சி அவனைக் கேள்வி கேட்காது விடவில்லை.

ஆனால் அவனும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

'ஏ மனசாட்சியே.. நான் என்ன பிழை செய்தேன்.. ஒரு பெண்ணைக் கண்டேன் விரும்பினேன். அவளைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று நம்பினேன். அவளுடன் நெருங்கிப் பழகினேன்.

அவளை நான் மணந்திருந்தால் நானுமே இராமனாகத்தான் இருந்திருப்பேன். எனக்கு வேறு தனியாக யாரும் இராமாயணம் எழுத வேண்டி வந்திருக்கும்.

ஆனால் அது நடக்கவில்லையே.... காரணமே இல்லாமல் அவளை என்னிடமிருந்து பிரித்தெடுத்தது எது...?. சொல்லு ..... காலம் தானே...

நான் என் மனைவிக்குத் துரோகம் செய்யப் போவதில்லை அவளைக் கைவிடப் போவதுமில்லை. ஆனால்.. என் காதலியை இம்முறையும் விட்டுவிடப் போவதில்லை. அவளை அணுகுவேன் அவளை அடைந்து கொள்வேன். அவளைப் பிரியாதிருப்பேன்'

சில சமயங்களில் எங்கள் திறமை விதண்டா வாதங்களிற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கிறது. பிழையென்று தெரிந்தும் பகுத்தறிவை தூங்க வைத்துவிட்டு, செயல்களில் இறங்கி விடுகின்றோம்.

ஆனால் செயல்களின் போதும் உறுத்தலோடு வாழ்பவன், ஓரளவாவது பாவங்களைக் குறைத்துக் கொள்ள முடியும். தாக்கப்பட்டவன் அல்லது பாதிக்கப்பட்டவன் என்ற சுயபச்சாதாபத்தில் இருப்பவனிடம் நியாயத்தையோ நல்ல விடயங்களையோ யாரும் கதைக்க முடியாது.

அதைப் போல, ஒரு நிலையில்தான் அவன் அன்று இருந்தான். சுவையான சுமைகளைச் சுமக்கிறேன் என்று ஒரு நல்ல பெயரைச் சொல்லிக் கொண்டு, எவற்றையெல்லாமோ செய்ய முனைந்தான்.

ஆனாலும் மனைவிக்கு ஏற்ற கணவனாக அவன் வாழ்கின்றான் என்பதில் அவனுக்குக் குழப்பம் வந்ததில்லை. அவளுக்கு எழுதி வைத்திருந்த கடிதத்தை, வலு சிரத்தையுடனேயே தபாற் பெட்டியிற் சேர்த்துவிட்டு பாடசாலைக்குச் சென்றான்.

வழமைக்கு மாறாகவும் மிகுந்த ஆவலுடன் தன் காதலியைச் சந்திக்கக் காத்திருக்கிறான். இருதயம் வேகமாகவே அடித்துக் கொண்டது. முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பத் தொடங்கின.

'அட என்னடா... புதுசா நடக்குறது போல கடுமையான பில்ட் அப் காட்டுறாய். ஊர் மேயிறது எண்டது உனக்கொண்டும் புதுசில்லத் தானே' என்று அவனின் நல்ல மனச்சாட்சி அவனை கேலி செய்தது.

எதையும் சட்டை செய்யாமல் அவளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அவளைச் சந்தித்த இந்த இரண்டு மாத காலங்களில், அவளைப் பாராமல் ஒரு நாளாவது அவன் இருந்ததில்லை. இன்று ஏன் அவ்வளவு நேரம் என்று யோசித்தான்.

எப்பொழுதும் வழமைக்கு முன்பாக வந்து காவல் கிடப்பதும் அவள் தாமதமாக வருவதும் நடப்பதுதானே. (அவள் சரியான நேரத்திற்குத்தான் வருகிறாள். இவன்தான் முன்னாலே வந்து நின்று பில்ட் அப் காட்டுகின்றான்.)

பள்ளிக்கூடம் தொடங்குவதற்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கிறது என்பது கையிலே கட்டியிருக்கும் மனைவி காட்டிவிடவே அவனால் தொடர்ந்து நிற்க முடியாமல் இருந்தது. திரும்பிப் பார்த்தவாறு அவசர அவசரமாக பாடசாலையை நோக்கி நடக்கிறான்.

படிப்பித்தலில் அன்று பெரிதாகக் கவனம் செல்லவில்லை. மனம் அவளைத் தேடிக் கொண்டு இருந்தது. மதியம் பாடசாலையில் இருந்து போகும்போது சந்தித்துக் கொள்ளலாம் என்று சொல்லித் தன்னுடைய மனத்தைத் தேற்றிக் கொள்ள முனைகின்றான்.

மாலையில் அவளைச் சந்திக்க வேண்டும். காலையில் ஒளிந்ததற்காக, நீண்ட நேரம் அவளுடன் செலவழித்துக் கொள்ளவேண்டும். அவளை நான் நேசிப்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

என் விருப்பத்தைச் சொன்னதும் அவள் என்ன செய்வாள். வேட்கப்படுவாளோ... வெட்கத்துடன் செல்லமாக என்னைக் கோபிப்பாளோ.

"ஒபிசைப் பூட்டப் போறன். கையெழுத்து வைக்காம, என்ன கடுமையான யோசின" என்று பிரதியதிபர் கேட்டபோதுதான் அவசரமாக உள்ளே சென்று கையெழுத்துப் போட்டுவிட்டு வந்தவன், அவளைச் சந்திக்க வேண்டும் என்ற களிப்பினால் மனதை மாற்றிக் கொண்டு பாடசாலையில் இருந்து கிளம்பினான்.

# 16

இயற்கையின் ஒளி குறைவடைந்து உலகை மயக்கும் வேளை வந்து கொண்டிருந்தது. ஒளி கொடுத்த ஆதவனின் கதிர்கள் அடுத்த நாளைக் காணச் சென்று கொண்டு இருந்தது. தெருவில் சன நடமாட்டம் படிப்படியாகவே குறைந்து கொண்டு வந்தது.

இரவைப் பகலாக்கும் விளக்குகள் இல்லாத தெருக்கள் அநாதையைப் போன்று கிடந்தன. மின்சாரம் இல்லாத காரணத்தினாலும் ஓரளவு கெடுபிடியாக இருப்பதாலும் மாலை ஏழு மணியளவிலேயே மக்கள் வீடுகளில் முடங்கிக் கொள்வர்.

இரவில் காட்டப்படும் சினிமாத் திரைப்படங்கள் இந்த இடங்களிற் காட்டப்படுவதில்லை. இதனால் பொழுது போக்கிற்காக வெளியில் செல்ல வேண்டிய அவசியம் இந்த இடத்தில் இளைஞர்களிடம் காணப்படவில்லை. நெருக்கமான வீடுகளில் வாழும் ஒரு சிலர் மட்டும் ஓரளவு இருட்டடையும் வரையில் பக்கத்து வீடுகளுக்குச் சென்று வருவார்கள்.

தொலைக்காட்சிப் பெட்டியை இயக்குவதற்கும் மின்கல அடுக்குகளைக் கொண்டு வரமுடியாத காலம் அது. சைக்கிள் டைனமோவை இயக்கி வானொலிப் பெட்டியை இயங்கச் செய்து பீபீசீ போன்ற செய்திகளை அறிந்து கொண்டார்கள் அங்கு வாழ்ந்த மக்கள்.

சனத்தொகையில் பெருமளவிலானவர்கள் விவசாயமும் அதனோடு தொடர்புடைய தொழில்களையும் செய்பவர்களாக இருப்பதனால், பகல் முழுதுமாக வேலை செய்த களைப்பில் வருபவர்கள், கருகு மாலை நேரத்திலேயே சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, விரைவாகப் படுக்கைக்குச் சென்று விடுவர்.

ஆசிரியர்களும், கட்டாயமாக விழித்திருந்து படிக்க வேண்டிய மாணவர்களும், ஒரு சில அரச அதிகாரிகளும் மாத்திரமே, ஒரு மேசை லாம்பை வைத்துக் கொண்டு சிறிது நேரம் விழித்திருப்பர்.

மண்ணெண்ணெய் வாங்குவதற்குக்கூட நீளமான வரிசையில் நின்று, அரும்பாடுபட்டு வாங்கிக் கொண்டு வரும் காலம் அது. குண்டாளமான கண்ணாடி விளக்கில் கீழே வேறு எண்ணெயை ஊற்றிவிட்டு, மேலே அரை அங்குல அளவிற்கு மண்ணெண்ணெய் ஊற்றி, திரியை மண்ணெண்ணெயில் மட்டும் தோயும்படி கவனமாக வைத்து, விளக்கு ஏற்றுவார்கள்.

அந்த விளக்கை அங்குமிங்கும் கொண்டு செல்லமுடியாது. ஓரிடத்திலே வைத்துத்தான் பாவிக்க வேண்டும். பொருளில்லாத நெருக்கடியைச் சமாளிப்பதற்காக அன்றைய தமிழன் கண்டுபிடித்த விடயங்கள் அவை.

விளக்கினை ஏற்றுவதற்கு மண்ணெண்ணெயும் இல்லாத காலமாதலால், வேறு எதுவும் செய்ய முடியாமல் கட்டிலிலே படுத்திருந்தான் அவன். அந்த இடத்தில வாழ்க்கை எத்தனை வித்தியாசமாக இருக்கிறது என்று யோசித்தான்.

சுவிட்சைப் போட்டுவிட்டால் இரவைப் பகலாக்கும் மின்சார வெளிச்சத்தை அனுபவிக்காமலே மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு விளக்கை ஏற்றுவதற்கு எரிபொருளும் கிடைப்பதில்லை. இதனால் கண்விழித்துப் படிக்க வேண்டிய மாணவர்களின் கல்வி பின்நோக்கிச் செல்கிறது.

தினமும் காலையில் கிணற்றடியில் நின்று குளிக்க வேண்டியதாக இருக்கின்றது. அடுத்த வாளித் தண்ணியை அள்ளி எடுத்து ஊற்றும் இடைவெளிக்குள் உடம்பு காய்ந்து விடுகின்றது. முறையான குளியல் என்பதே அவனுக்குச் சிரமமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் மோட்டரில் நீர் தாங்கியில் நிரப்பிக் கொட்டும் அருவியைப் போன்று பாயும் நீரில் சுகமாகக் குளித்தவனுக்கு அந்த இடத்தில் மின்சாரம் இல்லாதுபோன ஆறு மாதத்தைக் கடத்துவதே கடினமாக இருந்தது. ஆனால் இங்கோ தினமும் இதையே செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று சலித்தான்.

அந்த இடத்தில் முழுப்படியே சைக்கிள் சவாரியையே நம்பி இருக்க வேண்டியதாக இருக்கின்றது. அல்லது நடந்து செல்லவேண்டி இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பஸ்ஸிலும் வானிலும் ஆட்டோவிலும் சவாரி செய்த அவனுக்கு இங்கே களைக்கக் களைக்க நடக்க வேண்டியிருந்தது.

அம்மாவும் அவனுடைய மனைவியும் எண்ணியது போன்று அவன் சிரமப்படுகின்றான் என்பது உண்மையே. ஆனால் இத்தனை சிரமத்திலும் இங்கே மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். கல்வி நடவடிக்கைகள் நடந்து கொண்டு இருக்கின்றது.

அவனுடன் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலர் மேலதிகாரிகளிடம் கெஞ்சிக் கூத்தாடி இடம்மாற்றம் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்றுவிட்டார்கள். இரண்டு மூன்று பேர் வேலையைக் கைவிட்டு வெளிநாட்டுக்கு பணத்தைச் செலுத்திப் போய்விட்டார்கள்.

அவனால் எத்தனை காலத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியும் என்பது தெரியவில்லை. அந்த இடத்தில் அவனை சந்தோசமாக உற்சாகமாக இருக்க வைத்த ஒரு விடயம் இப்போது காணாமற் போய்விட்டதைப் போன்று இருந்தது.

நித்திரை கண்களில் எட்டிப் பாராத காரணத்தினால் அங்கும் இங்கும் புரண்டு புரண்டு படுத்தான். மனம் அவளைப் பற்றிய நினைவுகளிலே பறந்து கொண்டிருந்தது.

அவள் எங்கே போயிருப்பாள் என்று நினைக்கத் தோன்றவில்லை. அன்று காலையும் மதியமும் அவளைப் பார்க்க முடியவில்லையே. உடம்புக்கு ஏதும் சுகமில்லாமல் இருக்குமோ....

அப்படி காய்ச்சல், தலையிடி என்று அடிக்கடி விடுமுறை எடுக்க முடியுமான நிலைமை எமக்கு இருக்கிறதா? வேலைக்குச் சேர்ந்த புதிதில் வலு கவனமாக நடக்க வேண்டுமே...... சின்னச் சின்ன விடயங்களும் வேலையைத் தொலைத்து விடுமே

வேறு ஏதாவது காரணம் இருக்குமா என்று யோசித்தான்..

ம்... ஹு" ம் ... எதுவுமே தோன்றவில்லை.

அவளுக்கு என்ன அப்போதைய தேவை என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவளிடம் இருந்த ஆசையில் அவன் தானாகவே பல விடயங்களைக் கற்பனை பண்ணி இருந்ததே தவிர அவளாக தன்னுடைய பக்கங்கள் எதனையும் சொல்லி இருக்கவில்லை. அதனால் அவனால் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை.

வாழ்க்கை என்பது இதுதான் என்று அவனுக்குச் சொல்லிக் கொள்ள முடியாது இருந்தது. நடக்கவே நடக்காது என்று நினைக்கும் சில விடயங்கள் நினையாப் பிரகாரமாக நடந்து முடிகின்றன. அதே வேளை, கையிலே கிடைத்துவிட்டது என்று நினைக்கும் சில விடயங்கள், எங்கே விழுந்தது என்று தேடுவதற்கு முன்பாகவே மறைந்தே போகின்றன.

வாழ்க்கையை ஒரு கவிதை என்றும் ... விடுகதை என்றும்.... போர்க்களம் என்றும் .... நாடக மேடை என்றும்.... விளையாட்டு மைதானம் என்றும் ... வெவ்வேறாகவே விபரித்த அத்தனை பேருக்குப் பின்னாலும் காவியங்கள், கதைகள் இருந்திருக்கும் என்பது திடீரென அவனது சிந்தனையில் தோன்றி மறைந்தது.

ஒவ்வொருவனின் தேடலைக் கொண்டே அவனுக்கு அனுபவங்கள் பரிசளிக்கப்படுகின்றன. தேடல் என்பது பல சந்தர்ப்பங்களில், கைக்கு எட்டாததாகவே அமைகின்றன. ஆனாலும் மனித உள்ளமானது அதேயே தேடித் துரத்திக் கொண்டேயிருக்கின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முட்டி மோதி அனுபவங்களைக் கனியாக்குகின்றது.

தனது வாழ்வின் தேடல் என்பதை ஓரளவுக்கு அவன் புரிந்து கொண்டிருந்தாலும், நடப்புக்களை அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொண்டுவிட முடியவில்லை அவனால்.

எப்போதும் ஏமாறுபவன் தனது கையின் பிடியைக் கடுமையாக்கித்தான் வைத்திருப்பான். அதனால், அவன் அவளைத் தேடுவது ஒன்றும் புதியதோ பிழையானதோ கிடையாது. ஆனாலும் ஏதோ நடக்கக்கூடாது நடந்து விட்டதாக உடைவது ஆரோக்கியம் ஆகாது என்ற எண்ணம் தோன்றியபோதே, அவளை நாளைக்குச் சந்தித்துவிட வேண்டும் என்ற நினைப்பை மனதில் நிறைத்தவனாக கண்களை மூடிக் கொண்டு கிடக்கிறான்.

இரவில் ஆரவாரம் அடங்கிவிட்ட தெருவில் ஓரிண்டு நாய்களின் ஊளைச் சத்தம் கேட்டது. சுற்றாடலை அவதானித்து எம்மை எச்சரிப்பதில், நாய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

மனிதனுக்குத் தோழன் நாய்களே என்று சும்மாவா சொல்லிக் கொண்டார்கள்? இந்த இடத்திலெல்லாம் மனிதனைத் தாலாட்டுவதும் துயிலெழுப்பவதும் கூட நாய்கள் தான். தொடர்ந்து சத்தம் கேட்டுக் கொண்டிருந்ததால் வெளியில் எட்டிப் பார்க்கலாமே என்று எழுந்து வெளியில் வருகிறான்.

சத்தம் வந்த திசையில் நோக்கிப் பார்க்கிறான். இரண்டு நாய்கள் ஒன்றுக்கொன்று பார்த்தவாறு தெருவை நோக்கியவாறு ஊளையிட்டுக் கொண்டிருந்தன. கல் ஒன்றை எடுத்துக் குறிபார்த்து வீசுகிறான். அந்த நாய்கள் இரண்டும் ஓடிவிடுகின்றன.

கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே வந்தவன் மறுபடியும் கட்டிலில் அமர்ந்து கொண்டான். இந்நேரத்தில் மனைவி என்ன செய்து கொண்டிருப்பாளே என்ற யோசனை வந்தது.

நாய்கள் இப்படிக் குரைக்கும் போது தனக்குப் பயமாக இருக்கும் என்று சொல்லுவாள். தானும் அருகில் இல்லாதபோது என்ன செய்வாளோ என்ற யோசனை வந்தது. மறுபடியும் நாய் குரைக்கும் சத்தம் கேட்டது தொடர்ந்து யாரோ ஓடுவதைப் போன்று சத்தம் கேட்டது.

கைவிளக்கை எடுத்துக் கொள்ளவும் அது தூர்ந்து விடுகின்றது. ஆபத்துக்குப் பயன்படும் என்ற எண்ணத்தில் வைத்திருந்த அந்த டோர்ச்சை எடுத்தான். கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான்.

அப்பொழுது நாய்களின் கூச்சல் மேலும் அதிகமாகி விடுகின்றது. அவை கூச்சலிடும் திசையை வைத்துக் கொண்டு சத்தம் குறைந்து கொண்டு போனதை அவதானிக்க முடிந்தது. அவனின் கையில் இருந்த டோர்ச்சும் அநியாயத்திற்கு வேலை செய்யவில்லை.

கையில் இருந்த டோர்ச்சை நம்பி தெருவில் இறங்கியவனுக்கு அதிசயமாக இருந்தது. வேறு யாரும் அங்கே வருவதைக் காணவில்லை. அத்தனை வேளைக்கு நித்திரை செய்திருப்பார்களா என்று நினைக்கத் தோன்றியது.

அவ்வாறு இருந்தாலும் அத்தனை நாய்களின் சத்தத்திற்கு எழும்பாமல் இருந்திருப்பார்களா என்றும் சந்தேகப்பட்டான். அவர்கள் இவ்வாறே பழக்கப்பட்டு விட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இப்பொழுது நாய்கள் குரைக்கும் சத்தம் அதிகமாகிக் கொண்டு வருவதைப் போன்று இருந்தது. ஏற்கெனவே தனக்குக் கேட்ட காலடிக்கு உரியவர்கள் இத்திசையில் வருகின்றார்கள் என்பதை அவன் கணத்தில் புரிந்து கொண்டான். மெதுவாக சத்தம் இல்லாமல் வந்து வீட்டுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

அவனுக்குக் குப்பென்று வியர்த்தது. முத்தாகச் சிந்திய வியர்வையைத் துடைத்துக் கொண்டான். அந்த நேரத்தில் தங்களது வீட்டை நோக்கி வந்த நாய்களின் சத்தம் அதைக் கடந்து போவது தெரிந்தது. 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டான்.

நாயின் சத்தத்தைக் கேட்டதும் எதையும் யோசித்துக் கொள்ளாமல் வெளியே பாய்ந்து சென்றது தவறு என்பது அவனுக்குப் புரிந்தது. இருந்தாலும் சொற்ப நேரத்தில் தானாக யோசித்து வந்ததை நினைத்துப் பார்த்தான்.

இந்த இடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு யாரும் வீட்டைவிட்டு வெளியில் வருவதில்லை. என்ன நடந்தாலும் என்ன சத்தம் போட்டாலும் அவர்கள் துணைக்கு வர மாட்டார்கள். இருட்டின் காரணமாக முற்றுமுழுதாக ஒதுங்கி விடுகின்றார்கள் என்பதை யாரும் சொல்லாமலே அவன் புரிந்து கொண்டான்.

அப்படியானால் இரவில் திருட்டு ஏதும் நடைபெற்றால் திருடனைப் பிடிப்பதற்கும் வரப் போவதில்லையா? என்று சிந்தனை எழுந்தது. யார் திருடன் யார் காவல்காரன் என்ற பிரச்சினை எதுவும் இந்த இடத்தில் இல்லையே பின்பு எதற்காகக் கவலைப்பட வேண்டும் என்று அவனுடைய மனச்சாட்சி கேட்டது.

கடவுள் காத்துக் கொண்டிருக்கிறார் என்ற நினைப்புடன் மனிதன் வாழ்ந்து கொள்வதைப் போன்று, அவர்கள் தங்களைப் பாதுகாப்பதாக எண்ணிக் கொண்டு அவர்கள் வாழ்கின்றார்கள். அதைத்தான் அவர்கள் எண்ணியாக வேண்டும். மாற்றுக் கருத்துக்கள் எதுவும் எழுந்தாலுமே அவற்றை யாரும் பேசிவிட முடியாது. அப்படிப் பேசிவிட்டால் அவர்களை மீண்டும் காணவும் முடியாது.

அனைத்துத் துன்பத்தையும் பழகிக் கொண்ட மக்களுக்கு, அடக்கு முறைக்குப் வாய் பேசாது இருப்பதில் என்ன சிரமம் இருக்கிறது. இதனால் அவர்கள் மௌனமாகவே வீட்டுக்குள் அடங்கி விடுகின்றார்கள்.

எந்த ஒரு மனிதனின் எதிர்பார்ப்புக்களும் போராட்டங்களும் மக்களின் நன்மைக்காக இருக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதாக அமைதல் வேண்டும். அது படிப்படியாக அவர்களின் வசதிகளைப் பெருக்குவதாகவும் தொழில் நுட்பத்தைப் புகுத்துவதாகவுமாக இல்லாதபோது அந்த நடவடிக்கைகளை யாரும் முன்னெடுக்கக் கூடாது.

இந்தப் பூமியில் வாழ்க்கை என்பது ஒரு முறை தரப்பட்டதே. அதை எங்களுடைய முட்டாள்தனத்தால் உசார் மடையராக உடைத்து எறிவோமானால் எங்களுக்கும் எம்மைச் சார்ந்தவர்களுக்கும் கெடுதலையே செய்து நிற்கின்றோம்.

எமது சிந்தனைகள் சமூகத்தின் பாற்பட்டவையாக இருத்தல் வேண்டும். அது பலரின் வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாக அமைதல் வேண்டும். நாளைக்கு எம்மவரே எள்ளி நகையாடுவதற்கு அனுமதிக்கக் கூடாது.

என்றெல்லாம் அவனது சிந்தனை போய்க் கொண்டிருந்தது. ஆர்வத்திலேனும் அவர்களை எட்டிப் பார்ப்பதற்கு மனம் வரவில்லை. மௌனமாக படுத்தபடி கண்களை மூட எத்தனித்தான்.

மறுபடியும் நாய் குரைக்கும் சத்தம் எழும்ப ஆரம்பித்தது. கைக்கடிகாரத்தில் இருந்த சிறிய வெளிச்சத்தினால் நேரத்தைப் பார்த்தான். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. அதற்குள் தான் சிறு தூக்கம் ஒன்றைப் போட்டுவிட்டு எழும்பிவிட்டான் என்பதை அறிந்து கொண்டான்.

மறுபடியும் ஆரம்பித்த சத்தத்தினால் அவனுக்குக் குழப்பம் வந்தது. அவர்கள் இன்னும் அங்கே நிற்கின்றார்கள் என்பது விளங்கியது. அவர்கள் அவ்வாறு அதிக நேரம் நிற்பதனால் யாருக்கும் தீங்கு ஏற்பட்டு விடுமோ என்ற பயமும் வந்தது.

ஏதாவது யாராவது துப்புக் கொடுத்தால் மாத்திரமே அவர்கள் யாரையும் குறிவைத்து வந்து நிற்பார்கள் என்பதை அவன் ஏற்கெனவே அறிந்திருந்தான். தான் வந்த முதல் நாளில் இருந்து வராத ஒரு அனுபவமாக இருந்ததால் அவனுக்கு பயமும் தொற்றிக் கொண்டது.

சே.. இந்த நேரத்தில் தன்னுடைய சக ஆசிரியர்களும் அந்த இடத்தில் இல்லை என்பது அவனுக்கு வருத்தத்தை அளித்தது. தன்னிடம் யாருக்கும் எந்தப் பகையும் இல்லை என்பதை உணர்ந்து இருந்தாலும் அரவத்துடன் நகர்ந்த அந்த இராத்திரி அவனுக்குப் பயத்தை ஏற்படுத்தியது. எதையெல்லாமோ கற்பனை செய்ததில் அவனால் தூங்கவே முடியவில்லை.

படிப்படியாக ஆரவாரம் குறைந்து நாய்களின் சத்தம் குறைந்ததும் அவனுடைய இமைகள் தொட்டுவிடத் துடித்தன. ஆனால் விடியற்காலையில் கோழி கூவுவதும் மக்கள் எழுந்து நடமாடுவதும் தெரிந்தது. அன்றைய இரவு, நித்திரையைக் காணாமலே நகர்ந்தது.

மேலும் படுப்பதற்கு மனம் இல்லாதவனாக அவன் எழுந்தான். தன்னுடைய வேலைகளை விரைவாக முடித்துவிட்டு விரைவாகப் பாடசாலைக்குச் சென்றுவிட நினைத்தான். தன்னுடைய அதிபரைச் சந்தித்து இந்த விடயத்தை அவரின் காதுகளிற் போட்டு வைக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக எழுந்தது.

தவறுதலாகவேனும் தனக்கு ஏதாவது நடந்துவிட்டால் இந்த இடத்தில் அதைப் பற்றி யாருக்கும் தெரிவித்து இருக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டான். அந்த இடத்து வாழ்க்கையை சுமையாக உணர்ந்தது மனது

தொண்ணூறாம் ஆண்டுக்கு முன்னதான நிலைமையாக இருந்தால், ஒவ்வொரு நாளுமே யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் வந்து போயிருக்கலாம். பாதை பிரச்சினையாக இருக்கும் காலத்தில் அல்லவா இங்கே வந்து மாட்டிவிட்டேன் என்ற எண்ணம் எழுந்தது.

அந்த இடத்திற்கு வந்த பிறகு முதல் தடவையாக தனிமை என்பதை உணரத் தொடங்கினான்.

# 17

அன்று வழமைக்கு மாறாக சற்று முன்னதாகவே பாடசாலைக்குச் சென்றுவிட்ட அவன் முதல் வேலையாக அதிபரை அணுகி இரவில் நடந்ததைச் சொன்னான். அவனை ஜாக்கிரதையாக இருக்குமாறு அதிபர் சொன்னார். அன்று மாலையில் மற்றைய ஆசிரியர்கள் வருவார்கள் என்பதையும் தெரிவித்தார்.

அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த அவன், முதல் நாள் அதிபர் சொன்னதன்படி, அடுத்த நாள் பாடசாலையைப் பார்வையிட வரும் கல்வித் திணைக்கள அதிகாரிகளை வரவேற்கும் முகமாக, மாணவர்களைக் கொண்டு வகுப்பறையையும் வளவையும் துப்புரவு செய்வித்துக் கொண்டிருந்தான்.

தொட்டால் விழுந்துவிடும் நிலையில் இருந்த அந்தப் பாடசாலையின் சுவர்களை, கவனமாக ஒட்டறை அடித்து, மெழுகிப் பாவிக்கும் தரைகளைத் தும்புத்தடிகளாற் மெதுவாகக் கூட்டி, பக்கத்து வீட்டிலிருந்து வாங்கிக் கொண்டு வந்த ஈர்க்குக் கட்டினால் கூட்டி ஓரளவு துப்புரவாக்கி எடுத்தனர்.

ஒரு சில மாணவர்களின் பெற்றோரும் வந்து உதவி செய்தனர். அதிபரிடமும் அவனிடமும் இருந்த நன் மதிப்பினால் அவர்கள் அவ்வாறு வருகை தந்து வேலைகள் பலவற்றைச் செய்து கொடுத்தார்கள்.

அடுத்து வெளிப்புறத்தைச் சுத்தப்படுத்தும் வேலை ஆரம்பமானது. வாசலுக்கு முன்னாலே இருந்த பட்டுப்போன மரத்தைத் தறிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தான். இரண்டு பிள்ளைகளின் அப்பாமார் சேர்ந்து மரத்தை வெட்டுவதற்கு ஆயத்தமானார்கள்.

மரக்கொப்புக்களை வெட்டி கயிறு கட்டி இறக்குவதாகச் சொன்னார்கள். இருப்பினும் தவறுதலாக ஓரிரு கிளைகள் விழுந்து விடக்கூடும் என்ற எண்ணத்தினால் அந்த இடத்திலேயே காவல் இருந்து முற்றாக வெட்டி முடியும்வரை பார்த்துக் கொண்டான்.

மரங்களை வெட்டுவதில் அனுபவசாலியான அவர்கள் சிரமம் எதுவும் இல்லாமலே மரத்தை வெட்டி விழுத்தினார்கள். ஏற்கெனவே துண்டு போடப்பட்ட கிளைகளை ஒரு புறமாகத் திருத்தமாக அடுக்கி வைத்தார்கள். அங்கு பரவியிருந்த இலைகளை மாணவிகள் கூட்டுவதற்கு ஆயத்தமானார்கள்.

வேறு இருவர் வந்து அதிபரின் அலுவலகத்திற்கு முன்பாக கூட்ட ஆரம்பித்தார்கள். அனைத்தையும் ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்ததும் நெருப்பு வைத்துவிட்டார்கள். அன்றைய வேலைகளை முடித்த களைப்புடனே அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

அடுத்த நாள் காலையில் மாணவர்களின் சீருடையைக் கவனித்தாக வேண்டும் என்று அதிபர் சொல்லியிருந்தது ஞாபகத்திற்கு வரவே மாணவர்களை அழைத்து வட்டமாக நிற்கச் சொன்னான். ஒருவருடைய சீருடையாவது மேலதிகாரிகள் எதிர்பார்ப்பதைப் போலே இருக்கவில்லை. அதிலே இரண்டு பேர் சீருடையே அணிந்திருக்கவில்லை.

"ஏன்டாப்பா பள்ளிக்கூடத்துக்கு வாற முறையா இது? சீருடைய போடவேணும் எண்டது உனக்குத் தெரியாதா? எங்க உன்ர வெள்ளச் சேட்டு" என்று அவன் வினாவியபோது, சிறுவன் தலையைக் கவிழ்ந்து கொண்டான்.

"அவனிட்ட வெள்ளச் சட்டயில்ல சேர். அவன் காலமயில பால் கொண்டு போய் பத்து வீட்டுக்குக் குடுத்திட்டுத் தான் பள்ளிக்கூடம் வருவான். அவன்ர அம்மாவும் தங்கச்சியும் அவன்ர இந்தக் கொஞ்ச வருமானத்த நம்பித்தான் இருக்குதுகள்" என்று அருகில் இருந்தவன் சொன்னான்.

அதற்குப் பிறகு யாருடனுமே சீருடையைப் பற்றிக் கேட்க மனம் வரவில்லை அவனுக்கு. வறுமையின் பிடியிலும் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பள்ளிக்கு வந்திருக்கும் பிள்ளைகளை அநாவசியமாகக் கலவரப்படுத்தக் கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

"இன்ஸ்பெக்ஷனுக்கு வரும்போது நீ முன்னால வரவேண்டாம். நாங்க கூப்பிட்டா மட்டும் வா.. என்ன " என்று சொல்லி விட்டுப் பாடப் புத்தகங்களை எடுக்கச் சொன்னான். பாடத்தை நடத்திக் கொண்டிருந்த போதும் அவனின் மனது பாடசாலையில் ஒன்றவில்லை.

அன்றைய நாளும் அவளுடைய நினைவுடனேயே கழிந்து சென்றது. அன்று வேலை முடிந்து செல்லும் போதாவது அவளைப் பார்த்துவிடவேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அன்று பாடசாலைக்கு விஜயம் செய்த கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள், அவனுடைய வகுப்பறைக்கு வரும்போது நேரம் மதியப் பொழுதைக் கடந்துவிட்டது. ஆசிரியர்களின் பதிவுப் புத்தகங்கள், மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகள் என்று எல்லாவற்றையும் பார்வையிட்டுவிட்டு அவர்கள் வெளியேறியபோது நேரம் கடந்துவிட்டது.

அதன் பிறகு, அதிபரின் அலுவலகத்திற்குச் சென்று அவருக்கு ஒத்தாசையாக அறிக்கைகள் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டான். அனைத்தையும் முடித்து பாடசாலையை விட்டு வெறியேறிய போது மாலை ஐந்து மணியாகிவிட்டது.

'அன்று நிச்சயமாக அவளைத் தவற விட்டுவிடுவேன்' என்ற எண்ணத்துடனேயே வேகமாக அந்த இடத்திற்கு ஓடோடி வந்தான். இருப்பினும் நினைத்தது போலவே நடந்தது.

அன்றும் அவளைத் தவற விட்டுவிட்டான். ஒவ்வொரு தடவையும் ஏமாற்றத்தை எதிர் நோக்கியபோது அவனுக்கு சலிப்பாக இருந்தது. மிகுந்த வருத்தத்துடனேயே அவன் தங்கியிருக்கும் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தான்.

அடுத்தடுத்த நாட்களும் அதே போலவே கடந்து கொண்டிருந்தன. அவளைக் காணாத ஏக்கமும், அவளிடம் மனத்தைப் பகிர்ந்து கொள்ளாத துன்பமும், அவள் செயல்களில் இருந்த நம்பிக்கை இன்மையும் சேர்ந்து, அவனை நலிவடையச் செய்தது.

அவள் படிப்பிப்பதாகச் சொன்ன அந்தப் பாடசாலையில் சென்று விசாரிக்கலாமா என்று யோசித்தான். ஆனால் எவ்வாறு பாடசாலை நேரத்தில் வெளியே செல்வதாயின் முறையான காரணம் சொல்லியே செல்ல முடியும். மருத்துவச் சான்றிதழை சமர்ப்பிக்கும் விடயம் சம்பந்தமாக, கல்வித் திணைக்களத்திற்குச் சென்றபோது, அவளின் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரைச் சந்தித்தபோது கதையினூடாகவே அவளைப் பற்றி விசாரித்தான்.

புதிதாக இணைந்து கொண்டவள் என்பதால் அவளைப் பற்றிய அதிகமான தரவுகள் அவருக்குத் தெரியாது என்பதைப் புரிந்து கொண்டான். இருந்தாலும் வழக்கமாகப் பெண் ஆசிரியைகள் தங்கும் இடம் நகரத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது என்றும் அந்த வீடு இருக்குமிடம் அவருக்குத் தெரியும் என்றும் ஒரு குறிப்பைச் சொல்லிவிட்டுச் சென்றார்.

அந்த இடத்திற்குச் செல்வதற்கு அவனிடம் சைக்கிள் இருக்கவில்லை. கால் நடையாகவே செல்ல வேண்டியிருந்தது. வேலை விட்டதும் களைப்பையும் பாராமல் அந்தப் பகுதிக்கு வந்து சேர்ந்தான். இருப்பினும் சீக்கிரத்தில் வீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவர் சொன்ன குறிப்பினை ஞாபகப் படுத்திக் கொண்ட படியே விசாரித்துக் கொண்டு போனவன், அந்த வீட்டில் சென்று பார்த்தபோது, அறுபது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவரைக் கண்டு அவளைப் பற்றிக் கேட்டான்.

அந்த அம்மையார் அவனை ஏற இறங்கப் பார்த்தார். அவளைப் பற்றி அவனுக்கென்ன அக்கறை என்று கேட்பதைப் போன்று இருந்தது அவருடைய பார்வை. அவனுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. தன்னை மரியாதையாக அறிமுகப்படுத்திக் கொண்டான்

அவளுடைய பாடசாலையிலே தான் படிப்பிப்பதாகவும், அவளுக்கு ஏதோ செய்தி சொல்ல வந்திருப்பதாகவும் தன்னை பற்றிச் சொன்னான். அவளிடம் நேரடியாக அதைச் சொல்ல வேண்டும். வேலை விடயம். முக்கியம் என்றெல்லாம் பீடிகை போட்டான்.

அந்த அம்மையார் ஆறுதலாகவே அவளைப் பற்றிய விபரத்தைச் சொல்லத் தொடங்கினார்.

தென்னை மரவாடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அவளுக்கு அம்மா அப்பாவுடன் ஒரு தங்கையும் இருக்கிறாள். முல்லைத்தீவின் எல்லைப் பகுதியில் நடந்த பிரச்சினைகள் காரணமாக தொண்ணூறாம் ஆண்டில் இருந்து இடம்பெயர்ந்து கொக்கிளாயிலும் முல்லைத்தீவிலும் மாறி மாறி இடம் பெயர்ந்தவர்களாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அவளின் தங்கை அவளைப் போன்று புத்திசாலி கிடையாது. அனைத்திலும் மந்த புத்தி. அதனால் அவளை எப்பொழுதும் தங்கள் கண்ணுக்குள் வைத்திருந்தார்கள். ஆனால் அவளை யாரோ உறவினர் வீட்டில் தங்கவைத்து முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிற் படிக்க வைத்தார்கள்.

சிறு வயதில் இருந்தே கல்வியில் அதீத திறமையைக் காட்டி வந்த அவள் படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரியாகத் திகழ்ந்தாள். தந்தையும் அன்னையும் அருகில் இருந்த குறையே தெரியாமல் அவள் படித்து வந்தாள்.

அவளுடைய பெற்றோர் ஏற்கெனவே இடம்பெயர்ந்தவர்கள். அவர்களுக்குத் தங்களுடைய வாழ்க்கையையும் கவனித்துப் பிள்ளைக்குப் பணமும் அனுப்பும் அளவிற்கு வசதி கிடையாது. அதனாலே அவளுக்குப் படிக்கும் காலத்தில் மிகவும் பணக்கஷ்டம் இருந்தது. இருப்பினும் அதைப் பொருட்படுத்தாது முக மலர்ச்சியுடன் அவள் கல்வி கற்று வந்தாள்.

அவள் கெட்டிக்காரியாக இருந்ததாலும் வறுமையிலும் செம்மையாகவும் எளிமையாகவும் அன்பானவளாகவும் இருந்ததாலும் அவளின் மீது அசிரியர்களுக்கு அளவு கடந்த பிரியம் இருந்தது. அவளுக்குக் கஷ்ட துன்பம் வரும் காலங்களில் அவர்களும் கைகொடுத்து அவளை முன்னேற்றப் பாடுபட்டார்கள்.

வித்தியானந்தாவில் படித்துக் கொண்டிருந்த அவள் உயர்தரப் பரீட்சையில்அதிகபெறுபேறுகள்பெற்றுபல்கலைக்கழகத்திற்குத்தெரிவானாள். இருந்தும் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்பதாக யாழ்ப்பாணத்திற்கு வரமுடியாமல் இருந்ததால் அவளுடைய பல்கலைக்கழகத்தின் அனுமதி தட்டிப் போய்விட்டது.

அவளைத் தேற்றிய பாடசாலை, அந்த இடத்தில் மாணவர்களுக்குப் படிப்பிக்கும் பணியை வழங்கியதுடன் பாடசாலையால் சேர்க்கப்பட்ட சிறு தொகை உதவிப் பணத்தையும் அவளுக்கு வழங்கியது. அந்தச் சிறு தொகையிலும் அவள் தன்னுடைய வாழ்க்கையையும் பார்த்துக் கொண்டு தேவைப்படும்போது அம்மாவுக்கும் கொடுத்து வந்தாள்.

அவளுடைய தங்கையை முல்லைத்தீவிலுள்ள வைத்திய சாலையில் கொண்டு சென்று காட்டுவதற்காக அவளுடைய அம்மாவும் தங்கையும் அடிக்கடி வருவார்கள். அந்த வேளைகளில் தன்னிடம் இருக்கும் காசை வழிச்சுத் துடைச்சு அவர்களுக்குக் கொடுத்து அனுப்புவாளாம்.

இவ்வாறு தொண்டர் ஆசிரியராகக் கடமை ஆற்றிக் கொண்டு இருந்த வேளையில் ஆசிரியர்களுக்குரிய போட்டிப் பரீட்சை நடைபெற இருந்தது. அந்தப் பரீட்சையும் அவள் எழுதியிருந்தாள். ஆறு மாதங்களுக்குப் பின்னதாக அதில் நியமனம் கிடைத்ததும் வேலையை ஏற்றுக் கொண்டு அந்த இடத்திற்கு வந்தாள்.

அந்த இடத்தில் அந்த அம்மையாரும் அவளும் இருந்தபோதும் அவள் அதிகமாகக் கதைப்பதில்லை. பாடசாலை, வீடு என்ற சிறு வட்டத்திற்குள்ளாக அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள். அவராகவே எது கேட்டாலும் சிரித்த முகத்துடன் தலையை ஆட்டிவிட்டுச் சென்றுவிடுவாள்.

ஒரு மாதத்திற்கு முன்னால் அவளும் அவளுடைய தங்கையும் வந்திருந்தார்கள். அவர்கள் இரு தினங்கள் தங்கி இருந்ததால், இவள் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்ற பின்னால் அம்மாவுடன் கதைக்க நேர்ந்தது. அந்த நேரத்தில் அவர் சொல்லிய தகவல்களின் மூலமே இவற்றை அறிந்து கொள்ள முடிந்தது.

மகளைப் பற்றித் தாயார் உருக்கமாகச் சொன்ன விடயங்கள் அந்த அம்மையாரின் மனதில் விழுந்திருக்க வேண்டும். இவ்வாறு தன்னுடைய தேவைகளைச் சுருக்கி பெற்றவர்களுக்காக வாழும் பெண்கள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்களா என்று அவர் எண்ணினாராம்.

அவள் சாப்பிடுவது ஒரு நாளைக்கு ஒரு தடவையே என்று அவளின் தாயார் சொன்னாராம். எந்த வகையிலும் தன்னுடைய செலவுகளைக் குறைத்துப் பெற்றோரைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இருந்தது.

இவ்வாறு அவளின் வாழ்க்கை போய் கொண்டிருந்த போது கடந்த வாரத்தில் அவர்களின் உறவுக்காரர் என்று சொல்லிக் கொண்டு யாரோ அவளைத் தேடி வந்தார்களாம். அவர் ஏற்கெனவே அவளுக்குத் தெரிந்தவராக இருந்திருக்கலாம். அவர்கள் கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது அவ்வாறு விளங்கியது என்று அந்த அம்மையார் சொன்னார்.

அவரின் வருகைக்குப் பிறகு அவள் நிம்மதியாக இருக்கவில்லை என்பதைத் தெரிவித்தார். வன்னியில் இருந்த அவளின் பெற்றோர் அங்கு நடந்த பிரச்சனை காரணமாக வேறு இடத்திற்கு இடம் பெயர்ந்து போனதாகத் தகவல் சொன்னார். அது மட்டுமல்ல. அவளுடைய தகப்பனுக்கு உடம்பு சரியில்லை. நோயாளியாக இருக்கிறார் என்றும் அவர் சொல்லியதைக் கேட்டதும் அவள் அழுதுகொண்டே இருந்தாளாம்.

அடுத்த நாள் காலையில் அவள் வேளையுடன் எழுந்து விட்டாள். தான் புறப்பட்டுப் போய் அப்பாவைப் பார்த்து வருவதாகச் சொன்னாளாம். அந்த அம்மையாருக்கு அதில் விருப்பம் இல்லை. இருப்பினும் அவளைத் தடுக்க முடியும் என்று அவருக்குத் தோன்றவில்லை.

அவள் புறப்பட்டுச் சென்ற நேரத்தில் இருந்து அவளின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார். ஆயினும் எந்த தகவலும் வரவில்லை என்று சொன்னார்.

அவனுக்கு சற்று அதிர்ச்சியாகவும் இருந்தது. அந்த இடத்தில் அப்போது நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு நடுவிலே ஒரு இளம் பெண் தனியாகப் போவதா என்ற கேள்வி அவனிடம் எழுந்தது. இராணுவம் மட்டுமே இருக்கும் அந்தப் பகுதியில், மக்களே இடம்பெயர்ந்து இருக்கும் இந்த நேரத்தில் அவள் அங்கு சென்றது அத்தனை பொருத்தமானதாக அவனுக்குப் படவில்லை.

அவள் எதற்காக அப்படி முடிவெடுத்தாள். அவள் பார்க்காத பிரச்சினைகளா? அல்லது எதையும் தெரிந்து கொள்ளாத முட்டாளா அவள். எதற்காக அங்கு போனாள்?

தன்னிடம் சொல்லி துணைக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கலாமே என்று யோசித்தபோதே அந்த எண்ணமும் வந்தது.

யாருக்கு யார் துணை இந்தக் காலத்தில்...

தான் யாருக்கும் உதவியில்லாமல் உபயோகம் இல்லாமல் இந்த இடத்தில் வந்து மாட்டிக் கொண்டு இருக்கும்போது தன்னை அழைத்துக் கொண்டு எவ்வாறு அவள் சென்றிருக்க முடியும் என்று அவன் நினைத்தான்.

சொந்த மனைவியைப் பார்ப்பதற்கு யாழ்ப்பாணம் போக முடியாமல் இருக்கும்போது, அவளுக்குத் துணையாக அந்த இடத்திற்குப் போவது என்பது நினைத்தும் பார்க்க முடியாததொன்று.

இருந்தாலும் அவனுக்குச் சொல்லியிருந்தால் அவளைப் போகவிடாது தடுத்திருப்பான். இன்றைய நாட்களில் பத்திரிகையிலும் வானொலியிலும் கேள்விப் பட்டுப் கொண்டிருக்கும் 'எத்தனையோ பிரச்சினைகளை அவள் கேள்விப்பட்டிருக்கவில்லையா? என்று யோசித்தான்.

அவளுக்கு எவ்வாறு அப்படித் துணிச்சல் வந்தது என்று நினைத்தான். ஏற்கெனவே பிரச்சினைகள் நடக்கும் இடத்தில் வாழ்ந்திருந்ததால் அவளுக்கு அபூர்வமாகத் துணிச்சல் தோன்றியதோ என்று யோசித்தான். ஆனால் அவனுடைய நிலைமை அவ்வாறு அல்லவே.. பத்திரிகையில் திரிபாகச் சொல்லும் செய்திகளை புதினமாக மற்றையவர்களிடம் சொல்லி வாழ்ந்த அவனுக்கு அவ்வாறு துணிச்சல் வரவே வராது.

ஒரு இடத்தில் குண்டு விழுந்ததாகக் கேள்விப்பட்டதும் குண்டைக் கையாலே தூக்கி எறிந்ததைப் போன்று எடுத்துக் கதைக்கும் அவனுக்கு அந்த இடத்திற்குப் போவதைப் பற்றி எண்ணியதும் நடுங்க ஆரம்பித்தது உண்மைதான்.

ஆனால் அவளின் நிலை அவ்வாறு அல்லவே. அவளைத் தவிர குடும்பத்தின் அனைவரும் அந்த இடத்தில் வாழும்போது தன்னுடைய உயிரைப் பற்றி மட்டும் அவளால் கவலைப்பட முடியுமா? அதுவும் அனைவரையும் இழந்த பிறகு அந்தப் பெண்ணால் தனியாக வாழ முடியுமா?

'அதனாலேதான் நல்லதோ கெட்டதோ அவர்களுடன் இருப்போம் என்று நினைத்துப் போய்விட்டாளா? அவளைப் போன்று நிலை எனக்கு ஏற்பட்டாலும் அவ்வாறுதான் செய்வேனோ' என்று நினைத்ததும் அவனுக்கு நடுங்கியது.

தன்னுடைய பெற்றோரும் மனைவியும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதை மறுபடியும் மறுபடியும் மனதுக்குள் சொல்லிக் கொண்டான். இப்படி யோசிக்காமல் சென்ற பெண்ணுக்காகவும் இரங்கினான்.

மேற்கொண்டு எந்த விபரமும் அந்தப் பெண்மணிக்குத் தெரியாது என்பதைப் புரிந்து கொண்டதனால் அங்கே மேலும் இருப்பதில் பயனில்லை என்பது புரிந்தது. தன்னுடைய விபரத்தை அவரிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து வெளியேறினான்.

# 18

மிகவும் பின் தங்கிய பகுதிக்கு, இந்த இக்கட்டான கால கட்டத்தில், ஆசிரியத் தொழிலுக்காக வந்து சேர்ந்தபோது பெரிய ஈடுபாடு தொடக்கத்தில் இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், காலப் போக்கில் அங்கு வாழ்ந்த மக்களின் அமைதியான எளிமையான வாழ்க்கையும் ஆசிரியர்களைத் தெய்வங்களாகக் கருதும் அவர்களின் பண்பும், மாணவர்களின் பணிவும் அவனுக்கு அவ்விடத்தில் ஒரு அந்நியோன்னியத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது.

முதலாவது நியமனத்திலேயே சாதாரண தரத்திற்குக் கணித பாடம் எடுப்பதற்கு அவன் அனுமதிக்கப்பட்டதால், ஓரளவு புரிந்துணர்வுடைய மாணவர் குழாத்துக்கு நண்பன் போலே வழிகாட்டும் ஒரு நிலையில் இருந்தது அவனுக்குப் பிடித்திருந்தது.

வாழ்க்கையில் விருப்பு என்பது எமக்குப் பிடித்தவை கிடைக்கும் போது என்பதில் மட்டுமல்ல, எம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்போரைப் பார்க்கும் போதும் ஏற்பட்டுவிடும். அவர்களுக்காக உழைக்க வேண்டும். அவர்களுக்காக வாழ வேண்டும் என்னும் போது, வாழ்வில் விருப்பம் என்பது தானாகவே எழுந்து விடுகின்றது.

ஆசிரியத் தொழிலிலே கிடைக்கும் ஒரு ஆத்ம திருப்தி அதுதான். அவர்களிடம் படித்தவர்கள் என்று சொல்லி அனைத்துப் பிரிவினரும், வகையினரும் அவர்களைப் பாராட்டுவதற்குத் தயங்குவதில்லை.

ஆயிரம் துன்பங்கள் வாழ்க்கையில் வந்து சென்றாலும், ஆங்காங்கே சலசலப்புக்கள் தோன்றி மறைந்தாலும், ஆசிரியர் நாம் எனும் போது மற்றவர்களுக்கு உதாரணமானவர்கள் என்ற எண்ணக்கருவும் இணைந்து விடுகின்றது. அதனால் உதாரணமாக வாழ வேண்டும் என்ற எண்ணமே மேலிடுகின்றது.

பாடசாலை நேரங்கள் தவிர்ந்த ஏனைய பொழுதுகளில் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் வைத்தல், பின்னேரங்களில் வயோதிபருக்கு எழுத்துச் சொல்லிக் கொடுத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்ததனால், தன்னைப் பற்றி அதிகமாக எண்ணும் வழக்கம் அவனிடம் எழவில்லை.

அனைவருக்கும் உதவி செய்தும், மிகவும் ஒழுக்க சீலனாகவும் வாழ்ந்து வந்ததால், பாடசாலைச் சமூகத்திற்கும், அந்த ஊரிலே வாழ்ந்து கொண்டிருந்த பலருக்கும் அவன் மீது அளவு கடந்த மதிப்பு எழுந்தது.

இடைக்கிடையே அவளைப் பற்றிய நினைவுகளும் எட்டிப் பார்க்கும் ஆனால் அவற்றைத் தன் நெஞ்சுக்குள்ளே பூட்டி வைத்துவிட்டு கடமையென வாழப் பழகிக் கொண்டான். அதிகமான நேரத்தைப் பள்ளியிற் கழிப்பது அவனுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

அன்றைக்கு முதலாவது பாடமே சாதாரண தரத்திற்குப் பாடம் எடுப்பதற்கு வந்திருந்தான். வழமைக்கு மாறாக அன்று மாணவர்கள் அனைவரும் சமூகம் அளித்திருந்ததைக் கண்டுகொள்ள முடிந்தது. பரீட்சைகள் ஆரம்பமாக இருந்ததால் அன்றைக்கு அனைவரும் வரவேண்டும் என்ற அவன் பெற்றோரிடம் தனிப்படச் சொல்லி அனுப்பியது பயனளித்தது என்று நினைத்தான்.

அவர்களுடைய கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் அவர்கள் படிப்பிற்கு முதலிடம் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் ஆசிரியர்கள் முறையான அறிவுரைகளை வழங்கும்போது அவர்கள் அதை செவி மடுக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டான்.

அன்றைய பாடத்தை ஆரம்பிப்பதற்கு முதற்படியாக அவன் ஒரு கணக்கைக் கொடுத்தான். அதைச் செய்துவிட்டு ஒவ்வொருவராக வந்து திருத்துவதற்குக் காட்டும்படி சொன்னான்.

இரண்டு பேர் உடனடியாகச் சரியாகச் செய்து காட்டிவிட்டனர். ஐந்து பேர் சிரமத்துக்கு மத்தியில் ஒருவரை ஒருவர் பார்த்தும் கேட்டும் அதைச் செய்து கொண்டு வந்து கொடுத்தார்கள். மிகுதி பத்துப் பேரும் செய்வது அறியாது திகைத்தவாறு நின்றார்கள். அவன் மெதுவாக எழுந்து சோக்கைக் கையில் எடுத்துக் கொண்டான்.

கொடுக்கப்பட்ட கேள்வியின் சுருக்கமான தரவுகளை கரும்பலகையிற் குறிக்குமாறு முதலில் செய்து காட்டியவனைக் கேட்டான். அவன் சென்று தரவுகளைக் குறித்துவிட்டு வந்து தன்னுடைய இடத்தில் உட்கார்ந்தான்.

கணக்குச் செய்யாத அந்த பத்துப் பேரையும் வகுப்பினுடைய முன்புறமாக வருமாறு சொன்னான். ஏற்கெனவே செய்து காட்டியவர்களுக்குத் தன்னுடைய பயிற்சிப் புத்தகத்தில் இருந்த அடுத்த கணக்கைக் காட்டி வாசித்துச் செய்யுமாறு சொல்லிவிட்டு அவர்களிடம் வந்து முதலாவது கணக்கை விளங்கப்படுத்தினான்.

அவன் சொல்லி முடித்ததும் ஆறு பேர் சரியாகச் செய்து விட்டார்கள். ஏனையோர் தொடர்ந்தும் சிரமப்பட்டார்கள். அவர்களுக்கு அருகில் சென்று அமர்ந்தவாறு ஆறுதலாகச் சொல்லிக் கொடுத்தான்.

இவ்வாறாக மூன்று விதமாக மாணவர்களைத் தரப்படுத்தி பாடத்தைச் சொல்லிக் கொடுத்தான். அவரவர் தரத்திற்கு தக்க மாதிரி வேறுபட்ட நேரத்தில் கணக்குகளைச் செய்து முடித்தனர்.

யாரும் சோர்வோ வெறுப்போ அடைந்ததாகத் தெரியவில்லை. தத்தமக்குரிய பாணியில் பாடத்தைச் செய்து கொண்டிருந்தனர். வகுப்பு முழுவதும் நடையைக் கட்டியவாறு அனைவரின் கொப்பிகளையும் ஆராய்ந்து கொண்டு வந்தான் அவன்.

தொடர்ந்து இரண்டு பாட வேளைகள் எடுக்கப்பட்டு பாடம் முடிவடையும் தறுவாயில் இருந்தது. மாணவர்களின் வேலைகளைப் பார்வையிட்டுக் கையெழுத்து இடவேண்டும் என்பது நினைவுக்கு வரவே மாணவர்களின் பாடக் கொப்பிகளை மேசைமீது அடுக்கி வைக்கச் சொன்னான். அவர்கள் கொண்டு வந்து அடுக்கியதும் ஒவ்வொன்றாகத் திருத்தத் தொடங்கியபோது தான் அவனை அதிபர் அழைப்பதாக இன்னொரு ஆசிரியர் சொல்லிவிட்டுப் போனார்.

மௌனமாக இருந்து பாடப்புத்தகத்தைப் படிக்கச் சொல்லி மாணவர்களைப் பணித்துவிட்டு அதிபரின் அலுவலகத்திற்குச் சென்றான் அவன்.

அவனையே எதிர்பார்த்திருப்பது போல வாசலில் நின்று கொண்டிருந்தார் அதிபர். அவரிடம் பதட்டம் காணப்பட்டதை அவனாலும் உணர முடிந்தது. இருந்தாலும் என்னவென்பதை ஊகிக்க முடியவில்லை. ஏற்கெனவே வந்து சென்ற இன்ஸ்பெக்ஷன் ரீம் எதுவும் சொல்லி இருக்குமோ என்று தனக்குள் சிந்தித்தான்.

“சேர் கூப்பிட்டீங்களா ...? “ என்று அருகில் வந்து கேட்டான்.

"ஓம்.. சேர்.. இப்படி வாங்கோ இருங்கோ" என்று அவனின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். அவனுக்கு ஏதோ வித்தியாசம் புரிந்தது.

"உங்கட மனுசி சுகமில்லாம இருந்தாவவா?..." என்று மெதுவாகக் கேட்டார்.

"ஓம் சேர்" என்றவன், 'இவருக்கு எப்பிடித் தெரியும்.? இவர் ஏன் இப்ப இதப் பற்றிக் கேக்கிறார்.?" என்று யோசித்தான்.

"அவவுக்கு ஏதோ உடம்பு சுகமில்ல போல இருக்கு. யாழ்ப்பாணத்தில பெரியாஸ்பத்திரியில சேத்திருக்கிறார்களாம். வவுனியாவுக்குப் போறதுக்கு வந்த என்ர சொந்தக்காரரிட்ட தகவல் சொல்லி அனுப்பி இருக்கிறாங்க. நீங்க போய்ப்பாத்து வாறது நல்லம்" என்று அதிபர் சொன்னார்.

அவர் சொல்லைக் கேட்டதும் திடீரென்று துணுக்குற்றான். அன்றைக்குக் காலையில் இருந்து வீட்டுக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் தீவிரமாக இருந்தது. போன வாரம் அவளிடம் இருந்து கடிதமும் வந்திருக்கவில்லை என்பதால் அவனும் குழம்பிக் கொண்டு இருந்தான்.

அப்பொழுது "பயப்பிடாதீங்க சேர். இந்த நேரத்தில பலயீனம் எல்லாம் வாறது தான். காச்சலாக்கூட இருக்கலாம் நீங்க பயப்பிடாம போய் வாங்கோ. உங்களுக்குக் கசுவல் லீவு எடுக்கலாம்" என்று தைரியமூட்டினார்.

உடனடியாக, விடுமுறை விண்ணப்பப் படிவத்தை எடுத்து பூரணப்படுத்தி நீட்டிவிட்டு தன்னுடைய இருப்பிடத்திற்கு விரைந்து சென்று அவசரமாகப் பையை அடுக்கி வைத்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டான்.

போகும் போதே யோசனையாக இருந்தது. இடையில் தான் ஒரு தடவையாவது போய்ப் பார்த்திருக்கலாம் என்ற எண்ணமே எழுந்தது. அவனுக்கு அந்த எண்ணம் இல்லாது போய்விட்டிருக்கவில்லை. புது வேலை சம்பந்தமான பயத்தினாலும், இந்த கிளாலிப் பாதையினூடாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடுச்சாமத்தில் போக வேண்டிய பயத்தினாலுமே தான் அவனாற் போக முடியவில்லை.

ஆனால் இன்று வைத்தியசாலைக்குக் கொண்டு போகுமளவிற்கு நிலை வந்துவிட்டதே என்று யோசித்தான்.

அவனின் அவசரமான நடையின் ஊடாகவே தான் கடந்து வந்த பாதை நினைவுக்கு வந்தது. அவளைச் சந்தித்த முதல் நாளை நினைத்துக் கொண்டான்.

பள்ளிப் பருவத்தில் ஏற்பட்ட காதலினால் படிப்பையும் தொலைத்துவிட்டு வாழ்க்கையே கேள்விக்குறி ஆகிவிட்டதாக அவன் வருந்திக் கொண்டிருந்த வேளை அது. நண்பர்களின் வற்புறுத்தலினால் தனியார் வகுப்புகளை நடத்தி ஓரளவு பணம் சேர்த்துக் கொண்டான்.

அவனின் கற்பித்தல் முறை பிரசித்தம் அடையத் தொடங்கியது. அவனிடம் வகுப்பிற்கு வந்து சேர்ந்த வண்ணம் மாணவர்கள் இருந்தனர். அவனால் அந்த நிலையத்திற்குப் பெயர் கிடைத்தது. கற்பித்தலில் தனக்கென ஒரு இடத்தை குறுகிய காலத்தில் பிடித்துக் கொண்டான்.

ஒருவன் வாழ்க்கையில் பிரயாசைப்பட்டு முன்னேறும்போது அதுவும் துன்பத்தைக் கடந்து தானாகக் கால் வைக்கும்போது அவனுடன் கூட இருப்பவர்களால் அவன் அங்கீகரிக்கப் படுகின்றான். அதுவும் ஆண்களில் அவ்வாறான நடவடிக்கைகளைக் காணும்போது அது பெரிய விடயமாகவே தோன்றும்.

அவனின் காதல் வாழ்க்கை ஏமாற்றப்பட்டது என்பதைத் தெரிந்து கொண்டும் அவனிடம் கல்வி கற்ற சாந்தி அவனை நேசிக்கத் தொடங்கினாள். அவனுக்கு அது தெரிந்திருந்தும் சாத்தியப்படாது என்ற எண்ணம் வந்ததால் அவளிடம் இருந்து விலகிப் போவதற்கே முயற்சி செய்தான்.

காதலில் ஈடுபட்டவர்களுக்கு உதவி செய்வதில் அவர்களுடைய நண்பர்கள் முனைப்பாக இருப்பார்கள். இவ்வாறே அவர்களின் நண்பர்கள் சாந்தியின் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு அவனிடம் சாந்தியைப் பற்றி நல்ல விதமாகவே சொல்லி வந்தார்கள். அவனின் காதலுக்குப் பிரச்சாரம் செய்தார்கள்.

அவனின் எண்ணம் அவ்வளவு சீக்கிரத்தில் மாற்றம் அடையவில்லை. அவன் படித்த காலத்தில் இருந்த காதல் பலருக்கும் தெரிய வந்து நகைப்புக்கு உள்ளானதால் மாணவியிடம் இருக்கும் காதலை வளர விடப்படாது என்று விரும்பினான். அவனாக சந்தர்ப்பங்களைத் தவிர்த்து கொண்டு வந்தான். இருப்பினும் பெண் ஒருத்தியுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து அத்தனை சீக்கிரத்தில் அவனால் விடுபட முடியவில்லை. அதனால் அவனையும் மீறி சாந்தியிடத்தில் பிரியம் உருவானது. ஆனால் வயது வித்தியாசம் காரணமாக அதைத் தன்னுடைய பெற்றோருக்குத் தெரிவிக்க முடியவில்லை.

வேலை விடயத்தில் நிரந்தரமான ஒரு நிலையை அடைந்திராத காரணத்தால் திருமணத்தைப் பற்றி அவனால் எண்ணவே முடியவில்லை. முதலாவது காதலைப் போன்றே இந்த வாழ்க்கையையும் இழந்து விடுவேனோ என்று தவிக்கத் தொடங்கினான். அந்த நிலையில் இந்த நாட்டின் மீதே அவனுக்கு வெறுப்பு வந்தது.

உயர்தரப் பரீட்சையில் தேறாவிட்டால் வாழ்க்கையே இல்லை என்றல்லவா இந்த நாட்டின் நிலைமை இருக்கிறது. அப்படியானால் பத்தொன்பது வயது வரையிலும் படிக்கும் அனைத்தும் அவமாகி விடுமா? பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தால் மட்டுமே அல்லது கல்வியிற் கல்லூரியில் நுழைந்தால் மட்டுமே எதிர்காலம் இருக்கின்றது என்றல்லவா இருக்கின்றது என்று சலித்துக் கொண்டான்.

அவன் ஒரு வேலையைத் தேடியாக வேண்டும். இல்லாது போனால் திருமணம் செய்து கொள்ள முடியாது என்றவாறு தன்னுடைய நிலைமை இருக்கிறது என்று நினைத்தான். வாழ்க்கையைப் பற்றிய எந்தவிதமான நம்பிக்கையும் அவனுக்கு எழுவதாக இல்லை.

ஆனால் அவனுடைய நண்பர்களும் சாந்தியும் இரு பகுதியினரையும் தெளிய வைத்து திருமணத்தை ஆயத்தப்படுத்தி விட்டார்கள். எந்தக் காலத்திலும் நிரந்தர உத்தியோகத்தைத் தேடிக் கொள்ளலாம் என்று தைரியப்படுத்தி அவர்களின் திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

அவனுக்கு முதலாவது தடவையாக வாழ்க்கையில் வெற்றி ஏற்பட்டதைப் போன்று இருந்தது. தன்னுடைய குடும்பத்தையும் கற்பித்தல் வகுப்புகளையும் கவனமாகவே பராமரித்து வந்தான்.

அந்த நேரத்தில் ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நடைபெற்று அதில் சித்தியும் அவனுக்குக் கிடைத்தது. மனைவி வந்த அதிஷ்டமே என்று அனைவரும் வாயார வாழ்த்தி நின்றார்கள். ஆனால் முதலாவது பாடசாலையாக கிளிநொச்சியிற் கிடைத்தபோது அவர்களுக்குள் மீண்டும் கவலை எட்டிப் பார்த்தது.

அருமையாகக் கிடைத்த வேலையையும் விட்டுவிட முடியவில்லை. அதே நேரம் சொகுசான வாழ்க்கைக்கு அடிமையாகிய அவர்களுக்கு கஷ்டப் பிரதேசத்திற்கு அவன் செல்வதிலும் விருப்பம் இருக்கவில்லை. அதைவிடவும் மனைவியை விட்டுப் பிரிந்து தூரத்திற்குப் போகவும் விரும்பவில்லை. போவதா விடுவதா என்ற போராட்டங்களுடனும் ஓரிரு தினங்களைக் கடத்த வேண்டியிருந்தது.

"இந்த வேலை வேண்டாம். நீ எங்களுடனேயே இரு. இன்னொரு சந்தர்ப்பத்தில வேலை கிடைக்காமலா போயிடும். எங்கள விட்டுத் தூரப் போகாதப்பா" என்று அம்மா அழாத குறையாகக் கெஞ்சத் தொடங்கினார்.

அவனுக்கு தூரப் போவதற்கு மனம் இல்லாது போனாலும் தனது எதிர்காலத்தைப் பற்றிய பயம் இருந்தது. தனது திருமணம் முடிந்து இந்த ஒன்றரை வருட காலத்தில் அவன் என்ன வேலை என்று கேட்ட பலருக்குப் பதில் சரியாகச் சொல்ல முடியாது அவனும் மனைவியும் அவளின் குடும்பத்தாரும் திணறியது அவனுக்குள் பதிந்து இருந்தது.

சந்தர்ப்பம் என்பது ஒரு தடவை என்பதை உயர்தரத்திலே உணர்ந்து கொண்டவன் அவன். அதனால் மற்றவர்கள் சொல்லுவதைப் போன்று இன்னொரு தடவை என்பதை அவன் கனவிலும் நினைக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்று எண்ணினான். அந்த எண்ணத்தினாலேயே அத்தனை துன்பங்களையும் கடந்து அந்த இடத்திற்கு வந்தான்.

எத்தனையோ சிரமங்களை அனுபவித்த போதும் அந்த இடத்தின் எளிமையை ரசித்தபடித் தனது வாழ்க்கையைக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தான். அடிக்கடி மனைவியைப் பார்ப்பதற்குச் சென்றால் அவளுக்கும் கவலையாக இருக்கும் என்ற யோசனையினாலே அவன் அடிக்கடி வீட்டுக்குச் செல்லவும் இல்லை.

அவனுக்குக் குழந்தை கிடைக்கப் போவதாகச் சொல்லி அவள் எழுதியிருந்த நேரத்திலும் அங்கு போய்வர அவன் நினைக்கவில்லை. மனைவியின் நிலை அவனைக் கட்டுப்படுத்தி அந்த இடத்திற்கு வரவிடாமற் செய்துவிடும் என்ற பயம் அவனிடத்தில் இருந்தது.

ஆனால் அந்தத் தனிமை சாந்தியைப் பாதித்து இருக்கின்றது என்பது அப்போது அவனுக்குப் பரிந்தது. அதனாலே அவள் நோயாளி ஆகிவிட்டாளோ என்று யோசித்தான்.

அன்றைக்கு அவள் எழுதிய கடிதத்தைப் பார்த்தபோதே அவளும் அம்மாவும் தன்னை நினைத்துக் கவலைப்படுவது தெரிந்தது. இருந்தும் அவர்களுக்கு நம்பிக்கை வரும்படியாக எதனையும் செய்யாமல் தானும் கவனக் குறைவாக இருந்து விட்டேனே என்று கவலைப்பட்டான்.

என்ன இருந்தாலும் அவள் சுகம் இல்லாமல் இருக்கும்போது ஒரு எட்டுப் பார்த்துவிட்டு வந்திருக்கலாம். தனியாக இருந்து பலதையும் சிந்தித்து நோயாளி ஆகிவிட்டாள் என்று நினைத்தான்.

அவனுக்குத் தன்னுடைய பையைத் தூக்கிக் கொண்டு நடக்கவும் முடியாது இருப்பதைப் போன்று இருந்தது. நீண்ட நாட்களின் பின்பு துக்கம் தொண்டையை அடைப்பதைப் போல இருந்தது.

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் அளவிற்கு என்ன நடந்திருக்கும் என்று அவனுடைய மனம் மாறி மாறிக் கேட்டுக் கொண்டது. மாதக் கணக்குக் கூட இல்லையே. இன்னும் நிறை மாதம் ஆகவில்லையே அதற்குள் என்ன நடந்திருக்கும் என்று யோசித்தான்.

அவனின் அறிவுக்கு எட்டிய வரையில் எதுவும் புலனாகவில்லை. சாதாரணமாக ஏற்படும் தலை சுற்றுதல், மயக்கம் போன்றவை அல்ல. இது சற்றுப் பாரதூரமான விடயம் என்பதை அவனுடைய மனம் மறுபடியும் சொல்லிக் கொண்டது.

மேற்கொண்டு எதுவும் நடந்து விடக்கூடாது என்று அவனின் மனம் வேண்டிக் கொண்டது.

# 19

மனதைப் போன்று வேகமாகப் படகுத் துறைக்கு வந்தபோதும் அந்த நேரத்தில் படகுகளைக் காண முடியவில்லை. நடுநிசியிலே படகு விடுவார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் அவனுக்கு மேலும் படபடக்கத் தொடங்கியது.

அத்தனை அவசரமாகப் புறப்பட்டும் பயனற்றது ஆகிவிட்டதே. அவனுடைய மனைவியின் முகத்தைக் காண எவ்வளவு நேரமாகுமோ என்று கவலை எழுந்தது. முதலாவது தடவையாக தன்னுடைய பிறவியிலேயே அவனுக்கு எரிச்சல் வந்தது. அவனது எதிர்காலம் அவனைப் பாரத்துச் சிரித்தது.

வாழ்க்கையில் நல்ல சந்தர்ப்பங்கள் அனைத்தையும் வெகுளியாகத் தவறவிட்டுப் பிறகு போன வாகனத்திற்குக் கையைக் காட்டுவதைப் போன்று இருந்தது. இளமையில் செய்த ஒரு சிறு பிழை எத்தனை நன்மைகளைப் பிடுங்கிவிட்டது என்று நினைத்தான்.

அவனை மேலும் கலவரப்படுத்துமாறு பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. பதட்டத்துடன் அவசரமாக வந்ததில் இடையில் எதுவும் சாப்பிட்டு இருக்கவில்லை என்பதை வயிறு அவனுக்கு ஞாபகப்படுத்தியது. அருகில் இருந்த கடைகளில் சென்று எதுவும் இருக்கிறதா என்று பார்த்து வருவதற்குச் சென்றான்.

வெளிநாட்டுக்குப் பயணம் செய்யும்போது விமான நிலையத்தில் வைத்து விற்பதைப் போன்று அங்கிருந்தவர்களின் முகபாவம் இருந்தது. தாங்களும் ஒரே மொழியைப் பேசுபவர்கள் என்பதையும் மறந்து யாருக்கோ பேரம் பேசி விற்பதைப் போன்று விற்றுக் கொண்டிருந்தனர்.

ஒரு பணிசும் ஒரு பிளேன் டீயும் வாங்கிக் கொள்ள அவன் கொடுத்த காசு ஒரு உடையை யாழ்ப்பாணத்தில் வாங்கிக் கொள்வதற்குப் போதுமானதாக இருந்தது. அவர்களிடம் பேரம் பேச முடியுமாகத் தெரியவில்லை. 'வாங்கிக் கொள்வதானால் வாங்கு இல்லாவிட்டால் தள்ளி நில்லு' என்பதைப் போன்று அவர்களின் பாவனை இருந்தது.

தன்னந்தனியாக இந்த இடத்தைக் கடந்து ஊருக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற எண்ணத்தினால் அவர்களிடம் பேரம் பேசவில்லை. மௌனமாக ஒரு புறமாக நின்று சாப்பிட்டவாறே அவர்களைக் கவனித்தான். ஒரு வருடத்திற்குள் பணக்காரராக மாறக்கூடிய திறமை அவர்களிடம் காணப்பட்டது.

இந்த யுத்தம் பல பேருக்கு சந்தர்ப்பத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை அவன் உணர்ந்து கொண்டான். எந்தவிதமான நிலைமையையும் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளப் பழகிய எமது சமுதாயத்தினர் இந்த சந்தர்ப்பத்தை நன்றாகவே பயன்படுத்துகின்றனர் என்பது கண்முன்னே தெளிவானது.

அவர்களைச் சபிக்க எண்ணினாலும் வயிற்றுக்குட் சென்ற உணவு சமிபாடு அடையாத காரணத்தினால் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே என்று சிறு வயதில் கற்ற கல்வி முன்னால் வந்து நிற்கவும் புன்னகைத்துவிட்டு அப்பால் சென்றான்.

அடுத்து படகில் செல்வதற்காக மக்கள் காத்திருந்த வரிசையிற் சென்று தானும் இணைந்து கொண்டான். இரவு பதினொரு மணியளவில் ஆரம்பமாகும் சேவைக்கு பின்னேரம் ஐந்து மணியளவிலே வரிசை ஆரம்பித்து விடுகின்றது. அவ்வரிசையில் சில வேளைகளில் மனிதர்களைப் போன்று பொதிப்பைகளும் செயற்படும்.

பொதிப்பைகளுக்கு அந்தக் காலத்தில் இருந்த மதிப்பு அலாதியானது. யாராவது கையை நீட்டிக் கொடுத்தாலும் பரீட்சிக்காது எந்தப் பொருளையும் கையாற் தீண்டுவதில்லை என்று இலங்கையர் சபதம் எடுத்துக் கொண்ட காலம் அது.

பொதியின் ரூபத்திலும் இயமனின் பிரவேசம் இருக்கும் என்பதை நிரூபித்த காலம் அது. இதனால் மனிதருக்குக் கொடுக்கும் அதே மதிப்பு பொதிகளுக்கும் வழங்கப்பட்டது. தனக்கு முன்னால் அவை இருந்தபடியால் அவதானமாக சற்றுத் தள்ளியே நின்றான் அவன்.

படிப்படியாக வரிசை முன்னேறத் தோடங்கியது. பொதிப்பைகள் இருந்த இடத்தில் மக்களின் தலைகள் முளைக்க ஆரம்பித்தன. அதைத் தவிரவும் தனக்கு முன்னாலே நிற்கும் மக்களின் தொகை சில வேளைகளில் இரட்டிப்பாகக்கூடத் தெரிந்தது அவனுக்கு.

சரிதான் எங்க போனாலும் தங்களுடைய சின்னத்தனமாக செயல்களைக் காட்டும் எம்மக்களின் எண்ண நேர்மாறாட்டத்தின் விளைவு அது என்பது புரிந்தது. ஆனாலும் அவர்களிடம் என்ன சொல்வது? அவர்கள் எதனையும் கேட்டுக் கொள்பவர்கள் அல்லவே என்ற எண்ணத்தில் மௌனமாகவே பார்த்துக் கொண்டு நின்றான்.

அவனுடைய முறை வந்தது. அவனுடைய பைகள் ஏற்றப்பட்டன. படகுகள் கடலை நோக்கி நகர ஆரம்பித்தன. வழமை போன்றே வாண வேடிக்கைகளும் ஆரம்பித்தன.

உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு ஓட்டப் போட்டியிற் பங்குகொள்ளும் நினைவுதான் அனைவருக்கும் இருந்தாலும் முதல் தடவையாக அனைவருடனும் ஒன்றாக ஓடும் தமிழ் மக்களைப் பார்க்க முடிந்தது.

நடுக் கடலில் நடுநிசியில் இயமனுடன் போராடிக் கொண்டு ஓடிய அந்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது. படகுகள் கரையை நோக்கி வந்தன. வழமை போன்றே முண்டியடித்துக் கொண்டு ஒவ்வொருவரும் இறங்க முற்பட்டனர்.

தன்னுடைய முறைக்காகக் காவல் இருந்த அவன், ஏதோவொரு இடைவேளையைப் பிடித்து இறங்கிக் கொண்டான். அவனுடைய பை கடல் நீரில் நனைந்திருந்தாலும் பெரிய சேதமின்றி அவனுக்குக் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு ஊரை நோக்கி விரைந்தான்.

நடு இரவில் கிளாலிப் பாதையைக் கடந்து அதிகாலையில் யாழ்ப்பாணத்திற்குச் சென்றுவிட்ட அவன், நேராகவே மாமியாரின் அதாவது மனைவியின் தாயின் வீட்டுக்கு வந்தான்.

காலையில் மகளைப் பார்க்கப் போவதற்காக அதிகாலையிலேயே எழுந்து, ஆயத்தமாகிக் கொண்டிருந்த மாமியார் வந்து கதவைத் திறந்தார். அவனைக் கண்டதும் அவர் திடுக்கிட்ட கோலத்தைப் பார்க்கும் போதே அவனுக்கு ஏதோ புரிந்தது.

"சாந்திக்கு என்ன நடந்தது. எதுக்காக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனனீங்க?" என்று கேட்டான்.

"தம்பி மூண்டு நாளைக்கு முதல் அவளுக்கு சாதுவான பிலீடிங் இருந்துது. நாங்க அதப் பெரிசு படுத்தேல்ல. முந்த நாள் பின்னேரத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அதுக்குப் பிறகும் வச்சிருக்கக்கூடாது எண்டுதான் உடனேயே கொண்டு போயிட்டம்." என்று சொன்னார்.

கருச்சிதைவாக இருக்குமோ என்ற எண்ணம் எழுந்தபோது, அவனுக்குக் கவலை தோன்றியது. மாதக்கணக்கு வேறு நாலு மாதத்தையும் தாண்டிவிட்டதே. இந்நிலையில் கருச்சிதைவு ஏற்பட்டால் அது தாய்க்கும் ஆபத்தாக அல்லவா முடியும்.

உடனடியாக வைத்தியசாலைக்குப் புறப்பட்டான். மற்றைய பொருட்களை எடுத்துக் கொண்டு மாமியாரை பின்னதாக வரச் செல்லிவிட்டு அவசர அவசரமாகவே வைத்தியசாலைக்குச் சென்றான்.

நீண்ட காலமாக அங்கு வந்திருக்காத காரணத்தினால், எந்த வழியாகப் போகவேண்டும் என்றும் தெரிந்திருக்கவில்லை. அங்கு நின்று கொண்டிருந்த தாதியொருவரிடம் கேட்டறிந்து கொண்டு அவளின் இடத்திற்கு வந்தான்.

சேலைன் போடப்பட்டபடி மயக்க நிலையில் அவள் இருந்தாள். அவளைச் சுற்றி வைத்தியர்களும் தாதிமாரும் நின்று கொண்டிருந்தனர். பார்வையாளர் நேரம் தொடங்குவதற்கு முன்பதாக வந்துவிட்டதால், அவர்கள் கோபித்துக் கொண்டுவிடப் போகிறார்கள் என்றெண்ணிய அவன் வெளியேற நினைத்துத் திரும்பினான்.

அவனை அனுமானித்துக் கொண்ட தாதியொருவர் அவனை வரவழைத்து வைத்தியரிடம் சொன்னாள்.

அவனை மேலும் கீழுமாக நன்றாக நோக்கிய அவர் மெதுவாகப் பேசத் தொடங்கினார்.

"நீங்க கல்யாணம் செய்து எவ்வளவு காலம்?" என்று கேட்டார்

“ரெண்டு வருஷமாகுது” என்றான் அவன். அவர் எதற்குக் கேட்கின்றார் என்பது அவனுக்குப் புரியவில்லை.

“பிள்ளைகள் இல்லையா?” என்று கேட்டார்.

“இல்ல. டொக்டர். இப்பத்தான் நாலு மாதமா “ என்று அவன் சொல்லத் தொடங்கவும்,

“அது பிள்ளையில்ல.. கட்டி.. உள்ளுக்குள்ளாவே பிளாஸ்ட் ஆகப் போற நிலையில இருக்கு. உடனடியா ஒப்பரேஷன் செய்ய வேணும்” என்று வைத்தியர் சொல்லவும், அவன் ஆடிப் போனான்.

குழந்தை தங்கியிருக்கவில்லை என்ற துன்பம் ஒரு புறமிருக்க, உயிருக்கு ஆபத்தான நிலையின் அன்பு மனைவி, நினைவில்லாமல் இருக்கிறாளே என்ற நினைப்பும் சேர்ந்து அவனை அலைக்கழித்தது. அவனுடைய சகோதரிகள், அவளுடைய சகோதரர்கள் அனைவரும் பிள்ளைகளைப் பெற்று சேமமாக இருக்கும்போது தனக்கு மட்டும் ஏன் இவ்வாறு நடந்தது என்று கவலைப்பட்டான்.

எல்லோருக்கும் கிடைப்பதைப் போன்று வெகு சாதாரணமாகக் கிடைக்கும் விடயங்கள் தானும் தனக்கு அமையவில்லையே என்று யோசித்தான். தான் என்ன பிழை செய்திருப்பேனோ என்று வருத்தப்படத் தொடங்கினான்

அவனுடைய சகோதரிகள் மூவர் திருமணம் செய்து சிறிது காலத்திற்கு உள்ளாகவே குழந்தைகளைப் பெற்று நன்றாக வாழ்கின்றார்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் எதுவித குறைகளும் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் தனக்கு மட்டும் தொடர்ந்து துன்பம் வருவது ஏன் என்று புரியவில்லை.

குழந்தை தங்கியிருப்பதாக மனைவி சொல்லியபோது சந்தோசம் அடைந்தானே தவிர, பயப்படவில்லை. மகப்பேறு என்பது அவர்களுடைய குடும்பத்தில் பயப்படத் தக்க விடயம் அல்லவே. அதைத் தவிரவும் கருப்பை சம்பந்தமான பிரச்சினைகள் எதுவும் அவளின் குடும்பத்திலோ அவனின் குடும்பத்திலோ யாருக்கும் இருக்கவில்லை.

பொதுவாக இவ்வாறான விடயங்கள் பரம்பரையாகக் கடத்தப்படுபவை என்பதை அவன் கேள்விப்பட்டு இருக்கிறான். ஆனால் வைத்தியர் வாயால் அவன் கேள்விப்பட்ட விடயம் அவனை நிலைகுலையச் செய்தது. எந்த ஒரு விடயத்தையும் சிந்திக்க முடியவில்லை.

ஒப்பரேஷன் நல்லபடியாகவே முடிந்து, அவள் பழையபடி இயங்க வேண்டுமே என்ற கவலையும் சூழ்ந்து கொண்டது. அவர்கள் கொடுத்த படிவங்களிற் கையொப்பமிட்டு விட்டு வெளியில் வந்து நின்றபோது உலகமே இருட்டடைவது போல இருந்தது.

எத்தனை துன்பங்கள் வந்தபோதும் அவற்றைத் தட்டிவிட்டு சிரித்த முகத்துடன் உலாவரும் அவனைத் தொடர்ந்து சோதிப்பதாக இருந்தது அவனுக்கு என்னவோ போல இருந்தது.

ஒவ்வொரு விடயங்களையும் காட்டிவிட்டுத் தட்டிப் பறிப்பது போல இருந்தது. கிளிநொச்சியில் காதலியின் சாயலில் ஒருத்தியைப் பார்த்து ஆசைப்பட வைத்துவிட்டுத் தன்னிடம் இருந்து தட்டிப்பறித்தது விதி.

நீண்ட நாட்களின் பின் குழந்தை தங்கியது என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் போது குழந்தையே இல்லை கட்டியென்றும் மனைவியின் உயிருக்குக்கூட கெடு வைத்திருக்கும் தன் விதியை நினைத்த போது தன் பிறவியின் மீதே தனக்குக் கோபம் கோபமாக வந்தது.

தான் கெட்டவன். சிறு வயதிலேயே கெட்டுப் போனவன். அதனாலே சங்கிலித் தொடராகத் துன்பத்தை அனுபவிக்க வேண்டியவன். ஆனால் இந்தப் பெண் என்ன செய்தாள்? என்னைக் கல்யாணம் செய்து கொண்டதனால் இவ்வாறு துன்பத்தை அனுபவிக்கிறாளே என்று எண்ணித் துடித்துக் கொண்டிருந்தான்.

தான் திருமணம் செய்து கொண்டதே பிழையாகப் போய்விட்டதோ என்ற எண்ணம் தோன்றி அவனை அலைக் கழித்தது. ஒரு விடயம் கையில் இருந்து தட்டுப்படும் போது அதை முழுவதுமாக விட்டுவிட வேண்டும் என்று கடவுள் சொல்லுகின்றாரோ என்று அவன் யோசித்தான்.

ஆனால் சாந்தியின் விடயத்தில் அவன் தெரிந்து எந்தப் பிழையும் விட்டிருக்கவில்லை. அவள் தன்னை விரும்புகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டதும் அவளிடம் இருந்து ஒதுங்கி விடவே முயற்சி செய்தான். அப்பொழுது இருந்த மன நிலையில் திருமணமே வேண்டாம் என்ற முடிவில் அவன் தீவிரமாகவே இருந்தான்.

ஆனால் சாந்தியும் அவனுடைய நண்பர்களும் வற்புறுத்தியதன் பேரில் சாந்தியின் காதல் அங்கு பகிரங்கப்படுத்தப் பட்டதால் அவளின் பெயரைக் கெடுத்துவிடக் கூடாது என்பதற்காக தன்னுடைய மனதை மாற்றிக் கொண்டு திருமணத்திற்குச் சம்மதித்தான்.

தனக்கு வேலை இல்லாத காரணத்தினாலும் தன்னுடைய இறந்த காலத்தைப் பற்றி அங்குள்ள அனைவரும் அறிந்து வைத்திருந்ததாலும் சாந்தியிடம் இருந்து வரதட்சணை எவற்றையும் அவன் வாங்கி இருக்கவில்லை. அதை விடவும் மாமனார் வீட்டு மரியாதை என்று எதையும் எதிர்பாராமல் எளிமையாகவே நடந்து வந்தான்.

ஆனால் அவனின் நடவடிக்கைகளால் அவர்களுக்கு அவனில் மதிப்பு ஏற்பட்டது. அவர்கள் வற்புறுத்தி அழைக்கும் ஒரு சில விழாக்களுக்கு அவன் மனைவியையும் அழைத்துக் கொண்டு சென்று வந்ததுண்டு. இருப்பினும் பலர் கூடும் இடங்களில் சேர்ந்து நின்று அவன் கதைத்ததில்லை.

சாந்தியையும் அவன் ஒடுக்கு முறையால் அடக்கி வைத்திருக்கவில்லை. அவள் விரும்பிய பொழுதில் எல்லாம் அன்னையின் வீட்டுக்குப் போகும் அனுமதி அவளுக்கு இருந்தது. தன்னுடைய வீட்டில் அவள் இருக்கும் நேரத்திலும் சகோதரிகள் மிகவும் மரியாதையாகவே நடந்து கொண்டார்கள்.

அவனுடைய குடும்பத்தைப் பொறுத்த வரையிலும் அவளை தேவதையாகவே நடத்தினர். அவளும் சந்தோசமாகவே வாழ்ந்தாள். இருப்பினும் இரண்டு வருடங்களாக குழந்தை தங்கி இருக்கவில்லை.

அதன்போது அவனுக்குள்ளும் உறுத்தல் இருந்தது. மற்றையவர்களின் சொற்கள் அவளைக் காயப்படுத்துவதற்கு முன்பாக அவனாக அவளை அழைத்துக் கொண்டு வைத்தியரிடம் சென்றான். அவர்களோ எந்தப் பிரச்சினையும் இல்லை. குழந்தை கிடைக்கும் என்று சொன்னார்கள்.

அவளும் அவனுமாகக் கோயில்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தார்கள். கடவுளின் கண்பார்வை தங்களின் குறையைத் தீர்க்க வேண்டும் என்று விரும்பினார்கள். அது நிச்சயமாகத் தீர்க்கப்படும் என்று நம்பினார்கள்.

அவன் கிளிநொச்சிக்குப் புறப்பட்ட வேளையிலும் அவளை அம்மாவின் வீட்டில் விட்டுவிட்டு சென்றான். அவன் இல்லாத வேளையில் யாராவது அவளைக் காயப்படுத்தல் ஆகாது என்று நினைத்தான். அதே வேளையில் இனிப்பான செய்திகளையே மனைவியும் எழுதியிருந்தாள்.

ஆனால் இன்று அனைத்தும் தலை கீழாக மாறிவிட்டதே. கட்டியை அவசரமாக எடுக்கவேண்டும் இல்லாவிட்டால் ஆபத்து என்று சொல்கிறார்களே. ஐயோ.. அவளுக்கு எதுவும் கஷ்டம் வரக்கூடாது.

'ஆண்டவனே அவளைத் தண்டித்து விடாதே. நீ கொடுக்க விரும்பும் தண்டனையை எனக்குக் கொடு' என்று கதற வேண்டும் போல இருந்தது. தான் இருக்கும் இடத்தையும் மறந்து கண்கள் நீரைப் பொழிந்தன.

"டொக்ரர் என்ன சொன்னார் தம்பி." பின்புறமாக இருந்து மாமியாரின் குரலைக் கேட்டதும் தன்னை சுதாகரித்துக் கொண்டான் அவன். குரலைத் திருத்திக் கொண்டு வாயைத் திறந்தான்

"ஓப்பரேஷன் செய்ய வேணுமாம். தியேட்டருக்குக் கொண்டு போயிட்டினம்" என்றான் மெல்லிய குரலில்.

"ஒப்பரேஷனா ..?"என்று கேட்ட மாமியாரின் குரல் தளதளத்ததால் பின்னாலே திரும்பிப் பார்க்கவும் திறனற்றவனாகி கால்களால் முன் நோக்கி நடந்தான். ஒப்பரேசன் தியேட்டருக்கு முன்னால் இருந்த பெஞ்சில் அமர்ந்து கொண்டு வாசலை நோக்கியபடி காத்துக் கிடந்தான்.

# 20

அன்று காலையில் நித்திரை விட்டெழுந்த போதே வீடு துப்புரவாக கழுவப்பட்டு இருந்தது தெரிந்தது. சாம்பிராணியின் வாசனையும் பன்னீரின் மணமும் படுத்துக் கொண்டிருந்த அவனின் மூக்கினுள் நுழைந்து அவனைப் பரவசம் அடையச் செய்தன.

மூடிய விழிகளைத் திறக்காமல் படுத்திருந்தவாறே அன்று என்ன விசேடம் என்பதை சித்திக்கத் தொடங்கினான் அவன். வருடம், தீபாவளி, தைப்பொங்கல், தைப் பூசம் என்று எந்தவொரு நாளும் அவனுடைய நினைவில் படவில்லை.

படுக்கையில் எழும்பி இருந்தவாறே கைகளை நீட்டி சோம்பல் முறித்தான். வழக்கமாக கட்டிலுக்கு மனைவி கொண்டு வரும் பெட் கோப்பியைக் காணோம். ஓ... ஏதோ விசேடம் அல்லவா.. குளித்தால்தான் கோப்பி கிடைக்கும் என்ற ஞாபகம் வந்ததும், எழுந்து துவாயையும் எடுத்துக் கொண்டு குளியலறைக்குட் சென்றான்.

அன்று தண்ணீர் குளிராக இருப்பதைப் போன்று காணப்பட்டதால் பொய்லரில் வெந்நீரைப் போட்டு நன்றாக நீராடிவிட்டு தலையைத் துடைத்தவாறு வீட்டுக்கு முன்புறமாக வந்தான். அப்போதும் சாந்தியைக் காணவில்லை.

'எங்கு போயிருப்பாள்? இன்று என்ன விசேஷம் கொண்டாடுகிறாள் எனக்குத் தெரியாமலே' என்று எண்ணியவாறு சமையலறைப் பக்கமாக வந்தான்.

நீராடி, தனது நீண்ட கூந்தலுக்கு துவாயைச் சுற்றிக் கொண்டு புதிய டிரெஸ்ஸிங் கவுணைப் போட்டுக் கொண்டு அவசர அவசரமாக சமைத்துக் கொண்டிருந்தாள் அவள். சமையலறைக்குள் எட்டிப் பார்த்தவாறு "ஹப்பி பேர்த் டே" என்றான் அவன்.

"பேர்த் டேயா எனக்கா" என்று திகைத்த அவள் சமாளித்து "அதை சுவாமி அறைக்குள்ள இருக்கிற கண்ணனுக்குப் போய்ச் சொல்லுங்கோ" என்றாள்.

"ஏன் இண்டைக்கு அவருக்கு பேர்த் டேயா" என்று அவன் கேட்டான்.

"ஓம் இண்டைக்குக் கிருஷ்ண ஜெயந்தி. கிருஷ்ணர் கோகுலத்தில் பிறந்த நாள். அதனாலதான் வீடு, வாசலைச் சுத்தப்படுத்தி, இனிப்புப் பண்டங்கள் செய்து கொண்டிருக்கிறன்" என்று அவள் சொன்னாள்.

"எங்கட வீட்டில எல்லாம் இப்பிடி கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடினதில்ல. மச்சம் சமைக்க மாட்டம். கோயிலுக்குப் போய்க் கும்பிட்டு வருவம். ஆனா நீர் என்ன அசத்துறீர்" என்று அவன் உண்மையான ஆச்சரியத்துடன் கேட்டான்.

"என்ர அண்ணாமார் பிறக்கிறதுக்கு முதல் வருஷங்களில அம்மா இப்பிடித்தான் கிருஷ்ண ஜெயந்தியை சிறப்பாக் கொண்டாடினவாம். அதினாலதான் அவங்க பிறந்தாங்க எண்டு அம்மா அடிக்கடி சொல்லுவாங்க. எங்களுக்கும் கல்யாணம் நடந்து ஒரு வருஷம் ஆகுது. இந்தத் தடவை இப்பிடிச் செய் எண்டு அம்மாதான் சொன்னா" என்று நாணத்துடனே சொன்னாள் அவள்.

அவர்களின் எதிர்பார்ப்பு என்ன என்பது அவனுக்கு விளங்கிவிட்டது. மனைவியை அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று வரலாம் என்று தனக்கு எழுந்த எண்ணத்தைச் சொன்னான். அவளும் அவனுக்கு கோப்பி கலந்து கொடுத்து விட்டுக் கோயிலுக்குப் புறப்பட்டாள்.

கோயிலுக்குப் போய்த் திரும்பியபோது நேரம் பதினொரு மணியாகிவிட்டது. கடவுளுக்குப் படைப்பதற்கு பண்டங்களை ஆயத்தப் படுத்துவதற்கு மனைவி சென்றாள் கால்களைக் கழுவிவிட்டு அவனும் சுவாமி அறைக்குள் நுழைந்தான்.

தூப, தீபங்களைக் காட்டி மலர்களால் அர்ச்சித்து விட்டு கண்களை மூடி கடவுளை வணங்கினார்கள். தனித்தனி உடலாக இருந்த போதும் அவர்கள் பொதுவாக வேண்டிய வரம் ஆண்டவனின் காதுகளில் விழுந்தது. அவன் மெய்ம்மறந்து வணங்கிக் கொண்டு இருந்தபோது அவள் தன்னுடைய பிரார்த்தனையை முடித்து வெளியில் வந்தாள்.

வழிபாட்டை முடித்துவிட்டு அறைக் கதவைச் சாத்திவிட்டு வெளியில் வந்தபோது வாசலை நோக்கி இருந்த அந்தக் காலடித் தடங்கள் அவனின் விழிகளிற் பட்டன. ஒரு வயதுப் பள்ளையின் காலடித் தடத்தைப் போன்று மாவினால் போடப்பட்ட அந்த உருவம் அவனின் கருத்தைக் கவர்ந்தது.

வீட்டின் முன்புற வாசல் வரையிலும் அவ்வாறு கோலம் போட்டுக் கொண்டு அவள் செல்வதை அவன் அவதானித்தான். அவளின் அருகில் நின்று கொண்டிருந்த அம்மா அதைப் பார்த்துக் கதைத்துக் கொண்டிருந்தாள்.

"என்ன சாந்தி கோலம் எல்லாம் போட்டு அசத்துறீர்?" என்று இவன் கேட்கவும் அவள் தலையைத் திருப்பி சிரித்தாள்.

"கிருஷ்ண ஜெயந்தி நாளில இப்படிக் கோலம் போட்டால் கிருஷ்ணன் வந்து பிறப்பான் எண்டது நம்பிக்கை. நீ வேணுமெண்டாப் பார். அடுத்த வருஷத்துக்குள்ள குட்டிக் கண்ணன் வருவான்" என்று சொல்லிவிட்டு அம்மா சென்று விட்டதும் நாணியபடி நின்ற மனைவியைப் பார்த்தான்.

இன்று நடந்ததைப் போன்று நினைவிற் தோன்றி மறைந்த அந்த விடயம் சென்றுவிடவும் வைத்தியசாலையின் ஆரவாரம் காதுகளில் விழத் தொடங்கியது. ஒப்பரேஷன் தியேட்டருக்கு முன்பாக நிறைய நேரம் காவல் இருக்கிறேன் என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

அவனுடைய மனைவியை உள்ளே கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பது நினைவில் வந்ததும் மனது கனக்கின்றது.

வெளியிலே காத்துக் கிடந்தவனுக்கு ஒவ்வொரு நிமிடங்களும் யுகங்களாக விசுவரூபம் எடுத்துக் கொண்டிருந்தன. சரியாக இரண்டு மணி நேரத்திற்குப் பின் சத்திர சிகிச்சையை முடித்துவிட்டு மகப் பேற்று வைத்திய நிபுணர் வெளியே வந்தார்.

வெளியே துன்பத்தின் உருவமாக நின்று அவரை நோக்கிக் கொண்டிருந்த அவனைப் பார்த்தார். நடந்து போய்க் கொண்டிருந்த அவர் திருப்பிக் கொண்டு அவனிடம் வந்தார்.

"இன்னும் நாலு மணித்தியாலத்தில் அவவுக்கு மயக்கம் தெளிந்துவிடும். அதுக்குப் பிறகு நீங்கள் கதைக்கலாம்" என்று சொன்ன அவர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அவ்வாறு சொன்னார்.

அவர் சொல்லியபோது விகாரமாகப் போய்க் கொண்டிருந்த அவன் முகம் திடீரென்று இறுகிவிட்டது. வாயில் இருந்து வார்த்தை எதுவும் வரவில்லை. கண்கள் இமைப்பதை மறந்து விட்டன.

தன்னை நோக்கி ஒரு இரப்பவனைப் போன்று காட்சியளித்த அவனுடைய நிலைமை பரிதாபமாக இருந்தது. இலேசாகத் தோளில் தட்டிவிட்டு அவர் சென்றுவிட்டார்.

மனைவியைப் பார்த்து அவளோடு கதைத்தாற்தான் மனம் ஆறுதலாகும் என்ற நிலையில் அவன் இருந்தான். அதனாலே எங்கும் போய்விடாமல், அங்கேயே காவல் நின்றான்.

நேரம் கடந்து கொண்டேயிருந்தது. நாலு மணித்தியாலம்.. ஐந்து மயித்தியாலமாகியது.. ஆறு மணித்தியாலங்களைக் கடந்துவிட்டது. அவனாலே பொறுத்திருக்க முடியவில்லை.

உள்ளே பத்துத் தடவைகள் சென்று தாதியரிடம் விசாரித்துவிட்டு வந்துவிட்டான். அவர்களும் பதில் சொல்லமுடியாமல் நின்றார்கள். முன்பு சொல்லியதைச் சொன்னபோது அவர்களுக்கே பயமாக இருந்திருக்கின்றது. தமக்குள் யோசித்தார்கள்.

"மயக்க மருந்து எல்லாருக்குமே ஓரே மாதிரி வேலை செய்வது கிடையாது. மயக்கம் தெளியும் நேரம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படும்" என்று சொன்னார்கள்.

அவர்கள் சொல்லியதைக் கேட்டபோது அவனுக்கு ஓரளவு நிம்மதி வந்தது. இருப்பினும் 'கடவுளே', 'கடவுளே' என்று அவனின் மனம் வேண்டிக் கொண்டிருந்தது.

எட்டு மணித்தியாலத்துக்குப் பிறகு அவள் விழித்துவிட்டதாகத் தாதியர் வந்து சொன்னார்கள். ஆயிரம் அங்கலாய்ப்புக்களுடன் உள்ளே பாய்ந்து சென்றான்.

எழுந்திருக்கவும் முடியாதவளாகி பலவீனமாக இருந்த அவளது கண்களில், அவனைக் கண்ட சந்தோஷம் தெரிந்தது. மெதுவாக எழுந்திருக்க முயன்ற அவளின் அருகே சென்று, தோளைப் பிடித்துத் தடவினான்.

அவளை எழுந்திருக்க வேண்டாம் என்று சைகையால் காட்டிவிட்டு அவளின் தலையைத் தடவினான். அவளின் கண்கள் நீரைச் சொரிந்தாலும் அவளால் எதுவும் பேச முடியவில்லை. வாயை அசைக்கத்தானும் இயலவில்லை. அவளை நித்திரை செய்யுமாறு அவன் மெதுவாகச் சொன்னான்.

தொடர்ந்து சேலைன் போய்க்கொண்டு இருந்ததால், அவளுக்கு எதுவும் கொடுக்க முடியாமலும் அவளுடன் கதைக்க முடியாமலும் இருந்தது. தனக்கு என்ன நடந்தது என்பதை உணர முடியாதவளாக, வலியோடு இருந்த அவளைத் தடவிவிட்டு வெளியே வந்தான்.

அதற்குள்ளாக இருட்டிவிடவே அவனுடைய மாமியார் இரவில் நிற்பதற்கு ஆயத்தமாக வந்திருந்தது தெரிந்தது. தாதியரிடம் கேட்டுக் கொண்டு இரவுக்கு அவளைப் பார்த்துக் கொள்ளும்படி மாமியாரை நிறுத்த ஏற்பாட்டைச் செய்துவிட்டு வெளியே வந்தான்.

தலை பயங்கரமாக வலித்தது.

முதல் நாளில் இருந்து தொடர்ந்த பயணத்தினாலும் காலையிலிருந்தே ஒன்றும் சாப்பிடாமல் ஒப்பரேஷன் தியேட்டரடியிற் காவல் நின்றதால் உடம்பு நன்றாகவே களைத்து விட்டிருந்தது. வைத்தியசாலையில் இருந்து வெளியேறி, பஸ்சிலேறித் தன் வீட்டுக்கு வந்தான்.

நீண்ட நாட்களின் பின் கண்டு கொண்ட அம்மா, அவனைத் தழுவிக் கொண்டார். அவனுக்குப் பிடித்தமான தோசை செய்து வைத்திருந்தார். மருமகளின் நிலை அவரைக் கலவரப்படுத்துவதாக இருந்தது. அம்மாவைக் கவலைப்படுத்த வேண்டாமே என்று அவன் எதையும் சொல்லவில்லை.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து புறப்பட்டான். அவளுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு நேரே வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டான்.



இரவிரவாக விழித்திருந்த மாமியாரை வீட்டுக்குப் போய்வருமாறு அனுப்பிவிட்டு மனைவியின் அருகில் வந்தான். அவளுக்காகக் கொண்டு வந்திருந்த தேநீரை ஒரு கோப்பையில் விட்டு அவளின் வாய்க்கு அருகில் கொண்டு வந்தான்.

மெதுவாக எழும்ப முயன்ற அவளை அவனின் வலிமையான கரங்கள் தூக்க முற்பட்டபோது, அருகில் நின்று கொண்டிருந்த தாதிமாரும் வந்து உதவி செய்தனர். நிமிர்ந்து உட்கார்ந்த அவள், அவனின் கையைப் பிடித்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

ஒரு கையால் அவளின் தலையைத் தடவி ஆறுதல் படுத்தினான். அதற்குள் தாதிமாரும் வந்து அவளை அழவிடாதவாறு பிடித்துக் கொண்டனர்.

"அம்மா. இப்ப நீங்க அழக்கூடாது. எல்லாம் நல்லதா நடக்கும். ஒண்டையும் யோசிக்காதயுங்கோ" என்று சொல்லிய தாதி, அவனின் காதுக்குள்,

"அவவ அழவிடாதயுங்கோ. தையல் பிரிஞ்சிடும். கவலப்படுத்துற மாதிரி அவவுக்கு ஒண்டும் சொல்லாதயுங்கோ. நாங்களும் சொல்லேல்ல" என்று சொன்னாள்.

முற்று முழுதாகவே தெரிந்து கொண்டும் பொய்யைச் சொல்ல வேண்டியிருந்த தர்ம சங்கடமான நிலையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவன் தொண்டை கனத்தது.

"இந்தப் பிள்ளையில்லாமப் போச்சு. அவ்வளவுதான் வேறொண்டும் நடக்கேல்ல. மனதக் குழப்பாம இரு. உடம்பு சுகமாக வேணும்" என்று பலவாறாகவும் சொல்லி அவளைச் சமாதானப்படுத்தினான்.

எதைக் கேட்டும் அவள் சமாதானம் அடைவதாகத் தெரியவில்லை. விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். அவன் கொடுத்த தேநீரையும் அவள் குடிக்கவில்லை. தனக்கு எதுவும் வேண்டாம் என்று குழந்தைபோல அடம்பிடித்தாள்.

அவளைச் சமாதானப்படுத்துவது பெரும் பாடாக இருந்தது. அவனைப் போல் அல்லாமல் குழந்தை விடயத்தில் அதிகமான எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தவள், குழந்தை நன்றாகப் பிறக்க வேண்டும் என்று அல்லும் பகலும் கடவுளைத் துதித்தவள். அவளுடைய அதங்கம் சரியானதே என்று அவனுக்குப் புரியாமல் இல்லை.

பார்வையாளர் நேரம் முடிந்து மற்றையவர்கள் சென்றுவிட்ட பின்னாலும் அவளை விட்டுச் செல்ல முடியவில்லை. அவளின் நிலையைக் கண்டு பயந்த தாதிமார் அவனை அவளருகிலே இருக்கச் சொன்னார்கள். அவளுக்கு ஆதரவு தரும் வார்த்தைகளைச் சொன்னார்கள். இருந்தும் பயனில்லை.

'ஒரு ஆண்மகனாகப் போய்விட்டேனே. இல்லாவிட்டால் அவளைப் போன்று அழுது தீர்த்துவிடலாம். இப்படி உண்மைகளை உள்ளத்தில் புதைத்துக் கொண்டு பொறும வேண்டிய அவசியம் கிடையாதே' என்று அவனுடைய மனது அழுதது.

அழுகை மட்டும் எதற்கும் தீர்வாவதில்லை என்பது அவனுக்குத் தெரியாததல்ல. ஆனால் அந்தக் கட்டத்திலும் அழாதவனாக ஒரு மனிதன் வாழத் தேவையில்லை என்று மனதுக்குள் நினைத்தான். இப்படியான துன்பத்தை யாராவது வாழ்க்கையில் அனுபவித்து இருப்பார்களா என்று யோசித்தான்.

அவளுடன் அருகில் நின்று விட்டு மருந்துகள், பழங்கள் வாங்குவதற்கு என்று வெளியில் போய் வந்து கொண்டிருந்தான். சாந்தியும் சோர்வு காரணமாக நித்திரையாகி விட்டாள். வைத்தியர் வரும் வேளையில் வெளியில் நின்றுவிட்டுப் பிறகு உள்ளே வந்தான். அன்றைய நாளும் முடிவடையும் தறுவாய்க்கு வந்தது.

வெளியில் இருட்டடையத் தொடங்கியது. மாமியாரும் வந்துவிட்டதால், அவளை ஆதரவாகத் தடவிவிட்டு வைத்தியசாலையில் இருந்து வெளியேறி வீதியில் நடந்து வந்தான். முதல் நாள் ஒப்பரேசன் தியேட்டரில் இருந்து வெளியே வந்த மகப்பேற்று வைத்திய நிபுணர் சொன்ன வார்த்தைகள் அவனுக்கு மறுபடியும் ஒலித்தன.

"கட்டியை எடுத்துவிடத்தான் முயற்சி செய்தம். ஆனா கட்டி பெருசானதால கருப்பையும் தாக்குப்பட்டுட்டுது. அதைத் தொடர்ந்து விட்டா உங்கட அவவுக்கு ஆபத்தாகும் எண்டதால அதையும் சேர்த்து எடுக்க வேண்டியதாப் போச்சு. அறியாமையினால, பிள்ளை தங்கியிருந்திருக்கு எண்டு தவறுதலா இதக் கவனிக்காம விட்டதால தான் இப்பிடி சீரியசாப் போச்சு.

கருப்பைய எடுத்த விஷயம் அவவுக்குத் தெரிய வேண்டாம். மனமுடைந்து போய் வருத்தமாப் படுக்கையில் விழுந்தாலும் நடக்கும். அதினால இந்த விஷயத்தக் கொஞ்சக் காலத்துக்கு யாருக்குமே சொல்ல வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அவன் மனதுக்கு ஆயிரம் சுனாமிகள் அடித்துக் கொண்டிருந்தன.

கருப்பை எடுக்கப்பட்டு விட்டதா? அப்படியானால் இனி எங்களுக்குக் குழந்தையே கிடைக்காதா?

அதை மனைவியிடம் எப்படிச் சொல்வது. குழந்தை அழிந்துவிட்டது என்பதைக் கேள்விப்பட்டே குமுறிக் குமுறி அழுது கொண்டிருப்பவளிடம் இந்த விடயத்தை எப்படிச் சொல்லுவது?

மறுபடியும் மோசமான தலைவிதியா எனக்கு எழுதப்படுகின்றது?

அவனால் எதையும் யோசிக்கமுடியாமல் இருட்டிக்கொண்டு வரவே நிலை தடுமாறியவன், ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டு அங்கு வந்து கொண்டிருந்த பேருந்தில் ஏறிக்கொண்டான்.

# 21

கீதையை வாசித்துக் கொண்டிருந்த பிரியந்திக்குக் கண்ணீர் சுரந்தது. சந்தோசமாக இருக்க வேண்டிய தனது பெற்றோரின் இளமைக் காலம் எத்தனை சோக மயமாக இருந்திருக்கின்றது என்று நினைத்துப் பார்க்கும் போது பெரிய அழுத்தமாக இருந்தது.

ஆனால் எதையுமே தன்னிடம் காட்டிக் கொள்ளாமல் அவர்கள் தன்னை அருமையாக வளர்த்திருப்பதை நினைக்கும் போது அவர்களில் மதிப்பே எழுந்தது. தான் பார்க்கும் பொழுதில் எல்லாம் சந்தோசத்தை மட்டும் அனுபவித்தவர்கள் போன்றல்லவா அவர்கள் காட்டப்பட்டார்கள். அவர்களின் வாழ்க்கையில் துன்பத்தின் நிழலேனும் படிந்திருக்காது என்றல்லவா அவள் நினைத்திருந்தாள்.

அவளுக்குத் திடீரென்று ஒரு யோசனை வந்தது. அம்மாவின் கருப்பை எடுக்கப்பட்டபின், தன்னுடைய ஜனனம் எவ்வாறு சாத்தியம் ஆகியிருக்கும் என்ற எண்ணமும் எழுந்தது.

இந்தியாவிலே வாடகைத் தாய்மார் என்று இருப்பதாகவும், அன்னை, தந்தையரின் உயிரணுக்களை எடுத்து, நுகத்தைக் கருப்பைக்கு வெளியே கருக்கட்டச் செய்து, வேறொரு தாயின் கருவிலே வைத்து வளரச் செய்ய முடியும் என்றும் அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.

அப்படியானவொரு வாடகைத் தாயின் இடத்தில் இருந்து பிறந்தவளாகத் தான் இருக்கலாமோ என்ற யோசனை அவளுக்குள் புகுந்து கொண்டது. அது ஒன்றே சாத்தியம் என்றதும் அவளின் பகுத்தறிவுக்குப் புரிந்தது.

தான் சுமக்காத பிள்ளையிடம் கூட எத்தனை பாசம் வைத்திருக்கிறார்கள் அந்தப் பெற்றோர் என்று யோசிக்கும் போது, அவளுக்குச் சந்தோசமாக இருந்தது. அவர்களின் வாரிசாக இந்த உலகிற்கு வந்தது தன்னுடைய அதிஷ்டமே என்று நினைத்தாள்.

பிள்ளைகளுக்காகப் பெற்றவர்கள் எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்து கொடுக்கும்போது, பிள்ளைகளும் அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும்படியாகவே நடக்க வேண்டும் என்றும் அவள் யோசித்தாள்.

"என்னம்மா கடும் யோசின. ரீ போட்டுக் கொண்டு வரவா?" என்று அம்மா கேட்டபோது சிந்தனையில் இருந்து விடுபட்டாள் அவள். அம்மாவின் கைகளை நீட்டி அணைத்து முத்தமிட்டாள்.

"என்ன இது புதுப்பழக்கம்... பகல் நித்திரயில கனவு வந்ததா?" என்று கேட்டவாறே அவளை உச்சி மோந்தாள் அன்னை.

"எப்பவுமே உங்கட மடியில படுத்துக் கிடக்கோணும் போல இருக்கு அம்மா" என்றாள். தன்னுடைய கைகளால் அம்மாவை அணைத்தபடியே இறுக்கிக் கொண்டாள்.

"இப்பத்தான் எழும்பினது திரும்பவும் படுக்கையா?. அப்பா பொற்கோயிலுக்கும் நல்லூர்க் கோயிலுக்கும் போகோணும் என்டு சொன்னார். சுறுக்கா வெளிக்கிட்டு வா" என்று சொல்லிவிட்டு அம்மா கீழே இறங்கிப் போய்விட்டார்.

கோயிலுக்குப் போய் வந்தால் சற்றுப் புத்துணர்வாக இருக்கும் என்று அவளுக்கும் தோன்றியது. தொடர்ந்து வீட்டுக்குள் இருப்பதனால் சில மனவுளைச்சல்கள் ஏற்படுகின்றன என்பதும் புரிந்தது. அந்தக் கதைப் புத்தகத்தைக் கவனமாக எடுத்து வைத்துவிட்டுக் குளிப்பதற்காக குளியலறைக்குள் சென்றாள்.

நீண்ட நாட்களுக்குப் பின்பாக வெளியில் வந்தது ஒரு புத்துணர்ச்சியாக இருந்தது அவளுக்கு. வீட்டிலிருந்து புறப்பட்ட கார் வடக்குத் திசை நோக்கிப் பயணம் செய்து நாவற்குளத்திலுள்ள இராணுவத்தினரின் முகாமைத் தாண்டி, பின்பு இடது புறமாகத் திரும்பி, நேராகச் சென்றது.

நாம்பன்குளத்திற்குச் செல்லக்கூடிய இன்னொரு பாதை அது. கிட்டத்தட்ட மூன்றரைக் கிலோமீற்றர் தூரம் கடந்ததும் யாழ்-கண்டி வீதியிற் சென்று ஏறிவிடும்.

பாதை நெடுகிலும் மீள் குடியேற்றத்திற்காக வருகை தந்த மக்களின் குடிசைகள் ஆங்காங்கு தெரிந்தன. புதிய வீடுகளை அமைத்துக் கொள்ளும் முயற்சியில் அவர்கள் கட்டடப் பொருட்களையும் மரப்பலகை போன்றவற்றையும் குவித்து வைத்திருந்தார்கள்.

அவர்கள் தத்தமக்குரிய வீட்டுத் திட்டங்களை அமைப்பதற்குரிய நிதியை அரசாங்கம் வழங்கியிருப்பார்கள் என்பது விளங்கியது. தொழிலாளருக்குரிய கூலியைத் தாமாகப் பொறுப்பேற்று அந்த மனைகளை அமைத்துக் கொள்கின்றார்கள் என்று சாரதியும் அப்பாவும் பேசிக் கொண்டார்கள்.

அந்த நாட்களின் மக்களின் தொகை மிக அதிகமாகக் காணப்பட்ட இடங்களில் அதுவும் ஒன்று என்று அப்பா சொல்லிக் கொண்டு வந்தார். தொடர்ந்து நடைபெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் வவுனியாவுக்குள்ளாக வசிப்பதாகவும், பெருமளவிலானோர் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வதாகவும் அவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள்.

"யுத்தம் தமிழ் மக்களுக்கு வழங்கிய கெடுதிகளுள் முதன்மையானது அவர்கள் இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமையைப் பறித்துக் கொண்டது. அப்பாவிப் பொது மக்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து எம்மவர்களே அவர்களின் சுதேச வாழ்வுரிமையைப் பறித்துவிட்டார்கள்" என்று அப்பா சொல்லியதை ஆமோதிப்பதைப் போன்று சாரதி தொடங்கினான்.

"என்ர மாமாவின்ர மகன் சேர். புளியங்குளத்தில கடையெல்லாம் வச்சு நல்ல வசதியா இருந்தவன். அவன வீணா பிரச்சினைகளுக்குள்ள இழுத்து அவன் இங்க இருக்க முடியாம லண்டனுக்கு களவா ஓடிப் போட்டான். பிறகு தன்ர குடும்பத்தையும் அங்க எடுத்திட்டான். இப்ப அகதி எண்ட அந்தஸ்த எடுத்ததினால அவனால இங்க வர முடியேல்ல. அவன்ர சொத்துக்கள அவனிவன் திண்டுட்டுப் போறான்.

இதுக்கெல்லாம் காரணம் ஆரோ இல்ல ஐயா. எங்கடவன்தான். அவங்க யாரோ போய் அவனப் பத்தி இல்லாத பொல்லாதத எல்லாம் அண்டினதாலதான் அவனப் பொலிஸ் தேடிச்சு. ஒரு முறை ஆப்பிட்டுக் கொண்டவன் பயத்தில ஒரேயடியா ஓடிட்டான்" என்று கவலையுடன் சொன்னான்.

"உண்மதான் எங்கட நிலமையை எங்கடவனே எப்பிடியெல்லாம் பாவிச்சிருக்கிறான் எண்டு யோசிக்கப் போகும்போது கோபமாத்தான் வருகுது. இன்னும் எத்தின சமூகப் பின்னடைவுகளச் சந்திக்கப் போறமோ தேரியேல்ல" என்று அப்பா சலித்துக் கொண்டார்.

அந்த நேரத்தில் அப்பாவின் கதையால் அவளுக்குக் கோபம் வரவில்லை. அப்பா எப்பொழுதும் பலருக்காக சிந்திப்பார் என்பதை அவள் ஓரளவுக்குப் புரிந்து கொண்டாள். அதைத் தவிரவும் இவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கு அதுதான் வேளை என்பதை அவளும் உணர்ந்திருந்தாள். அவர்கள் பொதுவான விடயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்ததால் அவளுக்குள் இருந்த அழுத்தம் தலையெடுத்துப் பார்க்கவில்லை.

படிப்படியாக நகர்ந்து வந்த கார் பிரதான பாதைக்கு ஏறியது. ஓமந்தை பாடசாலையின் முன்பாக இருந்த அந்தக் கோயிலுக்கருகிற் காரை நிறுத்தி விட்டு கோயிலுக்குள் சென்று வணங்கினர்.

அருச்சனை செய்து முடித்த பிறகு, மறுபடியும் வடக்குத் திசை நோக்கிப் பயணம் செய்து ஓமந்தை இராணுவத் தடை முகாம் வரை பயணம் செய்து, இடது புறமாகத் திரும்பி, அரசர்பதியிலுள்ள பொற்கோவிலை நோக்கி அந்தக் கார் சென்று கொண்டிருந்தது. கதிர்வேலர் பூவரசங்குளம் வரை சென்றதும் மறுபடியும் இடது புறமாகத் திரும்பி மேலும் இரண்டரை கிலோ மீற்றர் தூரம் சென்றதும் பல ஏக்கர் கணக்கான வயல்களைத் தாண்டி அரசர்பதி பொற்கோவில் தென்பட்டது.

வழி முழுவதும் உயர்ந்த மரங்களையும் வயல் நிலங்களையும் கொண்ட அந்தப் பாதையினூடாகச் செல்லும்போதே உவகை நிறைந்து கொண்டது. தூரத்தில் தெரிந்த பொன் வர்ணத்தில் அமைந்த கோபுரம் பார்த்த மாத்திரத்திலே கைகளைக் கூப்பி வழிபட வைத்தது.

இடது புறமாகச் சென்று , காரை நிறுத்திவிட்டு, முன்புறமாக உள்ளே சென்றனர். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சிற்பிகளின் கைவண்ணத்திலே புனரமைக்கப்பட்டு, பொன்னிறத்தால் பூச்சிடப்பட்டு, அந்த தனிமையான, அமைதியான சுற்றாடலிலே தெய்வீகத் தன்மையுடன் மிளிர்ந்து கொண்டிருந்த அந்தக் கோயிலைப் பாரக்கும்போது கண்ணுக்கு மட்டுமல்ல மனதும் குளிர்ந்தது.

அகலமான, உயரமான கூரைகளைக் கொண்ட பிரதேசத்திலே தூய்மையான காற்றை உள்வாங்கிக் கொண்டு கால்நடையாக நடத்தல், ஐந்து அவயவங்கள், அல்லது எட்டு அவயவங்கள் பூமியில் பொருந்துமாறு வணங்குதல் போன்ற பயிற்சிகளால் தசைநார்கள் வேண்டியபடி விட்டுக் கொடுக்கும்.

இதனால், உடல் ஆரோக்கியத்தைச் சமநிலையில் வைத்திருக்கிறது என்பது கண்டுபிடிப்பாகும். இத்தகைய பயிற்சிகளை வழங்குவதற்கென வடிவமைப்பட்ட இடங்கள் தானோ ஆலயங்கள் என்ற நினைப்பு பிரியந்தியிடம் இயல்பாகவே எழுந்தது.

வவுனியாவின் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலத்திற் கல்வி கற்கும்போதும் விசேட தினங்களில் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போதும் அவள் அவதானித்திருக்கிறாள், ஆண்டவனை வழிபடுவதற்கென அமைக்கப்படும் அமைப்புக்கள் அமைதியையும் ஆரோக்கியத்தையும் தானாகவே வழங்குபவையாகவே வடிவத்தில் இருக்கும்.

சுவாமி தரிசனத்துக்குப் பின் மேலும் கீழுமாக ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றவளை, அருச்சனை செய்து முடித்துவிட்டு வந்த பெற்றோரும் கோயில் குருவும் வெளியில் அழைத்துக் கொண்டு வந்தனர்.

வெளியில் வந்தபோது அங்கே வந்த மானைக் கண்டார்கள். அவர்களைக் கண்டதும் மிரட்சியுடன் அது வேகமாக ஓடிவிட்டது. நகர்ப்புறத்தில் ஆரவாரங்கள் இல்லாமல், அமைதியும் இயற்கை அழகை வீசும் எழிலைக் கண்டதும் மனதினில் உவகை பொங்கியது. அர்ச்சகரிடம் விடைபெற்று அவர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றார்கள்.

வாகனம் ஓமந்தையிலுள்ள சோதனைச் சாவடியைக் கடந்து சென்று கொண்டிருந்தது.

"இது அந்தக் காலத்தில் யுத்த சூனியப் பிரதேசமாக இருந்தது. இந்த இடத்தைத் தாண்டி கால் நடையாக வரும்போது ஒரு முறை நான் வளமாக மாட்டிக் கொண்டேன். அதை இப்ப நினைத்தாலும் திகிலாக இருக்கிறது" என்று அப்பா சொன்னார். அமைதியான அந்தப் பகுதியைக் கடந்து வந்த கார் புளியங்குளம் சந்தியைத் தாண்டிச் சென்றது.

"தொண்ணூறாம் ஆண்டுக்கு முன்னதாக புளியங்குளம் ஒரு பெரிய நகரமாக இருந்தது. கடைகள், மரக்கறி வியாபாரம், ஆலைகள் என்று ஓமந்தைக்கு அடுத்தபடியாக இருந்த பெரிய நகரம் அது. ஆனால் தொடர்ந்து வந்த யுத்தத்தினால அங்க இருந்தவர்களும் இடம் பெயர்ந்து விட்டார்கள். பழைய செழிப்பு இன்னமும் காண முடியேல்ல" என்று சொல்லிக் கொண்டே வெளியில் எட்டிப் பார்த்தவாறு அப்பா வந்தார்.

அவர்களுடைய பயணம் மாங்குளம் சந்தியைத் தாண்டி வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. மக்கள் அரிதாகவே உள்ள அந்தப் பகுதிகளும் அவர்களுடைய பார்வையில் இருந்து தப்பவில்லை. அப்பா ஏற்கெனவே சொல்லியது போல அதற்கும் ஏதும் காரணம் இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

அடுத்து முறிகண்டிப் பிள்ளையார் கோயிலை அண்மித்ததும் காரை நிறுத்திவிட்டு சுவாமி தரிசனம் செய்வதற்கு வந்தார்கள். அந்த இடத்திற்கு வந்ததுமே குதூகலம் பொங்குவதைப் போன்று இருந்தது அவளுக்கு. அவளுடைய பேரன் பேர்த்திகளைப் பார்ப்பதற்கு யாழ்ப்பாணத்திற்குப் போகும்போது அந்த இடத்தைக் கடந்து செல்லும் நினைவுகள் அவளுக்கு வந்து கொண்டது.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அவர்கள் நல்லூர்க் கோயிலுக்கு முன்புறமாக வந்து கொண்டிருந்தார்கள். தூரத்தே தெரிந்த கோயிலின் முன்புறத்தைக் கண்டதும் கைகளை உயர்த்தி வழிபட வேண்டும் போல இருந்தது. கோயிலுக்கு முன்புறமாக இருந்த குழாயடியில் கால்களை அலம்பிவிட்டு உள்ளே சென்றனர்.

சாயங்காலப் பூசையைச் செய்வதற்கு அவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்தது. அதிகம் சனக்கூட்டம் இல்லாத அந்தப் பொழுதில், சந்நிதானத்திற்கு அருகாமையில் நின்றவாறு சுவாமி தரிசனம் செய்வது பெரும் ஆறுதலாக இருந்தது. அதுவரை தான் சுமந்து கொண்டு வந்திருந்த அனைத்தையும் ஆண்டவனின் சந்நிதானத்தில் இறக்கி வைத்ததைப் போன்று இருந்தது.

கர்ப்பக்கிரகத்தில் பூசை முடிவடைந்ததும் இடது புறமாக தீர்த்தக் கேணியருகே வந்து பரிவாரத் தெய்வங்களை வணங்கியபடி சென்றார்கள். தொடர்ந்து வள்ளி, தெய்வயானை ஆகியோரையும் வழிபட்டுவிட்டு பழையபடி கோயிலுக்கு முன்புறமாக வந்து நின்றார்கள்.

அமைதியான அந்த ஆலய தரிசனம் அவர்களுக்கு மன நிம்மதியைக் கொடுத்தது. தந்தையில் இவளுக்கு இருந்த கோபமும் குறைந்து விட்டதைப் போன்று இருந்தது. இருப்பினும் அவருடன் பேசுவதற்கு மனம் இசையவில்லை. சுவாமி தரிசனம் செய்பவளைப் போன்று இருந்துவிட்டு வெளியில் வந்தாள்.

“இந்த ஆலயம் முன்பு போர் நடந்த வேளையில் எத்தனை உயிர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது தெரியுமா?. தொண்ணூறாம் ஆண்டு பிரச்சினை நேரத்தில் இந்த இடத்தில அடைக்கலமான மக்கள் மட்டுமே தப்பினார்கள்'' என்று சாரதிக்குச் சொல்லிக் கொண்டார்.

ஆலய தரிசனம் முடிவடைந்த பின்பாக வவுனியா நோக்கிப் புறப்பட்டார்கள். பொழுது சாயும் நேரமாதலால் இருட்டு எட்டிப் பார்த்தது. பருத்தித்துறை வீதியைக் கடந்து செம்மணி வீதியின் ஊடாக அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மீளும் பயணம் மிகவும் சொகுசாக இருந்தது. வெளியில் வெப்பநிலை குறைவடைந்து இருந்ததால் வாகனத்திற்குள்ளாகவும் சௌகரியமாக இருக்க முடிந்தது. ஆனையிறவுக்கு அருகில் வரும்போது கடற்காற்றின் ஸ்பரிசத்தால் கண்களில் நித்திரை எட்டிப் பார்த்தது பிரியந்திக்கு.

நித்திரை கண்களை மறைக்கவும் பாதி உணர்வு குன்றியபோது, தாம் சென்று மீண்டது யாழ்ப்பாணத்திற்கு என்ற ஞாபகம் அவளுக்கு வந்தது. அங்கு நின்ற நேரத்தில் முகுந்தனை மறந்து விட்டது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அவளுக்குத் தவறு செய்து விட்டதைப் போன்று இருந்தது. அவள் எவ்வாறு முகுந்தனை மறந்தாள்? அதுவும் அவன் இருக்கும் இடத்திற்கு அருகே வந்து சென்றபோதும் அவனுடைய ஞாபகம் வரவில்லையே ஏன்? என்று யோசித்தாள்.

அந்த குறு நாவலும் அவளின் பெற்றோரின் வாழ்க்கையும் தன்னைப் பற்றிய எண்ணத்தை முழுப்படியே மறைத்துவிட்டது என்பது புரிந்தது. இருந்தாலும் அவனை முற்றுமுழுதாகவே மறந்துவிடும் அளவிற்கு அவளுக்குள் அழுத்தம் நிறைந்துவிட்டதா என்று எண்ணத் தோன்றியது.

அவனுடன் தொடர்பு கொள்ளுவதற்கு எந்தவித மார்க்கமும் இருக்கவில்லையே! பிறகு எப்படி அவனைக் காண முடியும்? அதோடு அன்று யாழ்ப்பாணத்திற்குப் பயணமாவது பற்றி அப்பா திடீரென்று முடிவெடுத்தார். அவளும் எதையும் யோசிக்காமல் வெளிக்கிட்டாள். அந்த இடைவெளியில் யார் மூலமாகத் தூது சொல்ல முடியும் என்று தன்னைத் தானே சமாதானப்படுத்த முயன்றாள்.

ஆனால் பொய் சொல்லாதே என்று சொன்ன அவளின் மனச்சாட்சி அவளை வென்றுவிட்டது. முகுந்தனை மறக்கக் கூடியதான, முகுந்தனைப் பற்றிய நினைவுகளை மறைக்கக் கூடியதான சம்பவங்கள் தொடர்ந்து புகுத்தப்படுகின்றன என்ற உண்மை அவளுக்குப் புலனானது. அதற்கு முழுப்படியே தன்னுடைய பெற்றோரைக் குற்றம் சொல்லிவிட முடியாது என்பதும் அவளுக்குத் தெரிந்தது. தனக்குள் சிந்தித்தபடியே மௌனமாக அமர்ந்தவாறு வெளியை நோக்கினாள். அவளின் அருகே இருந்த அம்மா பாதி நித்திரையில் இருந்தாள்.

முன்னால் அப்பா சாரதிக்குப் பேச்சுக் கொடுத்தவாறு வந்து கொண்டிருந்தார். அவளுக்கும் நித்திரை எட்டிப் பார்த்தது. அம்மாவுக்கு அருகில் சாய்ந்து நித்திரை கொள்ள ஆரம்பித்தாள்.

வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது இரவாகி விட்டது. அம்மா அவளை எழுப்பி உள்ளே அழைத்துச் சென்றாள். இரவுச் சாப்பாட்டை மனமில்லாமல் சாப்பிட்டாள். சாப்பிட்டு முடித்துவிட்டு மேலே சென்றாள். பிரியந்தி வழமை போலவே மாடியில் இருந்த தன்னுடைய அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

புத்தகத்தை வாசித்தாகவேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதும் நித்திரை அவளை விடுவதாக இல்லை. எடுத்த புத்தகத்தைத் தலைமாட்டில் வைத்துக் கொண்டே நித்திரை செய்யலானாள்.

அடுத்த நாள் மதியப் பொழுதிலே புத்தகத்தை மறுபடியும் தூக்கக் கிடைத்தது. அப்பொழுதுதான் விட்ட இடம் எது என்று யோசித்துப் பார்த்தாள்.

அம்மாவுக்குக் கருப்பையை எடுத்துவிட்ட ஒப்பரேஷன் நடந்தது ஞாபகத்திற்கு வந்தது. பழையபடி மனதிற் கவலை வந்தது.

அந்த அத்தியாயத்தில் இருந்து வாசிக்கத் தொடங்கினாள்.

# 22

தொடர்ந்தும் மனைவி வைத்தியசாலையில் இருந்ததால் காலை, மாலை இரு வேளையும் சென்று அவளைப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்தான். அவளிடம் எதையும் சொல்வதற்கு அவனின் மனம் துணியவில்லை.

ஏற்கெனவே உடல் பலமில்லாமல் இருப்பவள், அதைத் தெரிந்து கொண்டு வருத்தப்படக்கூடாது என்று நினைத்துக் கொண்டான். தானும் பக்கத்தில் இருக்கமுடியாத சூழ்நிலையில் அவள் பாரதூரமான முடிவுகள் எதற்கும் வந்துவிடக்கூடாது என்ற கடுமையான முன் ஏற்பாட்டோடு அவ்வாறு செய்தான்.

மனைவிக்கு மட்டுமல்ல. தன்னுடைய மாமியாருக்கும் தாய்க்கும்... ஏன் சகோதரிகளுக்கும் கூட அவன் எதுவும் சொல்லவில்லை. கருச்சிதைவினால் வயிற்றைக் கழுவி விட்டிருக்கிறார்கள் என்று மட்டும் சொன்னான்.

எட்டு நாட்களுக்குப் பின் அவளை வீட்டுக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி அளித்திருந்தனர். சாந்தியை அழைத்துக் கொண்டு அவளுடைய அம்மாவின் வீட்டுக்கு வந்தபோது அவனின் அம்மாவும் சகோதரிகளும் அங்கு நின்றார்கள். அனைவரும் அவளுக்காக வருத்தப்படுவது தெரிந்தது. அவளுக்கு ஆறுதலாக இருக்க வேண்டும் என்பதற்காக அங்கு வந்தார்கள் என்பதையும் புரிந்து கொண்டான்.

“கவலைப்படாத சாந்தி. இந்தக் காலத்தில இப்பிடி சம்பவங்கள் நிறைய நடக்குது. ஆனா அதுக்குப் பிறகும் பிள்ளைகளப் பெத்து சந்தோசமா இருக்கிறாங்க நீயும் நம்பிக்கையோட இரு நல்லதே நடக்கும்” என்று மூத்த அக்கா சொல்லியது அவனின் காதுகளில் விழுந்தது. உள்ளே போவதற்கு முன் வைத்த கால்கள் தானாகவே பின்னால் வந்துவிட்டன.

“குழிப் பிள்ள மடிப்பிள்ளயா வரும் எண்டு சொல்லுவாங்க. உனக்குக் கெதியலயே பிள்ள உண்டாகும். கவலைப்படாதம்மா எங்கட கெட்ட காலத்த மறந்திடு” என்று அம்மா சொல்லுவதைக் கேட்டதும் அவனுக்குக் கண்ணீர் சுரந்தது. அனைவருடைய வாக்கும் பொய்யாகும் வண்ணம் எதிர்காலம் இருக்கப் போகுதே என்று கவலை அடைந்தான்.

பொய்யாக இருந்தாலும் அந்த நேரத்தில் அதன் முக்கியத்துவம் என்ன என்பது அவனுக்குப் புரியாதது அல்ல. அவர்களின் வார்த்தையும் நம்பிக்கையும் சாந்தியை சீக்கிரத்தில் மீட்டுவிடும் என்று திடமாக நம்பிக்கை கொண்டான்.

அவர்கள் அனைவரும் போன பிறகு சாந்தியின் அம்மாவிடமாவது உண்மையைச் சொல்லலாமா என்று நினைத்தான். ஆனால் அவள் தாயுடன் தனியே விடப்படுவதால் எந்த சந்தர்ப்பத்திலும் தன்னையும் மீறி சொல்லி விட்டால் அவளுக்கு ஆபத்தாகிவிடும் என்ற பயம் எழுந்தது.

இதனால் குறுகிய காலத்திற்கு இந்த ரகசியத்தை தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டான். அவளுடைய மருத்துவ அறிக்கையை யாரிடமும் கொடுத்து விடாமல் தானே பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டான். அவளுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டிய மருந்துகளை மாத்திரம் தாயிடம் கொடுத்தான்.

பல நாட்களாக வைத்தியசாலைக்கும் வீட்டுக்கும் அலைந்து கொண்டிருந்த அந்த அம்மையாரும் வெகுவாகக் களைத்துவிட்ட போல இருந்தது. அதனால் சாந்திக்கு வேண்டிய சாப்பாடுகளை அவனுடைய தாயாரே செய்து கொண்டு வந்தார்.

“பத்தியச் சாப்பாடுதான் கொஞ்ச நாளைக்குக் கொடுக்க வேணும். பச்ச உடம்பு. காயம் ஆறவேணும். நான் பத்தியத் தூள் திரிச்சுக் கொண்டு வந்தனான். இதேயே தொடர்ந்து பாவியுங்கோ” என்று அம்மா சாந்தியின் அம்மாவுக்குச் சொன்னார்.

கொத்துக் குழை அனைத்தையும் போட்டு குளிக்க வார்ப்பதற்குரிய ஆயத்தங்களை அக்கா செய்தார். வீட்டில் இருந்த அனைவருக்கும் சாப்பாடு செய்து எடுத்து வருவதற்கு தங்கை சென்றுவிட்டாள். பல நாட்களாக வீட்டில் இருந்திராததால் வீட்டுக்குத் தேவையான சாமான்கள் வாங்கிக் கொள்வதற்காக சந்தைக்குப் போவதற்குக் கிளம்பினான்.

வாசலில் வந்தபோது அவனைத் தேடிக் கொண்டு வந்தார், அவனின் சக ஆசிரியர். திடீரென்று அவரைக் கண்டதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனின் வீட்டை எவ்வாறு கண்டுபிடித்து வந்தார் என்று யோசித்தான். அவர் மனைவியின் சுகநலன்களைப் பற்றி விசாரித்தபிறகு, கிளிநொச்சியில் பாடசாலை அதிபர், அவனை முடியுமானவரை விரைவாக வரும்படி அறிவித்திருப்பதாகச் சொன்னார்.

அவனுக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்ததுபோல இருந்தது. அதுவரை தனக்கு இருந்த வருத்தத்தில் வேலையை மறந்து போயிருந்தான். இங்கே வந்த நாட்கள் பல கடந்துவிட்டதை யோசிக்காமலேயே இருந்துவிட்டேன் என்று நினைத்துக் கொண்டான். மனைவிக்குத் தேவையான அனைத்தையும் செய்து கொடுத்துவிட்டு விரைவாகவே வந்துவிடுவதாக சேதி சொல்லி அனுப்பினான்.

அவரை வழியனுப்பிவிட்டு, வெளியில் சென்று வேலைகள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு வரும்போது மதியப் பொழுதைத் தாண்டிவிட்டது.

மறுநாள் பின்னேரம் புறப்படுவதற்கான ஒழுங்குகளைச் செய்து கொள்ளலாம் என எண்ணி மனைவியிடம் சொல்வதற்குச் சென்றான். அவளோ நீண்ட நாட்களாக வைத்தியசாலையின் இருந்துவிட்டு வீட்டுக்கு வந்த மகிழ்ச்சியில் குளித்துச் சாப்பிட்டுவிட்டு, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

அவளை எழுப்ப வேண்டாம் என்று நினைத்த அவன், .அவளுக்கு அப்பாலே சென்று நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டான். நீண்ட நாள் அலைக்கழிவின் பின் மனம் அமைதியாக இருந்ததால் தன்னையும் அறியாமலேயே நித்திரை வந்துவிட்டது.

மறுநாள் காலையில் தான் மனைவியுடன் ஆறுதலாகக் கதைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவன் உடனடியாகவே புறப்படுவதை முதலில் அவள் விரும்பாது போனாலும் வேலை விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்பதால் அவள் அவனைப் புறப்படச் சொன்னாள்.

அங்கு ஓரளவு பெரிய வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, மனைவியையும் கொண்டு போகலாம் என்ற அவனின் மாமியாரின் எண்ணம் சரியானதெனவே எல்லோருக்கும் பட்டதால், அவன் விரைவாகச் செல்வதற்கு அவர்கள் அனைவரும் சந்தோசமாகவே ஒத்துக் கொண்டனர்.

வேலைக்குப் போகவேண்டும் என்று தீவிரமாக எண்ணம் வந்தபோதும் அங்கு போவதற்கு எதிர்நோக்க வேண்டிய துன்பங்களையும் அங்கு படவேண்டிய கஷ்டங்களும் நினைவுக்கு வந்தபோது அவனுக்கு வெறுப்பாக இருந்தது. இங்கு இந்த நிலையில் மனைவியை விட்டுப் போவது பற்றியும் பயம் எழுந்தது.

இருப்பினும் எதையும் பொருட்படுத்தாமல் வேலைக்குப் போயாக வேண்டும் என்று தன்னுடைய மனதுக்கு மறுபடியும் ஒரு முறை சொல்லிக் கொண்டான். இதுவரை தான் அனுபவிக்காத புதிய துன்பமா வந்துவிடப் போகின்றது என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டு சாமான்களை எடுத்து அடுக்கத் தொடங்கினான்.

வழமை போலவே முதல் நாள் இரவில் ஆரம்பித்த பயணம் நடு இரவில், கிளாலிப் பாதையைக் கடந்து விடியும் வேளையில் கிளிநொச்சியில் வந்து முடிந்தது. நேரத்தைக் கருதி சுருக்காகக் குளித்துவிட்டுப் பாடசாலை நோக்கி விரைந்தான்.

வெகு நாட்களின் பின் பாடசாலைக்குச் சென்றபோது அந்த இடமே முற்றிலும் வித்தியாசமாகக் காட்சியளித்தது. தான் இல்லாது போனதால் சிறுசிறு பராமரிப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டுப் போயிருந்து போல தெரிந்தது.

ஒன்றில் முற்றுமுழுதான ஈடுபாட்டுடன் இருந்தவர்கள் சிறிய இடைவெளியை எடுக்கும் போது அவர்களுக்கு இவ்வாறான எண்ணம் எதேச்சையாகவே ஏற்பட்டுவிடும். தன்னைக் காணாமல் வாடி விட்டதா என்று ஒவ்வொரு செடியையுமே கேட்கத் தோன்றும். அதைப் போல ஒரு உணர்வுதான் அந்த இடத்தில் நுழையும்போது அவனுக்கு ஏற்பட்டது.

தொடர்ந்து மாணவர்கள், அவர்களின் உரையாடல், தான் இல்லாத பொழுதுகளில் கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வுகள் என்று அன்றைய பொழுது ஒரு சிரமமின்றியே கடந்து சென்றது. அவனுடைய அழுத்தத்தில் இருந்து சிறிய இடைவெளியை வழங்கியது போன்று இருந்தது.

அவளை ஆவலுடன் எதிர்பார்த்து வரவேற்ற அதிபர் மனைவியின் சுக நலன்களைப் பற்றி விசாரித்தார். அவரிடம் எதையும் மறைக்க முடியவில்லை. தளதளத்த தன் குரலின் ஊடாக மனைவியின் உண்மையான நிலையைத் தெரிவித்தான்.

அவரும் அதிர்ச்சி அடைந்தவர் போல காணப்பட்டார். இருப்பினும் தன்னுடைய முகபாவத்தை மாற்றிவிட்டு அவனுக்கு ஆறுதல் சொல்லத் தொடங்கினார்.

"வாழ்க்கையில் எல்லாமே எல்லாருக்கும் கிடைத்து விடுவதில்லை. ஆனால் பொதுவாக கிடைப்பவற்றை அத்தனை சீக்கிரத்தில் விட்டுக் கொடுப்பதற்கு மனம் யாருக்கும் வருவதில்லை. நீங்கள் சின்ன வயதுள்ளவர். உங்களுக்கு இப்படி நடந்தது தாங்க முடியாமல் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு நிறுத்தினார்.

"இந்தக் காலத்தில் குழந்தை வேண்டாம் என்று சொல்லிவிட்டு வாழும் தம்பதிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். தங்களுடைய சகோதரர்களின் மற்றையவர்களின் குழந்தைகளைப் பராமரித்து மனம் நிறைபவர்கள் இருக்கிறார்கள். தாய், தந்தையை இழந்தவர்களைத் தத்தெடுப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். குழந்தைப் பாக்கியமே கிடையாது என்று யோசிக்கத் தேவையில்லை.

தாயையும் தந்தையும் இழந்து ஒரு குழந்தை எம்மை நோக்கி வருகின்றது என்றால் அதுவும் எங்களுக்குக் குழந்தை போலத்தான். எங்கள் பிள்ளை தாயின் வயிற்றுக்குள்ளாக இருந்து வருகின்றது. இது வேறிடத்தில் இருந்து வருகின்றது. ஆனால் இரண்டுக்குமே எங்களுடைய அரவணைப்புத் தேவையாக இருக்கின்றது. அதனால் அதுவும் எம் சொந்தப் பிள்ளையே

அது தவிரவும் இப்படியான விடயங்கள் நடக்கும்போது அதை இருவர் சம்பந்தப்பட்ட விடயங்களாகவே நாம் கொள்ளுதல் வேண்டும். பெண் இயலாமைக்கு உட்பட்டிருந்தாலும் அதிலே எமக்கும் பங்கு இருக்கின்றது. எங்களை நம்பி வந்தவளைக் கைவிடவோ கைகொட்டிச் சிரிக்க வைக்கவோ கூடாது. இந்தப் பக்குவத்தை உங்கள் தாயோ சகோதரிகளோ அடைவதற்கு முன்பாக நீங்கள் பெற்றுவிட வேண்டும். இல்லாவிட்டால். அது உங்கள் இருவரையும் பாதிக்கத் தொடங்கும். நீங்கள் இப்பொழுது சொல்லிய பொய்யைக் கொஞ்சக் காலத்திற்குத் தொடருங்கள். காலம் எல்லாவற்றுக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டும். அதுவரை யாரிடமும் இப்படிக் கதைக்க வேண்டாம்" என்று சொன்னார்.

தன்னுடைய மனதை நன்கு புரிந்து கதைக்கிறார் என்பது விளங்கியது. அவரின் வார்த்தைகள் அவனுக்குள் எழுந்த சந்தேகங்களை, குழப்பங்களை ஓரளவு துடைப்பதைப் போன்று இருந்தது.

தன்னுடைய நேரத்தைப் பற்றியும் சிந்திக்காமல் அவர் நீண்ட நேரமாகக் கதைத்துக் கொண்டு இருந்தார். அவனை ஆற்றுப்படுத்துவதற்கு வேண்டிய அத்தனை முயற்சியையும் எடுத்துக் கொள்கின்றார் என்பதைப் புரிந்து கொண்டான். அவருடைய பேச்சையே கேட்டவாறு மௌனமாக இருந்தான்.

“இப்ப சேர் இப்ப நீங்கள் செய்யக் கூடியது எதிர்காலத்தைப் பற்றி அதிகமாக சிந்திக்காமல் இருப்பதுதான். குழப்பம் இருக்கும் வேளையில் தனியாக இருந்து குழம்பிக் கொள்வதைப் போன்று பயங்கரமான விடயம் உலகத்திலே எதுவும் கிடையாது. உங்களைக் காண்பதற்கு முன்னாலே நாங்கள் ஆயத்தப்படுத்திய ஒரு விடயம் இருக்கிறது. அதைச் சொல்லலாம் எண்டு நினைக்கிறன்” என்று சொல்லி தன்னுடைய பேச்சை ஒரு கணம் நிறுத்தினார்.

‘தான் வருவதற்கு முன்பாக தன்னைப் பற்றி எதுவும் அறிந்து கொண்டிருக்கச் சந்தர்ப்பம் கிடையாது. அதனால் பாடசாலையைப் பற்றியதாகவே இருக்கும் என்று மறுபடியும் தனக்குள் நினைத்துக் கொண்டான். அவராகவே சொல்லட்டும் என்றபடி மௌனமாக இருந்தான்.

பாடசாலை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த அதிபர், அதற்குரிய குழுவின் தலைவராக அவனை நியமிக்க இருப்பதைத் தெரிவித்தார். அந்த நிலைமையில் சிரமம் எதனையும் பாராது முழுமையாக ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டார்.

விளையாட்டுப் போட்டிகளில் அவனுக்கு எப்பொழுதும் ஆர்வமும் விருப்பமும் அதிகமாகவே காணப்பட்டது. அவர் சொல்லியதை மனப் பூர்வமாக ஏற்றுக் கொண்டு மும்முரமாக விளையாட்டுப் போட்டியின் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அலுவல்கள் அனைத்தையும் அவன் நேரடியாகவே நின்று கவனித்தான். விளையாட்டுக்களை நிர்ணயிப்பது, வீரர்களைத் தெரிவு செய்வது, பயிற்சிகளை வழங்குவது உட்பட அனைத்து நடவடிக்கைகளும் அவனுடைய மேற்பார்வையின் கீழ் நடைபெற்றன.

பாடசாலையில் இருந்த மாணவர்களை மூன்று இல்லங்களாகப் பிரித்து அதற்குரிய ஆசிரியர்களையும் பிரித்து மாணவர்களுக்கு இரு வாரங்கள் பயிற்சிகளை வழங்கினார்கள். அவனுடைய கடும் முயற்சியினால் எதிர்பார்த்ததைவிட சிறப்பாகவே போட்டிகள் நடைபெற்றன. அனைவரும் புது ஆசிரியரின் ஆர்வத்தையும் திறமையையும் பாராட்டினார்கள்

அவன் அவ்வாறு முழுமையாக ஈடுபட்டது அதிபருக்கு சந்தோசத்தையும் நிம்மதியையும் ஒருங்கே கொடுத்திருக்க வேண்டும். அவனைத் தனிப்படப் பாராட்டினார். ஆசிரியர்களுக்குள்ளாக அவன் ஒரு முன் உதாரணம் என்பதைத் தெரிவித்தார்.

விளையாட்டுப் போட்டிக்கு அடுத்த நாள், மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு இருந்ததால் அன்று பாடசாலை அமைதியாக இருந்தது. சில ஒழுங்குகளைச் சீர் செய்வதற்காக பெரிய வகுப்பு மாணவர்கள் ஒரு சிலர் மட்டுமே வந்திருந்தார்கள்.

அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளைக் காட்டிவிட்டு மதிப்பீடுகள் சிலவற்றைச் செய்வதற்காக அவனும் அதிபரும் அலுவலகத்திற்குள் நுழைந்தார்கள். அவர் சொல்லிய விடயங்களைக் கருத்திற் கொண்டு அவற்றைத் தேட ஆரம்பித்தான்.

மதிப்பீட்டு அறிக்கைகளில் மூழ்கிக் கிடந்தபோது நேரம் போனதே தெரியவில்லை. அந்த நேரத்தில், அவனுக்கு வந்ததாக ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து தபாற் காரன் நீட்டினான்.

முதல் நாள் தான் மனைவியிடம் இருந்த கடிதம் வந்திருந்தது. மறுபடியும் யார் எழுதியிருப்பார்கள் என்ற எண்ணத்துடனேயே அந்தக் கடிதத்தை உற்று நோக்கிக் கையெழுத்தைப் பார்க்கிறான் அவன்.

கையெழுத்து அவனுக்குத் தெரிந்ததாக இல்லை. கடிதம் மாறி வந்து விட்டதோ என்ற எண்ணமும் வந்தது. தனக்குக் கடிதம் எழுதுவதற்கு வேறு யார் இருக்கிறார்கள் என்ற யோசனையுடன் கடித உறையை விரித்துவிட்டுப் பேப்பரைப் பிரித்துப் படிக்கிறான்.

படித்து முடிந்ததும் அவனுள் பட்டாம் பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன. ஆம் அவளிடம் இருந்து தான் வந்திருந்தது. தன்னை மறந்துவிட்டதாக நினைத்துத் தேடிக் கொண்டிருந்த அவளிடம் இருந்து வந்திருந்தது

இத்தனை நாட்களுக்குப் பிறகு அவனை நினைவு வைத்துப் பாடசாலையின் விலாசத்துக்கு அனுப்பப்பட்டு இருக்கிறதே என்று யோசித்த போதே பெரும் சந்தோசமாக இருந்தது.

அடுத்தடுத்து மனதில் ஏற்பட்ட சோகங்கள் அனைத்துமே கரைந்து போய்விட்டதைப் போல ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவளை மாங்குளம் வைத்தியசாலையில் வந்து பார்க்குமாறு எழுதியிருந்தாள்.

வைத்தியசாலைக்குப் போகுமளவிற்கு என்ன வருத்தம் அவளுக்கு...?

எப்படியோ சந்தித்துவிட்டு வந்து விடுவோம். நேரே போனால் எல்லாவற்றையும் சொல்லிவிடலாம் என்ற எண்ணம் எழுந்தது. காலம் தாழ்த்துவதற்கு விரும்பவில்லை. இன்றைக்கு வேளையோடு பஸ் எடுத்துப் போய்விட்டு வந்துவிடலாம் என்று யோசித்துக் கொண்டான்.

அதிபரிடம் சென்று உண்மையைச் சொல்லுவதற்கு அவனுக்கு மனம் வரவில்லை. அவனை ஒரு உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கும் அவருக்கு எதுவும் தெரிய வேண்டாம் என்று யோசித்தான். வெளியில் போவதாக அவரிடம் சொல்லிவிட்டு பஸ் நிலையம் நோக்கி நடந்தான்.

# 23

அவளைப் பார்க்கப் போகின்றேன் என்ற மகிழ்ச்சி மேலிட்டாலும், அவளுக்கு என்ன வருத்தமாக இருக்குமோ என்றும் மனம் குழம்பிக் கொண்டு தான் இருந்தது. வைத்தியசாலையில் வந்து பார்க்குமாறு எழுதியது எதற்காக என்ற யோசனை குடைந்து கொண்டிருந்தது.

இத்தனை நாட்களாக எங்கிருந்தாள்? எதற்காகத் தன்னைத் தொடர்பு கொள்ளவில்லை? மாங்குளம் வைத்தியசாலைக்கு வந்தது எதனால்? அவசரமாக அவனைப் பார்க்க விரும்புவது எதனால் என்ற கேள்விகள் அவன் மனதில் எழாமல் இருக்கவில்லை.

எப்படியோ அவளைச் சந்தித்த விட்டபிறகு நேருக்கு நேராகவே கேட்டுவிட வேண்டியது தான்.. அவள் தன் பக்கத்தைக் கொட்டி முடித்த பிறகு, தன்னுடைய மனதிற்குள் அவள் கொலுவிருப்பதையும் வாழ்க்கைக்கு விளக்காக அவள் இருக்க வேண்டும் என்றும் தன்னுடைய விருப்பத்தை முன்வைக்க வேண்டும் என்றும் சிந்தனை எழுந்தது.

இத்தனை காலத்திற்குப் பிறகும் அவனுக்கு இருந்த எண்ணம் மாறவில்லையா? என்று அவனுடைய மனது அவனைக் கேட்டுக் கொண்டது. அவள் எதுவும் சொல்லிக் கொள்ளாமல் சென்றிருக்கிறாள். அதற்குப் பிறகு அவன் தனிப்படக் கஷ்டப்பட்டு இருக்கிறான். இவற்றுக்குப் பிறகும் அதே எண்ணமா என்று திரும்பவும் கேட்டுக் கொண்டான்.

அந்த எண்ணத்தை ஒரு புறமாக வைத்து விடுவோம். ஏற்கெனவே அறிமுகமானவள். நன்கு பழகியவள். அவளைப் போய் பார்த்துவிட்டு வருகிறேன் என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

'இந்த பஸ் ஏன் இவ்வளவு ஆறுதலாகப் போகுது' என்று எரிச்சலாக இருந்தது அவனுக்கு. முப்பது கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் மாங்குளத்திற்குச் செல்வதற்கு எத்தனை மணி நேரத்தை எடுத்துக் கொள்கின்றார்கள் என்று அவன் யோசித்தான். அதுவும் வெளிக்கிடும்போதே ஹவுஸ்புல்லாக வெளிக்கிட்டு ஒவ்வொரு இடத்திலும் வினக் கெடுகிறார்களே என்று எரிச்சல் வந்தது.

ஆனால் பயணிகள் அனைவரும் அவளைப் போன்று அவசரமாகச் செல்ல முற்படுவது தெரிந்தது. இடம் இருக்கின்றதா இல்லை என்பதையும் நோக்காமல் அவர்கள் முண்டியடித்து ஏறினார்கள். அந்த நாட்களில் இருந்த பேருந்து பற்றாக்குறையும் எரிபொருட்களின் பற்றாக்குறையும் அவ்வாறு மக்களை சிரமப்படுத்துகின்றன என்பது புரிந்தது.

இன்று நவீன யுகத்தில் வெளிநாடுகளுக்கே சில மணித்தியாலங்களில் சென்று மீண்டு விடும்போது, அருகிலுள்ள ஊருக்குச் செல்வதற்கு அவர்கள் எடுத்துக் கொள்ளும் நேரம் அலாதியாக இருந்தது. இப்படியே போய்க் கொண்டிருந்தால் மனிதன் கற் காலத்திற்கே மீண்டு விடுவான் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகத்தானே போராட்டங்கள். இப்படி அவனைக் கற்காலத்திற்குத் தள்ளி விடுவதற்காகவா? இப்படியான வசதியீனங்களைக் காணும்போது இந்தக் கேள்வி அவனுக்குள் சரளமாக எழுந்து கொள்ளும். சம்பந்தப்பட்டவர்களைக் கேள்வி கேட்பதற்குத் தோன்றும். இருந்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்து விடுவான்.

இன்றைய தன்னுடைய தேவை எது? மாங்குளம் வைத்தியசாலைக்கு மிகவும் விரைவாகச் சென்று விடுவது. அதைத் திரும்பவும் நினைவு படுத்திக் கொண்டு மௌனமானான்.

பேருந்து மாங்குளத்தை அண்மித்துவிட்டது என்பது விளங்கியது. பாதையின் இரு மருங்கிலும் இருந்த சில பெட்டிக் கடைகளில் அமைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகைகள் கண்ணுக்குத் தெரிந்தன. தான் இறங்க வேண்டிய இடத்துக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏனைய இடங்களைப் போன்றே அந்த இடத்திலும் சனம் முண்டியடித்துக் கொண்டு இறங்கினார்கள். அந்த நேரத்தில் மாங்குளம் ஒரு நகரத்தைப் போன்று விளங்கியதால், அங்கு ஒவ்வொரு அலுவலுக்கும் வருபவர்கள் அதிகமாகவே இருந்தார்கள். சரி.. அவர்கள் இறங்கட்டும் என்று வழிவிட்டபடி காத்திருந்தான்.

சனம் குறைந்ததும் தானும் இறங்கி வைத்தியசாலையை நோக்கி நடந்தவன் சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுக்கு மறுபடியும் சந்தோசம் எழுந்தது. அவளை சந்திக்கப் போகின்றேன் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மிகவும் நுட்பமாகப் பேச்சைத் தொடங்க வேண்டும். அவளைக் காணாமல் தான் ஏங்கியதாகச் சோல்ல வேண்டும். இறுதியாக நல்ல சந்தர்ப்பத்தில் தனது விருப்பத்தை வெளியிட வேண்டும் என்று எண்ணியபோது அவனுக்கு நினைவு வந்தது.

'ஏற்கெனவே எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் எதுவும் சொல்லி இருக்கவில்லையே' என்று யோசித்தான். 'அதற்கான இடம், பொருள் அந்த இடத்தை விடவும் இங்கு வசதியாக அமையும் என்று மனதுக்குள் நினைத்தான்.

எல்லாம் சுபமாக நடந்து முடியவும் வைத்தியசாலையில் இருந்து மாலைகளுடனேயே வெளியில் வருவது போல ஒரு கற்பனை.....

சே... இது என்ன வேகம் என்று தன்னைத்தானே கடிந்து கொண்டவன்... இந்த இடத்தில் அவளை எவ்வாறு தேடுவது என்பது தெரியவில்லை. அவளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டான்.

அவள் எதற்காக வைத்தியசாலைக்கு வந்திருப்பாள் என்று மறுபடியும் யோசனை எழுந்தது. அவளின் தந்தையார் உடல் சுகமில்லாமல் இருந்ததாக அவனுக்கு ஏற்கெனவே வீட்டுக்கார அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. எனவே நேரடியாக வெளி நோயாளர் பகுதியிற் சென்று விசாரித்தான்.

அவளை யாருக்குமே தெரிந்திருக்கவில்லை. அவளின் கடிதத்தைக் காட்டிக் கேட்டான். பயனில்லை. அதில் எந்த விடயமும் உள்ளடக்கப்படவில்லை என்பது அவனுக்கும் தெரிந்ததுதானே.

அவளின் தந்தையாரை வார்ட்டில் வைத்திருக்கலாம் என்ற எண்ணத்தில் ஆண்களின் வார்ட்டில் போய்க் கேட்டுப் பார்த்தான் அந்த இடத்தில் தேடுவது பயனற்றது என்பது விளங்கியது.

ஒவ்வொரு வார்ட்டிலும் சென்று அவளின் பெயரைச் சொல்லிக் கேட்டான். அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

அவளுடைய கையெழுத்து இதுதான் என்பது அவனுக்குத் தெரியாது. அவனின் பாடசாலைக்கு வந்திருந்த கடிதத்தை நம்பிக் கொண்டு அந்த இடத்திற்கு வந்தது தவறாகி விட்டதோ என்று யோசித்தான். யாருக்கோ வந்த கடிதம் தன்னுடைய கையிற் தவறுதலாக வந்து சேர்ந்ததோ என்றும் சந்தேகம் எழுந்தது.

இருந்தாலும் கார்த்திக் என்ற தன்னுடைய பெயரில் வேறு யாரும் இருப்பதற்குச் சந்தர்ப்பம் கிடையாது, அதுவும் அதே பாடசாலையில் ஆசிரியராக, சிந்தியா என்ற பெண்ணைத் தெரிந்து வைத்தவராக, எப்படிப் பார்த்தாலும் அந்தக் கடிதத்தை நம்பியே ஆகவேண்டும் என்று கட்டாயமாக சிந்தித்தான்.

அவன் குழப்பத்துடன் எதுவுமே தெரியாமல் நின்றதை யாரோ அவதானித்திருந்தார்கள். தொடர்ந்தும் அவன் பல இடங்களிலும் அலைந்ததைப் பார்த்துவிட்ட ஒரு பெடியன் வந்து அவனிடம் விசாரித்தான். அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தவன், சந்தேகத்தினால் அவனை மகப்பேற்றுப் பிரிவுக்குக் கொண்டு சென்றான்.

அவனுக்கு சிறிதும் நம்பிக்கை இல்லாமல் அவனின் பின்னாலே தொடர்ந்து சென்றான். ஆனால் என்ன ஆச்சரியம்.. அவளின் பெயர் அங்கு தான் இருந்தது.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக இருந்தது அவனுக்கு... கர்ப்பிணியா? அவள் எப்படிக் கர்ப்பமானாள்.?

கிளிநொச்சியில் இருந்து அவசர அவசரமாக புறப்பட்டுப் போனவள். கல்யாணத்திற்காகப் போயிருப்பாளோ? என்ற எண்ணம் வந்தது.

எதுவாக இருந்தாலும் அவளைப் பார்த்துக் கேட்கலாமே. இவ்வளவு அருகில் வந்த பிறகும் அநாவசியமான குழப்பம் எதற்கு? என்று நினைத்தவனாக அவளிடம் கொண்டு போகும்படி அந்த தாதியிடம் கேட்டான்.

அவள் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தாள். அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவளைப் பிரசவ அறைக்குட் கொண்டு சென்றுவிட்டார்களோ? ஏன்....? என்பது போல அவளை நோக்கினான்.

தான் அவளுக்கு யார் என்பதை யோசிக்கிறார் என்று நினைத்தான். பொதுவாக அவ்வாறான சந்தர்ப்பத்தில் கணவனையோ அல்லது சகோதரர்களையோ அல்லாமல் வேறு யாரையாவது பார்க்க அனுமதிக்க மாட்டார்களோ என்று நினைத்தான்.

ஆனால் அன்று அவளைப் பார்க்காமல் இருக்கும் ஒவ்வொரு வினாடியும் அவனுக்குள் ஏதோ பயம் பற்றிக் கொண்டது. அவள் இருப்பதாகச் சொன்ன இடமும் நிலைமையும் அவளைக் கண்டாலே அன்றி தன்னைச் சமாதானப்படுத்த முடியாது என்பதை மீண்டும் மீண்டும் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அவனிடம் அதிகமாக எதையும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அவனை அழைத்துக் கொண்டு வேறு இடத்திற்குச் சென்றார்கள். வெள்ளைத் துணியை விலக்கி மூடப்பட்டிருந்த அவளுடைய முகத்தைக் காட்டினார்கள்.

“ஐயோ தங்கம் செத்துப் போயிட்டியா? ஐயோ தெய்வமே என்ர மனுசனையும் பறிச்சு என்ர பிள்ளைகளையும் பறிச்சுட்டியே? என்னைய மட்டும் ஏன் உயிரோட வச்சிருக்கிறாய்? ஐயோ என்னையும் சாகவிடுங்க. ஐயோ பாழாப் போனவங்க என்ர பிள்ளய இப்பிடி சிதைச்சிட்டாங்களே.. ஐயோ அம்மா... “ என்று வயதான பெண்ணொருவரின் அழுகுரல் சத்தம் கேட்டது. அந்த அம்மா மறுபடியும் மூச்சையாகிவிட்டார்.

அவனுடைய நரம்புகள் அனைத்தும் குத்திட்டு நின்றன. தனக்கு முன்னால் நடப்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவனாக அவன் அங்கு நின்றான். அவனைப் பார்த்தவாறு தாதி சொன்னார்.

“இது குறைமாதப் பிரசவம். சரியான சிரமப்பட்டுத்தான் பிரசவம் நடந்தது. பிரசவத்திலேயே தாய் செத்திட்டா” என்று சுருக்கமாகவே சொன்னாள்.

மண்டைக்குள் எரிமலையே வெடித்தது போல இருந்தது அவனுக்கு... தலையைக் கைகளாற் தாங்கிக் கொண்டான். அவனுக்குத் தன்னுடைய பாரத்தையே தாங்கிக் கொள்ள முடியவில்லை. யாராவது கைத்தாங்கலாகப் பற்றிக் கொள்ளவார்களா என்று எதிர்பார்த்தான்.

“அப்போ.. அவள் இப்ப உயிரோட இல்லையா? ” என்று அவனின் மனது அவனைக் கேட்டது.

"அவதான் அந்தப் பெட்டையோட அம்மா... அவதான் அவளக் கொண்டுவந்து இங்க சேத்தாங்க... நேத்து வரைக்கும் அந்தப் பிள்ள பிரச்சினயில்லாமத் தான் இருந்தா.. இரவு வயித்துக் குத்து வந்தில அவள லேபர் வார்ட்டுக்குக் கொண்டு போனம். சரியான சிரமமான டிலிவரி.. பிள்ளையின்ர சத்தம் கேக்கிறதுக்கு முன்னாலயே அவள் கண்ணை மூடிட்டாள்" என்று சோகத்துடனேயே சொல்லி முடித்தாள்.

நடக்கவே முடியாத கால்களால் நடந்து சென்று, அவளின் அருகிற் செல்கிறான் அவன்.

செடியிற் பூத்து அழகு பரப்பிய மலர் ஒன்று, சேராத ஒருவனிடம் சேர்ந்து, கசக்கப்பட்டு, வருத்தப்பட்டு, பாரமாக்கித் துயரமாகி, துன்பத்தின் உருவாகி துயிலில் ஆழ்ந்து கிடப்பதைப் போல இருந்தது.

அவள் இறந்துவிட்டாள். அவனின் காதலியின் விம்பமாக வந்தவள் போய்விட்டாள். இத்தனை துன்பத்திலும் இழந்து விடக்கூடாது என்ற எண்ணப்பாட்டுடன், அத்தனை தொலைவில் இருந்து ஓடிவந்த அவனைக் கண்ணெடுத்தும் பாராமல் பறந்துவிட்டாள்.

வழமை போலவே கட்டிவைத்த அவனது கோட்டை குண்டு போட்டுத் தகர்க்கப்பட்டு விட்டது. சோகத்தில் இது இன்னொரு வகை என்று காலம் சொல்லிவிட்டுப் போய்விட்டது.

இந்த மண்ணிலே எம் இனத்திலே பிறந்ததால் இளமையும் அழகையும் கொண்டு எழும் ஒவ்வொரு அரும்பும் காலத்தால் கசக்கப்பட்டதைப் போல அவளும் கசக்கப்பட்டு எறியப்பட்டு விட்டாள்.

அவனுக்கு அழ வேண்டும் போல இருந்தது. பல துன்பங்களையும் கடந்தபோது பொறுமையாக இருந்ததைப் போன்று அன்றும் இருக்க வேண்டும் போன்று இருந்தது. ஆனால் துன்பத்தை மறைக்க முற்படும்போது தலை கனத்தது. எதையுமே செய்ய முடியாது திகைத்தபடி நின்றான்.

அவளின் தாயார் அவளைக் கொண்டு வந்து சேர்த்தபோது அவள் பிரமை பிடித்தவள் போன்று இருந்தாள் என்பதை தாதியர் அவனுக்குத் தெரிவித்தார்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்பாக தந்தையின் உடல் நலக்குறைவு காரணமாக அவள் அவர்களைப் பார்க்க வந்தாளாம். அவள் வருவதற்கு முன்பாகவே அவளுடைய தந்தையார் மரணம் அடைந்து விட்டாராம்.

தந்தையின் பிணத்தைக் கூட அடக்கம் செய்ய முடியாமல் அவர்கள் இடம்பெயர்ந்து போக வேண்டிதாக இருந்ததாம். தன்னுடைய இளைய மகள் எல்லாத்திற்கும் பயப்படுபவளாக இருந்ததால் அவளையும் கூட்டிக் கொண்டு முல்லைத்தீவுக்கு அவளுடைய அன்னை வந்தாளாம்.

இதற்கிடையில் தகவல் தெரியாதவளாகத் தனியாகத் தங்களைக் காண்பதற்கு வந்த மூத்த மகள், பிரமை பிடித்தவளாகவே அவர்களிடத்தில் வந்து சேர்ந்தாளாம். என்ன நடந்தது என்று யாருக்கும் அவள் சொல்லவில்லை. சதா அழுதுகொண்டு இருந்தாள்.

அவளைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட முடியாத நிலையில் அவளின் அன்னை இருந்தாள். மற்றைய மகளுக்கு மலேரியாக் காய்ச்சல் வந்திருந்தது. அவளைக் குணப்படுத்த முடியாமல் பாதியிலே பறிகொடுக்க வேண்டியிருந்தது.

அடுத்தடுத்து கணவனும் மகளும் இறந்து போனதில் செய்வாரற்று இருந்த அம்மாவுக்கு மகளை அவதானித்திருக்க முடியவில்லை. அவளின் உடலில் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றால் அவள் நிம்மதி இழந்து தவித்துக் கொண்டிருந்த போதுதான் அவளின் தாயாருக்கு விடயம் ஓரளவுக்குப் புரிந்தது.

தன்னுடைய மகள் எந்தவிதமான தவறும் செய்திருக்க மாட்டாள் என்பதில் அவளுக்கு நம்பிக்கை இருந்தது. இந்த நிலைமைக்குக் காரணம் யார் என்று தன்னுடைய மகளைக் கேட்க முடியாத நிலையில் அவள் இருந்தாள். பெண்பிள்ளையைத் தனியாக விட்டுவிட்டது யாருடைய தவறு? தன்னுடையதுதானே.

தொடர்ந்து முகாமில் இருந்தவர்களை மற்றவர்களின் பார்வை துளைக்காமல் விடவில்லை. இருப்பினும் யாருடனும் கதைக்காமல் மௌனமாக இருந்த அவர்களிடம் இருந்து எந்த விபரத்தையும் யாராலும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவரவர் தமது கற்பனைக்கு ஏற்றவாறு கதைத்துவிட்டுப் போனார்கள்.

அவளின் தாயார் சொன்னதில் தனக்குத் தெரிந்து விடயங்கள் இவை என்பதை தாதி சொன்னார். அவளைப் பார்த்தபோது அவளிடம் இருந்த நம்பிக்கையால் இவற்றைத் தான் சொல்லுவதாகச் சொன்னார்.

ஆக அவள் இறந்து விட்டாள். இல்லை... உயிருடன் வதைக்கப்பட்டு அணுவணுவாகத் துன்பத்தை அனுபவித்து சாகடிக்கப் பட்டிருக்கிறாள். வாழும்போதே நகரத்தை அனுபவித்து இறந்திருக்கிறாள்.

வாழ்க்கையின் எச்சமாக எதையும் மிச்சம் வைத்துவிடாது போய்விட்டாள் என்று நினைக்கும் போதே அவனுக்கு ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

அவளுக்குப் பிறந்த பிள்ளை எங்கே ? அருகில் இல்லையே ? என்று யோசித்தான். சிந்தனையுடனே சென்றவன் நேரே தாதிமார் இருக்குமிடத்திற்கு வருகிறான். அவளின் குழந்தையைப் பற்றிக் கேட்டான்.

"குறைமாதப் பிள்ளை வளர்ச்சி காணாது. இன்கியூபேற்றரில் வைத்துத் தான் வளக்க வேணும். அந்தக் குழந்தய வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பிட்டம் " என்று சொன்னாள்.

குழந்தையைச் சென்று பார்க்க வேண்டும் போல இருந்தது. எதையும் யோசித்துக் கொண்டு நிற்காமல் உடனடியாக வவுனியாவிற்குப் புறப்பட்டுச் சென்றான்.

# 24

குழந்தையை வவுனியா வைத்தியசாலையில் இருந்து பார்த்துவிட்டுத் திரும்பியபோது அவள் மனம் முழுவதுமாகக் கனத்துப் போய்க்கிடந்தது. அவனுக்குத் தன் கண்முன்னால் தெரிந்த எதையும் நம்புவதற்கு முடியவில்லை.

பிறந்த குழந்தை என்று ஆவலாக நோக்கும் ஒரு சிசுவைப் போல அல்லாது எலிக்குஞ்சு ஒன்றைவிட சற்றுப் பெரிதான அளவில் கண்களைத் திறக்காது கண்ணாடிப் பெட்டிக்குள் அடைபட்டுக் கிடந்தது அந்தச் சிசு.

கண்ணாடிப் பெட்டிக்கு மேலே வைக்கப்பட்டிருந்த இரு துவாரங்கள் மூலமாக இரு கைகளையும் செலுத்தி குழந்தையை எடுத்து, அதன் வாய்க்குள்ளே ஏனைய தாய்மாரிடம் இருந்து பெற்ற தாய்ப்பாலை குழாய் மூலம் வாய்க்குள் செலுத்தி, குழந்தைக்கு வழங்கிக் கொண்டிருந்தனர் தாதிமார்.

துக்கத்திலே பிறப்பெடுத்துத் தாயையும் தொலைத்துவிட்டுக் கண்களையும் திறவாமலே இருக்கும் அந்தச் சிசுவைப் பார்த்த மாத்திரத்திலேயே அழுகைதான் வந்தது அவனுக்கு. இப்படியும் ஒரு கெட்ட காலத்தை யாரும் அனுபவித்திருப்பார்களா? என்று யோசித்தான்.

கட்டிய மனைவிக்குக் குழந்தை பெறும் பாக்கியமே கிடையாது. ஆசைப்பட்டவள் யாராலோ அலைக்கழிக்கப்பட்டு உயிரையும் விட்டுவிட்டாள். அவளால் பெறப்பட்ட குழந்தையும் உயிருடன் இருக்கிறதா, இல்லையா என்று அறியவும் முடியாத அளவிற்கு ஊசாட்டத்தைக் காட்டாமல் இருக்கிறது.

கண்ணாடிப் பெட்டி வழியாகக் குழந்தையை நோக்கியபடி கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தான் அவன். அந்த இடத்தை விட்டு நகர முடியாமல் அவனுடைய கால்கள் கட்டப்பட்டு விட்டதைப் போன்று இருந்தது அவனுக்கு. அங்கு வந்த தாதியர் அவனை எச்சரித்தார்கள்.

"பேபி ரெண்டு மாசத்துக்கு முந்தி பிறந்ததினால வெளியில கொண்டு போகக் குடுக்கிறதில்ல. கண்ணாடிப் பெட்டி ஒரு தாயின் கருவறை போல அமைப்புத்தான். இங்க பிள்ளய நாங்க கவனமாப் பாத்துக் கொள்ளுவம். நீங்க யோசிக்காமப் போங்கோ. அடிக்கடி இங்க வந்து பாக்க முடியாது. உங்கட விலாசத்தத் தந்துட்டுப் போங்கோ. குழந்த வளந்த பிறகு உங்களுக்குச் சொல்லியனுப்புறம்" என்று சொல்லி அவனின் விலாசத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மனமே இல்லாதவாறு கிளிநொச்சிக்குப் புறப்பட்டு வருகிறான் அவன். மறுநாள் பாடசாலைக்குச் சென்றே ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் பேருந்து நிலையத்தை நோக்கி வந்துபோது அந்த நேரத்தில் பேருந்து செல்லாது என்பதைத் தெரிவித்தார்கள்.

அதிபரிடம் சொல்லிவிட்டு வந்து பொய் அவனை அழுத்தத் தொடங்கியது. அவன் தொலை தூரம் போயிருப்பான் என்பதை அவர் எதிர்பார்த்து இருக்க மாட்டார். அதனால் விரைவாக அங்கு போய்விட எண்ணினான். மார்க்கம் எதுவும் தோன்றவில்லை.

வவுனியா வைத்தியசாலைக்கு வெளியில் நின்றவாறு யோசித்து கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் மாங்குளத்திற்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த ஒருவரின் நட்பு கிடைத்தது. அவருடன் சேர்ந்து இரவோடு இரவாக மாங்குளத்திற்கு வந்து சேர்ந்தான். அவரின் வீட்டிலே தங்கிவிட்டு மறுநாள் வேளையோடு புறப்பட்டு கிளிநொச்சிக்குச் செல்வதற்கு ஆயத்தமானான்.

அவளின் பிணத்தைக் கொண்டு சென்றுவிட்டார்களா? ஒரு முறை எட்டிப் பார்க்கலாமா என்ற எண்ணம் அவனுக்கு வந்தது. இருந்தாலும் அடுத்த நாளுக்குள் கிளிநொச்சிக்குப் போய்விட வேண்டும் என்ற எண்ணம் அவனை அங்கிங்கு செல்லவிடாது தடுத்தது. முதலாவது பேருந்தில் ஏறி கிளிநொச்சிக்குப் பயணமானான்.



பயணம் செய்து கொண்டிருந்தபோது அவனின் சிந்தனையும் ஓடிக் கொண்டிருந்தது. வவுனியா வைத்தியசாலைக்கு அடிக்கடி சென்று வந்து கொண்டிருந்தது. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையிடம் சென்றது.

என்னதான் கடமையைச் சரிவரச் செய்பவர்களாக இருந்தாலும், குழந்தைக்கு ஆயுள் கெட்டியாக இருந்தால் மாத்திரமே அது தப்ப முடியும் என்பதை அவன் புரிந்து கொண்டிருந்தான். வாழ்க்கையில் அவனுக்காக குழந்தை பாக்கியம் என்பதும் ஏனையவற்றைப் போன்று எட்டாத கனியாகவே இருந்துவிடப் போகின்றது என்று அவன் மனம் சொல்லிக் கொண்டது.

அவனுக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரியவில்லை. அவள் எதற்காக அவனை வரவழைத்தாள்? யாரிடமும் ஏன் தாயிடம் கூட தனக்கு என்ன நடந்தது என்பதைச் சொல்லாமல் இருந்த அவள் எதற்குத் தன்னை அவசர அவசரமாகக் கடிதம் எழுதி வரவழைத்தாள்?

தன்னிடம் அவளுக்கு நம்பிக்கை இருந்தது என்பதை விளங்கிக் கொண்டான். ஆபத்து நேரத்தில் அல்லது உயிர் போகும் வேளையில் யாரை அழைப்பதற்கு ஒருவனுக்கு எண்ணம் வருகின்றதோ அவன்தான் அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்பது யதார்த்தம்.

அவளுக்கு ஏதோ சொல்ல வேண்டும் போல இருந்திருக்கிறது. அது அவளுடைய குடும்பத்தைப் பற்றியதல்ல. குழந்தையைப் பற்றியதாகத்தான் இருந்திருக்க வேண்டும். தனக்கு என்னவோ நடக்கப் போகின்றது என்பதை விளங்கிக் கொண்டு கடைசி நேரத்தில் அவனை வரவழைத்திருக்கிறாள் என்பதை அப்போது அவன் தெரிந்து கொண்டான்.

அந்தக் குழந்தை வாழவேண்டும் என்று அவள் நினைத்திருக்கிறாள். ஆனால் எப்படி வாழவைக்க முடியும் என்று புரியாமலே அவனை அழைத்திருக்கிறாள். மௌனமாகச் சுமைகளைத் தாங்கி வாழ்ந்த அவள் மௌனமாகவே தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறாள் என்று விளங்கியது.

அவனுக்கு ஏனோ மனது இலகுவாகியதைப் போன்று இருந்தது. எந்தவித யோசனையும் இல்லாமல் காதலியைப் போன்று இருந்தாள் என்ற காரணத்தினால் அவளை மனதுக்குள் நிறைத்தபோது, தான் மனைவிக்குத் துரோகம் செய்கின்றேனோ என்ற உறுத்தல் அவனிடம் எட்டிப் பார்க்கவே செய்தது.

ஆனால் அவனுடைய மனது கட்டுப்பாடு இல்லாமல் அலைய முற்பட்டபோது ஏதோ விதமாக தன்னை சமாதானப்படுத்த முனைந்தான்.

இருந்தாலும் அந்த எண்ணம் தவறானது என்பதற்கு இயற்கை பல தடங்கலை அவனுக்குச் செய்து வந்தது. அவற்றை உணராதது போன்று உணர்வுகளுக்கு இடம் கொடுத்தவாறு அவன் தன்னுடைய முன்னெடுப்புகளை நடத்திக் கொண்டு வந்தான். அவளிடம் கதைப்பதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அந்த சந்தர்ப்பம் அமையாமலே அவர்கள் இருவருக்கும் இடையில் பெரிய இடைவெளியை உருவாக்கி, விதி தனது காய்களை நகர்த்திக் கொண்டு சென்றது. அவனைப் பலவிதத்திலும் பழி வாங்கியதைப் போன்று இருந்தது. அவனுக்கு வழங்கப்பட்ட உச்ச பட்ச தண்டனையாக புத்திரப் பேற்றை இல்லாமற் செய்தது.

அவளிடம் இருந்து கடிதம் வந்துபோதும் அவளைச் சந்தித்து சொல்வதற்கென்றே ஓடோடி வந்தான் அவன். எத்தனை பெரிய முட்டாள்தனம் என்று யோசித்தான். ஆறுதலாக யோசித்தபோது வேறு விடயங்களும் புரிந்தன.

அவனுக்கு முதன் முதலில் காதலியால் ஏற்பட்ட தோல்வி பாடத்தைக் கொடுப்பதற்கு. அதற்குப் பின்னாக சாந்தி என்றும் அருமை மனைவியை அமைவதற்கு. அவளாலே அவனுக்கு உயர்வு என்பது ஆண்டவனால் எழுதப்பட்டிருந்தது.

புதிய அசிரியையின் அறிமுகம் அவர்களின் வாழ்க்கையில் அவளுடைய வாரிசு வாழப் போவது என்பதற்காக. அதற்கு அவன் ஈர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே காதலியின் நிழலுருவாக அவள் அவனுக்கு முன்னே வந்தாள்.

அவளைப் பற்றி அந்த நிமிடம் வரையிலும் அவன் கொண்டிருந்த தவறான எண்ணம் கூட சரியானதாகவே அப்போது அவனுக்குப் பட்டது. அத்தனை தொலைவில் இருந்து அவனை இழுத்துக் கொண்டு வரும் சக்தி அந்த எண்ணத்துக்கு மட்டுமே இருந்ததாகக் கடவுள் நினைத்திருக்கிறார் என்பது விளங்கியது.

கடைசி வரையிலும் வெளிப்படாத தன்னுடைய வார்த்தைகளை நினைத்து அவன் அப்போது சந்தோசம் அடைந்தான். அவள் நிச்சயமாக அவனை அவ்வாறு நினைத்திருக்கவில்லை என்பது புரிந்தது. அப்படி இருந்தால் கடைசி நேரத்தில் அவனை அருகில் கொண்டு வருவதற்கு அவன் முனைந்திருக்கமாட்டாள்.

அதுவும் தவிர அப்படியொரு எண்ணம் அவளுக்கு வந்திருக்கச் சந்தர்ப்பமே கிடையாது. படிக்கும் வரையிலும் பணம் சம்பந்தமான அழுத்தத்தில் வாழ்ந்தவள் அவள். கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டபோது தந்தையாரைப் பற்றிய கவலையுடன் சென்றாள் அவள்.

அங்கு சென்ற பின்னாலே தன்னையும் இழந்து வாழ்க்கைப் பாதையில் சிக்குண்டு கிடந்து அவளுக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அந்த எண்ணம் வந்திருக்க முடியாது என்பது அவனுக்குச் சொல்லாமலே விளங்கியது.

பல சந்தர்ப்பங்களில் இந்த முந்திரிக் கொட்டைத் தனமாக முந்துவது, தேவையில்லாத கற்பனைகளைக் கொண்டிருப்பது, எதையாவது உளறிக் கொட்ட ஆயத்தமாவது, இவையெல்லாம் ஆண்களின் குணமே தவிர எங்கள் பெண்களிடம் இவை கிடையாது என்பதை நன்றாகவே புரிந்து கொண்டான்.

அவனுடைய நினைப்பு அவனுக்கே சிரிப்பைக் கொடுத்தது. இவையெல்லாம் அனுபவித்த பின்னாலே வரவேண்டுமா? முன்னாலே நடந்திருந்தால் சில இழப்புகளைத் தவிர்த்திருக்க முடியுமா? என்றபோது பழையபடி சிந்தனை நின்றது.

மனிதனின் மனம் தவறை நோக்கி ஓடுகின்றதா அல்லது துன்பங்கள் வரப் போகின்றது என்பதைத் தெரிந்து கொண்டு அவற்றை எதிர்நோக்குவதற்காக தவறுகளைத் தானாகச் செய்ய விழைகின்றானா என்று மறுபடியும் சிந்தனை எழுந்தது.

எது நடந்தபோதும் நன்மைக்கே என்று தன்னைத்தானே சமாதானப்படுத்தும் கலையைக் கண்டுபிடித்தவன் யார் மனிதனா? இறைவனா? அவனுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும் என்று யோசனையுடன் வெளியே பார்த்தபோது கிளிநொச்சியை அண்மித்துவிட்டது தெரிந்தது.

வேகமாகப் போருந்தில் இருந்து இறங்கி வீட்டுக்குச் சென்று குளித்துவிட்டு அவசர அவசரமாகப் பாடசாலையைச் சென்றடைந்தபோது, பாடசாலை ஆரம்பித்து விட்டது. ஒருவித குற்ற உணர்வுடன் அதிபரின் காரியாலயத்தை நோக்கிச் சென்றான். அந்த நேரத்தில் அதிபர் அங்கு இருந்தார். மரியாதை காரணமாக அவரின் அருகில் சென்றான்.

"மன்னிக்க வேணும் சேர். இண்டைக்கு எழும்பக் கொஞ்சம் பிந்திவிட்டுது. பள்ளிக்கு வர லேட்டாப் போயிட்டு" என்றவாறு மன்னிப்புக் கேட்கும் பாவனையில் முகத்தைப் பிடித்தான்.

"பரவாயில்லை. முந்த நாள் விளையாட்டுப் போட்டியோட நீங்கள் நல்லாக் களைச்சுப் போனீங்க ஒரு நாளைக்கு பிந்தி வந்தா ஒண்டும் குறையாது. நீங்க போய்ப் பாடத்தத் தொடங்குங்கோ" என்று சொல்லவும் கையொப்பம் இட்டுவிட்டு வெளியில் வந்தான்.

என்னதான் நல்லவர்கள் நம்பிக்கையானவர்களாக அமைந்தாலும் அவர்களிடம் உண்மையைச் சொல்லிக் கொள்வதற்கு மனது இடம் கொடுக்கவில்லையே என்று கவலை வந்தது. சில விடயங்கள் மனச்சாட்சிக்கே புறம்பானதாக இருக்கும்போது அவற்றை எப்படி வெளியில் சொல்ல முடியும் என்பது புரியவில்லை.

எவ்வாறு அவனுடைய மனச்சாட்சிக்குத் தான் செய்த செயல் தவறானதல்ல என்பது தெரிந்திருந்தாலும் மற்றவர்களிடம் சொல்லும்போது அதை சரியானதாக எண்ண மாட்டார்கள். இயற்கைக்குப் புறம்பான காரியத்தைச் செய்வதாகவே அவர்கள் நினைப்பார்கள். இந்த விடயத்தில் தேவையில்லாமல் பிரச்சினைகளை இழுத்துக் கொள்கின்றார்கள் என்று அவர்கள் தவறான எண்ணத்தைக் கொள்வார்கள்.

இவ்வாறு எண்ணம் வந்ததால் அவரிடம் பொருத்தமான ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு வகுப்பறைக்கு வந்தான் அவன். இருந்தாலும் உண்மைக்கு இருக்கும் மதிப்பு பொய்க்கு இருப்பதில்லை என்பது அவனுக்கு விளங்கியது. உண்மையைச் சொல்லியிருந்தால் மனதில் அழுத்தம் வந்திருக்காது என்பது விளங்கியது.

மனது நிறைய கவலைகளைச் சுமந்தவனாக குனிந்த தலையுடனே வகுப்பறையினுள் நுழைந்தான் அவன். "வணக்கம் சேர்" என்ற மாணவர்களின் குரல் இந்த உலகத்திற்கு அவனை இழுத்து வருகின்றது. "வணக்கம் மாணவர்களே" என்றவாறு நிமிர்ந்து கொண்டவனுக்கு முன்னே தோன்றிய சிட்டுக்களைப் பார்த்ததும் திடீரெனச் சுமை இறங்கியது போல இருந்தது.

எல்லாக் குழந்தைகளுமே போராட்டத்தின் மத்தியில்தானே உலகில் தோன்றுகின்றனர். ஒவ்வொருவரும் ஜனனிக்கும் போதே போராட்டத்தையும் சுமைகளையும் ஏற்று விடுகின்றனர், அந்தச் சிசுவைப் போலவே என்ற எண்ணம் திடீரெனத் தோன்றியது.

இந்தக் குழந்தைகள் எல்லாருமே கல்வியில் முன்னேறச் செய்வதே என்னுடைய இலட்சியம் என்று அவனுள் எழுந்தது. தானும் ஒரு பிள்ளையாகி அவர்களுடன் சேர்ந்து பாடத்தைப் படிக்கத் தொடங்குகிறான். அவர்களிடம் அன்பாகப் பேசி அவர்களுக்குப் புரியும்படியாக எளிமையாக பாடத்தை சொல்லிக் கொடுத்தான்

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளின் மத்தியில் மறந்துவிடும் கவலைகளும் தாக்கங்களும், வீட்டுக்குச் சென்றதும் விசுவரூபம் எடுத்துவிடும். தேவையில்லாத எண்ணங்கள் வந்து அவனை அலைக்கழிக்கத் தொடங்கும்.

அன்று கிளிநொச்சிக்குப் போய்க் கொண்டு இருந்தபோது அவனுக்கு எழுந்த எல்லாம் நன்மைக்கே என்ற எண்ணம் எப்பொழுதும் வராது. மனம் ஏதேதோ எதிர்பார்ப்புகளை எதிர்நோக்கி ஓடிக் கொள்ளும்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் மனைவியின் உடல் நலமும் மனநிலையும் அவனின் மனதை வந்து அழுத்தத் தொடங்கும். அதற்குப் பிறகு அவளை சென்று பார்க்காத மனவருத்தம் தோன்றும். இருந்தாலும் அவளிடம் இருந்து ஒழுங்காகக் கடிதம் வந்து கொண்டிருந்தது. அவனும் எழுதிக் கொண்டிருந்தான்.

தொலைவில் இருக்கும்போது பெரிய பிரச்சினைகளை யாரும் சொல்ல மாட்டார்கள். அதனால் வருத்தப்படுவார்கள் என்ற கவலை இருக்கும். அருகில் இருந்து பார்த்தாலே உண்மையான நிலையை அறிந்து கொள்ளமுடியும். அதனால் தனக்குத் தெரிவது மனைவியின் உண்மையான நிலை அல்ல என்பது சில நேரங்களில் வந்து அவனை அழுத்தத் தொடங்கும்.

அதற்குப் பின் வவுனியாவில் இருக்கும் குழந்தையைப் பற்றிய எண்ணங்கள் அவனுள் புகுந்து அலைக்கழிக்கும். குழந்தையைப் பார்த்த நாளில் இருந்தே அது தப்ப முடியும் என்ற நம்பிக்கை அவனிடம் இருந்து விடைபெற்று விட்டது. இருப்பினும் நினையாப் பிரகாரம் எதுவும் நடந்தால் தங்களுக்கு சந்தோசம் ஏற்படுவதற்கும் ஏதுவாக அமையும் என்று எண்ணிக் கொண்டான்.

இருவேறு நினைவுக்குள்ளும் மூழ்கிவிடாமல் அவனைக் காத்துக் கொண்டிருக்கும் தொழிலும் பாடசாலைச் சமூகமும் அவன் சிந்தனையில் எழும்போது சிறிய ஆறுதல் ஒன்றைத் தந்துவிடும். பாடசாலைக்குள் இருக்கும் நேரத்தில் அனைத்து விடயங்களில் இருந்தும் ஆறுதலைப் பெறுவதைப் போன்று இருக்கும். அதனால் அதிகமான நேரத்தை பாடசாலையில் மாணவர்களுடன் செலவிடத் தொடங்கினான்.

வகுப்பில் குறைவாக இருக்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புகளை ஒழுங்கு செய்து அவர்களுக்கு உதவி செய்தான். புததகம், பேனா என்பவற்றை வாங்கிக் கொள்ள முடியாத மாணவர்களுக்கு அவனும் அதிபருமாக பலரின் உதவியைப் பெற்று வாங்கிக் கொடுத்தார்கள். பாடசாலைக்கு அவர்கள் சந்தோசமாக வருவதை உறுதிப்படுத்துவதற்குப் பல விடயங்களை அவர்கள் செய்து வைத்தார்கள்.

படிப்படியாக அந்தப் பாடசாலை முன்னணிக்கு வந்தது. படிப்பு, ஒழுக்கம் அனைத்திலும் அந்த மாவட்டத்தில் முன்னுக்கு நிற்கும் ஒரு பள்ளியாக விருத்தி அடைந்தது. பெற்றோரின் மனதில் உவகையை ஏற்படுத்தியது

நாட்கள் ஆக ஆக வவுனியாவில் இருக்கும் குழந்தையை ஒரு சமயம் சென்று பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்துவிடும். அடிக்கடி வந்து பார்வையிட முடியாது என்று எச்சரித்த வைத்தியசாலை சமூகத்தின் குரல் கேட்டதும் தன் எண்ணத்தை மௌனமாக்கிக் கொண்டு தன் கடமையிலேயே இருந்துவிடுகின்றான்.

எதுவாக இருப்பினும் தான் கவனிக்க வேண்டிய இரண்டு உயிர்கள், வடக்கிலும் தெற்கிலும் இருக்கின்றது என்ற எண்ணம் தொடர்ந்து மனதில் இருந்து கொண்டிருந்தது.

வகுப்பில் மாணவர்களின் பரீட்சை விடைத்தாட்களைத் திருத்திக் கொண்டிருந்த அவனை, அதிபர் அழைப்பதாகச் சொல்லவே தன் வேலையை நிறுத்திவிட்டு அவரைச் சந்திக்கச் செல்கிறான்.

# 25

தான் கேட்காமலே தனக்கு நல்லவற்றைச் செய்யும் அவரிடம் அவனுக்குப் பக்தி இருந்தது. அதிபரிடம் கதைத்து முடித்தபோது அவனுக்கு மனதில் இருந்த பாரம் சற்றுக் குறைந்தது போல தோன்றியது.

அவன் அவரின் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது கங்காதரன் ஆசிரியருடன் கதைத்துக் கொண்டிருந்த அவர், அவனைச் சைகை காட்டி இருக்கச் சொல்லிவிட்டு கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

கங்காதரன் சென்றதும் அவனின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார். அவரின் செயல்கள் அன்று வித்தியாசமாகத் தென்பட்டதால், எதுவும் பேசாமலே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"சேர்.. நீங்க இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்த பிறகு கடுமையா வேல செய்து நிறைய நல்லதுகளச் செய்திருக்கிறீங்க. எல்லாப் பெற்றோரும் உங்களப் பாராட்டித்தான் கதைக்கிறாங்க."

ஏதேதோ கவலைகளினுள்ளும் சிறு சந்தோசம் அவனுக்கு ஏற்பட்டது. அவர் தொடர்ந்து கதைக்கட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டான்.

"இருந்தாலும் நீங்க நிறையவே கஷ்ரப்பட்டுட்டீங்க சேர். புது மனுசிய பிரிஞ்சு வந்து கஷ்டப்பட்டது மட்டுமில்ல. ஒப்பரேஷன் அது இதெண்டு நிறைய சிரமப்பட்டது தானே" என்று கேட்டபடி நிறுத்தினார்.

சோகமான தன்னுடைய பக்கங்கள் மீட்டப்படுவதைப் போன்று இருந்தது அவனுக்கு. அவருக்குத் தெரியாமல் இருக்கும் மற்றைய விடயங்களைப் பற்றி அவன் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை.

"வேற யாராவும் இருந்தா அதையித சொல்லிக் காட்டி இடமாற்றம் கேட்டுக் கொண்டே இருந்திருப்பாங்க ஆனா நீங்க அப்பிடிச் செய்யேல்ல சேர். ஆனா உங்களுக்கு நல்லது செய்யிறதா இருந்தா நான் செய்யக்கூடிய ஒரு விசயம் இருக்கு சேர்" என்று சொல்லிவிட்டு இடைநிறுத்தினார்.

'என்ன செய்ய முடியும்' என்பது போல அவன் பார்த்தான்.

"வவுனியாவில ஒரு பள்ளிக்கூட பிரின்சிபல் எனக்கு நல்ல பிரண்ட். அவர் தன்ர பள்ளிக்கூடத்துக்கு கணித ஆசிரியர் தேவையென்று சொன்னார். நான் உங்கள யோசிச்சன். நீங்க வவுனியாவுக்குப் போனா மனுசியயும் உங்களோட வச்சுக் கொள்ளமுடியும். உங்களுக்கு சின்ன ஆறுதலாவது கிடைக்கும்."

அவர் சொல்லைக் கேட்டபேஉதே அவனுடைய காதுக்குள்ளே தேன் வந்து பாய்ந்தது போல இருந்தது. வவுனியாவுக்குப் போய்விட்டால் மனைவியை அழைத்து தன்னுடன் வைத்துக் கொள்ளலாம். குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டு வளர்க்கலாம். தன்னுடைய பல பிரச்சினைகளுக்கும் தீர்வாகிவிடுமே என்று நினைத்தான்.

அடுத்தடுத்த நாட்களில் வெகு விரைவாகவே செயற்பட்டான். வலயக் கல்வி அலுவலகத்திற்குச் சென்று கடிதம் பெற்றுக் கொண்டு வவுனியாவிற்கு விரைந்து வந்தான். அங்கு பலரை அவன் சந்திக்க வேண்டியிருந்தது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளருடன் கதைத்துவிட்டு, திருகோணமலை சென்று செயலாளரைச் சந்தித்துக் கடிதம் பெற்றுக் கொண்டு வந்தான். இரண்டு நாட்களின் பின்னதாக மறுபடியும் வலயக் கல்விப் பணிமனையை அடைந்து இடமாற்றத்தை உறுதிப்படுத்தியபின் அந்தப் பாடசாலைக்குச் சென்று தன் வேலையைப் பாரமேற்றுக் கொண்டான்.

வேலைக்குச் சேர்ந்த இரண்டாம் நாள் சந்தித்த மனிதர் தான் சுகந்தன். ஒரு பெற்றோராக அவனுக்கு அறிமுகமாகிய அவர் எதிர்காலத்தில் உற்ற நண்பராக, உதவியாளனாக ஆகப்போகின்றார் என்பதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை. அவரைக் கண்டதும் முதல் தடவையிலேயே அவனுக்குப் பிடித்திருந்தது.

அவன் வேலையைப் பொறுப்பேற்றுக் கொண்ட பாடசாலை வவுனியா நகரத்திற்கு உள்ளாக இருந்ததால், அதற்கு அருகாமையில் வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்தும் வன்னியில் இருந்தும் இடம் பெயர்ந்து வந்து வவுனியாவுக்குள் குவிந்திருந்த மக்களின் தொகை காரணமாக காணியின் விலைகளும் வாடகையும் உச்சமாக இருந்த காலம் அது. அதனால் பெரும் சிரமத்துடன் அவன் வீடு ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் சுகந்தன், பண்டாரிகுளத்தில் இருந்த தன்னுடைய சொந்தக்காரர் ஒருவரின் வீட்டைப் பராமரிப்பவராக இருந்தார். அந்த வீட்டில் இருந்தவர்கள் வெளிநாட்டுக்குப் போய்விட்டதால் அந்த வீட்டை வாடகைக்கு விடுவது, பராமரிப்பது உட்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் அவரின் மேற்பார்வையிலே நடந்து வந்தன. இதனால் அந்த வீட்டை அவனுக்கு நியாயமான வாடகையில் பெற்றுக் கொடுத்து அவனுக்கு உதவிக்கரம் நீட்டினார்.

பல நாட்களாக யாரும் வசித்திராத வீடு ஆகையால் அந்த வீட்டை முழுவதுமாகச் சுத்தம் செய்து வெள்ளை அடிக்க வேண்டியிருந்தது. வேறு யாருக்காவது வாடகைக்கு வழங்குவதாயின் முற்பணத்தைப் பெற்றுக் கொண்டு அதில் எல்லாவற்றையும் செய்து முடித்திருக்கலாம். ஆனால் அவனின் நிலையை ஓரளவு தெரிந்து கொண்டிருந்ததால் தானே தன்னால் முடிந்தவரையில் செலவழித்துத் திருத்தி அவனிடம் கையளித்தார்.

வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் அனைத்தும் புதிதாக வாங்க வேண்டி இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து எதையும் எடுத்துக் கொண்டு வர முடியாத நிலை என்பது அவருக்கு நன்கு தெரிந்திருந்த காரணத்தால் முக்கியமான பாரமான தளபாடங்களை அவர் இரவலாகவும் வாடகைக்கு எடுத்தும் வழங்கியிருந்தார். வீட்டுச் சாமான்கள் உட்பட அனைத்தையும் அவன் வாங்கிக் கொள்ளுவதற்கு அருகில் நின்று துணை புரிந்தார். கிளிநொச்சியின் பாடசாலை அதிபரைப் போன்றே சுகந்தனும் அவனுடைய வாழ்க்கையில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அவனுடைய வவுனியா வாழ்க்கை ஆரம்பிக்கும் நேரத்தில் அனைத்துமாக நின்றவர் அவர் என்பதை யாரிடமும் சொல்வதற்கு அவன் தயங்குவதில்லை.

அவனுக்கு அடிப்படையில் வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து முடித்த பின்பே சுகந்தன் தன்னுடைய கோரிக்கையை முன்வைத்தார். அந்தப் பாடசாலையிற் படிக்கும் தன் மகனை நல்வழிப்படுத்தி, அவனுக்குக் கல்வி புகட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் அவர். பிற்காலத்தில் அவருடைய மகன் நல்வழிப்பட்டு படிப்பில் முதன்மையாக வந்ததும் இன்று வவுனியாவில் பெரிய புள்ளிகளில் ஒருவராக இருப்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயமே.

தன்னலம் பாராது சுகந்தன் காலத்தால் செய்த உதவி அவனுடைய மனதை நிறைத்துக் கொண்டது உண்மையே. அந்த நேரம் வவுனியாவில் இருந்த நெருக்கடி நிலைமையில் சொந்தக்காரரே செய்ய முடியாத உதவியைச் செய்த அவரின் குறையைப் போக்க வேண்டும் என்று அந்த நிமிடத்தில் எடுத்துக் கொண்ட திடசங்கற்பம் அவருடைய மகனின் விடயத்தில் வெற்றியை அள்ளித் தந்தது. அந்த இளவயதுப் பெடியனைத் திருத்துவது எப்படி என்பது தொடக்கத்தில் அவனுக்கும் தெரிந்திருக்கவில்லை. அறிவுரை சொன்னால் மறைந்திருந்து அடிக்கும் காலம் அது. எதை, எவ்வாறு எடுத்துச் சொல்லி அவனுக்குப் புரியவைப்பது என்று முதலில் புரியாமற் திகைத்ததும் உண்மையே.

ஆனால் எழுத்து அவனுக்குத் துணைபுரிந்தது. கணித பாடத்தில் விருப்பம் ஏற்படும் விதமாக அதை வெகு நுணுக்கமாகச் சொல்லிக் கொடுத்தான். பிறகு கணித பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போதில் தன்னுடைய ஆக்கங்களை ஒவ்வொன்றாக விபரித்து அதை நயக்கும் ஆற்றலை தன்னுடைய மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தான். அதற்குள் மறைந்திருக்கும் அறிவுரைகளை யாருக்கோ சொல்லுவதைப் போன்று சொன்னான்.

படைப்பாளிகளுக்கு சிறப்பாகும் பெரிய திறமை இதுதான். தாங்கள் நினைப்பதை, செய்ய விரும்புவதை எந்த வடிவத்திலும் எந்த விதமாகவேனும் மக்களிடம் கொண்டு சென்று விடுவார்கள். அதுவும் அவர்களின் பாதையைப் பின்பற்றிச் செல்பவர்களைப் போல காட்டிக் கொண்டு தங்களுடைய பாதைக்கு அவர்களை இழுத்து வந்துவிடுவார்கள்.

அவனுடைய படைப்பிலே அவனுக்குக் கிடைத்த முதலாவது வெற்றி சுகந்தனின் மகனைத் திருத்தி நல்வழிப்படுத்தியது என்று அடிக்கடி தனக்குத் தானே சொல்லிக் கொள்வான். இளமையில் பள்ளிப் பருவத்தில் பாதை மாறிப் போகும் ஒருவன் வாழ்க்கையில் எத்தனை துன்பப்படுவான் என்பதற்கு தான் ஒரு உதாரணமே போதும் என்று அவன் நினைத்தான்.

வேலையில் கால்பதிப்பதற்கு அவனுக்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. அதற்குப்பின் வைத்தியசாலைக்குச் சென்று குழந்தையைப் பார்வையிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். பிறந்து கிட்டதட்ட இரண்டு மாதங்கள் கடந்துவிட்டதால், தான் போய்ப் பார்ப்பதில் தடையேதும் இருக்காது என்பதை நினைவுபடுத்திக் கொண்டான்.

குழந்தையைப் பார்த்த அவனுக்கு உண்மையிலேயே வியப்பாகத்தான் இருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பு சிறு உருவமாக கறுப்பு நிறத்தில் இருந்த குழந்தை அளவாக வளர்ந்து அழகான குழந்தையாக இருந்தது. அன்று பார்த்த பிள்ளையா அது என்று தன்னுடைய கண்களையே நம்ப முடியாமல் இருந்தது.

குழந்தையைப் பார்த்து வியந்து கொண்டிருந்த அவனிடம் தலைமைத் தாதி சொன்னார். “அநேமாக இன்னும் பத்து நாட்களில் குழந்தையை வளக்கத் தந்துவிடலாம். நீங்கள் தத்தெடுப்பதாக இருந்தால் அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யிறது நல்லம். குழந்தையைக் குடுக்கச் சொல்லி கோட்டுச் சொல்லுற வரையிலுமே நாங்க பாத்துக் கொள்ளுவம்” என்றாள்.

அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. தான் நினைத்ததைப் போன்று வவுனியாவுக்கு வந்ததில் பலவிதமான பிரச்சினைகளும் படிப்படியாகவே தீர்ந்து விடுவதைப் போல தெரிந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மனைவியை அழைத்து வருமாறு மாமானாருக்குத் தகவல் கொடுத்தான். தான் அங்கு வந்து அனைத்தையும் சரிப்படுத்தி விட்டதாகவும் தங்குவதற்கு வசதியான வீடு கிடைத்ததாகவும் அவன் கடிதம் போட்டிருந்தான். அவளையும் குழந்தையையும் வரவேற்பதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்துவிடவென்று கிளம்பினான்.

அவன் ஏற்கெனவே சொல்லி இருந்ததால் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படுவதற்குரிய ஒழுங்குகளை அவர்கள் காலதாமதம் இன்றி செய்து வைத்திருந்தார்கள். அந்நாட்களில் குடா நாட்டில் இருந்து வருவதற்கு அனுமதிக்கு விண்ணப்பித்து சிறிது காலம் காத்திருக்க வேண்டும். மருத்துவ காரணங்களைக் காட்டிக் கொண்டால் ஓரளவு விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும். மாமனார் தன்னுடைய முழு முயற்சியையும் பாவித்து சாந்தியை அழைத்துக் கொண்டு வவுனியாவிற்கு வந்தார்.

வவுனியாவில் வாழ்க்கை மனைவிக்கு நன்கு பிடித்திருந்ததுடன் மாமனாருக்கும் நிறைவாக இருந்தது என்பது அவனுக்கு விளங்கியது. அவனுக்குள் எழுந்த ஆர்வத்தில் மாமனார் இருக்கும்போதே குழந்தையைத் தத்தெடுப்பது பற்றிச் சொல்லலாமா என்று யோசித்தான். ஏதோ எண்ணம் வரவும் அவர் போகட்டும் என்று காத்திருந்தான்.

வவுனியாவின் காலநிலை வித்தியாசத்தால் மனைவிக்குக் கை, கால்களில் பிடிப்பு ஏற்படுகின்றது என்று சொல்லவும் அவளைக் காட்டிவிட்டு வரலாம் என்று சொல்லி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான். அங்கு வைத்தியர் வினாவியபோது அவனுக்கு முன்னாலே அவளுக்கு சத்திர சிகிச்சை நடந்த விடயத்தை எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று.

மனைவி அதிர்ச்சி அடைந்தாலும் அழுது குளறி ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. அவனைப் போலவே அவளும் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டளோ என்று நினைத்தான். அதுதான் சந்தர்ப்பம் என்று காத்திருந்த அவன் குழந்தை வார்ட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் அந்தக் குழந்தையைக் காட்டினான்.

குழந்தை பிறந்தவுடன் அதனுடைய அம்மா இறந்துவிட்டதால் அதை அங்கு கொண்டு வந்தார்கள் என்று பிரதம தாதி சொன்னார். அவர்களுக்கு மேலும் எந்த விடயமும் தெரியாது என்பதை அவன் அறிந்திருந்ததால் அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. அந்தக் குழந்தையை நீண்ட காலம் வைத்திருக்க முடியாது அநாதை இல்லத்திலாவது சேர்க்க வேண்டும் என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அவர்கள் வீடு சென்றடையும்வரை இருவருமே எதுவும் பேசிக் கொள்ளவில்லை. வீட்டுக்கு வந்த பிறகு அழுது ஆர்ப்பாட்டம் செய்து தன்னுடைய தாயாருக்குச் கோல் எடுத்துச் சொல்லுவாள் என்று அவன் நினைத்தான். ஆனால் அவள் எதுவும் கதைக்கவில்லை. சுவரில் மாட்டியிருந்த குழந்தையின் படத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய மனநிலை அவனுக்குப் புரிந்தது. அவளுக்கு அருகில் சென்று, “குழந்தையைத் தத்தெடுப்பமா?” என்று கேட்கவும் மௌனமாக அவள் தலையை ஆட்டினாள். அவளுக்கு அந்தக் குழந்தையைப் பிடித்திருக்கின்றது என்பது அதை வளர்ப்பதற்கு ஆசை இருக்கிறது என்றும் அவனுக்குத் தெளிவாக விளங்கியது.

அடுத்தடுத்த நாட்களில் தத்தெடுக்கும் விவகாரம் மிகவும் சூடுபிடிக்கத் தொடங்கி இருந்தது. சட்ட ரீதியாக செய்ய வேண்டியதை அவன் பார்த்துக் கொண்டான். ஆனால் அவனுடைய தாயாருக்குச் சொல்லியபோது அவர் அதில் பெரும் நாட்டம் கொண்டதாகத் தெரியவில்லை.

“அது யாற்ர பிள்ளயோ என்னவோ. அத எடுத்து உன்னர பிள்ள மாதிரி வளக்க முடியுமே. ஊருலகம் என்ன சொல்லும்.? எனக்கெண்டா இது சரியாப் படேல்ல” என்று அவனுடைய அம்மா இழுத்தார்.

“அப்பிடி ஊருலகம் ஏற்றுக் கொள்ளாட்டி அவங்க என்னையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நான் ஊருக்கு வராம இங்கயே இருக்கிறன். என்ன வாழவச்ச இந்த இடத்திலயே நான் சாகும்வர இருந்திட்டுப் போறன்” என்று அவன் கண்டிப்பாகச் சொன்னான்.

சாந்தியின் வீட்டுக்கு அவளே எடுத்துக் கதைத்தாள். முதலில் தனக்கு கருப்பை எடுக்கப்பட்டது என்று சொல்லிவிட்டு, சிறிது நேரத்தின் பின் இந்த விடயத்தைச் சொன்னாள். சாந்தியின் அம்மா எதிர்க்கவில்லை.

“பிள்ள உன்ர குறை தெரியுறதுக்கு முன்னால உன்ர மனுசன் இப்பிடி ஒரு விஷயத்தக் காட்டுறார் எண்டா எவ்வளவு கவனமா அவர் யோசிச்சு இருக்கிறார் எண்டு தெரியுது. அந்த முடிவு எனக்கும் நல்லதாப் படுது. அந்தக் குழந்தை நல்லா இருக்கு எண்டு தானே சொன்னாய். அதையே தத்தெடுத்து வளத்துக் கொள்ளு. எனக்கும் முடியுமான நேரத்தில வந்து பாக்கிறன்” என்று அவளுடைய அம்மா சொன்னார்.

சமுதாயக் கட்டுப்பாட்டுக்குப் பயந்தவர் அவர். இந்த விடயத்தை வைத்துக் கொண்டு தன்னுடைய பிள்ளையைத் தள்ளி வைத்து விடக்கூடாது. விவாகரத்துக் கேட்டுவிடக் கூடாது என்று நினைத்திருக்கிறார். அதனால்தான் தன்னுடைய எண்ணத்திற்கு அத்தனை சுலபமாக பச்சைக் கொடியைக் காட்டிவிட்டார் என்று அவன் நினைத்தான்.

ஆனால் எதுவாக இருந்தாலும் இந்த விடயத்திற்காக மனைவியை விவாகரத்துச் செய்வதற்கு ஒரு கணவன் முன்வருவான் ஆயின் அது பெரிய அநியாயம். அவ்வாறானவனுக்கு சட்டமும் துணை போகக்கூடாது என்று தனக்குள் நினைத்தான்.

எப்படியோ எல்லா உண்மைகளையும் சொல்லியாகிவிட்டது. இனி குழந்தையைத் தத்தெடுப்பதில் மும்முரமாக ஈடுபடுவோம் என்று நினைத்தான்.

அவனும் மனைவியும் சேர்ந்து விண்ணப்பித்து இருந்ததால் தத்தெடுக்கும் முயற்சி முதல் முறையிலேயே வெற்றியைத் தந்தது. அவனுக்கு வாழ்க்கையில் எதையோ சாதித்ததைப் போன்று இருந்தது. ஒருவனுடைய பிறப்பு எத்தனை பழியுள்ளதாக அமைந்த போதும் இரு நல்லவர்களின் அரவணைப்பு அனைத்தையும் கழுவிவிடுகின்றது என்று சொல்லிக் கொண்டான்.

வந்து இறங்கிய காலத்தில் இருந்த அடுத்தடுத்து வந்து சந்தோசம் அவனை ஆறுதல் அடையச் செய்தது. வந்தாரை வாழ வைக்கும் வவுனியா மண்ணில் மனைவியோடும் குழந்தையோடும் ஆசிரியத் தொழிலின் மேன்மை புலப்பட வாழத் தொடங்கினான்.

# 26

குழந்தை வளர்ப்பது அவர்களுக்குப் புதிதான ஒன்றாக இருந்த போதிலும் அதை வளர்ப்பதில் பெரிதாக சிக்கல்கள் இருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் வந்து மாலையில் போகும் வயதான வேலைக்காரி வந்து போனதால் பெரிதளவில் கடினம் இல்லாமலேயே குழந்தை வளர்ந்து வந்தது.

அந்த நேரத்தில் அவன் எழுத்திலும் தடம் பதிக்க ஆரம்பித்தான். வாழ்க்கையில் ஏற்பட்ட தொடர் துன்பங்களும் இருட்டுக்குப் பின்னதான விடியலும் அவனுடைய கண்களைத் திறந்து விட்டிருந்தன.

இருபதாம் நூற்றாண்டில் இறுதி தசாப்தத்திலே, காணாமற் போனோர் என்றும் படகில் இந்தியா செல்லும் போது கடலுக்குள் மூழ்கியவர்கள் என்றும் பல நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்வைத் தொலைத்திருந்தது பெரிய விடயமாகக் காணப்பட்டது.

அவர்களின் அவலங்களை ஆதங்கங்களைக் கவிதைகளாகவும் சிறுகதைகளாகவும் எழுதிக் கொண்டிருந்தான். அவற்றால் அவனுக்குப் பாராட்டுக் கிடைத்தது.

கினாலிப் பாதையினூடாக இரவில் பயணம் செய்த யாழ்ப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக தவறான செய்தி ஒன்று வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியைச் சம்பந்தப்படுத்தி ஒரு ஆக்கத்தை எழுதித் தருமாறு அவனிடம் ஒரு பத்திரிகை கேட்டுக் கொண்டது.

அதை ஆராய்ந்தறிய முற்பட்டபோது அவனுக்குள் முடிவைக்கப்பட்டிருந்த உணர்வுகள் கொதித்தெழுந்தன. அநியாயமாகச் சாகடிக்கப்பட்ட அவளின் ஞாபகம் தான் அவனுக்கு அப்போது எழுந்தது. அவளுக்கு நடந்து என்ன..? குழம்பிக் கொண்டிருந்த அவனுடைய மனம் மறுபடியும் விழித்துக் கொண்டது.

அவள் வறுமையின் பிடியிலே உழன்று வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தவள். யாரையும் விரும்பியிருக்கவோ திருமணம் செய்திருக்கவோ இல்லை என்பது, அன்றைக்கு வைத்தியசாலையில் அவளின் தாயின் புலம்பலில் இருந்து தெரியவந்தது.

அப்படியானால் அவளை அழிந்தது யார் ... ? படையினரா ? பொறுக்கிகளா ? அல்லது பெரிய மனிதன் என்ற போர்வையில் நடமாடும் புல்லுருவிகளா...?

பெற்றோரைத் தேடித் தனியாகச் சென்ற அவளைச் சீண்டியது யார் ? என்ற கேள்வி அவனுக்குள் குடைந்து கொண்டேயிருந்தது.

மனைவியும் குழந்தையும் நன்கு தூங்கிவிட்ட இரவு வேளைகளில் எழுந்து சென்று வெளியில் பார்த்துக் கொண்டு நின்றான். அதுவரையிலும் பல துன்பங்களால் கட்டுப்பட்டிருந்த அவனுடைய உணர்ச்சிகள் மறுபடியும் அவளை நோக்கிச் சென்றன.

அவளை ஒரு நாள் முன்னதாகச் சந்தித்து இருந்தாலும் அவன் இந்த விடயத்தைக் கேட்டிருப்பான். ஆனால் விதி... அவள் மூச்சு நின்றுவிட்ட பிறகல்லவா அவனை அந்தவிடத்திற்கு அழைத்து வந்தது.

கடைசி வரை அவளின் இருள் பக்கம் தெரியாமலேயே இருந்துவிட்டதே. அவள் யாருக்கும் எதையும் சொல்லி இருக்கவில்லை. ஆனால் அவன் கேட்டிருந்தால் சொல்லி இருப்பாள் அவளுக்கு அவனிடத்தில் நம்பிக்கை இருந்தது.

அந்த நேரத்தில் அவனால் எதுவும் செய்ய முடியாமல் இருந்தது உண்மையே. அவளின் பிணத்திற்கு என்ன நிகழ்ந்தது என்பதையும் தெரிந்து கொள்ள முடியாமல் அவசரமாகக் கிளிநொச்சிக்குப் புறப்பட்டுப் போனது நினைவுக்கு வந்தது. ஆனால் எப்பொழுதும் அப்படி இருக்காதே. அவன் ஒரு எழுத்தாளன். பேச்சாளன். ஏதாவது சந்தர்ப்பத்தில் அவளுக்காகக் கதைத்திருப்பான்.

வானத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த போது அவனின் மனைவியின் அவலக்குரல் கேட்டது.

ஓடோடி உள்ளே சென்றான். பிள்ளையின் வாயிலிருந்து வெள்ளையாக வெளியே வந்திருக்க பிள்ளையைத் தூக்கிச் சுமந்தபடி கத்திக் கொண்டிருந்தாள் அவள். அவனும் திகைத்து விட்டான். உடனடியாக அதைத் தான் வாங்கிக் கொண்டான்.

பிள்ளையைத் தோளில் போட்டுத் தட்டிப் பார்த்தான் அவன். ஆனாலும் தொடர்ந்தும் மூச்சு வராது சிரமப்பட்டுக் கொண்டிருந்தது பிள்ளை. அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

உடனடியாக ஒரு முச்சக்கர வண்டியை வரவழைத்துக் கொண்டு வைத்தியசாலை நோக்கி ஓடினார்கள். ஏற்கெனவே அங்கிருந்த தாதியர் பழக்கமாகி இருந்ததால் உடனடியாகக் காரியத்தில் இறங்கினார்கள்.

குழந்தைக்கு செயற்கை சுவாசம் கொடுத்து, சாதாரணமாக்கி வைத்தார்கள். அதற்குப் பழகிய இடத்தில் அது சேமமாகவே இருந்தது. இருப்பினும் சாந்தியையும் இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். இரண்டு நாட்களின் பின் வீட்டுக்குக் கொண்டு செல்ல அனுமதித்து இருந்தனர். வெளியேறும் போது, ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக் கொண்டனர்.

"குழந்தை முற்றாக வளர்ச்சியடையாத நிலையில் பிறந்தது. சளி போன்ற வருத்தங்களில் இருந்து கவனமாக குழந்தையைப் பாக்க வேண்டும். அடிக்கடி முழுக வாக்கக்கூடாது. ஈரம் படாமல் பாத்துக் கொள்ள வேண்டும். தேவையான பொழுதுகளில் தங்களுடைய நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள்" என்றார்கள்.

வைத்தியசாலையில் இருந்தவரையிலும் சந்தோசமாக அமைதியாக இருந்த பிள்ளை வீட்டுக்கு வந்ததும் மறுபடி குழப்பம் எடுக்கத் தொடங்கியது. அன்று சாந்தி நித்திரையும் இல்லாமல் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்குக் கவலையாக இருந்தது.

ஏற்கெனவே உடம்பு சுகமில்லாமல் இருந்தவளுக்கு நான் சுமை கொடுத்து விட்டேனோ என்று யோசித்தான். அவளால் அவ்வாறு பார்த்துக் கொள்ள முடியாது என்பது விளங்கியது.

குழந்தையைக் கவனித்தல் என்ற விடயத்தில் தானும் சம பங்களிப்பைத் தரவேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். பகலில் சிறிதும் ஓய்வில்லாமல் அவள் பிள்ளையோடு இருப்பதால் இரவு நேரங்களில் தான் அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

இரவிலே கண்விழிக்க வேண்டிய சந்தர்ப்பம் கடமைக்காக அல்லாது சந்தோசமாகவே இருக்க வேண்டும் என்று யோசித்தான். மனைவியை தூங்கச் சொல்லிவிட்டு தான் இரவில் விழித்திருக்கும் பொழுதுகளில் எழுதுவதற்கு ஆரம்பித்தான்.

இரவிரவாகப் பிள்ளைக்குப் பணிவிடை செய்ய வேண்டி இருக்கவில்லை. இருப்பினும் விழிப்புடன் அதை அருகில் இருந்து பார்த்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. அது கடுமையான கண்காணிப்பில் வளர்க்கப்பட வேண்டிய குழந்தையாக இருந்தது.

இவ்வாறு ஒரு வாரம் கழிந்த பிறகு குழந்தை முற்றிலும் குணமாகிவிட்டது. குழந்தை சாதாரணமாகவே இருந்தது. தன் பாட்டிலே விளையாடிக் கொண்டிருந்தது. அவர்கள் இருவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

குழந்தையையும் மனைவியையும் பராமரிப்பதற்காக அவன் தன்னுடைய நேரத்தை மாற்றிக் கொண்டான். அமைதியான இரவு வேளைகளில் விழித்திருந்து எழுதும்போது பலவற்றை வேகமாகவும் தெளிவாகவும் எழுத முடிந்தது.

ஒரு குழந்தையைப் பெற்று வளர்க்கும் தாயாரால் யாரேனும் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் எடை போட்டுவிட முடியும் என்பது எத்தகைய உண்மை என்பதை அவன் புரிந்து கொண்டான். குழந்தையைப் பார்த்துக் கொண்டு வருவதனால் அவனுக்கு வாழ்க்கையைப் பற்றியும் மற்றயவர்களைப் பற்றியும் ஏன் தன்னைப் பற்றியும் பல தெளிவான விளக்கங்கள் எழுந்தன.

வாழ்க்கை என்பது அறிவதற்காகவே அன்றி வாழ்வதற்காக அல்ல என்ற உண்மை முதன் முறையாக அவனுக்குப் புலனாகத் தொடங்கியது. வாழ்க்கையை நாம் புரிந்து விட்டால் வாழ்க்கையும் எங்களை விட்டுப் போய்விடும் அல்லது வாழ்க்கையில் இருந்து நாம் போய்விடுவோம் என்பது விளங்கியது.

"பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன் பிறந்து பாரென இறைவன் சொன்னான்"

என்ற கவியரசு கண்ணதாசனின் வரிகள் அவனுக்கு நினைவுக்கு வந்தன. 'எதை எதை எல்லாமோ அறிய விரும்புவதாக நான் இவ்வுலகிற்கு வருவதற்கு முன்பாக இறைவனிடம் கேட்டிருக்கின்றேன். அதனால்தான் அனைத்தையும் அறிந்து பார் என்று சொல்லி துன்பங்களைச் சேர்த்த கலவையாக என்னுடைய வாழ்க்கையை அமைத்திருக்கிறான்' என்று எண்ணலானான்.

தன்னிடம் இருந்த எண்ணம் தாவி நித்திரையாகக் கிடந்த குழந்தையின் மீது சென்றது. எதையுமே உணராதவாறு படுத்துக் கண்களை மூடிக்கிடந்த அந்த மலரின்மீது அவனுடைய சிந்தனை சென்றது. தன்னைப் போலவே பலவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அது பூமியில் அவதரித்திருக்குமா என்று யோசித்தான்.

'இல்லயில்லை. அது எதையும் அனுபவிக்கக் கூடாது. அதற்குத் தன்னுடைய இருண்ட பக்கங்கள் தெரியக்கூடாது.' என்று அவன் நினைத்தான். ஆனால் எப்படி..? அது அவர்களுடைய பிள்ளை அல்ல என்பதும் அவர்களால் தத்தெடுக்கப்பட்டது என்பதும் பிற்காலத்திற் அதற்குத் தெரிய வராதா?

அது மட்டுமல்ல தங்களுக்கு ஒரு குழந்தை கிடைத்துவிட்டால் அப்பொழுதும் அதன் மீதுள்ள பாசம் மாறாது இருக்குமா? என்று யோசனை வந்தது. எப்படி சாத்தியமாகும்? என்று கேட்ட மனச்சாட்சியை அவன் வென்றுவிட்டான். விஞ்ஞானத்தில் உச்ச கட்ட வளர்ச்சியை அடைந்திருக்கும் காலம் இது. இந்நாட்களில் சாத்தியம் ஆகாதது என்று எதுவும் கிடையாதே.

ஆனால் அவ்வாறு சந்தர்ப்பம் உருவாகும் நேரத்திலும் அதன் மீது ஒரே மாதிரியான அன்பு நிலைத்திருக்குமா என்று எண்ணத் தோன்றியது. இருக்க வேண்டும். இருக்கும். எதுவாக இருந்தாலும் எம்மைத் தேடி வந்த முதலாவது பிள்ளை இது. அதைப் புறந்தள்ளி எதையும் சாதிக்க முடியாது என்று தீர்மானித்துக் கொண்டபோது அந்த சத்தம் கேட்டது.

ஒரு புறமாகத் திரும்பிப் படுத்திருந்த குழந்தையின் சுவாசத்தின் போது சளி கரகரக்கும் சத்தம் கேட்டது. அருகிற் சென்று வைத்தியசாலையில் அவர்கள் கொடுத்துவிட்ட அந்த பாமைக் கையிற் பூசி சற்றுத் தூரத்தில் கையை வைத்துக் கொண்டு சுவாசத்தின்போது உட்செல்லுமாறு செய்தான்.

அந்த வைத்தியம் பலனளிக்கவில்லை. குழந்தை அருண்டு எழும்பலானது. மனைவியின் நித்திரையைக் குழப்பிவிடும் என்ற பயத்துடன் வேகமாக எழுந்து அதைத் தூக்கி அணைத்துக் கொண்டான். தனது ஒரு கையில் நிலைக்குத்தாக இருத்திவிட்டு மற்ற கையால் தடவலானான்.

குழந்தைக்கு சுகமாக இருந்திருக்க வேண்டும். அதன் விழிகளை மறுபடியும் மூடிக் கொண்டது. நித்திரை கொள்ளப் போகின்றது என்று எண்ணியவாறே தொடர்ந்தும் இதமாகத் தடவிக் கொடுத்தான்.

குழந்தையைக் கையில் இருந்து எடுக்க முடியாமல் இருந்தது. மல்லாக்காகப் படுத்திவிட்டால் மறுபடியும் சளி இழுக்கத் தொடங்குமோ என்ற பயத்தினால் கையிலே வைத்திருந்தான். அமைதியான இரவில் மறுபடியும் அவனுடைய சிந்தனை அலைக்கழிந்தது.

அந்தக் குழந்தை உருவான காலத்தில் இருந்து அதன் தாய் ஒரு வேளையாவது வயிறு முட்ட சாப்பிட்டிருப்பாளோ என்று தெரியவில்லை. அதனிடத்தில் எந்த நோய் எதிர்ப்புச் சக்தி இருக்குமோ என்று யோசித்தான்.

எதுவாக இருந்தாலும் குழந்தையின் பிறப்பு நிறை என்பது அதன் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் என்று சொல்லுவார்கள். ஆனால் இந்தப பிள்ளையின் பிறப்பு நிறையோ மிகக் குறைவு. அதைவிடவும் குறை மாதமாக முழு அளவில் வளர்ச்சி அடையாமல் அல்லவா உலகிற்கு வந்தது. அந்தப் பிள்ளையால் எந்த அளவிற்குப் போராட முடியும்?

தனக்காகப் போராடித் தான் வளர்ந்து, தனக்கு வரக்கூடிய நோய்களில் இருந்து போராடி தனது ஆரோக்கியத்தைக் காத்து வாழ்க்கையுடன் போராடித் தன்னை வளர்த்தவர்களுக்கு நல்ல பெயரை எடுத்துக் கொடுப்பதற்கு அந்தப் பெண் குழந்தையால் முடியுமா?

பெற்ற பிள்ளையாயினும் வளர்த்த பிள்ளையாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையே பெற்றோர் விரும்புவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒன்றிற்கு ஒன்று உதவியாக இருக்க வேண்டும். ஒன்றால் முடியாததை மற்றது செய்யவேண்டும்.

இந்தக் குழந்தைக்கும் துணை வேண்டும். ஒரு குழந்தையுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது என்ற நினைப்பு முதலாவது தடவையாக அவனுக்கு வந்தது. கை விறைக்கத் தொடங்கியதும் வலியை உணர்ந்து நினைவு மீண்டது.

நீண்ட நேரமாக ஒற்றைக் கையில் குழந்தையைத் தாங்கி இருக்கிறேன் என்று யோசித்துவிட்டு அதைக் கிடத்தினான். அதன் தலைமாட்டில் சிறிய தலையணைகள் இரண்டினை வைத்து தலை சற்று உயரத்தில் இருக்குமாறு வைத்துவிட்டு ஒரு புறமாக சரித்துப் படுத்தினான்.

குழந்தை ஆறுதலாக உறங்குவது தெரிந்தது. தான் உறங்க ஆரம்பிக்கும் நேரம் தாண்டிவிட்டது என்பதும் தெரிந்தது. குழந்தையின் அருகில் இன்னொரு தலையணையை எடுத்துப் போட்டபடி உறங்கத் தொடங்கினான்.

ஆதிகாலையில் எழும்பும்போது தலை இலேசாக வலித்தது. சந்தேகத்துடன் குழந்தையைத் திரும்பிப் பார்த்தான். அது அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. சாந்தி எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கியிருந்தாள்.

முதல்நாளில்தான்கண்டுபிடித்தவைத்தியம்வேலைசெய்திருக்கின்றது என்று சந்தோசம் எழுந்தது. தன்னை ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகு எழுப்புமாறு மனைவியிடம் சொல்லிவிட்டு அவன் திரும்பிப் படுத்தான்.

அடுத்த நாள் இரவு எதுவித தொந்தரவும் இல்லாமல் குழந்தை உறங்கியது. அன்றைக்கு அடுத்த வாரம் அனுப்ப வேண்டிய தொடரின் பாகத்தை எழுதலாமே என்று யோசனை தோன்றியது. அதை எழுதத் தொடங்கினான். அன்று விட்ட இடம் எதுவென்று சிந்தித்தான்.

அவளின் தாய்க்கு நிகழ்ந்தது என்ன என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதைவிட குழந்தையை வளர்த்தெடுப்பது தான் முக்கியம் என்ற எண்ணம் உதித்தது.

இருப்பினும் அவளுக்கு நடந்த கொடுமையை விபரிக்கும் முகமாக ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட நினைத்தான். "சீதையைக் காத்திடத் தவறிய பிரம்மனின் சாபம் " என்ற பெயரில் ஆக்கிரமிப்பின் போது அநியாயமாக துஷ்பிரயோகம் செய்யப்படும் பெண்களை, பிரம்மன் இட்ட சாபம் இராவணனைத் தீண்டவிடாது அசோக வனத்தில் சீதையைக் காத்தது போல, இலங்கையிற் பிறந்த ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணையும் காக்க வேண்டும் என்ற தொனிப் பொருளில் அந்தத் தொகுப்பை வெளியிட்டான்.

ஒரு கவிஞனாக அறிமுகமான அவன், தொடர்ந்து கட்டுரைத் தொகுப்பு சிறுகதைத்தொகுப்பு என்பவற்றை வெளியிட்டு, ஒரு நாவலாசிரியனாக வளர்ந்தான். தனக்கு வாய்ப்புக்களை வழங்கி தன்னை உயர்த்திவிட்ட இந்த வன்னி மண்ணை அவன் என்றும் நேசிக்கிறான்.

யதார்த்தங்களைக் கருக்களாக்கி அறிவுரையை குறியீட்டாக்கி, சமுதாயத்திற்காகவும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறான்.

தன் தவறை சமுதாயத்திற்கு தரும் பொருளாக உணர்த்திய அவன், இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

---- முற்றும்----

சுவாரசியமாகவே முடிந்துவிட்ட அந்தக் கதையைப் புத்தகத்தை மூடுகிறாள் பிரியந்தி. இருந்தாலும் பல கேள்விகள் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தன.

எத்தனை சாதுரியமாக அவன் அவள் என்று தொடங்கிபோதும் சில இடங்களில் சிலரின் பெயர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு விட்டனவே என்று எண்ணினாள்.

அவை தவறுதலாகத் தரப்பட்டவை அல்ல. அப்பாவின் எல்லாக் கதையிலும் இல்லத்தரசியின் பெயர் சாந்தி என்றே குறிப்பிடப்படும். நல்ல நண்பனைக் காட்ட வேண்டுமாயின் சுகந்தன் என்றே குறிப்பிடுவதுண்டு. அதனால் பெயர்களைப் பற்றி சிந்திக்கத் தேவையில்லை. இருப்பினும் மறுபடியும் அவள் மனதில் கேள்விகள் எழுந்தன.

ஏதோ யோசித்துவிட்டு வேகமாக தன் தந்தையின் அறைக்குட் சென்று சுயசரிதைக் குறிப்புக்களைத் தேடினாள்.

# 27

தன்னைப் பற்றி எதுவும் சொல்லியிருக்கவில்லையே என்ற ஆதங்கம் அவளுக்கு எழுந்தது. இன்னொரு பிள்ளை வேண்டும் என்று அப்பா திட்டமிட்டுக் கொண்டதும் விளங்கியது. ஆனால் தன்னைப் பற்றி ஏன் எழுதவில்லை என்று யோசித்தாள்.

அதற்குப் பிறகு, இந்தியாவுக்கு சென்று மருத்துவம் செய்து தான் அவன் பிறந்திருப்பாள் என்பதுதான் அவளுடைய நம்பிக்கை. அதைப் பற்றி அவரின் சுயசரிதைக் குறிப்பில் தான் தேட வேண்டும் என்று நினைத்துத் தேடிக் கொண்டிருந்தாள்.

தேடிக் கொண்டிருந்தபோது அவளின் கையில் கிடைத்தது இது... "பெண் என்பவள் ....." என்ற தலைப்பிலே எழுதிய கட்டுரைத் தொடர். அதற்குள் மறைமுகமாக எதையும் எழுதியிருப்பார் என்ற எண்ணத்துடன் ஆறுதலாகவே வாசித்துப் பார்த்தாள்.

"வாழ்வில் வெற்றியடைந்த ஒவ்வொருவரும் அன்னையைப் போற்றுபவனாக இருப்பான் என்பதை யாருமே கண்டுபிடித்துவிடுவர். எனக்குள், ஏன் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் இதய தெய்வம் யார் என்று கேட்டால், அன்னை என்று உடனடியாகவே சொல்லிவிடுவோம். ஒரு பிள்ளையை முன்னேற்றிவிடுவதில் அன்னையின் பங்களிப்பு அளப்பரியது என்பதை யாரும் மறுத்திடமுடியாது. அதிலும் ஆண் துணையில்லாமலே தனியாக நின்று வாழ்வில் எதிர்நீச்சல் போட்டவர்களை அத்தனை சீக்கிரத்தில் மறந்துவிட முடியாது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், இன்று எம் மத்தியிற் பெருகிவிட்ட காரணத்தால், நாட்டின் அபிவிருத்தி என்று பார்க்கும்போது அவர்களை முன்னிலைப்படுத்தியே செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

பெண் என்ற ரீதியில் அவர்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சங்கள், அபிவிருத்தியை நோக்கி நகரும் மக்களின் எதிர்பார்ப்புக்களில் பெண்களின் பின்னடைவு, வறுமையோடு போராடிக் கொண்டிருக்கும் அவர்களின் குடும்பங்களின் எதிர்காலம் என்று பார்க்கும்போது, அவர்களின் சந்தர்ப்பங்கள் என்ற விடயத்தைக் கருத்தூன்றிப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை தற்பொழுது அதிகமாக இருப்பதற்கான காரணங்கள் பலவும் ஆராயப்படுகின்றன. கடந்த தசாப்தங்களாக நடந்து முடிந்த யுத்தத்தினால் ஏற்பட்ட மரணங்கள், அங்கக்குறைபாடுகள், காணாமற்போனோர் என்று சொல்லிக் காரணங்களை அடுக்கிக் கொண்டே போய்விடலாம். இவ்வாறான காரணங்களினால் பெண்கள் குடும்பங்களைக் கட்டியிழுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது எமது தலைமுறையினர் சந்தித்த மிகப் பாரதூரமான ஒரு கட்டமே.

இதன் மறைமுகமான ஒரு தாக்கம் தான் புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டதும், வரனை வெளிநாடுகளில் பார்க்கவேண்டிய நிலைமையும். பாதுகாப்புக் காரணம் என்றும், பொருளாதார மேம்பாடு என்றும் வெளிநாடு நோக்கி ஆண்கள் சென்றுவிடவும், வரனை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

வெளிநாட்டு வரனைத் திருமணம் செய்து கொண்டவர்கள், உடனடியாகவோ அல்லது எப்பொழுதுமோ சென்று அவர்களுடன் இணைய முடியாத நிலை இருப்பதனால், அவர்கள் இயல்பாகவே இந்த வகையினரில் அடங்கி விடுகின்றனர். அவர்களில் பலர் வறுமை என்ற நிலைக்குப் போய்விடாமல் ஆண்களின் துணையின்றிப் பிள்ளைகளை வளர்க்கவும் ஏனைய காரியங்களைச் செய்யவும் வேண்டியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் வறுமை ஒன்றைத் தவிர அனைத்துவிதமான துன்பங்களையும் அனுபவிக்கின்றனர்.

ஒரு சிலர் தங்கள் கணவனிடம் இருந்து பணமும் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு உள்ளானவராகி முற்றுமுழுதாகவே பெண்களின் தலைமைத்துவம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றனர். இவர்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமான நிலையாகும்

கடந்த முப்பது வருடங்களாக, மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றதையும், ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஏற்பட்ட விசித்திரமான, விபரீதமான அனுபவங்களையும் கொண்டு ஏராளமான உண்மைக் கதைகள், புனைகதைகள் என்று எண்ணிலடங்கா இலக்கியங்கள் எழுதப்பட்டுவிட்டன. செய்திகள் சம்பவங்கள் என் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் ஏராளமான விடயங்கள் பிரசுரிக்கப்பட்டுவிட்டன. மோசடி, பணம், சீதனம் போன்ற இன்னோரன்ன பல விடயங்களையும் பெண்ணியத்தையும் கொண்டு சமூகவாதிகள் பலவகையான அலசல்களையும் செய்துவிட்டுப் போய்விட்டார்கள்.

தேசத்தோடு ஒட்டியதான, பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எழுச்சிக் கதையிது. அத்தனை சுலபமாகக் குறைத்துவிட முடியாத எண்ணிக்கையில் உள்ளவர்கள் அவர்கள். இன்னும் அரை நூற்றாண்டு காலத்திற்கு ஒரு எண்ணிக்கையைக் காட்டிக் கொண்டு இருக்கப்போகிறார்கள் இவர்கள்.

மேற்குறிப்பிடப்பட்டவர்களிலும், மேலும் நாட்டிற்குள்ளாகவே மணவாளனைத் தேடிக் கொண்டிருப்பவர்களிடமும் காணப்படும் விவாகரத்து மற்றும் பராமரிப்பு வழக்குகளாலும் ஆணின் ஆதிக்கம் இல்லாது போன அவ்வாறான குடும்பங்கள் பாரியளவில் பெருகியமைக்குக் காரணமாக அமையலாம். பொருளாதாரம், கலாசாரச் சீர்கேடு என்று ஆயிரம் காரணங்களைச் சொல்லிக் கொண்டு சென்றாலும், தொடர்பாடலாலும் விஞ்ஞானத்தின் உச்ச கட்ட வளர்ச்சியாலும் நம்மைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு வந்திருக்கும் பாரிய அச்சுறுத்தல் இதுவாகும்.

எல்லாவற்றையும் விட எமது சமுதாயத்தில் இருக்கும் முக்கியமான ஒரு விடயம், எமது சமுதாயத்திற்கே சிறப்பான விடயம் திருமணத்திற்காகப் பணம் செலுத்த வேண்டியிருப்பதாகும். சீதனம் என்ற பெயரிலும் வரதட்சனை என்ற பெயரிலும் நன்கொடை என்ற பெயரிலும் பணத்தைச் செலுத்தியே ஒரு பெண் வாழ்க்கையைத் தேடிக்கொள்ள முடியும். அதுவும் அப்பாவும் அண்ணாவும் இல்லாமல், பெண்ணின் தலைமைத்துவத்தில் வாழும் பெண்ணாக இருந்தால் திருமணமும் அதைப் போலவே தடைப்பட்டு மறுபடியும் தனியாக ஆண் துணையின்றி வாழ வேண்டிய நிலை தொடர்ந்துவிடும். அல்லது வரதட்சணையில்லாததால், வேலையில்லாமல், கெட்ட பழக்கமுள்ள மணமகனைக் கைபிடித்துக் காலமெல்லாம் துன்பப்படும் ஏற்பட்டுவிடும். இதுவும் மேலே குறிப்பிட்டதற்கு ஒப்பானதாகும்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பெண்கள் கட்டாயமாக வேலை பார்த்தேயாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள் வேலைகளுக்குச் செல்லும்போது அவர்கள் சம அந்தஸ்து, சமமான வசதிகள், சம ஊதியம் என்பவற்றைப் பெற்றுக் கொள்கிறார்களா என்பதை நோக்க வேண்டும்.

உயர்மட்ட கல்விமான்களாக இருப்பவர்களிடமும், அரச ஊழியர்களாக இருப்பவர்களிடமும் அந்த சம்பள வேறுபாடு பால்நிலையில் காணப்படுவதில்லை என்பது கண்கூடு. ஆனால் கூலி வேலை செய்பவர்கள் அவ்வாறான பாரபட்சத்திற்கோ உழைப்புச் சுரண்டலுக்கோ உள்ளாகின்றார்கள். அவர்கள் அனைத்து விதமான ஓரங்காட்டல்களையும் அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆக ஒட்டு மொத்தமாக எம்மவரிடையே ஏற்படுத்தப்பட வேண்டிய சில மனமாற்றங்களைக் கட்டாயச் சட்டமாக அமுல்படுத்தினால், இவ்வாறான நிலைகளை மாற்றிக் கொள்ளமுடியுமா என்று சிந்திக்கத் தோன்றுகின்றதா? சிந்திப்போம். சிந்திக்க வேண்டிய நேரம் இதுவே! போரின்பின், சமாதானத்தை நிலை நாட்டி அபிவிருத்தியை நோக்கிச் செல்லும்போது, பலவகையான இடர்பாடுகளையும், தூசைப் போலத் தட்டிவிட்டு நகர்ந்துவிடும் திறமை எமக்கு வரவேண்டும். சிந்தனை என்பது ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழவேண்டும். சிந்திப்போம்." அதற்கு மேலும் தொடருவதற்குப் பொறுமையில்லை. சுயசரிதைக் குறிப்பை எடுத்துத் தட்டினாள்.

*"பெண் என்பவள் தெய்வத்திற்குச் சமமானவள் என்று சொல்லிவிட்டு உயரத்தில் ஏற்ற வேண்டியது கிடையாது. அவள் எங்களுக்குச் சமமாகப் பிறந்தவள். எங்கள் வாழ்க்கையை வெற்றியாக்குபவள். அர்த்தமுள்ளதாக்குபவள் என்று எண்ணினால் மட்டுமே போதுமானது. அவர்களில் வாழ்க்கையில் எழுவதற்கு நாம் செய்ய வேண்டிய சிறியதொரு அளவு அது தான்.*

*யாரையும் போற்ற வேண்டுமோ, கோயில் கட்டி வழிபட வேண்டியதோ கிடையாது. எம்மைச் சார்ந்த பெண்களை நாம் நேசமுடன் கவனித்துக் கொண்டாலே போதும். அது தெய்வத்திற்குச் செய்யும் தவத்திற்கும் மேலானதாகும்.*

*பெண் விடுதலையைப் பற்றிக் கதைத்தவர்கள் தாம் அப்படி வாழ்ந்து காட்டவில்லை என்பது பலரது குற்றச் சாட்டாகும்.*

*என் மகளை நான் சுதந்திரத்துடன் வளர்த்தெடுப்பேன். உலகை அவள் அறிந்து கொள்வதற்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பேன்.*

*பெண் என்ற பாரபட்சமோ நினைப்போ எழாதவாறு அவளை நான் சுதந்திரமாக வாழ வைப்பேன். உணர்ச்சிகளுக்கு அடிமையாக்கி அவளின் திறமைகளை யாரும் மழுங்கடிக்கா வண்ணம் பார்த்துக் கொள்வேன்.*

பெண் என்ற காரணத்தில் என் பள்ளிக் காதலியின் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டதால் அவளை இழக்க வேண்டி ஏற்பட்டது. அறிவும் வேண்டியளவு தெளிவும் இல்லாதபடியால் சாந்திக்குக் குழந்தைகள் பெறமுடியாத நிலை ஏற்பட்டது. இளமையும் அழகும் கொண்ட நளினி, அற்பன் ஒருவனால் உயிரை இழக்கும் நிலை ஏற்பட்டது.

இந்தப் பெண்கள் யாரையும் நிம்மதியாக வாழவிடாத இந்தச் சமுதாயத்தில் என் மகளை சுதந்திரமாக வாழவிடுவேன்.

அதற்கு எனக்குத் தேவையான ஆயுதம் எழுத்து.

இதைக் கொண்டு இவள் நுழையப் போகும் பாதைகளை வரைந்து கொள்வேன். ஏற்கப் போகும் இடர்பாடுகளைச் சொல்லி எச்சரிப்பேன். இந்த மண்ணில் பிறந்த எந்த ஒரு பெண்ணும் சந்தோசமாக வாழுமாறு, என் மகளைக் கொண்டே சமுதாயத்தை மாற்றுவேன்.

அவளுக்காகவே எனது இலக்கியப் பயணத்தைத் தொடங்கின்றேன். அவள் போகும் பாதையில் வரக்கூடிய கல் முட்களை அகற்றிவிட அவளுக்கு முன்பதாகச் செய்வேன்."

— தந்தையின் வரிகளைப் பார்க்கும்போதே, அவளுக்குள் ஒரு உள்ளுணர்வு உருவாவது தெரிந்தது. மீண்டும் ஒரு முறை அதைப் படித்துவிட்டு வைத்தபின் அவரின் சுயசரிதைக் குறிப்புக்களைத் தேடியெடுத்துக் கொள்கிறாள்.

பொறுமையாக வாசித்துக் கொண்டிருக்க முடியவில்லை. தன்னைப் பற்றிய குறிப்புக்களையே தீவிரமாகத் தேடிக் கொண்டாள். மறுபடியும் ஒரு கட்டுரை அகப்பட்டது.

"பெண் அடிமைத்தனம் அல்லது பெண்களின் பாரபட்சத்தின் தோற்றுவாய் எங்கே என்பதைத் தேடுவதற்கு வரலாற்றை சிறிது தட்டிப் பார்க்க விரும்புகிறேன். எல்லா மதத்திலுமே பெண்கள் மேன்மைப்படுத்தப் பட்டார்கள் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் காலத்துக்குக் காலம் எமது மக்களிடையே பிரபலமடைந்த சிறுதேவதைகளின் வழிபாடு பாதிக்கப்பட்ட பெண்கள் உயிருடனுமோ உயிர் பிரிந்தவுடனுமோ தம்மைப் பாதிப்புக்கு உள்ளாக்கியவனையோ அல்லது கூட்டத்தினையோ பழிவாங்குவதற்கென எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்காக அவர்களைப் பயத்துடன் போற்றிய மக்களின் நம்பிக்கை என்பது ஐதீகம்.

இதன்முலம் ஆணாதிக்கச் சமுதாயத்தின் பிடியில் பெண்கள் பாதிப்படைந்த சம்பவங்கள் ஆதிகாலம் தொட்டு இருந்துவந்ததைக் காட்டுகின்றது.

இயற்கையின் படைப்பினிலே இனம் ஒன்றுக்குரிய இருப்பு என்பது, ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய பங்களிப்பாக அமைவதை எல்லா உயிரினங்களிடத்தும் நாம் அவதானித்திருக்கின்றோம். வாழ்க்கைப் போராட்டத்தில் உயிரினங்கள் ஒன்றோடு ஒன்று தாக்குதலை நடத்தி, வலிமையுடையவை வெற்றி பெறுகின்றன என்பதை "சாள்ஸ் டாவின்" அவர்கள் தக்கெனப் பிழைத்தலும் தகாதன அழிதலும் என்ற கொள்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

உயிரினங்கள் வாழ்க்கைப் போரில் ஒன்றுடனொன்று மோதிக் கொள்கின்றன. ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதனோ தன்னுடைய இனத்துடனே மோதிக் கொள்கின்றான். இதன் அடிப்படையில் எழுந்ததுவே ஓரங்காட்டல் என்ற விடயம். இது சாதி, மதம், பால், இனம், மொழி என்று பலவாறாகவும் உருவமைந்ததில் அவற்றை எல்லாவற்றையும் கருதிற் கொண்டவாறே 1978 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்பட்டது.

பகுத்தறிவு படைத்த மனிதனின் வாழ்க்கைப் போரில் அவனுக்குரிய தேவையாக நடத்தப்படும் இந்தப் போட்டிகளால் யாருக்குமே நல்லதைச் செய்துவிட முடிவதில்லை என்பதை எம்முடைய கடந்த காலம் காட்டி நிற்கின்றது. நாம் அவதானிக்கும் உலக நடப்புகள் வாய் திறந்து சொல்கின்றன.

ஒருவன் பணக்காரனாக வேண்டுமெனில் நூறு பேர் ஏழையாகவே வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் வலியவர்கள் வெற்றி பெறுவர் என்ற எண்ணத்தை காலங்காலமாகவே கொண்டுள்ளனர்.

ஆண், பெண் இருவராக மட்டுமே உலகிலே தோற்றம் பெற்றபோது, உருவ அமைப்பிலும் ஆற்றலிலும் பெண் சற்றுப் பின்தங்கியிருந்தார்கள். குடும்பம் என்ற வண்டி சீராக ஓடுவதற்கு, ஒருவர் வெளியில் சென்று உழைக்கவும் ஒருவர் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ளவும் என்ற எண்ணப்பாடு வந்தபோது, இருவருமாகவே ஏற்றுக் கொண்டு, இந்த இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றனர்.

ஆளுமையிலும் ஆட்சியிலும் ஆண்கள் பிரகாசிக்க, நிர்வாகத்திலும் நேர்த்தியான குடும்ப ஒழுங்கமைப்பிலும் பெண்கள் முன்னிற்க, குடும்பம் என்ற வண்டி வெகு சீராகவே ஓடிக்கொண்டிருந்தது. தாமே தனித்துவமானவர்கள் என்ற இடத்தை ஒவ்வொருவருமே பெற்றுப் பிரகாசித்தார்கள்."

ம் .... ஹூம்... எல்லாம் பெண்ணியம் சார்ந்த கட்டுரைகளாகவே இருந்தன. அவற்றுள் அவளைப் பற்றிக் குறிப்பாகவேனும் எவையும் தரப்படவில்லை.

புத்தகங்களைத் தேடுவதை நிறுத்திவிட்டு ஆறுதலாகச் சிந்திக்கத் தொடங்கினாள் அவள். ஒரு எழுத்தாளர் அவ்வளவு எளிதாக சஸ்பென்சை போட்டு உடைக்க மாட்டார். அதுவும் தான் இருக்கும்போது தன்னுடைய சுயசரிதைக் குறிப்பை யாரும் வாசிக்கும்படி வைக்கவும் மாட்டார்.

உண்மையாகச் சொல்லப் போனால் வேறு யாருமே இவ்வளவு தெளிவாக இந்தக் கதையைத் தேடி வாசித்து இருக்க மாட்டார்கள். அவளுக்குள் எழுந்த வேகமும் அவளின் கணித அறிவும் இவ்வாறு தந்தையாரின் நூலகத்தை ஆராய வைத்துப் பல உண்மைகளைக் கண்டுபிடித்திருந்தன.

இதனால் இங்குதான் இருக்கின்றது என்ற எண்ணப்பாட்டுடன் தேடுவது கடினம் எங்காவது குறிப்பாகச் சொல்லப்பட்டு இருக்கலாம். அதை அறிந்து கொள்வதானால் அவரின் சகல தொகுப்புக்களையும் பத்திரிகையில் வந்த கட்டுரைகளையும் ஒழுங்கு மாறாமல் படித்து வரவேண்டும் என்று யோசித்தாள்.

ஆனால் அது சாத்தியப்படப் போவதில்லை. அவளுக்குள் அலை அடித்துக் கொண்டிருந்தது. தனது பிறப்பின் ரகசியத்தை அறிந்து கொள்ளாமல் அவளால் எதுவும் செய்து கொள்ள முடியாது. அவளின் சிந்தனைகள் அனைத்தும் இறக்கை கட்டிப் பறந்து தேடத் தொடங்கியது.

அப்பாவிடம் நேரடியாகக் கேட்டுவிடலாம். ஆனால் அதை வெளியிடுவாரா என்பது தெரியவில்லை. இன்னும் பல சஸ்பென்சைக் கொடுக்க முனைந்தார் என்றால் அவளுக்கு மேலும் நிம்மதி இல்லாமற் போய்விடும். அம்மாவிடம் கேட்டுப் பார்க்கலாம். ஆனால் அம்மாவுக்கு இவற்றில் எவை தெரியும் என்பதையே கண்டு கொள்ள முடியவில்லை. தனக்கு எதுவும் தெரியக்கூடாது என்பதிற் கடுமையாகவே நின்றிருக்கிறார்கள். பின் யாரிடம் கேட்பது என்பது தெரியவில்லை.

அதற்குப் பிறகு என்ன நடந்திருக்கும் என்பதை ஆறுதலாக யோசித்தாள். அந்தப் பிள்ளை ஆரோக்கியமானதாக இருக்கவில்லை என்பது கதையில் இருந்து தெரிந்தது. அந்தப் பிள்ளை இடையில் மரணம் அடைந்திருக்கலாம். அதற்குப் பிறகு மிகவும் மனமுடைந்து போன தன்னுடைய பெற்றோர் இந்தியாவுக்குச் சென்றிருக்கலாம். இந்தியாவில் பல எழுத்தாளர்களிடம் நட்பும் பழக்கமும் அப்பாவுக்கு இருக்கிறது. அதனால் அவ்வாறு நடந்திருக்க முழு சாத்தியப்பாடு இருக்கிறது என்று யோசித்தாள்.

அந்த விடயத்தை அவர் மறைத்தற்கான காரணமும் இருக்கின்றது. அவளைப் பற்றி முழுமையாக மற்றவர்கள் அறியும்படி செய்யக் கூடாது என்ற எண்ணம் இருந்திருக்கும். வவுனியாவுக்கு வந்து சேர்ந்த காலங்களில் அவர்களை யாருக்கும் பெரிதாகத் தெரியாது. அதனால் அவருக்கு இருந்தது அந்தப் பிள்ளையா தானா என்ற விடயத்தை அறிவதற்கு முன்பாக அவள் பெரியவள் ஆகி பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்திருப்பாள்.

இதனால் இறுதிப் பகுதி தெரியாததாகவே முடிந்திருக்கின்றது என்பதை ஓரளவு ஊகித்துக் கொண்டவளாகவே வெளியில் செல்ல முற்பட்டபோது அவளின் காலடியில் விழுந்தது அந்தக் கறுப்புக் கலர் டையரி.

குனிந்து அதை எடுத்தாள் அவள். அது அப்பாவினுடையது. அப்பாவுக்கு டையரி எழுதும் பழக்கம் இருக்கிறதா என்று அவளின் மனது யோசிக்கவும் கைகளை அதைத் தட்ட ஆரம்பித்தன.

# 28

குழந்தை வீட்டுக்கு வந்தவுடன் அவளுக்காக வாழ்வதையே, நானும் என் மனைவியும் வழக்கமாக்கிக் கொண்டோம். தனக்கு இனி குழந்தை பாக்கியம் இல்லையென்பதைத் தெளிவாகவே உணர்ந்து கொண்ட சாந்தி முழு அன்போடு குழந்தையைப் பராமரித்து வந்தாள்.

குழந்தை பிறந்து கிட்டத்தட்ட நாலு மாதங்களாகியது. குடும்பத்தில் தனிமையில் தொலைத்துவிட்ட சந்தோசம் அனைத்தும் அவளால் கிடைப்பது போல இருந்தது. எங்கள் இருவருக்கும் சந்தோஷமும் நிம்மதியும் அவளாலே கிடைத்தன.

குழந்தையைப் பார்த்துவிட்டுப் போகவென சுகந்தனும் மனைவியும் அன்று வந்திருந்தார்கள். குழந்தையைத் தூக்கிக் கையில் வைத்திருந்தபடியே அவரின் மனைவி கேட்டான்.

"குழந்தையின் பெயரென்ன?"

உடனே நானும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். இதுவரை தினங்கள் இருந்த குழப்பத்தில் பிள்ளைக்குப் பெயர் வைப்பதைப் பற்றி நினைத்திருக்கவில்லையே.. அதற்குப் பொருத்தமாகப் பெயர் அகப்பட்டிருக்கவும் இல்லை.

பிள்ளையின் பிறந்த திகதிக்கு ஏற்றவாறு பெயரை எழுதி அனுப்புவதாகச் சொன்னார். அடுத்த நாள் மாலையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பெயர்களுடன் சுகந்தன் வருகை தந்தார். அவற்றை நானும் மனைவியிம் சொல்லிப் பார்த்தோம்.

அவை எதுவும் எங்களுக்குப் பொருத்தமானதாகப் படவில்லை. நானும் என் மனைவியும் கூட பல பெயர்களை தேடிப் பார்த்தோம். என் நண்பர்களும் பலவிதமான புதிய பெயர்களைக் கொண்டு வநது தந்தார்கள்.

எண் சாத்திரம் பொருந்துமாறு பலவிதமான பெயர்களும் வந்து போயின. இருந்தும் பெயர் சாத்தியப்படவில்லை. தொடர்ந்து பெயர் தேடும் பணி ஆரம்பித்தது.

இறுதியில் நான் சொன்னேன். எங்கள் வாழ்வுக்கு ஒளியாக வந்தவள். எப்பொழுதும் பிரியமானவளாக இருப்பாள்... பிரியா..... பிரியந்தி.... அது தான் இவளுக்குப் பெயர்.

சுற்றிக் கொண்டிருக்கும் பூமி ஒரு முறை சுற்றுவதை நிறுத்திவிட்டது போல இருந்தது. அசைந்து கொண்டிருக்கும் மரக்கிளைகள் ஒரு நிமிடம் அசைவதை நிறுத்திவிட்டதைப் போல இருந்தது.

அத்தனை கதைகளை சாவகாசமாக வாசித்தபோதும் நளினியின் வயிற்றில் தோன்றிய தகப்பன் பெயர் தெரியாத பிள்ளை தானாக இருக்கலாமோ என்ற எண்ணம் அவளுக்கு வரவேயில்லை. காரணம் அப்படியொரு பாரபட்சத்தைக் காட்டாமலேயே அருமையாக வளர்த்து வந்திருந்த அவர்களின் பெற்றோரின் பாசம்.

அதைத் தவிரவும் அந்தப் பிள்ளையை ஆரோக்கியம் இல்லாது காட்டியதும் இன்னுமொரு பிள்ளை வேண்டுமென்று அப்பா நினைத்துக் கொண்டதும் அவளின் எண்ணத்தை முற்றாகத் திசை திருப்பி இருந்தது. அதனால் சர்வ நம்பிக்கையுடன் தான் அவர்களின் வாரிசே என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டாள்.

இந்தக் கதைகளுக்குப் பின்னால் இந்தியாவுக்குச் சென்றதாக எழுதுவார்கள். அவர்களின் உண்மையான வாரிசாகத்தான் தான் இருப்பாள் என்ற நம்பிக்கையில் தான் அதுவரை சந்தேகப்படாமல் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு உடம்பெல்லாம் ஆட்டம் காண்பதைப் போல இருந்தது. எங்கோ வறுமையின் பிடியில், தகப்பன் பேரும் தெரியாதவளாய், பிச்சைக்காரியாய் இருக்க வேண்டிய அவளை,

அதிலும் ஒரு பெண் பிள்ளையை, ஒரு பெரிய இடத்தில் கொண்டு வந்து வைத்து, தங்களுடைய சுயவிருப்பு என்று எதையும் பாராமல் அவளுடைய வாழ்வே தங்கள் வெற்றி என்று சொல்லி வளர்ப்பதற்கு இருவர் இந்த நூற்றாண்டிலும் இருக்கிறார்களா?

மகளுக்காகவே தன்னுடைய இலக்கியப் பயணம் என்று தொடங்கி ஒரு உதாரண புருஷனாகவே வாழ்ந்து வரும் அப்பாவும் அம்மாவும் கடவுளின் வடிவமே. அவர்களை நான் அடைந்தது என்னுடைய அதிஷ்டமே.

தாங்கள் பெற்றோராக இல்லாதபோதே இத்தனை பொறுப்புடன் தியாகத்துடன் வளர்த்துக் கொள்ளும் அவர்களின் கனவுக்காகவே அன்றி நன்றிக்காகவாவது நான் செய்திடவும் எதுவுமிருக்கா? என்ற கவலை எழுந்தது.

இத்தனை துயரங்களைச் சுமந்து சுமை தாங்கியாக இருக்கும் தந்தையை நினைக்கும்போது தாளாத சோகம் வந்தது. அவரின் கால்களைத் தன் கண்ணீரால் கழுவ வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அப்பா என்பவர் எப்பொழுதுமே சுமை தாங்கிதான். குடும்பத்தைச் சுமப்பவர், சுமைகளைச் சுமப்பவர். தன்னைச் சுற்றியிருப்பவர்களின் சந்தோசத்துக்காகத் தன்னுடைய கவ்லைகளை விழுங்கிக் கொள்பவர்.

ஆனால் அப்பாவுக்குக் கொடுக்கும் இடத்தை எந்த ஒரு ஆணுக்கும் வழங்க முடியாது. தந்தை என்ற ஸ்தானத்தை அடையும் வரையிலும் தான் தோன்றித் தனமாகவே எமது இளைஞர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்தக் கதையிலே அப்பா தெளிவாகக் காட்டிவிட்டார்.

அதனால் முகுந்தனை நல்லவன் என்று நம்பிவிடலாகாது. ஆனால் திருமணம் கைகூடினால் அவனும் அப்பா மாதிரியாகவே ஆகலாம். திருமணத்திற்கு முன்னதான காதலில் அவளுக்கு முற்று முழுதாகவே நம்பிக்கை அற்றுப் போனது.

அப்பா என்ற உறவு எந்த ஒரு பெண்ணுக்குமே கிடைத்தற்கரிய ஒரு கொடையே. அதுவும் கண்ணுக்குள் பெண்ணை வைத்து அவளுக்கு வழிகாட்டியாகவே வந்து கொண்டிருக்கும் தன்னுடைய அப்பா ஒரு தேவன், உதாரண புருஷர். எழுத்திலும் பேச்சிலும் மட்டுமல்ல வாழ்க்கையிலும் ஓர் கதாநாயகனே என்ற தெளிவு அவளிடத்தில் வந்தது.

யாரோ நடந்து வந்த அரவத்தைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள், அப்பா.

ஓடிச் சென்று அவரின் காலடியிலே விழுந்து கொண்டாள். விம்பி விம்பியழத் தொடங்கிய அவளை மிருதுவாக அணைத்துக் கொண்டார் தந்தை.

"அப்பா" என்ற விசும்பலுடன் அவர் கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

"எங்கேயோ அநாதையாகக் கிடக்க வேண்டியவளைக் கொண்டு வந்து உங்கட பிள்ளையாக வளத்திருக்கிறீங்களே அப்பா. அதுவும் ஆரோக்கியம் இல்லாமல் இறந்து போக இருந்த குழந்தையை இப்பிடிப் பெரியவளாக்கி படிக்க வச்சு. உங்கட பாசத்துக்கு கடமை உணர்விற்கு என்ன கைமாறு செய்யலாம் எண்டு தெரியேல்ல" என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னாள்.

அவளின் கேசத்தைத் தடவிக் கொடுத்த அவர்,

"அப்பிடிச் சொல்லக்கூடாது. நீ தான் என் மகள். என் செல்வ மகள். எத்தின பிறவி எடுத்தாலும் நீ தான் எனக்கு மகள். உனக்காக, உன்ர நல்வாழ்வுக்காக என்னால இன்னும் என்னென்ன செய்ய முடியுமோ அனைத்தையும் செய்வேன்" என்று கண்ணீருடன் சொன்னார்.

"உனக்கு இவ்வளவு சீக்கிரத்தில் இந்த விடயங்கள் தெரியக்கூடாது என்று நான் மிகவும் கவனமாகவே இருந்தன். ஆனாலும் நீ தேடித் தருவி கண்டுபிடிச்சிட்டாய். அதுவும் ஒரு விதத்தில நல்லதுதான். நாளைக்கு வேறொரு சந்தர்ப்பத்தில் இன்னொருவர் சொல்லும்போது வருத்தப்படுவதைப் பார்க்க இப்படி வீட்டுக்குள் இருந்தவாறு நீயாகத் தேடித் தெரிந்து கொண்டது பரவாயில்லை" என்று சொல்லிக் கொண்டார்.

"என்ர அம்மாவப் பத்தி சாந்தியம்மாவுக்குத் தெரியாது தானே" என்று கேட்டாள்.

"இல்லை அவளுக்குச் சொல்லவில்லை. எதுவுமே இல்லாமல் உன்னட்ட வெறுப்பக் காட்டிப் போடுவாளோ எண்டு நினைச்சுச் சொல்லேல்ல. அந்த ஒரு விஷயத்தத் தவிர எங்க ரெண்டு பேருக்குள்ள எந்தவொரு ஒளிவு மறைவும் இல்ல" என்று சொன்ன அப்பா இவளை விலத்திவிட்டு, அப்பாலே சென்று வெளியிலே பார்த்தபடி நின்றார். அவரின் வாய் அசைந்தது.

"கடவுளிடம் நான் தினமும் கேட்கின்ற வரம் என்ன தெரியுமா" என்று கேட்டுவிட்டு மௌனமானார். அவரின் வாய் அசைவதை அவள் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

"கடவுளே...

என்னைப் படைத்ததற்காகவும் எனக்கு சந்தோசத்தையும் துக்கத்தையும் கொடுத்ததற்காகவும் உன்னைப் பலமுறை தூற்றியும் கடிந்தும் இடித்துரைத்தும் இருக்கிறேன். உன்னை வழிபட மறுத்து நாத்திகனாகவே வாழ்ந்திருந்தேன் சில காலம்.

ஆனால் அத்தனைக்கும் நீ கடவுள் என்பதைக் காட்டிவிட்டாய். எனக்குத் துன்பங்களைக் கொடுத்துப் பண்படுத்தி இப்போது ஒரு பெண் வாரிசைக் கொடுத்து என் வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளை உருவாக்கி விட்டாய்.

பெண் குழந்தைகள் வாழும் வீடு தேவதைகள் வாழும் வீடு என்பதைக் காட்டிவிட்டாய். என் வாழ்க்கையில் மறுபடியும் பிடிப்பை எனக்கு ஏற்படுத்தினாய்

என் மகள் வாழும் வரை நானும் இப்பூமியில் வாழ்வேன். அவளுக்கு வழிகாட்டுபவனாக, அவளுக்குத் தோழனாக, அவளின் பாதைகளில் துணை வரும் காவலனாக

அவள் சொந்தக்காலில் நிற்கும் வரை அவளுக்காக என்னை உயிரோடு விட்டு வை."

கேட்டபோதே கண்ணீர் துளிர்த்தது அவளுக்கு. அவளின் அருகில் வந்து மேலும் சொன்னார் அவர்.

"உன் வாழ்க்கையிலே காதலும் கல்யாணமும் வரும் வரத்தான் வேண்டும். ஆனால் இப்போது இல்லை. வாழ்க்கையை உலகத்தை நல்லாத் தெரிந்து கொண்டு காதல் செய். அப்போது அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டேன். ஆனால் இப்போது வேண்டாம். நீ படிக்க வேண்டும் வாழ்க்கையில் உயர்நிலைக்குப் போக வேண்டும். வெளிநாடுகளில் சென்று படித்துவர வேண்டும். நம் தாய் மண்ணில் நம் சமுதாயத்தினர் உயர்ந்து வாழ்வதற்கு உன்னாலான எல்லாவற்றையும் செய்ய வேண்டும். உனக்குப் பிறகு எந்தவொரு பெண்ணுமே வாழ்க்கையில் தாமாகத் தடக்கி விழாதவாறு இருக்க வேண்டும்." என்று சொன்னார்.

பெண் குழந்தையே சுமையாகப் பார்க்கும் எமது சமுதாயத்தில் பிறந்து, பெண் குழந்தையை இத்தனை எதிர்பார்ப்புக்களுடன் வளர்த்தெடுத்த அப்பாவின் பிள்ளையாக அவர் வாக்குப்படி ஒருத்தியாக வாழ்ந்தால் மட்டுமே போதுமானது என்ற எண்ணம் அவளுக்கு வந்தது.


அவரின் ஆணைப்படி பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கு ஆயத்தமாவதற்கு உள்ளே சென்றாள்.

---------- சுபம் ----------

2014




2015




2016




978-955-41614-8-1

விலை : ரூ.400.00

Vaani Computer Prinitng Centre, Vavuniya 024 2223658